# உதயன்


18

www.onlineuthayan.com

56: பக்கங்கள் சுடர் 27 கதிர் 309 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 14 ஞாயிற்றுக்கிழமை (30/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 20.00


# இராணுவம் தீவிர முயற்சி மனிக்பாமை ஆக்கிரமிக்க

## 6,000 ஏக்கரில் பெருமளவை விழுங்குகிறது

வவுனியா, செப்ரெம்பர் 30

இறுதிப் போரின்போது இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் அடைத்து வைக்கப்பட்ட 'மனிக் பாம்' எனப்படும் மாணிக்கம் பண்ணை, மூடப்பட்டதைத் தொடர்ந்து அதன் பெருமளவு நிலப் பகுதியையும் தம் வசப்படுத்த படையினர் முயன்று வருகின்றனர். எஞ்சிய பகுதியில் அரச திணைக்களங்களும் தனியார் நிறுவனங்களும் பங்கு கேட்டு வருகின்றன.

செட்டிகுளம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள 6,000 ஏக்கர் நிலப் பகுதியில் இடம்பெயர்ந்தோருக்கான தடை முகாம்கள் அமைக்கப்பட்டன. படிப்படியாக அங்கிருந்து மக்கள் வெளியேறி மீளக் குடியமர்ந்ததை அடுத்து அதன் பெரும் பகுதியைத் தன் கைவசப்படுத்தும் பணிகளை இராணுவம் ஆரம்பித்துள்ளது.

''செட்டிகுளத்தில் காணிகள் தருமாறு கேட்டு பல தரப்பினிடம் இருந்தும் எமக்கு விண்ணப்பங்கள்கிடைத்திருக்கின்றன. அவற்றை நாம் கவனமாகப் பரி சீலித்து வருகின்றோம். தீர ஆராய்ந்த பின்னர் அது பற்றி முடிவெடுப்போம்'' என்று காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச் சர் ஜானக பண்டார தென்னக் கோன் தெரிவித் தார்.

மனிக் பாம் தடுப்பு முகாமின் வலயம் 3 அமைந்திருந்த பகுதியில் ஏற்கனவே இராணுவத்தினர் 200

பார்க்க பக்கம் 4

## கிழக்கில் மினி சூறாவளி

கொழும்பு, செப்.30

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேசத்திற்குட்பட்ட எல்லைக் கிராமங்களில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை வீசிய மினி சூறாவளி காரணமாக பல வீடுகள் சேதமடைந்துள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் எஸ்.இன்பராஜன் தெரிவித்தார்.

புதுமுன்மாரிச்சோலை கிராமத்தில் 55 வீடுகளும், சின்னவத்தை கிராமத்தில் 30 வீடுகளும், பாலையடி வெட்டை கிராமத்தில் 49 வீடுகளும், ராணமடு கிராமத்தில் 51 வீடுகளும், மாலையர்கட்டு கிராமத்தில் 55 வீடுகளுமாக மொத்தமாக 240 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அவர்

பார்க்க பக்கம் 4

**2** ஒக்ரோபரில் சம்பள உயர்வு தருகின்றோம். பணிக்குத் திரும்புங்கள். இவ்வாறு விரிவுரையாளர்களைக் கேட்டுள்ளார் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க.

**5** வடக்கில் சிறுவர் பெண்கள் மீதான துஷ்பிரயோகங்கள் தமிழ் இன அழிப்பின் ஓர் அடையாளமே. திட்டமிட்ட கலாசார சீர்கேடுகளை தலைதூக்க இடமளிக்கக் கூடாது.

**7** கேப்பாபிலவு மக்கள் வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டு நடுக்காட்டில் அநாதைகளாக விடப்பட்டுள்ளனர்.

**17** சஞ்சீவன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 11 பேர் பங்கு பற்றிய மென்பந்து சுற்றுப் போட்டியில் பகலவன் விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

## கல்லெறித் தாக்குதலுக்கு இராணுவத்தினரே காரணம்

### விக்கிரமபாகு குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.30

கடந்த செப்ரெம்பர் 22ஆம் திகதி வன்னியில் நடைபெற்ற நிலஆக்கிரமிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு விட்டுத் திரும்பியபோது தன்னையும் இன்னும் சில அரசியல் கட்சி பிரமுகர்களையும் ஏற்றி வந்த வாகனம் தாக்கப்பட்ட தன் பின்னணியில் இராணுவமே இருக்கின்றது என்று நவ சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கடிதம் மூலம் முறையிட்டுள்ளார்.

முல்லைத்தீவில் இடம்பெற்ற நில ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில்

பார்க்க பக்கம் 4

## வேணாவில் மக்கள் ஒக்.4இல் குடியமர்வு

யாழ்ப்பாணம் , செப்.30

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மந்துவில், புதுக்குடியிருப்பு மேற்கு, (வேணாவில்) கிராம சேவையாளர்கள் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நான்காம் திகதி மீள் குடியமர்வு செய்யப்படவுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அரச அதிபர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குறிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த தற்போது உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கிருப்போர் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர விரும்பின் அதற்கான ஆயத்தங்களுடன் அன்றைய தினம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு சமுகமளிக்கவும்.

அத்துடன் இதுவரை காலமும் தங்கியிருந்த கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு அந்தப் பகுதி உதவி அரச அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட விடுவிப்பு கடிதத்தையும் ஒப்படைத்து மீள்குடியமர்வுக்காக பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்- என்றுள்ளது. (ம-14)

## சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் 38

யாழ்ப்பாணம், செப்.30

வவுனியா மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமாக 38 முறைப்பாடுகள் கடந்த 4 மாதங்களுக்குள் பதிவாகியுள்ளன. துஷ்பிரயோகங்கள் பல சிறுவர்களது நெருங்கிய உறவினர்களாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு தெரிவித்தார் வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரி த.செல்வக்குமார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜூன் மாதம் தொடக்கம் செப்ரெம்பர் வரையேயான நான்கு மாத காலத்துக்குள் 38 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் பாலியல் துஷ்பிரயோக முறைப்பாடுகள் 13, உடலியல் ரீதியான துஷ்பிரயோக முறைப்பாடுகள் 19, உளரீதியான பாதிப்புக்

பார்க்க பக்கம் 4

## தீயில் எரிந்து கருகிய கர்ப்பிணிப் பெண் சாவு

### வயிற்றில் இருந்த எட்டுமாத சிசுவும் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப்.30

சமையல் செய்தபோது எதிர்பாராத விதமாகத் தீக்காயங்களுக்கு உள்ளான கர்ப்பிணிப் பெண், சிகிச்சை பயனளிக்காத நிலையில் இரு வாரங்களின் பின்னர் நேற்று உயிரிழந்தார்.

மன்னார் வெள்ளாங்குளம் பகுதியைச் சேர்ந்த நிஷாந்தன் மயூரி (வயது 18) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வெள்ளாங்குளம் பகுதியில் வசித்து வந்த குறித்த கர்ப்பிணிப் பெண் கடந்த 14ஆம் திகதி சமையலில் ஈடுபட்டிருந்தபோது அடுப்பைப் பற்றவைப்பதற்காக தீக்குச்சியைக் கொளுத்தியுள்ளார். ஆயினும் அது எரியவில்லை என்று நினைத்துப் பின்பக்கம் எறிந்துவிட்டு இன்னொரு தீக்குச்சியால் அடுப்பைப் பற்ற வைத்து சமையலில் தொடர்ந்து ஈடுபட்டார். எனினும் அவர் எரியவில்லை என நினைத்த தீக்குச்சியில் இருந்த நெருப்பு அவரது ஆடையின் பின்புறத்தில் பற்றியதை குறித்த பெண் கவனிக்கவில்லை. இதனால் அவரது ஆடையின்

பார்க்க பக்கம் 4

## ஐ.நாவிடம் டெசோ தீர்மானங்கள் ஒக்.6 இல் கையளிப்பார் ஸ்டாலின்

சென்னை, செப்.30

இலங்கை விவகாரம் தொடர்பில் டெசோ மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அடங்கிய அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையிடம் ஒப்படைப்பதற்காக தி.மு.க. வின் பொருளாளர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான குழுவொன்று எதிர்வரும் 5ஆம் திகதி நியூயோர்க் செல்லவுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் சென்னையில் நடைபெற்ற டெசோ மாநாட்டின்போது, இலங்கைத் தமிழர்களின் நலன்களைக் காக்கும் வகையில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்தத் தீர்மானங்களை ஐ.நா. சபையிடம் கையளிக்க உள்ளதாக தி.மு.க. அறிவித்திருந்தது. ஆயினும் இந்திய மத்திய அரசின் எதிர்ப்புக் காரணமாக அந்தக் கையளிப்பு விடயம் தாமதமாகி வந்தது.

பார்க்க பக்கம் 4

## நீதிமன்ற தீர்ப்புக்குப் பின்னர்தான் நியாயமாகச் செயற்படுவார்களா?

### அதிகாரிகளைக் கேட்கிறார் ஆசிரியர் சங்கச் செயலாளர்

யாழ்ப்பாணம், செப்.30

நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்த பின்னரே நியாயத்தின்படி செயற்படுவதை விடுத்து இனியாவது இயல்பாகவே நீதியின்படி செயற்பட அதிகாரிகள் முன்வரவேண்டும். இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் நியமனச் சர்ச்சையில் நீண்ட இழுத்தடிப்புக்குப் பின்னர் நிர்வாகப் பொறுப்புகள் புதிய அதிபரிடம் கையளிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி அதிபராகப் பொதுச்

பார்க்க பக்கம் 4

## வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு 64 உதவிப் பிரதேச செயலர்கள்

### தமிழ் மொழி பரிச்சயமுள்ளவர்களாக இருப்பர்

திருகோணமலை, செப்.30

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலகங்களில் 64 உதவிப் பிரதேச செயலர்கள் நியமிக்கப்படவிருக்கின்றார்கள்.

இவர்கள் தமிழ் மொழியில் பரிச்சியம் பெற்றவர்களாக இருப்பர் என்று பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தகவல் தெரிவித்துள்ளது.

இன்னும் இரண்டு மாதங்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை கல்விசார் ஊழியர்களை பணிக்கு திரும்புமாறு கோரிக்கை

## ஒக்ரோபரில் சம்பள உயர்வு கிடைக்கும் என்றும் உயர் கல்வி அமைச்சர் உறுதி



யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களுக்கான சம்பள உயர்வு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்படவுள்ளது.

எனவே கல்விசார் ஊழியர்களை நாளை திங்கட்கிழமை முதல் பணிக்கு திரும்புங்கள் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கென குவைத் அரசால் கட்டிக்கொடுக்கப்பட்ட நான்கு மாடிக் கட்டடத்தைத் திறந்து வைத்த பின்னர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களுக்கு கடந்த ஜூலை மாதம் முதல் சம்பள உயர்வை வழங்கியுள்ளோம்.

சிரேஷ்ட பேராசிரியர்களுக்கு 18,579 ரூபாவும், பேராசிரியர்களுக்கு 15,025 ரூபாவும், இணை பேராசிரியர்களுக்கு 9,888 ரூபாவும், சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் ஒன்றுக்கு 7150 ரூபாவும், சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் இரண்டுக்கு 5424 ரூபாவும், விரிவுரையாளர்களுக்கு 3842 ரூபாவும், பயிற்சி விரிவுரையாளர்களுக்கு 2962 ரூபாவும் உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது உயர்மட்ட சம்பள அதிகரிப்பாக ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.

சிரேஷ்ட பேராசிரியர்களுக்கு 15,195 ரூபாவும், பேராசிரியர்களுக்கு 11,928 ரூபாவும், இணைபேராசிரியர்களுக்கு 7050 ரூபாவும், சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் ஒன்றுக்கு 4738 ரூபாவும், சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் இரண்டுக்கு 3157 ரூபாவும், விரிவுரையாளர்களுக்கு 1995 ரூபாவும், பயிற்சி விரிவுரையாளர்களுக்கு 1326 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இதற்கு மேலாக அரச துறை ஊழியர்களின் சம்பளங்களுடன் ஒப்பிடும் போது பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களுக்கு மேலதிக வசதி வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

65 வயது பூர்த்தியாகும் வரை சேவையாற்றலாம். அதற்கு மேலதிகமாக சேவையாற்ற விரும்பினால் ஒப்பந்த அடிப்படையில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

இந்த சலுகையானது விதி 9, உயர் நீதிமன்ற நீதி அரசர்களுக்கு மாத்திரமே ஏற்புடையது. இது தற்போது பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தவணை விடுமுறை வார இறுதி விடுமுறை, மூன்று மாதங்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறை ஆகியவற்றுடன் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு 42 நாள்கள் முழு சம்பளத்துடன் விடுமுறைகளும் வழங்கப்படும்.

அடுத்த வரவு செலவுத் திட்டத்துக்கு முன்னர் சம்பள உயர்வு எக்காரணம் கொண்டும் வழங்க முடியாது.

பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களுக்கான சில சலுகைகள் மேலும் வழங்கவுள்ளோம். ஆனால் அது குறித்த விடயங்களை தற்போது வெளியிட முடியாது.

கடந்த 30 ஆண்டு காலமாக யாழ்.பல்கலைக்கழகத்தைப் பொறுத்த வரையில் அபிவிருத்தி எதனையும் மேற்கொள்ள முடியவில்லை. தற்போது அதற்கான திரைகள் நீங்கியுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கான இணை மருத்துவ விஞ்ஞான அலகு குவைத் அரசின் சுனாமி புனர்வாழ்வு திட்டத்தின் போது எஞ்சிய 536 மில்லியன் ரூபா நிதியினைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டடத்தில் விரிவுரையாளர் மண்டபம், வகுப்புக்கள், ஊழியர்கள் அறை என்பனவும் தாதியர் பயிற்சி, உடற்கூற்றுக் கல்வி, கதிரியக்க சிகிச்சைப் பயிற்சி, ஆரம்ப விஞ்ஞானம், மருந்துகள் தயாரித்தல், விநியோகித்தல் ஆகிய துறைகளுக்கான பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன என்று கூறினார். (ம-13)

### கரவெட்டி பிரதேச சபை தலைவரின்
## வீட்டில் சிங்கக் கொடிகள்

வடமராட்சி, செப். 30

கரவெட்டிப் பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசுவின் வீட்டின் முன்பாக சிங்கக் கொடிகள் கட்டப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று நடைபெற்றுள்ளது. நேற்று அதிகாலை 4 மணிக்கு பின்னர் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்களே சிங்கக் கொடிகளை தமது வீட்டு வாசலில் கட்டிவிட்டுச் சென்றுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிழக்கு மாகாணசபைக்குத் தெரிவாகியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரின் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு விட்டு வீடு திரும்பியிருந்த நிலையில் எனது வீட்டின் முன்பாக இவை கட்டப்பட்டிருந்தன.

எனது வீட்டின் தெற்குப் புற வாசல்களில் உள்ள இரு பெரிய கேற்றுக்களுக்கும் மேல் சின்னஞ்சிறிய சிங்கக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. -என்றார். (10-8)

## சாவகச்சேரி மருத்துவமனையில் 'ஸ்கானிங்' பரிசோதனை 8 ஆம் திகதி

தென்மராட்சி, செப். 30

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நாளை திங்கட்கிழமை நடைபெறவிருந்த 'ஸ்கானிங்' பரிசோதனை கிளினிக் எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவக் குழு நாளை தீவகப் பகுதிக்கு நடமாடும் சேவைக்காக செல்லவுள்ளதால் இந்தக் கிளினிக் பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் 'ஸ்கானிங்' சிகிச்சைப் பிரிவினரால் பிரதி திங்கட்கிழமைகளில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கிளினிக் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (10-9)

## ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் முன்னாள் பணிப்பாளர் காலமானார்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தமிழ்ச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் தம்பையா உருத்திரபாரதி (வயது-65) நேற்று காலமானார். வல்லிபுர ஆழ்வார் தேர் மற்றும் தீர்த்தோற்சவ நிகழ்வுகளை யாழ்.எப்.எம் வழியாக நேரடியாக வர்ணனை செய்வதற்காக இவர் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

நேற்றைய தினம் யாழ். நகருக்கு வந்த வேளை திடீரென மயக்கமடைந்து வீழ்ந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று மாலையே அங்கு உயிரிழந்தார். (5-9)

## 30 மணித்தியாலங்களில் 30 குறும்படங்கள்
### வவுனியாவில் நாளை ஆரம்ப நிகழ்வு

இந்தியன் ர.வி.ஆர் மூவியின் தொழில் நுட்ப உதவியுடன் வன்னியில் 30 மணித்தியாலங்களில் 30 குறும்படங்கள்தயாரிக்கும் பணிகள் இன்று முற்பகல் 10.30 மணிக்கு வவுனியா குருமன்காடு காமராஜன் பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இயக்குநர் சு.வரதகுமார் தயாரிப்பில் குறும்படங்கள் தயாரிக்கப்படவுள்ளன. ஆரம்ப நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன், கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், தமிழ்ச் சங்கத்தின் தலைவர் தமிழருவி சிவகுமாரன், வண்ணி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.


சு.வரதகுமார் எழுதிய தவிப்பு, தவறான அழைப்பு, மாணிக்கம் ஜெகன் எழுதிய கற்பூரம், மருந்து ஆகிய படங்கள் 4 மணித்தியாலங்களில் படமாக்கப்படவுள்ளது.

**ஏ.வி.ஆர். மூவியால் வாழவிடுங்கள் முழு நீளத் திரைப்படத்துக்கான படப்பிடிப்புகளும் இசை வெளியீடும் இடம்பெறவுள்ளன.**

கடந்த மாதம் ஏ.வி.ஆர் மூவியால் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த நடிகர்கள் குறும்படங்களில் நடிக்கவுள்ளனர். தயாரிக்கப்படவுள்ள படங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு சந்தைப்படுத்தப்படவுள்ளன.

மேலும் இந்த வருட இறுதிக்குள் ஏ.வி.ஆர். மூவியால் வாழவிடுங்கள் முழு நீளத் திரைப்படத்துக்கான படப்பிடிப்புகளும் இசை வெளியீடும் இடம்பெறவுள்ளன. (10-400)

## சக்கரத்தாழ்வாரின் சமுத்திரத் தீர்த்தம்



வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுரம் சக்கரத்தாழ்வார் ஆலய பெருந்திருவிழாவின் சமுத்திரத்தீர்த்தம் நேற்று நடைபெற்றது. ஆலயத்தில் இருந்து மூன்று மணியளவில் புறப்பட்ட சக்கரத்தாழ்வார் மாலை 5.15 மணியளவில் சமுத்திரத் தீர்த்தம் ஆடினார். (ந-253-9)

## மருதங்கேணி கோட்டத்தில் புலமைப் பரீட்சையில் 9 பேர் சித்தி

வடமராட்சி, செப். 30

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் நான்கு மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த ஜெ.கஜந்தன் 165 புள்ளிகளையும், இ.டினோஜன் 148 புள்ளிகளையும், உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த லோ.துவாரகா 168 புள்ளிகளையும், எஸ். இந்துஜன் 148 புள்ளிகளையும் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுடன் மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் 9 மாணவர்கள் 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். (10-8)

### உதயன் செய்தி ஆசிரியர் தாக்கப்பட்டமை குறித்து
# சட்டமா அதிபரின் பதிலுக்காக பல மாதங்கள் காத்திருக்கிறோம்
### சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

வலி.வடக்கு , செப்.30

உதயன் செய்தி ஆசிரியர் குக நாதன் மீது தாக்குதலை மேற் கொண்டவர்கள் மீது நட வடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபரின் பதிலுக்காக கடந்த பல மாதங்களாக காத்திருக்கின்றோம் என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீகுகனேசன் தெரிவித்துள்ளார்.

உதயன் செய்தி ஆசிரியர் குகநாதன் தாக்கப்பட்டு இரண்டாவது வருடமும் நிறைவடைய ஒரு சில மாதங்களே உள்ளன.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அரசியலாளர் சந்திப்பில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் போது மேலும் கூறப்பட்டதாவது:-

உரியவர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். அவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள்.


இந்த நிலையில் தற்போது குற்றவாளிகள் சம்பந்தமான ஆரம்ப விசாரணைகள் நிறைவுபெற்ற நிலையில், சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு மேல் நடவடிக்கைக்காக அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து உரிய அறிக்கை கிடைக்கப் பெற்றதும் உடனடியாக குற்றவாளிகள் மீது உரிய சட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்- என்று மேலும் கூறினார். (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லைப்பிட்டியில் 'மினி' சூறாவளி பறந்தது தற்காலிக வீட்டுக் கூரை





யாழ்ப்பாணம், செப்.30

*அல்லைப்பிட்டி மூன்றாம் வட்டாரத்தில் நேற்று முன்தினம் இரவு மழையுடன் கூடிய மினி சூறாவளியால் தற்காலிக குடிசை ஒன்றின் கூரை தூக்கி வீசப்பட்டது. மற்றும் சில வீடுகளின் கூரைகளும் பகுதியளவில் சேதமடைந்தன.*

கூரை தூக்கி வீசப்பட்டதால் புடைவைகள், பாடசாலைப் புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள் என்பன மழையில் நனைந்து சேதமாகின.

தங்குவதற்கும் இடமின்றி குறித்த வீட்டு மக்கள் அல்லற்படுகின்றனர். தங்குவதற்கான தற்காலிக இடமும் வழங்கப்படவில்லை என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு மினி சூறாவளியுடன் மழையும் பெய்து கொண்டிருந்த போது குறித்த தற்காலிக குடிசையின் கூரை, கூரை மரங்களுடன் தூக்கி வீசப்பட்டது. அதன்போது குடிசையினுள் மழை பெய்ததால் உடைமைகள் மழையால் நனைந்து நாசமாகின.

குறித்த வீடு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றால் அமைத்துக் கொடுக்கப்பட்டது என்று கூறப்பட்டது.

தகரங்களாலான கூரைகளே இவ்வாறு தூக்கி வீசப்பட்டன. எனினும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

ஜே/10 கிராம அலுவலர் பிரிவில் உள்ள வீடுகளே மினி சூறாவளியில் சேதமாகின. சம்பவம் தொடர்பில் கிராம அலுவலருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்து நிலைமையைப் பார்வையிட்டு நாளை திங்கட்கிழமை பாதிக்கப்பட்டவர்களை பிரதேச செயலகத்துக்கு வருமாறு கூறிச் சென்றுள்ளார் என்று குடிசையில் வசிப்பவர்கள் தெரிவித்தனர்.

''1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்று பின்னர் மீண்டும் இடம்பெயர்ந்து வவுனியா முகாமில் தடுத்து வைக்கப்பட்டு 2010 ஆம் ஆண்டு எமது சொந்த இடமான அல்லைப்பிட்டி மூன்றாம் வட்டாரத்துக்கு வந்தோம்.

அந்த வருடம் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று இந்தத் தற்காலிக குடிசையை அமைத்துத் தந்தது. 6 மாதங்களில் நிரந்தர வீடு கட்டித் தருவதாகக் கூறிச் சென்றது. தற்போது இரண்டு வருடங்கள் நிறைவடையும் நிலையில் நிரந்தர வீடுகளை அமைக்க எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஒருசாராருக்கு மாத்திரம் சமய அமைப்பு ஒன்றின் வழிகாட்டலில் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன'' என்று பாதிக்கப்பட்ட மக்கள் கூறினர். (ம-4-7)

## பணத்தை திருட முயன்ற ஆசாமி அகப்பட்டான்

வலி.வடக்கு, செப்.30

பல பேர் பார்த்திருக்கக் கூடியதாக கடையின் லாச்சியில் இருந்த பணத்தை திருட முயன்ற ஆசாமி பொதுமக்களால் விரட்டிப் பிடிக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் மருதனார் மடம் சந்தியில் இடம்பெற்றது.

மருதனார்மடம் சந்தியில் உள்ள பலசரக்குக் கடை ஒன்றின் உரிமையாளர் கடையைத் திறந்துவிட்டு முன்னால் உள்ள வைரவர் ஆலயத்துக்கு வழிபடச் சென்றுள்ளார்.

இதனை அவதானித்த குறிப்பிட்ட ஆசாமி கடையினுள் சென்று லாச்சியைத் திறந்து பணத்தைத் திருட முயன்றுள்ளான். இதனை அவதானித்த பொதுமகன் ஒருவர் சத்தமிட்டபோது திருடன் பணத்துடன் ஓட்டம் பிடித்தான்.

மருதனார்மடம் சந்தையில் நின்றவர்கள் துரத்திப் பிடித்ததுடன் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ம-86)

## விசர் நோய் விழிப்புணர்வு

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் சர்வதேச விலங்கு விசர் நோய் விழிப்புணர்வு தினம் நேற்று முன்தினம் தென்மராட்சிப் பிரதேசத்தின் பல இடங்களில்இடம்பெற்றது.

பாடசாலைகள், பொது இடங்கள் போன்றவற்றில் சுகாதாரப் பிரிவினர் நீர் வெறுப்பு நோய் தொடர்பான விளக்கங்களையும் விழிப்புணர்வு செயற்பாடுகளையும் மேற்கொண்டனர்.

சாவகச்சேரி நகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் நகரசபையின் அனைத்து தர பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

நகரசபையின் செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் மேற்பார்வை பொதுசுகாதாரப் பரிசோதகர் க.கர்ணன், பொது சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜெ.றொனால்ட் ஆகியோர் கருத்துரை வழங்கினர். (ம-9)

## ஆலயச் சூழலில் குப்பை

புலோலி குஞ்சி ஆலை வைரவர் கோயில் சுற்றாடலில் குப்பை கூளங்கள் மற்றும் சில வெட்டப்பட்ட பச்சை மரங்கள் கொட்டப்பட்டு வருவதனால் சுற்றாடல் அசுத்தம் அடைந்து வருவதாகக் கூறப்படுகின்றது. இனந்தெரியாதோர் மேற்கொள்ளும் இத்தகைய நடவடிக்கைகளால் சுற்றுச்சூழல் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக வழிபடுவோர் கவலை தெரிவித்துள்ளனர். (ம-8)

## சட்டவிரோதமாக மின் பெறுவோர் வடமராட்சிப் பகுதியிலேயே அதிகம்

யாழ்ப்பாணம், செப். 30

வடமராட்சிப் பகுதியிலேயே சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

வடமராட்சியின் கரையோரப் பகுதியில் வசிப்பவர்களில் சிலர் இவ்வாறு சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்று பயன்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

> வடமராட்சியின் கரையோரப் பகுதியில் வசிப்பவர்களில் சிலர் இவ்வாறு சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெறுகின்றனர்

கடந்த வாரத்தில் கொழும்பில் இருந்து வருகை தந்த சட்டவிரோத மின்சாரம் பெறுவோரைக் கண்டுபிடிக்கும் விசேட குழுவினரிடம் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த சிலர் வகையாக சிக்கிக் கொண்டனர்.

இந்தக் குழுவினர் தற்போது யாழ்.குடநாட்டின் பல இடங்களுக்கும் சென்று திடீர் சோதனைகளை மேற்கொண்டு வருவதாக மின்சார சபை வட்டாரங்கள் மேலும் கூறின.

சட்டவிரோத மின்சாரம் பெறுவோரின் எண்ணிக்கை தற்போது வெகுவாகக் குறைந்து காணப்பட்டாலும் சிலர் இரவு வேளைகளில் இந்தச் செயலில் ஈடுபடுவதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (த-17)

## மழை ஆரம்பித்துள்ள போதும் வீதி அகலிப்புப் பணி தொடரும்

யாழ்ப்பாணம், செப்.29

மழை காலம் ஆரம்பித்துள்ளபோதும் குடாநாட்டில் பிரதான வீதிகளின் அகலிப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெறும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அந்த அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:-

மாரி மழை ஆரம்பித்துள்ளதால் வீதிகளுக்குத் தார் விசுறுவது, 'காப்பெற்' போடுவது போன்ற பணிகள் பாதிக்கப்படும். எனினும் வீதிகளின் அகலிப்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெறும்.

வீதிகளின் அருகே அமைக்கப்பட்டுவரும் வடிகால்கள் மற்றும் மதகுகள் அமைக்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெறும்.

தற்போது வீதிகளுக்குச் சல்லிக் கற்களைப் போட்டுச் சீர் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை வீதி, பலாலி வீதி, காங்கேசன்துறை வீதி, இராசவீதி, கோப்பாய் டச்சு வீதி என்பனவற்றின் புனரமைப்பு பணிகள் மழைக்கு மத்தியிலும் இடம்பெறுகின்றன- என்றார். (த-17)

## விபத்தில் காயம்

தென்மராட்சி, செப்.30

கொடிகாமம் நகர்ப் பகுதியில் இடம்பெற்ற வாகனம் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளோட்டி படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் கொடிகாமம் சந்தை வீதியைச் சேர்ந்த அம்பலவாணர் ஜெயபாலன் (வயது-51) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)

## யாழ்.நகர் தட்டாதெரு கடையில் திருட்டு

யாழ்ப்பாணம், செப்.30

யாழ்.நகரில், தட்டாதெருச் சந்தியிலுள்ள பத்திரிகை முகவர் நிலையத்தின் கூரையூடாக இறங்கிய திருடன், அங்கிருந்த பொருள்கள் சிலவற்றை அபகரித்துச் சென்றுள்ளான்.

வியாழக்கிழமை இரவு மழை பெய்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கூரை மீது ஏறி ஓடுகளைக் கழற்றி இறங்கிய திருடன், கையில் கிடைத்த பொருள்களை எடுத்துச் சென்றுள்ளான்.

நேற்று முன்தினம் காலை கடையைத் திறந்தபோது ஓடுகள் அகற்றப்பட்டிருந்தமை தெரியவந்தது. அதன் பின்னர் அவதானித்தவேளை, கையடக்கமாக எடுத்துச் செல்லக் கூடிய பெறுமதிமிக்க சில பொருள்களைமட்டும் திருடன் எடுத்துச் சென்றிருப்பது தெரியவந்தது.

''எனது கடையில் அள்ளிச் செல்வதற்கு பொருள்கள் பெரியளவில் இல்லை; இரவு வேளையில் தடுமாற்றத்தில் இடம்மாறி திருடன் இறங்கியிருக்கக் கூடும்'' என்று கடைக்காரர் கூறினார். (ஒ)

## தாயைக் காயப்படுத்திய மகனும் தந்தையும்

தந்தையும் மகனும் சேர்ந்து தாயைத் தாக்கி காயப்படுத்திய சம்பவம் அண்மையில் கொடிகாமம் கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த 38 வயதுப் பெண்ணே காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

# குற்றச்செயல்களுடன் தொடர்பான 133 பேர் கைது

கடந்த ஒரு வார காலத்தில் யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்களினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள் தேடுதல் நடவடிக்கைகளின் போது 133 பேர் பல்வேறு குற்றங்களுடனும் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீகுகனேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடகவியலாளர்களுக்கும் யாழ்.மாவட்ட பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் நீதிமன்றங்களின் பிடியாணைப்படி 21 பேர் கைதாகினர்.

இவர்களுடன் மது போதையில் வாகனம் செலுத்திய 25 பேரும், கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 4 பேரும் சாராயத்தை வாகனத்தில் அனுமதிப் பத்திரம் இன்றி கொண்டு சென்ற ஒருவரும், அனுமதிப் பத்திரம் இன்றி மணல் கடத்திச் சென்ற ஒருவரும் பனை மரம் கடத்திச் சென்ற ஒருவரும் குழுக்களாக சண்டையிட்ட 30 பேரும் கைதாகினர்.

பண கொடுக்கல் வாங்கல் மோசடிகளில் ஈடுபட்ட 2 பேரும் வீதிகளில் குப்பைகளை கொட்டியும் கழிவு நீரை வீதியில் சுகாதார சீர்கேடான முறையில் விட்ட 5 பேரும் சந்தேகமான முறையில் நடமாடிய 7 பேரும் விபத்துடன் தொடர்புபட்ட ஒருவரும் இவர்களுடன் கைதாகினர்.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 14 பேரும் அனுமதிப் பத்திரம் இன்றி வீட்டில் கள் விற்பனை மற்றும் அரச சாராயம் விற்பனை செய்த இருவரும் குழு மோதலில் ஈடுபட்ட 14 பேரும் கைதாகினர்.

அத்துடன் சந்தேகமான முறையில் நடமாடிய 7 பேரும் பனைமரம் கொண்டு சென்ற ஒருவரும் மது போதையில் வாகனம் செலுத்திய 5 பேரும் கைதாகினர்.-என்று மேலும் கூறப்பட்டது. (ம-86)

## நிகழ்வுகள் இன்று

**மருத்துவ முகாம்**

கைதடி லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் பிற்பகல் 3 மணிக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்த மருத்துவ முகாமில் வைத்தியர் எஸ்.எஸ்.அருளானந்தம், வைத்தியர் திருமதி க.சௌந்தராஜன் ஆகியோர் சிகிச்சை வழங்கவுள்ளனர். (ம-14)

**கலந்துரையாடல்**

இடம்பெயர்ந்த தையிட்டி வடக்கு, தையிட்டி தெற்கு மக்களுக்கான அவசர கலந்துரையாடல் காலை 9.30 மணிக்குக் கோண்டாவில் வேதபாராயண சன சமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

* * *

வலி.மேற்கு பிரதேச ஆலயங்களின் குருமார்கள், அறகாவலர்கள், பரிபாலன சபையினருக்கான கலந்துரையாடல் பிற்பகல் 3.30 மணிக்கு சித்தங்கேணி சிவன்கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-29)

* * *

வலிகாமம் வலய பாடசாலை அதிபர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் முற்பகல் 10 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுளள்து. (ம-14)

**இரத்ததான முகாம்**

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபை சமூகத்தின் ஏற்பாட்டில் கலை, கலாசார இலக்கிய மன்றத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவு நடத்தும் நடமாடும் இரத்ததான முகாம் காலை 9 மணிக்கு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையின் சிகிச்சை நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுரேஷ் எம்.பிக்கு மாவை. சேனாதிராஜா பதில்

கொழும்பு, செப்.30

''தமிழ் மக்களுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் கேடு விளைவிக்கும் செயல்களுக்காக 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர்' என்ற போர்வையை சுரேஷ் பிரேமச்சந்திரன் இனியும் உபயோகிக்கக்கூடாது. சுரேஷின் தன்னிச்சை யான செயற்பாடுகள் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்துவது மட்டுமன்றி, ஜனாதிபதி மஹிந்த அரசை மகிழ்விப்பதுமாகவே அமையும்.'' - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிரதான பங்காளிக் கட்சியாகத் திகழும் இலங்கைத் தமிழரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவுசெய்வதில், கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சி இழுத்தடிப்பை மேற்கொள்கின்றது. அத்துடன், அக்கட்சி தன்னையே முதன்மைப்படுத்தப் பார்க்கின்றது எனக் குறிப்பிட்டு தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளைக் காரசாரமாக விமர்சித்து, கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ்.கட்சியின் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கடந்த 25ஆம் திகதி அறிக்கையொன்றை விடுத்து பல கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இந்த அறிக்கைக்குப் பதில் கொடுக்கும் வகையில் கட்சியின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராஜா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

25.09.2012 திகதியிட்டு இணையத்தளங்களிலும், இலங்கைப் பத்திரிகைகளிலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினதும், தமிழரசுக் கட்சியினதும் தலைவரான இரா.சம்பந்தனையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ அங்கமான இலங்கைத் தமிழரசுக் கட்சியையும் எழுந்தமானமாகத் தாக்கி ஓர் அறிக்கை சுரேஷ் பிரேமசந்திரனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ் மக்களிடமும், சர்வதேசத் திடமும் அங்கீகாரம் பெற்ற ஜன நாயக அரசியல் அமைப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இயங்கி வருகிறது.

கட்சிகளிடையே கருத்து முரண்பாடுகளிருப்பது ஜனநாயக அமைப்பில் ஒன்றும் புதுமையானதல்ல. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவினால் 2010இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு பேச்சாளராக ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் செயலாளர் பிரேமச்சந்திரனின் (நாடாளுமன்ற உறுப்பினர்) கூட்டுக் கட்சிகளின் தீர்மானமோ, இணக்கமோ இன்றித் தன்னிச்சையாகக் கூட்டமைப்பின் அங்கமான தமிழரசுக் கட்சியையும், தலைவர் சம்பந்தனையும் வலிந்து, காரணமின்றி அறிக்கை மூலம் திட்டித் தீர்த்திருப்பது இச்சந்தர்ப்பத்தில் எவ்வகையிலும் ஏற்புடையதல்ல.

இதுமட்டுமல்ல, ஏனைய முக்கிய விடயங்கள் சம்பந்தமாகவும் தன்னிச்சையாகவே இவர் அறிக்கைகளை வெளியிட்டு வந்துள்ளார். இத்தகைய அறிக்கைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்துவது மட்டுமல்ல, ஜனாதிபதி ராஜபக்ஷ அரசை மகிழ்ச்சிப்படுத்தவுமே உதவும். இந்த அரசு இவ்வாறான செயல்களினால் பலஎதிர்க்கட்சிகளைசிதைத்து வருவது உலகறிந்த உண்மை.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்குழு 22.09.2012இல் வவுனியாவில் நடைபெற்றபோது, ஓர் உறுப்பினர் தமிழரசுக் கட்சியை முதன்மைப்படுத்தி எழுப்பிய கேள்விக்கே சம்பந்தன் பதிலளித்தார். '' தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும்'' என்றே அவர் பேசியிருந்தார். பிரேமசந்திரனையோ, ஈழமக்கள் புரட்சிகர முன்னணியையோ அல்லது வேறெந்த ஒரு கட்சியையுமோ கருத்திற்கொண்டு சம்பந்தனின் பேச்சு இருக்கவில்லை. ஆனால் எங்கிருந்தோ கசிந்த பத்திரிகைச் செய்தியை வைத்துக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் பேச்சாளர் பிரேமசந்திரன் தன்னிச்சையாக, நிதானமிழந்து அறிக்கை வெளியிட்டமை எந்த வகையிலும் பொருத்தமற்றதாகும்.

தலைமையைத் தாக்கி அறிக்கைகளை வெளிவிடுவது தலைமையை மட்டுமல்ல, தமிழ் மக்களின் நம்பிக்கையையும் பலவீனப்படுத்துவதற்கே உதவும். இதனை நன்கு தெரிந்தே பிரேமசந்திரன் இவ்வாறான அறிக்கைகளை வெளியிடுகிறார்.

2011ஆம் ஆண்டு கூட்டமைப்பாகப் பதிவு செய்வதற்குத் தேர்தல் ஆணையகத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டது. கூட்டமைப்பில் இடம்பெறும் கட்சிகளிடையே புரிந்துணர்வு, உடன்பாடு ஒன்று தேர்தல் ஆணையகத்திற்கு வழங்குவதற்குக் கிழக்கு மாகாணசபைத் தேர்தலை அறிவிப்பதற்கு முன்னரே ஓர் இணக்கம் ஏற்பட்டிருந்தது. ஆனால் கட்சிகளிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுவதற்குப் பதிலாக, ஈழமக்கள் விடுதலை முன்னணியின் பெயரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அறிவிப்பதற்கும், தமிழரசுக் கட்சியை விடுத்துப் பதிவு செய்வதற்கும் பிரேமசந்திரன் எடுத்து வந்த நடவடிக்கைகளையும் நாம் அறிவோம். அவர் வெளியிட்ட அறிக்கையிலும் தமிழரசுக் கட்சியை வேறுபடுத்திவிட்டுத் தானே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரென்றும் அறிவிப்பதானமை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பிளவுபடுத்தும் ஒரு திட்டமிட்ட செயலாகும்.

2012 மார்ச் 02 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஜெனிவா மனித உரிமைப் பேரவை தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தமை யாவரும் அறிந்ததே. அதன் பின்னரும் அவ்விடயத்தில் சம்பந்தன் மீது குற்றம் சுமத்தி ஏன் அறிக்கை விடவேண்டும்?

நுணுக்கமான இராஜதந்திர செயற்பாடுகளில் நமது தலைவர், தமிழ் மக்கள் சார்பில் ஈடுபட்டுக் காரியங்களை முன்நகர்த்துவதைப் பொறுக்க முடியாத பேரினவாத அரசினுடைய சதித் திட்டங்களுக்கு நாம் ஆளாகிவிடக் கூடாது. தமிழரின் தலைமையைத் தாக்கிப் பலவீனப்படுத்துவது தமிழருக்கு நன்மை பயக்கும் செயற்பாடாக இருக்க முடியாது. இப்படியான செய்கைகளில் பிரரேமச்சந்திரன் இனியும் ஈடுபடக் கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் என்ற போர்வையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தமிழ் மக்களுக்கும் கேடு விளைவிக்கும் செய்கைகளுக்காக உபயோகிப்பதை உடன் நிறுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.- என்றுள்ளது.

## தீயில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மேல்பக்கம் மட்டும் தீ பரவிவிட்டது. அதன்பின்னர் குறித்த பெண்ணின் அலறல் சத்தத் தைக் கேட்டு ஓடிச் சென்ற கணவர் அவரைக் காப்பாற்ற முனைந்தார். இதன்போது அவரும் எரிகாயங்களுக்கு உள்ளானார். பின்னர் இருவரும் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். கர்ப்பிணிப் பெண்ணின் உடல்நிலை மோசமடைந்ததால் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அங்கு நடைபெற்ற பரிசோதனையின் போது குறித்த பெண்ணின் உடலில் 63 வீதமான பகுதி தீயில் கருகியதால் அவரது வயிற்றில் இருந்த எட்டுமாத சிசு இறந்தமை தெரியவந்தது. அதன்பின்னர் குறித்த பெண்ணுக்கு உரிய சிகிச்சை கடந்த இரு வாரமாக வழங்கப்பட்டு வந்தபோதும் அது பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் அவரது சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.(ங-4)

## வடக்கு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

களில் இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்ப் பிரதேசங்களில் இருமொழிச் சேவைகளை வழங்குவதை உறுதிப்படுத்துவது என்ற செயற்றிட்டத்தின் கீழ் இந்த நியமனங்கள் செய்யப்படவுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டது. (ம-40)

## சிறுவர்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

குள்ளாகி தற்கொலைக்கு முயன்ற முறைப்பாடுகள் 6 என பதிவாகியுள்ளன.

துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யும் வீதம் கடந்த காலங்களை விட இந்த வருடம் அதிகரித்துள்ளது. அநேகமான சிறுவர் துஷ்பிரயோகங்கள் சிறுவர்களது நெருங்கிய உறவினர்களாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முறைப்பாடுகளில் இருந்து தெரியவருகிறது.

குற்றத்துடன் தொடர்புடையவர்கள் அனைவரும் நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிரான விசாரணைகள் தொடர்கின்றன.

எவ்வாறாயினும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் அனைவரும் விழிப்புடன் செயற்பட வேண்டும். துஷ்பிரயோக சம்பவம் தொடர்பில் 1929 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்க முடியும். தவிர வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு பிரிவுக்கு 024 222 4444 அல்லது 024 567 6760 எனும் இலக்கங்களுடன் தொடர்புகொண்டும் முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முடியும் - என்றார்.

(10-4)

## கிழக்கில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மட்டக்களப்பு-அம்பாறை எல்லை கிராமமான வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவில் வீசிய மினி சூறாவளி காரணமாக 157 வீடுகள் சேமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட இடங்களை போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் சிவகுமார், மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் எஸ்.இன்பராஜன், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்பு கிளை அதிகாரிகள் ஆகியோர் நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளனர்.

(ங)

## இராணுவ...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ஏக்கர் நிலப்பகுதியைத் தம் வசப்படுத்தி விவசாயப் பண்ணை ஒன்றை அமைத்துள்ளனர். 3 கோடி ரூபாய்க்கு மேல் அதற்காகச் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினரால் பண்ணை அமைக்கப்பட்ட பகுதியினுள் 35 முஸ்லிம் குடும்பங்களினுடைய காணிகள் அகப்பட்டுக் கொண்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. அவற்றைத் தங்களிடம் திரும்பி ஒப்படைக்குமாறு அந்தக் குடும்பங்கள் தற்போது கோரிக்கை விடுத்து வருகின்றன. இது தொடர்பாக ஆராயும் கூட்டம் ஒன்று அண்மையில் வவுனியா செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இந்தப் பகுதியில் தமக்கு 40 ஏக்கர் காணி தேவை என தொல்பொருள் திணைக்களமும் கோரிக்கை விடுத்துள்ளது. அத்துடன் கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றும் தொழிற்சாலை அமைப்பதற்காக அந்தப் பகுதியில் காணி வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இவை தவிர்ந்த ஏனைய பெருமளவு நிலப்பகுதிகளைத் தன்வசப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் படைத்தரப்பு மேற்கொண்டு வருகிறது என்று தகவல்கள் கூறுகின்றனர்.

(உ-01)

## கல்லெறி...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கலந்து கொண்டுவிட்டு திரும்பிக் கொண்டிருக்கையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உப தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் நவசம சமாஜக் கட்சி பொதுச் செயலாளர் விக்ரமபாகு கருணாரத்ன ஆகியோர் பயணித்த வாகனங்கள் மீது கற்கள் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

இது குறித்து முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கடிதம் எழுதியுள்ள விக்ரமபாகு கருணாரத்ன, தாக்குதல் சம்பவம் குறித்து உரிய விசாரணை நடத்துமாறு கோரியுள்ளார். இதே வேளை இராணுப் பிரசன்னம் அதிகமாகவுள்ள பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டதால் தாக்குதலின் பின்னணியில் இராணுவம் இருப்பதாக தனக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றும் விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதல் குறித்து இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு எழுதியுள்ள கடிதத்தில் விக்கிரமபாகு தெரிவித்துள்ளார். (ங)

## நீதிமன்ற...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

சேவை ஆணைக்குழுவால் திருமதி வேணுகா சண்முகரத்தினம் நியமிக்கப்பட்டிருந்தார். அரசியல் தலையீடு இல்லாத நியாய ஒழுங்கின்படி செயற்படும் அமைப்பே பொதுச் சேவை ஆணைக்குழு. எனவே பொதுச்சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் சரியானதாகவே இருக்கும்.

இந்தநிலையில் யார் அதிபராகத் தெரிவு செய்யப்படுகிறார் என்ற விடயங்களுக்கு அப்பால் அதிபராகத் தெரிவு செய்யப்படுபவர் அந்தப் பொறுப்புகளைக் கையேற்க, ஏற்கனவே அந்தப் பதவியில் இருந்தவர் தனாகவே விலகிச் செல்ல வேண்டும். அதுவே நடைமுறை.

நேர்முகத் தேர்வில் திருமதி வேணுகா சண்முகரத்தினத்தைத் தெரிவுசெய்து அவரை வேம்படி மகளிர் கல்லூரி அதிபராக நியமித்தது பொதுச் சேவை ஆணைக்குழுவே தான். அந்த ஆணைக்குழுவின் நியமனத்தை எவரும் மீறுவது சரியானதல்ல. ஆனால் அதிபர் பதவியைப் பொறுப்பேற்குமாறு திருமதி வேணுகாவுக்கு பொதுச்சேவை ஆணைக்குழு உத்தரவிட்டும் கூட அந்தக் கடமைகளைப் பொறுப்பேற்கும் விடயம் கடந்த மூன்று மாதங்களாக இழுபறி நிலையிலேயே இருந்தது. எமது சங்கம் உட்பட பல்வேறு தரப்புகளும் இந்த இழுபறிக்கு கண்டனம் தெரிவித்திருந்தன. பல்வேறு தரப்புகள் இது தொடர்பில் தொடர்ச்சியாக இத்தனை நாளும் அழுத்தங்களைக் கொடுத்த பின்னரே இழுபறி முடிவுக்கு வந்துள்ளது. ஆனால் இவ்வாறு அழுத்தங்கள் கொடுத்து செய்யப்பட வேண்டிய காரியமல்லவே இந்த விடயம்.

உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து, மன்றின் உத்தரவின் பின்னரேயே அதிபர் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

ஆனால் அதிகாரிகள் நீதி, நியாயமாகச் செயற்பட்டிருந்தால் இத்தகைய இழுபறி நிலை ஏற்பட்டிருக்காது. இனிமேலும் இதுபோன்று நீதிமன்ற உத்தரவின் பின்னரே செயற்படாமல் இனியாவது அதிகாரிகள் மனச்சாட்சியின்படி நியாயமாகச் செயற்பட முன்வர வேண்டும்.

இதேவேளை, கல்வித்துறை மீதான அரசியல் தலையீடுகள் நீக்கப்பட வேண்டும் என்று அண்மையில் வவுனியாவில் நடைபெற்ற மாநாட்டில் இலங்கை ஆசிரியர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ங-4)

## ஐ.நாவிடம்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இந்தநிலையில் தற்போது தி.மு.க. சார்பில் டெசோ மாநாட்டுத் தீர்மானங்களை ஐ.நா சபையில் கையளிக்க இந்திய மத்திய அரசு அனுமதி அளித்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து டெசோ அமைப்பின் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 3ஆம் திகதி தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் சென்னையில் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் தி.மு.க. பொதுச்செயலாளர் அன்பழகன், பொருளாளர் மு.க.ஸ்டாலின், திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, திராவிடர் இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன், முன்னாள் மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன், சட்டத்தரணி ராதாகிருஷ்ணன், ஹசன் முகமது ஜின்னா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் இடம்பெற்ற போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. சபையின் மனித உரிமைகள் சபையில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஆய்வு செய்யவுள்ளது. இந்த ஆய்வுப் பொறுப்பை ஏற்கவுள்ள இந்தியா, மனித நேயத்துடன் இலங்கை அரசு நடக்க வேண்டும் என்று டெசோ மாநாட்டில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானங்களை மையப்படுத்தியே தன்னுடைய கருத்துகளை அந்த அமர்வில் முன்வைக்கவுள்ளதாகத் தெரியவருகிறது. எனவே ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வு நடைபெறுவதற்கு முன்பாக டெசோ மாநாட்டுத் தீர்மானங்களை ஐ.நாவிடம் கையளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான இறுதித் தீர்மானம் 3ஆம் திகதி நடைபெறவுள்ள கலந்துரையாடலில் எடுக்கப்படவுள்ளது. அதன்பின்னர் தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின், நாடாளுமன்ற தி.மு.க. தலைவர் டி.ஆர்.பாலு ஆகியோர் அடங்கிய குழு ஒக்ரோபர் 6ஆம் திகதி நியூயோர்க் செல்லவுள்ளது. அங்கு ஐ.நா.சபையில் டெசோ மாநாட்டு தீர்மானங்களை அந்தக்குழு கையளிக்கவுள்ளது.

(ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எமது கையை நாமே சிதைக்கும் பாவிகளாகவே இருக்கலாமா...?

நாளை ஒக்ரோபர் முதலாம் திகதி அனைத்துலக சிறுவர் நாள். இன்றைய சிறுவர்கள் இன்னும் சில வருடங்களில் இளைஞர்களாக வளர்ந்து மேலும் சில ஆண்டுகளில் சமூகத்தின் பிரதான பிரசைகளாகிவிடுவர்.

அவர்களைச் சமூகப் பிரக்ஞை உள்ள நல்ல குடிமக்களாக மாற்றும் பொறுப்பு முதலில் பெற்றோர்களுக்கும் அவர்களை அடுத்து ஆசிரியர்களுக்கும் உரியதே. அவர்கள் வளர்ந்து இளைஞர்களானதும் நல்வழிப் படுத்தி, சமூகக் கட்டமைப்புகளை மதிக்கும் குடிமக்களாக மாற்றும் பொறுப்பு பெற்றோர் உட்பட்ட மூத்தவர்களையே சாரும்.

மேற்போந்த படிமுறைகள், வழிமுறைகள் மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கும் அதனூடு நாட்டின் வளர்ச்சி மற்றும் உயர்ச்சிக்கும் அடித்தளமாக அமைவன. அவற்றை உலகளாவிய முறையில் ஞாபகப் படுத்துவதே நாளைய அனைத்துலக சிறுவர் தினம்.

அத்தோடன்றி, சிறுவர்களுக்கான உரிமைகள் மற்றும் வாழ்க்கை நலன் வரன்முறைகளும், நியமங்களும் அனைத்துலக மட்டத்தில் வகுக்கப்பட்டு அவற்றை நாடுகள், அரசுகள் நடைமுறைப்படுத்தக் கடமைப்படுத்தப்பட்டுள்ளன. பலதேச அரசுகளும் அவற்றைத் தவறாது, அர்ப்பணிப்புடன் செயலாக்குவது சிறப்புடன் நோக்கப்பட வேண்டியதாகும்.

நாடு ஒன்றின் எதிர்கால வளர்ச்சிக்கும் அங்கு சமூக நீதி உயர்ந்து விளங்குவதற்கும் இன்றைய சிறுவர்களே பிரதான பங்காளிகளாக, தூண்களாக விளங்கப்போகிறார்கள்.

சிறுவர்களுக்கு உரிய வளர்ச்சிப் படிகளில் அவர்களின் ஆரோக்கியமான உடல், உளநல வளர்ச்சிகள் முதற்கண் இன்றியமையாதவை. அடுத்து வருவது கல்வி என்ற கருந்தனத்தையும், நற்பண்புள்ள குண நலன்களையும் வளர்த்துக் கொள்வதாகும்.

எங்கள் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த இன்றைய சிறுவர்களை, பலதரப்பட்ட, பல்வேறு வகைப்பட்ட பிரிவுகளுக்குள் வகுக்கவேண்டிய தேவை இயல்பாகவே எழுகிறது; தேவையாக உள்ளது. இந்த நாட்டின் பெரும்பான்மை இனச் சிறுவர்களை விடவும் விசேட கவனிப்பும் வழிகாட்டல்களும் அவர்களுக்கு அவசியமாகின்றன.

எமது சின்னஞ் சிறிசுகள் போரின் மத்தியிலும், அவர்களின் பருவத்துக்குரிய உணவு மற்றும் அன்றாடத் தேவைகளை இலகுவில் பெற்றுக் கொள்ள உரிய வசதிகள் வாய்ப்புகள் கிடைக்காமலும் வளர்ந்தவர்கள்.

அதே போன்று அவர்களின் பருவத்துக்குரிய கல்வித் தேவைகளையும் விளையாட்டு, உடற்பயிற்சிகளை செய்வதற்கு வீடுகளை விட்டு, இடம்பெயர்ந்து வாழ்ந்த முகாம்களை மற்றும் உறவினர் வீடுகளை விட்டு வெளியில் செல்ல முடியாத இடர்காலச் சூழலில் சிக்குண்டு இளவயதிலேயே பல்வேறு வகையான இன்னல்களையும் எதிர்கொள்ள நேர்ந்தவர்கள்.

கல்வியே தமக்கான பிரதான சொத்து என்று தமிழ் சிறுவர்கள் அதனை நாடியே, அதற்கு முதன்மை இடம் தந்து அவர்களது பெற்றோரால் வளர்க்கப்பட்ட காலம் நீண்டிருந்தது. ஆனால் இன்றைய தமிழ்ச் சிறுவர்கள் அதற்கு முற்றிலும் எதிர்மாறான சூழ்நிலையில் வளர்ந்தார்கள், வளர்கிறார்கள்.

போர் முடிவுற்று மூன்றுவருடங்கள் கழிந்த போதிலும், அவர்கள் தெற்கே அல்லது மேற்கே உள்ள சிறுவர்களை ஒத்த நிலையில் தமது வயதுக்குரிய பல்துறைசார் தேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியாத ஏதிலிகளாகவே உள்ளனர்.

பெற்றோர்களில் பெரும்பான்மையினர் தங்கள் பிள்ளைகளின் கல்வியில்–அதனூடான வளர்ச்சியில் அக்கறைகொண்டு செயற்பட முடியாது மிகவும் பின்தள்ளப்பட்டுள்ளார்கள். அதற்கான வளமும் சக்தியும் பல குடும்பங்களில் தரை மட்டத்திற்குத் தேய்ந்து, வீழ்ந்து போயுள்ளது.

தமிழ்ப் பிரதேசங்களில் ஆரம்பக் கல்வியைத் தானும் தமது சிறுவர்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியாத பெரும் கையறு நிலையில் பரிதாப நிலையில் அவர்கள் உள்ளனர். எங்கள் பகுதியின் கல்விப்புலம் சார்ந்த, சமூக நலப் புலம் சார்ந்த தரப்புகளின் புள்ளிவிவரங்களும் ஏனைய தரவுகளும் இதனை ஊன்றித் தொட்டுக் காட்டுகின்றன.

தமது வறுமை நிலையில் உண்டான இயலாமை காரணமாக, சிறுவர்களை கல்விக் கூடங்களுக்கு அனுப்புவதற்குப் பதிலாக, அன்றாட உணவுத் தேவைகளில் அற்ப சொற்பத்தையாவது பெறுவதற்காக ஏதாவது ஒரு தொழிலைச் செய்வதற்கு அனுப்பும் பெற்றோரின் எண்ணிக்கை மிக மிக உயர்ந்து ஏறுமுகமாகி உள்ளது!

தமது பெற்றோரின் அன்பும், அக்கறையும் தீர்ந்து போன நிலையில், கூடா நண்பர்கள் சேர்க்கையால் சிறுவயதிலேயே ஒவ்வாத பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகிவிட்ட சிறுவர்களின் எண்ணிக்கையும் எங்கள் பிரதேசங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இப்போதைய சூழ்நிலையில், குடும்பத் தலைவர் ஒருவரின் வருமானத்தைக் கொண்டு அன்றாட அத்தியாவசியத் தேவைகளைப் பெற்றுக் கொள்ள இயலாமை காரணமாக, கணவனும் மனைவியும் தொழில் நாடிச்செல்வதால் அவர்களின் அன்பும் அரவணைப்பும் கிட்டாத நிலையில்–

பிள்ளைகள் - சிறுவர்கள் - மனம் தளர்ந்து, விரும்பமான வழியில் சென்று தாமாகவே கெட்ட வழிகளை நாடுவதும் அதிகரித்து வருகிறது.

குரூர குணம் படைத்த மனித மிருகங்கள், எமது சமூகத்தில் நாளொரு பொழுதும் பொழுதொரு கணமுமாகப் பெருகி வருவதால், சின்னஞ் சிறுசுகள் அந்தக் காமுகர்களின் பொறியில் வீழ்ந்து சீரழியும் நிலை பல்கிப்பெருகி வருகிறது. இது சிறுமி, சிறுவர்களின் கல்வியை மட்டுமன்றி சமூக நிலையையும் நிலத்தில் புதைக்கும் பேரபாயத்தை உற்பவித்து வருகிறது. இந்த ஈனர்களைச் சமூகமும் சட்டமும் பாவ, புண்ணியம் பாராது தண்டித்துத் தோலுரிக்க வேண்டியது அவசியமும் அவசரமுமானது. கிராமத்துக்குக் கிராமம் இதற்கான "அதிரடிப் படைகளை" உருவாக்குவதும் உடனடித் தேவையாகிறது.

அதேவகையில், குறிப்பிட்ட வயதுக்குக் குறைந்த சிறுவர்களைச் சட்டத்துக்கு "சூக்" காட்டி தமது தனிப்பட்ட இலாபம் கருதி சட்டவிரோதமாக வேலைக்கமர்த்தி, அவர்களின் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் சூனியமாக்கும், பாழ்படுத்தும் சாரார் முன்னரைவிட பெருகி வருவதை அவதானிக்க முடிகிறது. இதுவும் சிறுவர்களுக்கு எதிரான மிகப்பெரிய கொடுமையாகிறது. ஏபிரகாம் லிங்கன் காலத்தில் நிலவிய அடிமை, சிறுமை யுகத்தை நோக்கிப் பின்னகர்ந்து செல்கிறது.

போரின் விளைவாக வாழ்க்கையில் பலவற்றைப் பறிகொடுத்து, அர்க்கெட்டுப் போய், அல்லாடி நலிந்து போயுள்ள எங்கள் சமூகத்தில் இருந்து, வெட்டி-கிள்ளி எறியப்பட வேண்டிய நச்சுக் களைகள் இவை.

எமது பிரதேசங்களில் சிறுவர் நலன்நாடிய பணிகளில் செயற்படும் நிறுவனங்கள், அமைப்புகள் தமது வெளிக்களச் செயற்பாடுகளை வலிதாக்கி, அவற்றின் விளைவுகள் பேரிடர் காலத்தில் பாதிப்புற்றவர்களை விரைந்து சேர்ந்திடும் இலக்கை நோக்கியதாக அமைய வேண்டும்.

எங்கள் தாயகப் பூமியின், எதிர்கால வாரிசுகள் நலனில் அக்கறையுடன் மனமார்ந்து உழைக்கத் தவறினோமானால், பின்னடித்தோமாயின் எமது கையை நாமே சிதைக்கும் பாவிகளாவோம்.

இதனை நம்மில் எத்தனை பேர் இதயத்திருத்தி, அக்கறையுடன் செயற்பட முன்வரப்போகிறோம்..?

# சிறுவர், பெண்கள் மீதான துஷ்பிரயோகம் தமிழ் இன அழிப்பின் ஓர் அடையாளமே

## யாழ்.சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பாதுகாப்பு திட்ட நிபுணர்

யாழ்ப்பாணம், செப்.30

வடமாகாணத்தில் தற்போது இடம்பெற்று வரும் சிறுவர், பெண்கள் மீதான துஷ்பிரயோகங்களின் அதிகரிப்பு தமிழர்களின் இன அழிப்பின் ஓர் அடையாளமே எனத் தெரிவித்தார். யாழ்.சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பாதுகாப்பு திட்ட நிபுணர் ஜெ.தற்பரன்.

மனித நேய அமைப்புகளின் கூட்டமைப்பின் மாவட்ட அலுவலகத்தில் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 'சிறுவர்கள் நலனைப் பேணலும் பெற்றோரின் மனப்பாங்கும்' எனும் தலைப்பில் கருத்துரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:-

பெண்கள், சிறுவர் உரிமைகள் இலங்கையில் சட்டமாக்கப்படாத காரணத்தால் இவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. குறிப்பாக போரின் பின்னர் வடமாகாணத்தில் சிறுவர், பெண்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட்வில்லை. இதன் காரணமாக உறவினர்களாலும் வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தருபவர்களாலும் துஷ்பிரயோகங்கள் இடம்பெறச் சாதகமன சூழல் நிலவுகின்றன.

சிறுவர், பெண்களுக்கு தகுந்த பாதுகாப்புக் கொடுத்து ஒழுக்க விழுமியங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். மதம், கலாசாரம், இனம், மொழி என பின்பற்றலுடன் வாழ்க்கையை நடத்தப்பழக வேண்டும். இந்து மதம் சார்ந்தவர்கள் மட்டுமே பெயர் மாற்றம், மதம் மாற்றம் என தம்மை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவை எல்லாம் தமிழ் இனத்தின் அழிப்புக்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் ஆகும்.- என்றார்.

மனித நேய அமைப்புகளின் கூட்டமைப்பின் மாவட்ட அதிகாரி த.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், சிறுவர் பெண்கள் நலத்துறை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார். (ம-14)

# நாகர் கோவிலில் இன்று கப்பல் திருவிழா

வடமராட்சி,செப்.30

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்தத் திருவிழாவில் வரலாற்றை எடுத்தியம்பும் திருவிழாவான கப்பல் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெறவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெறும் 7 ஆம் திருவிழாவான கப்பல் திருவிழாவில் விசேட மேளக்கச்சேரி, வில்லிசைக் கச்சேரி என்பன இடம்பெறும். தொடர்ந்து நாளை திங்கள் கிழமை அதிகாலை 2.30 மணிக்கு அலங்கார சப்பறத்தில் நாகதம்பிரான் வீதி உலா வருவார்.

இந்தவேளை வடக்கு வெளி வீதியில் கப்பல் ஆட்டும் கப்பல் திருவிழா நடைபெறும். கப்பல் திருவிழா நிறைவுற்றதும் சுவாமி அதிகாலை 5 மணிக்கு இருப்பிடம் திரும்புவார்.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாககப்பல் திருவிழாவுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த 'வல்லை நாயகி' என்ற கப்பல் கடந்த கால போரின் போது முற்றாகச் சேதமடைந்தது. இதற்குப் பதிலாக புதிய கப்பலைக் கட்டி வல்வெட்டித் துறையைச் சேர்ந்த மூதாதையர்களின் வாரிசுகள் வழங்கியுள்ளனர். போருக்குப் பின்னர் 12 வருட கால இடைவெளியில் புதிய பாய்மரக் கப்பல் திருவிழா இடம் பெறுவது விசேட அம்சமாகும்.

கப்பல் திருவிழாவை முன்னிட்டு பெருந்திரளான பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்ப்பதால் விசேட போக்குவரத்துச் சேவைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை இரவு வேட்டைத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும் 3 ஆம் திகதி புதன்கிழமை சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று வருடாந்தத் திருவிழா நிறைவுறும். (ம-8-253)

# வடமராட்சியில் கொடிவாரம்

வடமராட்சி, செப்.30

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் கொடிவார தினம் எதிர்வரும் 3 ஆம் திகதி புதன் கிழமை முதல் 10 ஆம் திகதிவரை ஒரு வார காலத்துக்குக் நடைபெறவுள்ளது.

இந்தக் கொடி வாரத்துக்கான கொடி விற்பனையை பருத்தித்துறை வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் பிரதேச செயலகத்தில் வைத்து ஆரம்பித்து வைப்பார்.

கொடிவார தினங்களில் வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரி, கம்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம், வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி ஆகிய 7 பாடசாலைகளிலும் மது, புகைத்தல், போதைப் பொருள் அற்ற சமூகத்தை உருவாக்குதல் போன்றவற்றைத் தடுக்கும் நோக்காகக் கொண்டு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் பாடசாலைகளில் தினமும் பிரார்த்தனைகள் முடிவுற்றதும் சுமார் 15 நிமிடங்கள்வரை நடைபெறவுள்ள இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகளில் கலந்துகொண்டு மது, புகைத்தல், போதைப்பொருள் அற்ற சமூகத்தை உருவாக்குதல் என்ற தலைப்பில் யாழ்.மாவட்ட மதுவரி அத்தியட்சகர் நா.சோதிநாதன், சிறுவர் துஷ்பிரயோகத்தை முற்றாக ஒழிப்போம் என்ற தலைப்பில் வடமராட்சி வலய ஆசிரிய நிலையப் பொறுப்பாளர் செல்வி இரா. ஜேஸ்வரி சுப்பிரமணியக் குருக்கள் ஆகியோர் கருத்துரை வழங்குவர். (ம-8)

# விதிகளை மீறிய 11 வர்த்தகருக்கு 45 ஆயிரத்து 500 ரூபா அபராதம்

தென்மராட்சி, செப்.30

பாவனையாளர் பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 11 வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 45 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் பிரதேசத்தின் பல வர்த்தக நிலையங்கள் மீது திடீர் பரிசோதனைகளை நடத்தினர்.

இதன் போது திகதி காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்தமை, விலைப் பட்டியல், விலைச் சுட்டெண் காட்சிப் படுத்தமை, கூடிய விலைக்குப் பொருள்கள் விற்பனை செய்தமை போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகள் நேற்று முன்தினம் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இதனை அடுத்து திகதி காலாவதியான பொருள்கள் வைத்திருந்த வர்த்தகர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவும் விலைப்பட்டியல், விலைச் சுட்டெண் காட்சிப்படுத்தாமை, கூடிய விலைக்கு பொருள்களை விற்பனை செய்தமை போன்ற குற்றங்களுக்காக ஐந்து வர்த்தகர்களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் மூன்று வர்த்தகர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும் ஒரு வர்த்தகருக்கு ஆயிரத்து 500 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

மாவட்டப் பாவனையார் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட உத்தியோகத்தரால் தாக்கல் செய்யப்பட்டு கடந்த வாரம் நீதிமன்றில் 16 வர்த்தகர்களுக்கு 61 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# புகையிலை நாற்று மேடைகள் அமைக்கும் பணியில் விவசாயிகள்

வடமராட்சி, செப்.30

கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழையை அடுத்து வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலைச் செய்கைக்கான நாற்று மேடைகள் அமைக்கும் பணிகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் உள்ள பொலிகண்டி, புலோலி, அல்வாய் ஆகிய பகுதிகளில் நாற்றுமேடை அமைக்கும் பணிகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளமையைக் காணக் கூடியதாக உள்ளது.

பொலிகண்டிப் பகுதியில் வருடம் தோறும் புகையிலை நாற்று மேடைகள் அமைக்கப் பட்டு அவற்றில் உற்பத்தியாகும் புகையிலை நாற்றுக்கள் வடமராட்சிப் பிரதேசத்துக்கு மாத்திரமன்றி தீவகம், வலிகாமம் பிரதேசங்களுக்கும் விநியோகிக்கப் படுவது குறிப்பிடத்தக்கது.

புலோலி, அல்வாய் போன்ற இடங்களில் சிறு சிறு நாற்று மேடைகளை விவசாயிகள் அமைத்து தமது தேவையைப் பூர்த்தி செய்த பின்னரே ஏனைய பிரதேச விவசாயிகளுக்குப் புகையிலை நாற்றுக்களை வழங்குவதுண்டு.

இந்த முறையும் பொலிகண்டிப் பகுதியில் மிக நீளமான பெரிதான அதிக எண்ணிக்கையான புகையிலை நாற்றுமேடைகள் அமைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ். இந்து பூரம் 2ஆம் பாதம், பாவக்கிரகம் 28¾, உயரம் 5 அடி 7" உடைய கனடாவில் தொழில்புரியும் P.R உள்ள 34 வயது மணமகனுக்கு படித்த நற்குணமுள்ள மணமகள் தேவை.

தொடர்பு: 021 2052303, 077 2358299

(23468)(8.14)

## கார் விற்பனைக்கு

அரச உத்தியோகத்தரின் பாவனை யில் நல்ல நிலையில் உள்ள வெள்ளை நிற TOYOTA COROLLA 14-xxxx கார் (1986 Model) விற்பனைக்கு உண்டு.

(23439) (5-6-7) தொடர்பு: 077 546 4033

## கமரா தவறிவிட்டது

வல்லிபுரக் கோயிலில் இடம்பெற்ற தேர்த்திருவிழாவின் பின்னர் பிற்பகல் ஒரு மணியளவில் ஆலய வெளி வீதியில் முக்கிய மரண நிகழ்வுகள் உள்ளடக்கப்பட்ட கறுப்பு நிறம் கொண்ட கனன்(சைனா) சிறிய புகைப்பட வீடியோ டிஜிட்டல் கமரா தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் 077 3489377 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

மு. ஈழத்தமிழ்மணி
இல. 25, பிரம்படி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (23447)(5-6-7)

## இறைச்சிக் கோழி விற்பனை

TB-xxxx தொடர் இலக்கமுடைய Pulsur 150cc (கறுப்பு நிறம்) மற்றும் JI-xxxx தொடர் இலக்கமுடைய CBZ Star 150cc (கறுப்பு நிறம்) மோட்டர் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0770511877

---

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் கோயில் வீதியில் அமைந்துள்ள காணியுடன் சகல வசதிளுடனுமான வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0777795243
0779836766
(சி3018) (15-14)

---

**THE SCIENCE CORNER**
Clock Tower Lane, Jaffna.
**A/L 2013, DAY CLASS**
ஆரம்பம் : 01.10.2012
திங்கள் காலை 6.30

| PHYSICS | BIOLOGY | CHEMISTRY | C.MATHS |
|---|---|---|---|
| செல்வன் | பொன்திவாகரன் | BENO | சிவகரன் |
| செந்தில் | குகானந்தன் | சிவகுமார் | |

தமிழ், ஆங்கில மொழி மூல தனியான வகுப்புகள்

---

**The Execellent Ceylon Products (Pvt)Ltd**
# 88, Stace Road, Grandpass,
Colombo 14, Sri Lanka
இன் தயாரிப்பான
Tel : 0112380442, 077 9720380, 072 196951.
Email : inquiry.tecp@gmail.com

உடற்பருமனைக்குறைக்க நீரிழிவைக் கட்டுப்படுத்த
**NATURAL CEYLON CINNAMON TEA**
(இயற்கையின் சிலோன் கறுவாத் தேயிலை)



இதோ வடபகுதியில் உங்களுக்காக முதன் முதலில் அறிமுகமாகிறது

கிடைக்கும் இடங்கள்:
★ மருந்தகங்கள் ★ சுப்பர் மார்க்கெட் (Super Market)

அனுகூலங்கள்:
நீரிழிவு, உயர்குருதி அழுத்தம், இருதய நோய்கள், மாரடைப்பு, பக்கவாதம், அஜீரணம், வயிற்றுப் புண், ஆண்மை குறைவு, மாதவிடாய் நிவாரணி, ஞாபக மறதி மற்றும் பல...

தொடர்பு:
ஏகவிநியோகஸ்தர்- Wesco பாமசி 470, Hospital Road, Jaffna. Tel: 021-2223188, E-mail: yaal wesco@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுக்கு அடியில் பல அதிசயங்கள்.....



நாம் உண்ணும் உப்பு கடல் தாய் நமக்கு தந்த பரிசு என்று நம் அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்த உப்பைத் தின்னும் மனிதர்கள் பார்க்கக்கூட முடியாத வகையில் கடலுக்குள் எத்தனையோ அற்புதங்களும், அதிசயங்களும், விநோதங்களும் அடஅப்படியா என்று வியக்கும் வகையில் கடலன்னை நமக்குக் கொட்டிக் கொடுத்திருக்கிறாள் என்பது பலருக்கும் தெரியாமல்தான் உள்ளது.

கடல் பேனாக்கள் கடலுக்கடியில் அலைகள் இல்லாத இடத்தில் கூட்டம், கூட்டமாக பல வண்ணங்களில் ஆடும் பரத நாட்டியத்தைப் பார்ப்பது காணக் கிடைக்காத கண்கொள்ளாக் காட்சியாகும். கடலுக்குள் ஓர் அற்புதக் கண்காட்சியையே நடத்திக் கொண்டிருக்கும்.

பார்ப்பதற்குப் பறவைகளின் இறகுகள் போல காணப்படும் கடல் பேனாவின் விலங்கியல் பெயர் பெனாடுலாசியா என்பதாகும். பறவைகளின் இறகுகளைக் கையில் வைத்துக்கொண்டு மையைத் தொட்டு, தொட்டு ஒரு காலத்தில் எழுதினோம். அந்த இறகுப் பேனாக்கள் போலவே இவையும் இருப்பதால் இவற்றிற்குக் கடல் பேனாக்கள் என்று பெயர் உண்டானது. உலகம் முழுவதும் உள்ள கடலில் வாழ்ந்தாலும் மன்னார் வளைகுடாவில் ஆழ்கடல் பகுதியில், அலைகள் ஆர்ப்பரிக்காத இடத்தில் இவை கூட்டம், கூட்டமாக வியாபித்து ஆடும் நடனம் அற்புதம். கடலுக்கடியில் ஸ்கூபா டைவிங் செய்பவர்கள் இவற்றின் அழகைக் கண்டு ரசிக்க முடியும்.

பவளப்பாறைகளை உருவாக்கும் கடல் தாமரைகள் மாதிரியான ஒருவகைப் பூச்சிகள்தான் கடல் பேனாவாகின்றன. இதில் உள்ள ஒவ்வொரு இறகுகளும் 8 உணர்விழைகளைக் கொண்டிருக்கிறதாம். கடல் நீரை உறிஞ்சுதல்,உணவு உட்கொள்ளுதல், இனப்பெருக்கம், டார்ச்லைட் போன்ற ஒளி உமிழ்தல் போன்றவையே இவற்றின் செயல்பாடுகள். கடலுக்கடியில் மணலிலோ, சகதியிலோ அடிப் பகுதி புதைந்து மற்ற பகுதிகள் வெளியில் தெரிவதுபோல காணப்படும். பல எண்ணங்களில் இருக்கும் இந்த உயிரினம் 6 அடி உயரம் வரை வளரக் கூடியது.

ஆழமான அதே நேரத்தில் அமைதியான கடல் பகுதிகளையே விரும்பும் இப்பேனாக்கள் அதன் இருப்பிடத்திலிருந்து படுங்கி விடாமல் தன்னைத்தானே பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்கின்றன.

தாவர மிதவை நுண்ணுயிரிகளே இதன் விருப்ப உணவாக இருப்பதால் இருக்கும் இடத்தில் அது கிடைக்காவிட்டால் தனது இருப்பிடத்தை மாற்றிக் கொள்கின்றன. சின்னஞ்சிறு மீன்களும் சில பெரிய கடல் பேனாக்களில் ஒட்டிக் கொண்டும் உயிர் வாழ்கின்றன. இப்பேனாக்களில் உள்ள இறகுகள் போன்ற வளையங்கள் மூலமே இதன் வயதும் கணக்கிடப்படுகிறது. கடலுக்கு அடியில் வாழும் நகரும் உயிரினங்களான நட்சத்திர மீன்கள், கடல் வெண்ணைப் புழுக்கள் ஆகியன இவற்றின் முக்கிய எதிரிகள். இவையிரண்டும் கடல் பேனாவை பார்த்தவுடனேயே வேரோடு பிடுங்கி அழித்து விடும். இவற்றிடமிருந்து இவைகள் தப்பித்துக் கொண்டால் 100 வருடங்கள் வரை உயிர் வாழும் வகையில் இதன் ஆயுளும் கெட்டியாக இருக்கும்.

ஆண் உயிரினம் இன முதிர்ச்சியடைந்து கடலில் விந்துகளை வெளியிடும் அதே நேரத்தில் பெண்ணும் அதற்கு அருகிலேயே ஒரே சமயத்தில் முட்டைகளை வெளியேற்றுவதால் இரண்டும் ஒன்றாகி கருவுறுதல் நடந்து இளங்குஞ்சுகளாகி விடுகின்றன. இவை ஒரு சில வாரங்கள் மட்டும் கடலில் நீந்தி வாழ்ந்து கொண்டு தனக்குச் சாதகமான இடம் கிடைத்தவுடன் மணலிலோ, சகதியிலோ அப்படியே ஊன்றி அங்கேயே வளர்ந்து கொண்டிருக்கும். நவீன விசைப்படகுகள் இழுவலைகளின் மூலம் மீன் பிடிப்பதால் பல அரிய வகை கடல் பேனாக்கள் வேரோடு பிடுங்கப்பட்டு சிறிதும் உபயோகமில்லாமல் கரைகளில் தூக்கி வீசப்படுகின்றன. கடல் பேனாக்களை மற்றவை தொட்டால் உடனே டார்ச்லைட் போன்ற ஒருவித ஒளியை உமிழ்ந்து எதிரிகளைப் பயப்பட வைத்து தப்பிக்கும் நுட்பத்திலும் பேனாக்கள் பலே கில்லாடிகளாம்.


Samsung
GALAXY Y DUOS lite

SAMSUNG



2 YEARS' WARRANTY
* நிபந்தனைகள் உண்டு

சாதாரண விலை [illegible]
சலுகை விலை 19,900/-

SAMSUNG SMART DUAL SIM

**உங்களுக்கு பொருத்தமான போன் மிகக் குறைந்த விலையில்**

இதோ மிகக் குறைந்த விலையில் ஸ்மாட்போன். Samsung Galaxy Y Duos lite ஸ்மார்ட் போனில் உங்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் உண்டு. அடிக்கடி பயணம் செய்பவர்களுக்கு மிகச்சிறந்த கைக்கடக்கமான உபகரணம். அதன் பளிச்சிடும் வடிவமைப்பு உங்கள் அழகிற்கு மேலும் அழகூட்டும். அத்துடன் செயற்படுத்துவதும் மிகவும் இலகுவானது.

- UMTS HSDPA 3.6 (900/2100MHz)
- 2.8" QVGA TFT LCD
- 2MP FF Camera
- TouchWiz for Android
- A-GPS

* நிபந்தனைகள் உண்டு * இச்சலுகை 2012 செப். 7 முதல் செப். 30 வரை மட்டுமே.

**Warranty: 2 years for mobile phones / 6 months for battery, charger and earphones as per Samsung standard policy.**

**National Distributor:** John Keells Office Automation (Pvt) Ltd., Tel: 011 2 313 000, Hotline: 0773 022 286, Fax: 011 2 431 745, E-mail: samsung@jkoa.lk.

SAMSUNG smartphone cafe **MobileMax** Platinum Towers, 011 5 744 455. **Chinthana GSM** Maharagama, 011 2 850 851. **Q Tel Holding** WTC, 0727 021 021, **Divine** Crescat, 0112 449 933, **JKOA** Hot Line - 0773 022 286, **Aiken** Sausiri Building Nugegoda - 0714 041 197, **Opsel** Phone Galary Malabe - 0775 795 795, **Softlink** Moratuwa - 0112 646 672

**Samsung Customer Care Centres:** Colombo: The Phone Company International (Pvt) Ltd. 0777 322 223 / 0777 595 595, Galle: 0777 361 444, Kandy: 174, Kotugodella Veediya - 0777 487 447, E-mail: support.srilanka@samsung.com.

**Samsung Call Centre:** 011 7 347 070 / 011 7 348 080.

**Singer Mega, Singer Plus and Sisil World** - 011 5 400 400. **Softlogic & Softlogic Max Outlets** - 011 5705705, **Singhagiri (Pvt) Ltd:** Hotline: 011 5 413 413

**Regional Distributors: Gampaha:** Cell Mart (Pvt) Ltd. - 0715 364 356, **Badulla:** H.A.Bagasrawala & Sons - 0552 222 296, **Kegalle:** Seetha Holding (Pvt) Ltd. - 0357 389 281, **Hambantota:** Aiken (Pvt) Ltd. - 0714 041 197, **Homagama:** S.T.Distributors, **Ratnapura and Embilipitiya:** Global Zone (Pvt) Ltd. - 0722 301 022, **Ampara:** Mobilix Lanka (Pvt) Ltd.- 0718 000 888, **Pettah:** Touch Cellular - 0777 122 299, **Anuradhapura:** Universal Cellular (Pvt) Ltd. - 0715 331 541, **Batticaloa:** Max Lanka (Pvt) Ltd. - 0715 358 654, **Kurunegala:** Universal Cellular (Pvt) Ltd. - 0715 346 938, **Jaffna:** Unitel - 0750 386 067, **Polonnaruwa:** Midland Air Technologies - 0272 222 277, **Galle:** Dharshana Enterprises - 0777 266 199, **Kalutara:** The Phone Arcade - 0773 509 181, **Matara:** Information & Data Management Systems (Pvt) Ltd. - 0714 297 546, **Trincomalee:** Unilever Cell Mobiles - 0775 556 868, **Vavuniya:** T Mobile - 0777 401 777, **Kandy:** Gunasekara & Sons - 0776 077 769, **Nugegoda / Maharagama:** Aiken Pvt Ltd. - 0714 041 197, **Matale:** Smart Phone House J A Shafeek - 0777 811 992, **Colombo / Moratuwa:** ST Distributors - 0715 358 387. **Nuwara Eliya :** The Phone Tik - 0714 041 380, **Puttalam:** Lucky Com - 0772223636, **Ampara / Monaragala** - Mobilix lanka cellular (Pvt) Ltd. - 0718000888.



இப்போது!
செலான் வங்கியில்
நிலையான
வைப்புகளுக்கு
விஷேட வட்டி



இலவச கிரடிட்காட்களை
குறைந்த வட்டி வீதத்தில்
உடனடியாக பெற்றுக்கொள்ளுங்கள்

| 1 மாதம் | 3 மாதங்கள் | 1 வருடம் |
|---|---|---|
| 12%* | 13.5%* | 14.5%* |

சிரேஷ்ட பிரஜைகளுக்கு 1% மேலதிக வட்டி

| 01 மாதம் | 3 மாதங்கள் | 1 வருடம் |
|---|---|---|
| 13%* | 14.5%* | 15.5%* |

www.eseylan.com

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியுடனோ அல்லது 011 2008888 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுங்கள்

செலான் வங்கி

GRACE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு ஒளிமயமான முதலீடு
# ஒரு வளமான எதிர்காலத்திற்கு!



## சம்பத் வங்கித் தொகுதி கடன்கள் வழங்கல்

கடந்த 25 ஆண்டுகளாக நாம் உங்களுக்கு பல புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி வந்திருக்கின்றோம். அதன் மூலம் கூடிய பிரதிபலன்களையும் உங்களுக்கு பெற்றுத்தந்திருக்கின்றோம். அது போலவே சம்பத் தொகுதிக் கடன்கள் வழங்கல் உங்களுக்கு பல நன்மைகளை பெற்றுத்தரும். சம்பத்தின் வங்கித் தொகுதிக் கடன்கள் வழங்கல் மூலமும் சம்பத் வங்கியை சக்தி மிக்கதாக ஆக்குவதன் மூலம் பல பிரதிபலன்களை பெற்றிடுங்கள்.

சம்பத் வங்கியின் தொகுதிக்கடன்கள் வழங்கலில் 5 வருடங்களுக்கு ஆகக்குறைந்தது 10,000 ரூபாவினை (100 தொகுதிக்கடன்களுக்கு) முதலீடு செய்வதன் மூலம் கீழ்காணும் வட்டி விகிதங்களை பிரதி இலாபமாக பெற்றிடுங்கள்.

| வர்க்கம் | வட்டி விகிதம் | வட்டி வழங்கும் முறை |
|---|---|---|
| வர்க்கம் A | 15.00% வருடாந்த (நிலையான) - A.E.R. : 16.08% | மாதாந்தம் |
| வர்க்கம் B | 16.50% வருடாந்த (நிலையான) - A.E.R. : 16.50% | வருடாந்தம் |
| வர்க்கம் C | தளம்பல் வட்டி விகிதம் 6 மாதங்களுகளுக்கான மொத்த திறை சேரியின் கட்டணமும் + 2% | வருடாந்தமற்ற |

மேலும் விபரங்களுக்கு விபரப்பட்டியலைப் பாருங்கள்

சம்பத் வங்கியின் தொகுதிக் கடன்கள் வழங்கல் கொழும்பு பங்குச் சந்தையின் பிரதான குழுவில் அங்கம் வகிக்கவிருக்கின்றது என்பதோடு A +(lka) எனும் ஸ்ரீலங்காவின் ∴பிச் ரேடிங்கினை பெற்றிருக்கின்றது.

தயவுசெய்து உங்கள் பங்குச் சந்தை தரகரை தொடர்பு கொள்ளுங்கள் அல்லது மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 0114 730 325/0114 730 348 அதன் மூலம் உங்கள் விண்ணப்பங்களுக்கான விபரங்களை அறிந்து கொள்ளலாம். www.sampath.lk ற்கு விஜயம் செய்து விபரப்பட்டியலையும் விண்ணப்பப்படிவங்களையும் டவுன்லோட் செய்துகொள்ளுங்கள்.

**சம்பத்தின் தொகுதிக் கடன்கள் வழங்கல்
2012 ஒக்டோபர் 4 ஆம் திகதி ஆரம்பமாகும்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank

மிகப் பெரிய சர்வதேச நிதியின் சக்தி

ஒறிக்ஸ் குழும நிறுவனமானது உலகிலுள்ள பாரிய குத்தகைக் கம்பனியும் ஜப்பானின் இரண்டாவது பாரிய நிதிச் சேவை வழங்குனருமான ஜப்பான் ஒரிக்ஸ் கோர்ப்பரேஷனின் பக்கபலத்துடனேயே இயங்குகின்றது. அதுவே எங்கள் பலமும் சக்தியும் ஆகும்.

சிரேஷ்ட பிரஜைகளின் 12 மாத நிலையான வைப்புகளுக்கு +17.5% வட்டி (வ.மொ.வ.வீ. 17.5%)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் (ஒரு LOLC குழுமக் கம்பனி)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பி.எல்.சி
இல. 100/1 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய.
தொலைபேசி: 5880880, தொலைநகல்:
lofin@lankaorix.com
இணையத்தளம்: www.lankaorix.com

துரித அழைப்பு 0773815602

## குட்டிக்கார்

ஜப்பான் மாணவர்கள், ஆசிரியர்கள் இணைந்து உருவாக்கிய மினியேச்சர் கார் உலகிலேயே குட்டிக்கார் என்று கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளது. ஜப்பானின் அசாகுச்சி நகரில் உள்ளது ஒகாயமா சானியோ உயர்நிலை பாடசாலை. இப் பாடசாலை ஓட்டோமொபைல் இன்ஜினியரிங் பிரிவு ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து மினி கார் ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

இதன் மொத்த உயரம் 18 அங்குல (ஒன்றரை அடி). பஸ் டயரைவிட குட்டையாக இருக்கிறது இந்தக் கார். 6 பற்றரிகள் உதவியுடன் இயங்குகிறது. ஜப்பானின் கார் நிறுவனம் ஒன்றின் மோட்டார் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. காரை இயக்குவதற்கான பகுதிகளை பைக் பாகங்களைக் கொண்டு உருவாக்கியுள்ளனர். காரின் சேஸிஸ், பொடி, சஸ்பென்ஷன், ஸ்டியரிங், விளக்குகள், சீட் என காரின் அத்தனை பாகங்களையும் மாணவர்களே உருவாக்கி இருக்கின்றனர். 'எதிர்காலம்' என்று பொருள்படும் வகையில் இந்தக் குட்டி காருக்கு 'மிராய்' என்று ஜப்பானிய மொழியில் பெயர் வைத்திருக்கிறார்கள். 'உலகிலேயே குட்டியூண்டு வாகனம்' என்று மிராய் தற்போது கின்னஸ் சாதனை படைத்திருக்கிறது.

இங்கிலாந்தின் டார்சட் பகுதியைச் சேர்ந்த மெக்கானிக் நிலைய முகாமையாளர் ஆன்டி சாண்டர்ஸ் மூன்றே நாள்களில் உருவாக்கிய ''ஃபளாட் அவுட்'' என்ற 21 அங்குலக் கார்தான் உலகிலேயே சிறியது என்று சாதனை படைத்திருந்தது. ஜப்பான் மாணவர்களின் ''மிராய்'' கார் அதை முறியடித்துவிட்டது. 2013 ஆம் ஆண்டு கின்னஸ் சாதனை புத்தகத்தில் ''மிராய் '' இடம்பெற உள்ளது. இதைவிட சிறிய பொம்மை கார்கள் நிறைய இருக்கின்றன. ஆனால், சாலையில் ஓடக்கூடிய கார்களில் உலகிலேயே சிறியது மிராய்தான் என்கின்றனர் கின்னஸ் அதிகாரிகள்.



Unilever pure it

எரிவாயு மற்றும் மின்சாரத்தை சேமித்து

கொதித்தாறிய நீரைப்போல் தூய்மையான குடிநீரை பெற்றுக் கொள்ளுங்கள்!

Unilever




யுனிலிவர் Pureit இன் மேம்படுத்தப்பட்ட 4 படிமுறைகளிலான சுத்திகரிப்பு செயற்பாடு, கிருமி கொல்லிகளுக்கான அமெரிக்காவின் சூழல் பாதுகாப்பு நிறுவனத்தின் (EPA) தரப்படுத்தலுக்கு அமைவாக இருப்பதனால், நீங்கள் கொதித்தாறிய நீரைப்போல் தூய்மையான குடிநீரை பெற்றுக்கொள்வது உறுதி செய்யப்படுகின்றது.

இது கொதிக்க வைக்காமலேயே கொதித்தாறிய நீரைப்போல் தூய்மையான குடிநீரை வழங்குவதால், எரிவாயு மற்றும் மின்சார விரயம் தவிர்க்கப்படுவதுடன், உங்கள் பணமும் சேமிக்கப்படுகின்றது.



உடனடி தொடர்புகளுக்கு
011 7 695 695
ரூ.8,300/- இலிருந்து.

SINGER Abans softlogic ARPICO KEELLS SUPER food city

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேள் கடித்தால் இதய நோயே வராது

## புதிய ஆய்வில் தகவல்

தேள் கணுக்காலிகள் பிரிவைச் சேர்ந்த உயிரினமாகும். தேள்களில் கருந்தேள் உள்ளிட்ட பல வகைகள் உள்ளன. இதன் உடல் கணுக்களால் ஆனது. இது ஆறு கால்களும் இரண்டு முன்பக்கக் கொடுக்குகளும் கொண்டிருக்கும். இதன் வால் கணுக்களாகவும் நுனியில் ஒரு நச்சுத் தன்மையுள்ள கூர்மையான கொடுக்கும் கொண்டிருக்கும். முன்பக்கக் கொடுக்குகள் இரையைக் கவ்விப் பிடிப்பதற்கும் பின்பக்கக் கொடுக்கு இரை அல்லது எதிரிகள் மீது நஞ்சைப் பாய்ச்சிக் கொல்வதற்கும் உதவுகின்றன.

தேள் கடித்தால் ஆயுள் முழுவதும் இதயத்தில் அடைப்பு, இதயம் செயலிழப்பால் இறப்பு நேரிடும் வாய்ப்பை தடுக்கிறது. இதை இங்கிலாந்தை சேர்ந்த லீட்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சி தெரிவிக்கிறது.

இதயத்தின் இரத்த தமனிகளில் நியோயின்டிமல் ஹைபர்பிளேசியா என்ற பிரச்சினை ஏற்படும் வாய்ப்புள்ளது. இந்த பிரச்சினை உள்ளவர்களின் இதய இரத்த தமனிகளில் இரத்த செல்கள் புதிதாக வளரும். தமனியில் இரத்த ஓட்டத்தை அவை தடுக்கும். அதனால், இதயக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு, இதயம் செயலிழக்கும் அபாயம் ஏற்படலாம்.

உயிருக்கு ஆபத்தான இந்த பிரச்சினையை சரி செய்ய, இதய அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. ஆனால், இந்தபிரச்சினையே வாழ்நாளில் ஏற்படாமல் இருக்க தேள் உதவுகிறது. தேள் கொட்டும் போது அதன் கொடுக்கில் இருந்து விஷம் வெளியாகிறது. அந்த விஷத்தில் மார்கடாக்சின் என்ற பொருள் இருக்கிறது. அது இதயத் தமனியில் நியோயின்டிமல் ஹைபர்பிளேசியா உருவாவதை தடுக்கிறது. அதன்மூலம், புதிய செல்கள் உருவாவது தடுக்கப்பட்டு, இதயத்தில் அடைப்பு, செயலிழப்பு தவிர்க்கப்படும்.

இதயத் தமனிகளில் புதிய செல்கள் உருவாவதை மார்கடாக்சினில் உள்ள கேவி 1.3 என்ற பொட்டாசியம் தடுத்து விடும். இது தொடர்பான ஆராய்ச்சியில் நம்பத்தகுந்த ஆதாரங்கள் கிடைத்துள்ளன. குறிப்பாக, மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்க பார்க் என்ற தேளின் விஷத்தில் மார்கடாக்சின் அதிகம் உள்ளது. தேள் கொட்டுவதால் மனித உயிருக்கு ஆபத்தில்லை என்ற போதிலும் துடிக்கச் செய்யும் வலி, வீக்கம் ஆகியவற்றுக்கு உடனடி சிகிச்சை தேவை.

ஒரு முறை தேள் கொட்டு வாங்கியவர்கள் ஆயுள் முழுக்க இதய பைபாஸ் பிரச்னையில் இருந்து தப்ப முடியும் என்கிறது ஆராய்ச்சி முடிவு. இது பற்றி பிரிட்டிஷ் ஹார்ட் பவுண்டேஷனின் இயக்குனர், ஆராய்ச்சி பேராசிரியர் பீட்டர் வீஸ்பெர்க் கூறுகையில், தேளின் விஷத்தில் உள்ள மார்கடாக்சினை முறையாக பயன்படுத்தினால், ஆபத்தான இதய நோய்க்கு மருத்துவ பயனை பெறலாம் என்பது உறுதி என்றார்.



### தேள் கடிக்கு முதலுதவி

கொடிய வகை தேள்கள் கடித்தால் உயிருக்கே ஆபத்து ஏற்படும். எனவே தேள் கடிக்கான முதலுதவி சிகிச்சை முறைகளை அனைவரும் அறிந்துகொள்வது நல்லது.

தேள் கடித்தவுடன் அதன் கடிவாய்க்கு சுமார் 15 செ.மீ.மேல் பகுதியில் கயிறு அல்லது துணியால் இறுக்கி கட்ட வேண்டும். இதன் மூலம் தேளின் விஷம் உடலில் பரவுவதை தடுக்க முடியும்.

இதன் பின்னர் தேள் கடித்த இடத்தில் சுமார் அரை மணி நேரம் ஐஸ்கட்டி அல்லது குளிர்ந்த நீரில் நனைத்த துணியால் ஒத்தடம் கொடுக்க வேண்டும். அந்த துணியால் கடிவாய் பகுதியில் கட்டும் போடலாம். இதன் மூலம் தேள் கடித்த வலி ஓரளவு குறையும். கடித்த இடத்தில் தேளின் கொடுக்கு பதிந்திருந்தால் அதை உடனடியாக அகற்ற வேண்டும். தேள் கடித்த பகுதியை உதறவோ, மேல் நோக்கி தூக்கவோ கூடாது. கீழ்நோக்கி தொங்கபோடலாம்.

முதலுதவி செய்ததும் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்று முறையான மருத்துவச் சிகிச்சை பெறுவது அவசியம்.

### தேள் விஷம் - சிறந்த வலி நிவாரணி

தேளின் விஷம் மிகக் கொடியதாக இருக்கலாம். ஆனால் அதை சிறந்த வலி நிவாரணியாக பயன்படுத்தலாம் என கூறுகிறார் இஸ்ரேல் ஆய்வாளர் மைக்கேல் குர்விட்ஸ்.

இஸ்ரேலின் டெல் அவிவ் பல்கலைக் கழக தாவர அறிவியல் துறை பேராசிரியர் மைக்கேல் குர்விட்ஸ் கூறுகையில், தேளின் விஷத்திலிருந்து சிறந்த வலி நிவாரணியை உருவாக்கக் கூடிய சாத்தியங்கள் உள்ளன. இதுகுறித்து விரிவாக ஆய்வு செய்து வருகிறோம்.

எந்தவித பக்க விளைவையும் தேளின் விஷத்திலிருந்து உருவாக்கப்படும் வலி நிவாரணி ஏற்படுத்தாது. தேளின் விஷத்தில் உள்ள பெப்டைட் டாக்சின்கள், நமது நரம்பு மண்டலம் மற்றும் சதைப் பகுதிகளில் ஊடுறுவி வலியை முற்றிலுமாக அகற்ற உதவும் என்றும் தெரிவித்துள்ளார்.

பாலூட்டிகளின் உடல்களில் ஒன்பது வகையான சோடியம் வழிகள் காணப்படுகிறது. இவற்றில் சிலதான், வலியை உருவாக்கி அதை மூளைக்கு தெரிவிக்கிறது.

இந்த சோடியம் சேனல்களில் பெப்டைட் டாக்சின்கள் எவ்வாறு செயல்பட முடியும் என்பதை ஆய்ந்து வருகிறோம். இதை சரி செய்து விட்டால் நிச்சயம் இந்த வலி நிவாரணியை வெற்றிகரமாக உருவாக்க முடியும். மேலும் வலி உருவாகும் இடத்தையும் துல்லியமாக கண்டறிந்து அந்த இடத்தில் மட்டும் மருந்து வேலை பார்க்கும் வகையில் செய்ய முடியும். இதன் மூலம் பல்வேறு பக்க விளைவுகளை நாம் தவிர்க்க முடியும் என்றார் குர்விட்ஸ்.

இஸ்ரேலில் உள்ள மஞ்சள் நிற தேளில் தான் தற்போது குர்விட்ஸ் தலைமையிலான குழு ஆய்வு செய்து வருகிறது. உலகிலேயே மிகவும் அபாயகரமான நச்சைக் கொண்டது இந்த தேள் என்பது குறிப்பிடத் தக்கது. இந்த தேளின் விஷத்தில் 300 இற்கும் மேற்பட்ட பெப்டைடுகள் உள்ளனவாம்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலை ஜொலிக்க வைக்கும் பழங்கள்


உடலின் ஆரோக்கியத்தை பேணுவதில் பழங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தினசரி பழங்கள் சாப்பிட்டால் நோய்கள் நம்மை தாக்காது மருத்துவரை நாட வேண்டி இருக்காது என்கின்றனர் உணவியல் நிபுணர்கள்.

பழங்களில் உள்ள உயர்தர ஊட்டச் சத்துக்கள், உயர்ந்த நார்ச்சத்து நம் ஆரோக் கியத்தை பாதுகாக்கின்றன. தினசரி ஏதாவது ஒரு வகையில் பழங்களை உட்கொள்ள வேண்டும் என்கின்றனர் நிபுணர்கள். உலக அளவில் நடைபெற்ற பல்வேறு ஆய்வுகளின் மூலம் பழங்கள் சாப்பிடுவதன் நன்மைகள் தெரியவந்துள்ளது. பழம், காய்கறி சாப்பிடுவதன் மூலம் இதயநோய் பாதிப்பு ஏற்படுவதில்லை, நீரிழிவு ஏற்படுவதில்லை, சில புற்று நோய்கள் குணமடைகின்றன. உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவதில்லை என்கின்றனர் உணவியல் வல்லுநர்கள். உடல் பருமன் ஏற்படுவது கட்டுப்படுத்தப்படுகிறது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

### சுவையான நொறுக்கு தீனி

நொறுக்குத்தீனி சாப்பிடாதவர்கள் யாரும் இல்லை. பழங்களையே நொறுக்கு தீனிபோல் சாப்பிடலாம் என்கின்றனர் நிபுணர்கள். அன்னாசி, மாம்பழம், திராட்சை, ஸ்ரோபெரி, கிவி, வாழைப்பழம் போன்ற பழங்களை அழகாக கட் செய்து அலங்கரித்தால் சுவையான நொறுக்குத்தீனி ரெடி. இதில் எண்ணற்ற ஊட்டச் சத்துக்கள், தாது உப்புகள், நார்ச் சத்துக்கள், போலேட் ஆகியவை அடங்கியுள்ளன. இந்த பழங்களை நீங்கள் கட் செய்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்துக்கொண்டால் உங்களுக்கு தேவைப்படும் நேரத்தில் எடுத்து சாப்பிடலாம்.

தினமும் மதிய நேரத்தில் சாலட் போலவும் சாப்பிடலாம். மாலை நேரத்தில் பழங்களுடன் முந்திரி, பாதம், பஸ்தா, போன்றவையும், கிரீம் கலந்து ஆரோக்கியமான டெசர்ட் ஆக சாப்பிடலாம்.



### காலைப் பழங்கள்

காலை உணவில் கண்டதையும் உண்பதை விட பழங்களை சேர்த்துக்கொள்வது நல்லது.பாண், வாழைப்பழம் ஊட்டச்சத்து மிக்கது. அதேபோல் உலர் பழங்களையும் காலை உணவில் சேர்த்துக்கொள்ளலாம். ஆப்பிள், இனிப்பு கிழங்கு போன்றவை சத்தான காலை உணவாகும்.

காலையில் படுக்கையில் இருந்து எழுந்ததும் வெறும் வயிற்றில் பழங்கள் சாப்பிட்டால் உடலில் சேர்ந்திருக்கும் நச்சுப்பொருள்களை மலமாக வெளியேற்றும். இதனால், உடலுக்கு புத்துணர்ச்சியும், தெம்பும் கிடைக்கும். சாப்பிட்ட பின்பு பழம் சாப்பிட்டால் முதலில் பழம்தான் ஜீரணமாகும். உணவுகள் செரிக்க கூடுதல் நேரமாகும். உட்கொண்ட உணவுகள் செரிக்காத நிலையில், உடனே பழங்கள் சாப்பிடுவதால் வயிற்றுக்குள்ளே செரிமானமாகிக் கொண்டிருக்கும் உணவு கெட்டுப் போகும்.

அதனால், சாப்பிடுவதற்கு ஒரு மணி நேரத்தக்கு முன்பாகவோ அல்லது பின்னரோ பழங்கள் சாப்பிடுவதுதான் உடலுக்கு ஆரோக்கியம் தரும்.

பழங்களை தனியாக சாப்பிடாமல், அதனுடன் இனிப்பு சேர்த்து மிக்சியில் போட்டு அடித்து ஜூஸாக சாப்பிடும் வழக்கம் பலரிடம் உள்ளது. இது தவறு.

பழங்களை ஜூஸாக சாப்பிடுவதை விட பழமாக அப்படியே சாப்பிடுவதுதான் நல்லது. அவ்வாறு சாப்பிடுவதால் நார்ச் சத்து நிறைய கிடைக்கும். சத்தும் முழுமையாக கிடைக்கும். அதிக அளவில் பழங்கள் சாப்பிடுவது உடலுக்கு மிகவும் நல்லது என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், சாப்பிட்ட பிறகு பழம் சாப்பிடுவது நல்லது இல்லை என்பது எத்தனை பேருக்கு தெரியும்? ஆம், வெறும் வயிற்றில் சாப்பிடுவதுதான் சிறந்தது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் 3 நாள்களுக்கு தொடர்ந்து பழம் மட்டுமே சாப்பிட்டால் உடல் ஜொலிக்கும் என்கின்றனர்.

சாப்பிடுவதற்கு முன்பு பழம் சாப்பிடுவது நல்லதா? அல்லது சாப்பிட்ட பிறகு சாப்பிடுவது நல்லதா என பிரிட்டன் விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர்.

சாப்பிட்ட பிறகு பழம் சாப்பிடும்போது, உணவானது பழத்தால் கிடைக்கும் பலன்களை தடுத்து விடுகிறது. மேலும் ஒருவேளை நீங்கள் சாப்பிட்ட உணவு கெட்டுப் போயிருந்தாலோ, புளித்துப் போயிருந்தாலோ பழமும் அதனுடன் சேர்ந்து அமிலமாக மாறி வயிறு உப்பும். பழத்தின் சத்து அனைத்தும் வீணாகி விடுவது ஆய்வில் தெரியவந்தது.

தர்பூசணி சாப்பிட்டால் வாந்தி வருகிறது, துரியன் பழம் சாப்பிட்டால் வயிறு உப்பி விடுகிறது, வாழைப்பழம் சாப்பிட்டால் மலம் போக வேண்டும் என தோன்றுகிறது இப்படி பலர் சொல்வதை அடிக்கடி கேட்டிருப்பீர்கள். உணவு சாப்பிட்ட பிறகு, இந்த பழங்களை சாப்பிடுவதால்தான் இந்த நிலை. வெறும் வயிற்றில் சாப்பிட்டால் இந்த பிரச்னைகளை முற்றிலும் தவிர்க்கலாம் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். வெறும் வயிற்றில் பழம் சாப்பிட்டால், ஆயுள் கூடும், உடல் ஆரோக்கியம் அதிகரிக்கும், ஆற்றல், மகிழ்ச்சி கிடைப்பதுடன் உடல் பருமன் அடையாது. பழ ஜூஸ் குடிப்பதாக இருந்தால் பிரஷ்ஷாக குடியுங்கள். புட்டியில் அடைக்கப்பட்டது வேண்டாம். மெதுவாக உமிழ்நீருடன் சேர்த்து விழுங்க வேண்டும். வேகவைத்த பழத்தையும் தவிர்க்கலாம். இதில் சத்து போய்விடும். எனினும், ஜூசாக குடிப்பதைவிட பழமாக சாப்பிடுவது நல்லது. தொடர்ந்து மூன்று நாள்களுக்கு மற்ற உணவுகளை தவிர்த்து பழங்கள், ஜூஸ் மட்டுமே சாப்பிடுவதன் மூலம் உடல் முழுவதும் சுத்தமாகும். இதனால், முகம், கை, கால் என அனைத்து பகுதிகளும் பளபளப்புடன் ஜொலிக்கும் என்பதும் ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ISUZU

NDB லீசிங்

நீங்கள் விரும்பும் ட்ரக் ஒன்று
நீங்கள் நம்பக்கூடிய குத்தகைக்கு




இலங்கையின் 1 தர ட்ரக் வகை ஜப்பானில் தயாரிக்கப்பட்டது

விசேட வட்டி வீதங்கள்

6 வருடங்கள் வரை மீள செலுத்தக்கூடிய வசதி

NDB வங்கியின் விசேட லீசிங் உடன் சதொச மோட்டர்ஸ்
இடமிருந்து இசுசு ட்ரக் ஒன்றை உங்களுக்கு உரித்தாக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம்

- ரூ.50,000 விலைக்கழிவு
- 2 வருடங்கள் அல்லது 40,000KM வரை உத்தரவாதம்
- என்ஜினுக்கு 100,000 KM வரை உத்தரவாதம் (சதொச மோட்டர்ஸ் பிஎல்சியிடமிருந்து பராமரிப்பு சேவைகளை பெற்றுக் கொள்ள வேண்டும்)
- இலவச 6 ஊழியர் பராமரிப்பு சேவைகள்
- குறைந்த வட்டி வீதங்கள்
- காப்புறுதியின் போது விசேட சலுகைகள்
- NDB கடன் அட்டை

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

ட்ரக் விபரங்களுக்கு

உடனடி அழைப்புகளுக்கு - 0114714007 / 0112327360
கபில - 0779 419000
ரன்ஜித் - 0777 354155
சம்பத் - 0777 420442
சந்தன - 0777 420491
சங்கர் - 0779 667797

குத்தகை விபரங்களுக்கு

தினேஷ - 0777 753984
சத்துரங்க - 0777 754290
பவித்ரா - 0777 753973
ஜெரோம் - 0773 099702
தீபன் - 0773 300610
உடனடி அழைப்புகளுக்கு - 0112 448888

SML SATHOSA MOTORS PLC
www.sathosamotorsplc.com

NDB வங்கி

drivegreen

வேலை வாய்ப்பு

எமது நிறுவனம் நாடு பூராகவும் அரச அதிகாரம் பெற்ற வாகன புகை பரிசோதனை மத்தியநிலையங்களை அமைத்துள்ள நிறுவனமாகும். எமது மத்தியநிலையங்களில் (விசேடமாக வடமாகாணம், கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம்) உள்ள வெற்றிடங்களுக்காக நாட்டின் எல்லாப் பாகங்களிலிருந்தும் நிலையான சேவைக்காக ஆண்/பெண் இருபாலாரும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

மத்தியநிலைய முகாமையாளர் (பயிற்சி பெற்ற / பயிற்சி பெறாத)
(Station Manager)

- மோட்டார் தொழில்நுட்பம் அல்லது மோட்டார் வாகனம் தொடர்பான முழு நேர டிப்ளோமா கற்கைநெறி (NDT/HNDE/NDES/C&G) மற்றும் மேற்பார்வைதிறன் என்பன இருத்தல்.
- கணினி அறிவு மற்றும் ஆங்கில மொழியில் தொடர்பு கொள்ளும் ஆற்றல்.

புகை பரிசோதகர் / இளநிலை புகை பரிசோதகர் (ஆண /பெண்)
(Emission Inspector/Junior Emission Inspector)

- மோட்டார் தொழில்நுட்பம் அல்லது மோட்டார் வாகனம் தொடர்பான கற்கைநெறி ஒன்றினை தொடர்ந்திருத்தல்.
- இயந்திர தொழில்நுட்பதுறையில் அனுபவம் இருத்தல்.

அனுபவமற்ற புகை பரிசோதகர் (ஆண் / பெண்)
(Novice Emission Inspector)

- மோட்டார் வாகனம் தொடர்பான கற்கைநெறி ஒன்றினை தொடர்ந்திருத்தல் அல்லது இயந்திர தொழில்நுட்பதுறையில் அனுபவம் இருத்தல்.

பயிலுனர் புகை பரிசோதகர் (ஆண்/பெண்)
(Trainee)

- க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றியிருத்தல்.
- மோட்டார் தொழில்நுட்ப அறிவு மேலதிக தகைமையாகும்.

வாகன சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் மற்றும் சிங்களம், ஆங்கிலம் தெரிந்திருத்தல் மேற்படி பதவிகளுக்கான மேலதிக தகைமையாகும்.

இவ்வணைத்து பதவிகளுக்கும் மனங்கவரும் ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள். உங்களது விண்ணப்பங்களை கீழ்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்புங்கள்.

மேற்குறிப்பிட்ட எல்லா பதவிகளுக்குமான விண்ணப்பதாரர்கள் 35 வயதுக்கும் கீழ்ப்பட்டோராக இருக்க வேண்டும்.

மனிதவள பிரிவு
கிளீன்கோ லங்கா நிறுவனம்
இல. 334,டீ.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி : 011-7 444 440 , 011 7 444 444
மின்னஞ்சல் : careers@cleanco.lk இணையம் : www.drivegreen.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# VACANCIES IN NORTHERN REGION

# வட பிராந்தியத்தின் வேலைவாய்ப்புகள்

DFCC Bank and DFCC Vardhana Bank takes pride in being part of one of Sri Lanka's top financial conglomerates. We have a team of staff who are passionate about their work and we believe in nurturing our staff to enable them to achieve their best potential in terms of their careers and personal goals.

***Here is your opportunity to join our elite team!***

## ASSISTANT RELATIONSHIP MANAGERS / EXECUTIVE TRAINEES

***The candidates should ideally;***

- be below 32 years of age to apply for the post of Assistant Relationship Manager and below 28 years of age to apply for the post of Executive Trainee
- possess a relevant degree from a recognized institution (preferably with a class) and/or full professional qualifications in CIMA, ICASL, ACCA or AIB.
- possess 3 years post-qualifying experience in an executive capacity. (Applicants who do not possess the required experience will be considered for recruitment as Executive Trainees)
- have strong communication skills in English and Tamil.

You will be actively involved in the promotion of advances and credit related products to existing and new customers. You will also be required to evaluate projects, follow up on approved advances and maintain a healthy portfolio. Those with a flair for marketing and possessing good analytical skills would be ideal for the position.

Canvassing in any form will result in disqualification and correspondence will only be with shortlisted candidates.

Please apply via post by sending a duly filled DFCC application form which could be downloaded from our website with the post applied for marked on the top left corner of the envelope or by email with the post applying for on the subject or through **www.topjobs.lk** by 17 October 2012.

**Group Vice President (Human Resources)**
**DFCC Bank, 73/5 Galle Road,**
**Colombo 03**
**website : www.dfcc.lk**
**e-mail : recruit@dfccbank.com**

DFCC BANK

DFCC Vardhana Bank

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போர் இன்னும் ஓயவில்லை



மனிக்பாம்கள் திறக்கப்படு கின்றன



ஆஸி. தடுப்பு முகாம்களை நிறைக்கும் சிங்களவர்கள்



தலைவர்கள் பிறப்பதில்லை; உருவாகிறார்கள்



எதற்காக இந்த ஆலவட்டம்?


# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் 30 செப்ரெம்பர் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்தெட்டு


# அரசியலும் ஆடும்

ஔண்யன்



தெனாலி ராமனின் வீட்டுக்கு வந்தார் ஓர் அழையா விருந்தாளி. வந்தவர் பத்துப் பதினைந்து நாள்களாகியும் புறப்படுகிற பாடாக இல்லை. நிரந்தரமாக அவர் தன் வீட்டிலேயே குடியிருந்து விடுவாரோ என்ற அச்சம் தெனாலிராமனுக்கு வந்துவிட்டது. என்ன செய்யலாம்? என்று பலவாறு யோசித்தார். அழையா விருந்தாளி தெனாலிராமனின் நெருங்கிய சொந்தம். ஆகவே, அவரை வீட்டைவிட்டுச் செல்லுங்கள் என்று நேரடியாகச் சொல்லமுடியாது. சொன்னால் "வந்த விருந்தாளியை அடித்துத் துரத்திவிட்டார் தெனாலிராமன்" என்று ஊரெல்லாம் கதை பரவிவிடும்.

அடுத்தநாள் வெளியே போய்விட்டு தனது அறைக்கு வந்த விருந்தாளி திகைத்துப் போய்விட்டார். அவரது அறையில் ஓர் ஆடு கட்டப்பட்டு, உல்லாசமாக இலை குழைகளைத் தின்று அசைபோட்டபடி நின்றது. "தெனாலிராமா! எனது அறைக்குள் எப்படி நீ ஆட்டைக்கட்டலாம்?" என்று அழையா விருந்தாளி கேட்டார்.

"கோபிக்காதீர்கள். இந்த ஆடும் எங்கள் வீட்டுக்கு இன்றுதான் விருந்தினராக வந்தது. விருந்தினராக வரும் எல்லோரையும் இந்த அறையில்தான் தங்க வைப்போம்" என்று பவ்வியமாகச் சொன்னார் தெனாலிராமன். ஒன்றும் பேசாமல் தன் கட்டிலில் உறங்கச் சென்றார் அழையா விருந்தாளி. ஆனால் அவரை உறங்குவதற்கு ஆடு விடவில்லை. இரவு இரவாக அது கத்திக்கொண்டே இருந்தது. போதாக்குறைக்கு இயற்கைக் கடன்களையும் அவரது கட்டிலிலேயே கழித்துவிட்டது. விருந்தாளி இரவோடு இரவாக பெட்டி படுக்கைகளோடு தெனாலிராமனுக்கும் சொல்லிக்கொள்ளாமல் போய்விட்டார். அதன் பின்னரே தெனாலிராமன் அறையில் இருந்த ஆட்டைக் கலைத்துவிட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

★★★

அரசுக்கு வேண்டாப் பிள்ளையாகப் போய்விட்டது கல்வித்துறை. அதனால்தான் தமக்கு 6 சதவீத சம்பள உயர்வு கேட்டு விரிவுரையாளர்கள் நடத்துகின்ற போராட்டத்துக்குக் காது கொடுக்காமல், அடுத்த வருட வரவு- செலவுத்திட்டத்தில் தன்னுடைய செல்லக் குழந்தையான பாதுகாப்புத்துறைக்கு பழையபடி அதிகளவான நிதி ஒதுக்கீட்டைச் செய்திருக்கிறது.

290 பில்லியன் ரூபா பாதுகாப்புத் துறைக்கும் கூடவே நகர அபிவிருத்திக்கும் ஒதுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் நகர அபிவிருத்திக்கு சாட்டுக்கு கொஞ்சத்தைக் கிள்ளித் தெளித்துவிட்டு பெரும்பகுதியை பாதுகாப்புத் துறையே ஏப்பமிடப் போகிறது என்பது அனைவருக்கும் இப்போதே தெரிந்த விடயம் தான்.



ஆனாலும் ஆரம்பத்தில் விரிவுரையாளர்களின் போராட்டம் நியாயமற்றதொன்று என ஒதுக்கி வந்த அரசு பின்னர் பல்கலைக்கழகங்கள் இழுத்து மூடப்பட்டதால் மாணவர் குழாம் பொங்கி எழுந்த பின்னர் தன்னுடைய நிலைப்பாட்டில் மெல்ல மெல்ல மாற்றங்களை உள்வாங்கத் தொடங்கியது.

ஏற்கனவே இலங்கையின் பல்கலைக்கழக முறைமை பற்றி பல்வேறு எதிர்மறையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய விமர்சனங்களை அண்மைக்காலமாக அரசே திட்டமிட்டு பரப்பியதுதான் வேடிக்கையான விடயம். தன்னுடைய ஆளுகைக்குள் இருக்கும் கல்வி நிறுவனம் பற்றி, மூன்றாம் தரப்புப் போல குறைகூறும் அரசு, உலகத்திலேயே மஹிந்த அரசாகத்தான் இருக்க முடியும். இதற்கு ஒரு காரணமும் இருக்கவே செய்கிறது. இலங்கையில் நடைமுறையில் இருக்கும் இலவசக் கல்வித்துறைக்கு சமாதி கட்டிவிட்டு, இங்கு கால்பதித்து தனியார் பல்கலைக்கழகங்கள் மூலம் பட்டங்களை விற்பனை செய்வதற்கு பணமுதலைகள் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு காத்திருக்கின்றன. அவற்றின் வருகையை நியாயப்படுத்த வேண்டுமாயின் ஏற்கனவே இங்கு நிலைகொண்டுள்ள அரச பல்கலைக்கழகங்கள் மந்தமான செயற்பாடுடையவை, மாணவர்களுக்குரிய கல்விப் போதனைகளை வழங்காதவை, உரிய காலத்துக்குள் கற்கை நெறிகளை பூர்த்தி செய்வதற்கு வக்கில்லாதவை என்பன போன்ற கதையாடல்கள் அவசியம். எனவே தான் இத்தகைய கதையாடல்களின் உற்பத்தியை அரசே ஊக்குவித்தது. ஏனெனில் பணமுதலைகளின் கால்வைப்பில் அரசுக்கும் ஒரு பெருந்தொகை கைமாறும். சும்மா கிடைக்கும் சீதேவியை எட்டி உதைக்க மஹிந்த வாதிகள் மடையர்களா?

இதனாலேயே பல்கலைக்கழகக் கல்வியையும், மாணவர்களையும் குறிவைத்து பல்வேறு எதிர்மறையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி என்ற பெயரில் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்குதல், மாணவர்களின் எதிர்ப்பு நடவடிக் [illegible] கொண்டு அடக்குதல், அவர்களினதும் பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் விரிவுரையாளர்களினதும் நியாயமான கோரிக்கைகளைக்கூட ஏற்காது புறம்தள்ளல், கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை குறைத்தல், இசற் புள்ளியால் குளறுபடிகளை ஏற்படுத்தல் என்று பல்கலைக்கழகங்கள் மீதும் அவற்றின் கல்வி முறைமை மீதும் எதிர்கால மாணவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தும் வகையிலான காரியங்களை கையிலெடுத்தது அரசு. கிட்டத்தட்ட இந்தப் பத்தியின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட தெனாலி ராமனின் உத்தியே இது. வேண்டாத காரியங்களை வேண்டுமென்றே செய்வதன் மூலம் தமக்கு தேவையான அனுகூலங்களை பெற்றுக்கொள்ள தெனாலிராமனைப்போல அரசும் துடிக்கிறது.

இதனால் தான் மாதக்கணக்கில் பல்கலைக்கழகங்கள் செயற்படாமல் உறங்கு நிலைக்குச் சென்ற பின்னரும் கூட அதைப்பற்றி அரசு அலட்டிக் கொள்ளவில்லை. தற்போது விரிவுரையாளருக்கு 5 வீத சம்பள அதிகரிப்பு வழங்கப்படுவதாகவும் ஒக்ரோபர் 2 ஆம் திகதி மீண்டும் பல்கலைக்கழகங்கள் செயற்படும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. ஆயினும் இது 2011 ஆம் ஆண்டு தமக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வுதான் என்றும், மக்களை அரசு ஏமாற்றுவதற்காகவே இவ்வாறு பித்தலாட்டத்தனமான பிரகடனங்களை செய்வதாக விரிவுரையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. எனவே அரசு நம்புகின்றபடி ஒக்ரோபர் 2 ஆம் திகதி மீண்டும் பல்கலைக்கழகங்களில் விரிவுரைகள் உயிர்ப்படையுமா? என்பது கேள்விக்குறியே.

தமக்கான ஓர் ஆதாயத்தை மனதில் வைத்து கல்வியில் அரசியல் விளையாட்டை தொடர்ந்து மேற்கொள்ளலாம் என நினைத்த மஹிந்த வாதிகளுக்கு, எத்தகைய அழுத்தங்களைக் கொடுத்தபோதும் அசைந்து கொடுக்காமல் நடக்கும் பல்கலைக்கழகப் போராட்டங்கள் ஆட்டங்காண வைத்துள்ளன. குறிப்பாக மக்களிடையே அரசுக்கெதிரான உணர்வுகள் வலுப்பெற்று வருகின்றன. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்துவதற்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மறுத்துவிட்டனர். இன்னமும் அந்த விடைத்தாள்கள் அரக்கு முத்திரை இட்டபடி அப்படியே இருக்கின்றன. எனவே இந்தமுறை உயர்தரப்பெறுபேறுகள் எப்போது வெளிவரும் என்பது எவருக்குமே தெரியாது. இசற் புள்ளி குளறுபடிகளாலேயே மாபெரும் போராட்டங்களில் மாணவர் அமைப்புக்கள் (28 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் இன்னும் ஓயவில்லை

■ தில்லாலங்கடி

தேர்தல்கள் மூலமாக அரசை வெளியேற்ற வேண்டும் என்பதில்லை. மக்களின் போராட்டங்கள் மூலம் வெளியேற்ற முடியும் என்பதை எகிப்து முதலான புரட்சிகள் எமக்குத் தெளிவுபடுத்தி நிற்கின்றன என்று, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்திருந்தார்.

தென்னிலங்கையைப் பொறுத்த வரையில் பெருமளவிலான மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருவது மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.). விலைவாசி உயர்வு முதல் மாணவர்களுக்கான நீதி வேண்டிய போராட்டங்கள் வரை அனைத்து வகையிலும் அரச எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இவர்கள் அடிக்கடி யாழ்ப்பாணத்திற்கு வந்தும் தமது போராட்டங்களை நடத்திச் செல்கின்றனர். யாழ்ப்பாணத்தில் - தமிழர்கள் - மத்தியில் இவர்களது கோஷம் காணாமல் போனவர்கள் பற்றியதாகும்.

தென்னிலங்கையில் விலைவாசி உயர்வுக்கு எதிரான போராட்டங்கள் மக்கள் மத்தியில் அதிலும் கிராம மக்கள் மத்தியில் இலகுவாகச் சென்றடைகின்றன. 1953 ஒக்ரோபரில் அரிசி விலை உயர்வுக்கு எதிராக தென்னிலங்கை கிளர்ந்தெழுந்ததால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஐ.தே.க அரசின் டட்லி சேனநாயக்கா தனது பிரதமர் பதவியை துறந்தார். இந்தப் போராட்டம் இலங்கையில் நடத்தப்பட்டது. இலங்கையிலும் போராட்டங்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறானதொரு சூழலில் இலங்கையில் தற்போது தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால் மறுபுறத்தில் நடத்தப்படுகின்ற தேர்தல்களில் எல்லாம் இலங்கையின் ஆட்சியில் இருக்கின்ற மஹிந்த அரசு வெற்றியைப் பெற்று வருகின்றது.

மஹிந்த அரசினது தேர்தல் வெற்றிகளை அடுத்தே, அதுவும் நடத்தப்பட்ட மூன்று மாகாண சபைத் தேர்தல்களிலும் மஹிந்த ஆட்சி அமைத்த பிற்பாடே, சோமவன்ச அமரசிங்க இந்தப் பத்தியில் முதலில் கூறப்பட்ட கருத்தை தெரிவித்திருந்தார்.

நடத்தப்படுகின்ற மக்களின் போராட்டங்கள் எவ்வளவு தூரம் வெற்றியைப் பெற்றுக்கொள்கின்றன என்பதே முக்கியமாக உள்ளன. மக்களை திரட்டிப் போராடுதல் என்பது ஒரு புறம், மக்கள் தாமாகவே ஒன்று சேர்ந்து போராடுதல் என்பது மறுபுறம். ஜே.வி.பியின் போராட்டங்கள் மக்களை திரட்டிய போராட்டங்களாகவே இருப்பதால் அவை இலங்கை அரசுக்கு எதிராக - வலுவான எதிர்ப்பு - மிக்க சக்தியாக மாற்றமடையவில்லை.

ஆனால் இலங்கைத் தீவில் போர் முடிவடைந்ததன் பிற்பாடு, சர்வதிகார போக்கில் - குடும்ப ஆட்சியுடன் - வெற்றிப் படிகளில் நடந்த மஹிந்தவுக்கு இந்தப் போராட்டங்கள் தலையிடிதான். இதன் வெளிப்பாடுகளையும் அவர் காட்டத் தொடங்கி விட்டார்.

இலங்கையில் தற்போது நடைபெறுகின்ற போராட்டங்களில் இரண்டு தரப்பினரது போராட்டங்களை எப்படியாவது குழப்ப வேண்டும். அல்லது அந்தப் போராட்டக்காரர்களை ஒடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மஹிந்த செயற்படத் தொடங்கியுள்ளார்.

மாணவர்களது போராட்டம் மற்றையது தமிழ் மக்களது போராட்டங்கள். இவை இரண்டும் கிளர்சிகளை உருவாக்கக் கூடியவை. சோமவன்ச சொன்னது போல ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் தகுவுடையன இந்தப் போராட்டங்கள். உரிமைகள் மறுக்கப்படும்போது கிளர்ச்சி உருவாகும். ஆனால் இலகுவில் கிளர்ச்சியடைவது மாணவர்களே.

இலங்கையின் தமீழீழ தேசத்தைப் பொறுத்த வரையில் 1970 களில் மாணவர்கள் தமது கல்விக்கான உரிமை மறுக்கப்பட்டதால் கிளர்ந்தெழுந்தனர். இது இலங்கையில் மிகப் பெரிய ஆயுதப் போராட்டத்தை தோற்றுவித்தது என்பது வரலாறு. மாணவர் சக்தி மாபெரும் சக்தி.

அந்த வகையில் தென்னிலங்கையில் பல்கலைக் கழக மாணவர்களது போராட்டங்கள் உக்கிரம் பெறத் தொடங்கியிருக்கின்றன. அதற்குத் துணையாக பல்கலைக் கழக பேராசிரியர்களது போராட்டங்களும் நடைபெறுகின்றன. மாணவர்களது போராட்டங்கள் சிறுகச் சிறுக நடந்தாலும் அவை ஒரு திசை நோக்கியே பயணிக்கின்றன. இந்த மாணவர்களது போராட்டங்கள் வீரியமடைவதைக் கண்ட மஹிந்தர் போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்கு களமிறங்கிவிட்டார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் இருவர் விபத்தில் கொல்லப்பட்டனர். இது விபத்து அல்ல திட்டமிடப்பட்ட கொலை என்று மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்ஜீவ பண்டார தெரிவித்துள்ளார். இதன் மூலம் இலங்கை அரசு தனக்கு எதிரான போராட்டங்களை எப்படி வேண்டுமானாலும் அடக்கும் என்பதை மறைமுகமாகச் சொல்லி வைத்துள்ளது.




தமிழ் மக்கள் தமது பூர்வீக நிலங்களை விடுவிக்குமாறு கோரி தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். இலங்கையின் தமிழர் தாயகத்தின் வட மாகாணத்தில் வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி என்று அனைத்து மாவட்டங்களிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இந்தப் போராட்டங்கள் இன்றைய காலத்தில் முக்கியமானவை.

ஆயுதபலம் இல்லாத நிலையில் தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளை சர்வதேசத்துக்கு முன்வைக்கின்றனர். தமிழ் மக்கள் தமிழீழம் வழங்குமாறுகோரி ஆர்பாட்டத்தில் ஈடுபடவில்லை. தாம் ஆண்ட தமது அப்பு, ஆச்சியர் ஆண்ட மண்ணை தமக்கே தருமாறு கேட்கின்றனர். அடுத்து கடத்தப்பட்ட, இராணுவத்தினரிடம் சரணடைந்த தமது பிள்ளைகள் எங்கே என்று கேட்கின்றனர். நீதியான கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் கட்சிகளால் தொடர்ச்சியாக ஆர்பாட்டங்கள் முனெடுக்கப்படுகின்றன.

இந்தப் போராட்டங்களை முடக்குவதற்கும் இலங்கை அரசும், அதனுடன் இயங்கும் கூலிப் படைகளும் முயற்சித்து வருகின்றன. தமிழர்களின் அவலங்களைத் தீர்க்கப் போராடுவோரை, அவலங்கள் மீது அரசியல் நடத்துபவர்களாக சித்திரித்து, தமது சுயலாக அரசியலை அவர்கள் நிறைவேற்றுகின்றனர்.

யாழ். நகரில் நடத்தபடவிருந்த ஆர்ப்பாட்டத்துக்கு தடை, தெல்லிப்பழையில் நடந்த ஆர்ப்பாட்டத்துக்குச் சென்றோருக்கு கழிவு ஒயில் வீச்சு, முல்லைத்தீவு ஆர்ப்பாட்டத்தில் கழிவு ஒயிலுடன் சாணமும் சேர்ந்து வீச்சு. இவ்வாறு தமிழ் மக்களது போராட்டங்களை அடக்க இலங்கை அரசு முயல்கின்றது.

இலங்கையில் நடக்கின்ற அரசுக்கு எதிரான போராட்டங்களில், மாணவர் போராட்டம் தென்பகுதியில் அரசின் அரசியல் இருப்பை கேள்விக்குறியாக்கும் அதே வேளையில், தமிழ் மக்களது போராட்டம் சர்வதேச அழுத்தத்தை அதிகரிக்கும். எனவே அந்த இரண்டு போராட்டங்களையும் முடக்குவதற்கு இலங்கை அரசு தொடர்ந்து முயற்சிக்கின்றது.

எகிப்தில் ஒரு முஸ்லிம் பெண் இட்ட சிறு தீ, தீப்பொறியாக மாறி ஆட்சி அதிகாரத்தை மாற்றியமைத்தது. அது போல இலங்கையில் மெல்ல மெல்ல வெடிக்கும் போராட்டங்கள் ஆட்சி மாற்றத்தை கொண்டு வருமா ?

# தேசத்துப் பறவை அழியலாமா?

■ ஐங்கரன்



செண்பகங்கள் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், வங்காள தேசம் போன்ற தெற்காசிய நாடுகளை வதிவிடமாகக் கொண்ட பறவைகள் ஆகும். இவை குயில்களின் குடும்பத்தைச் சேர்ந்தவை. எனினும், குயில்களைப் போன்று காகங்களின் கூடுகளில் தந்திரமாக முட்டைகளை இட்டு விட்டுச் செல்லும் ஒட்டுண்ணிப் பறவைகள் அல்ல. சொந்தமாகக் கூடுகட்டி அடைகாக்கும் பக்குவம் கொண்டவை. செங்கட்டிச் சிவப்பு நிற இறக்கைகளையும் கறுப்பு நிற உடலையும் இரத்தச் சிவப்பேறிய குன்றிமணிக் கண்களையும் பொது இயல்புகளாகக் கொண்ட இவற்றில், வாழிடங்களுக்கேற்பச் சிற்சிலவேறுபாடுகள்காணப்படுகின்றன.

இலங்கையில் செண்பகங்களில் மூன்று வகைகள் அறியப்பட்டுள்ளன. உருவத்தில் மற்றைய செண்பகங்களைவிடச் சிறிய உப இனம் காடுகளை அண்டிய பு[illegible]ளில் சஞ்சரிக்கின்றது. இ[illegible] சிறகுகளின் முனை வெள்ளைப் பூச்சுப் பூசியது போன்று இருக்கும். இதனைவிடச் சற்றுப் பெரிய செண்பக வகை, அப்பிள் பச்சை நிறச் சொண்டுகளைக் கொண்டுள்ளது. இந்தப், பச்சைச் சொண்டுச் செண்பகம் அடர்ந்த மழைக்காடுகளின் உள்ளே வாசம் செய்கிறது. இலங்கையின் உள்நாட்டுக்குரிய பறவை இனங்களில் ஒன்றான இதனை, உப இனமாக அன்றித் தனித்த இனமாகக் கருதுவதும் உண்டு. மூன்றாவது உபஇனம், ஏனைய இரண்டு செண்பகங்களை விடவும் உருவத்தில் பெரியது. [illegible] நம்மோடு சேர்ந்து, நமது தோட்டங்களையும் தோப்புகளையும் பற்றைகளையும் பகிர்ந்து கொண்டிருக்கும் செண்பகங்கள் இந்த உபஇனத்தைச் சேர்ந்தவைதான்.

செண்பகங்கள் பறப்பதில் அதிகம் நாட்டம் இல்லாதவை. உயரம் குறைந்த மரங்களிலும் பற்றைகளிலுமே கூடுகட்டி வாழும் இவை தரையிலும், தரையை அண்டிய தாவர அடுக்குகளிலுமே பெரிதும் இரைதேடும் பழக்கம் உடையவை. வேலி மரங்களில் கூடுகட்டி அங்கேயே பூவரச மரங்களிலும் முருக்கு மரங்களிலும் மயிர்க் கொட்டிப் புழுக்களைத் தேடி உண்டு வந்த செண்பகங்கள், நாம் வேலிப் பண்பாட்டைக் கைவிட்டதும் நம்மை விட்டுக் காணாமற் போகத் தொடங்கின. பற்றை வெளிகளில் வீடுகள் வரிசையாக முளைக்க ஆரம்பித்ததும், அங்கிருந்தும் விரட்டப்பட்ட செண்பகங்கள் வேளாண் நிலங்களில் தஞ்சம் அடைந்தன. இயற்கைப் பீடைகொல்லிகளாகப் பூச்சி புழுக்களைக் கட்டுப்படுத்தி வந்த செண்பகங்களை இப்போது அங்கேயும் காண்பது அரிதாகி வருகிறது. இரசாயன பூச்சி கொல்லிப் பாவனைகளின் அதிகரிப்பே செண்பகங்களையும் காணாமற் போனோர் பட்டியலில் இணைத்திருக்கிறது. இனியாவது விழித்தெழுந்து நம் தேசத்துப் பறவையின் அழிவைத்தடுக்க முனைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிக்பாம்கள் திறக்கப்படுகின்றன

ஜெரா

மனிக்பாம் மூடப்பட்டாயிற்று. அதன்படி இலங்கையில் அகதி முகாம்கள் இனி இல்லை; அகதிகளும் இல்லை என்ற அர்த்தத்தை இந்தப் பிரமாண்ட மூடுவிழா அறிவித்திருக்கின்றது. அகதிகள் அற்ற இலங்கை எனும் கனவுக்கு அருகில் நம் அனைவரையும், இங்கு குறிப்பிட்ட வரிகளுக்கான செயல்கள் கொண்டு போயிருக்கின்றன. ஆனால் இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பிலும், மனிக்பாம் மூடுதலின் பின்னணியிலும் இருக்கின்ற அரசியல், கனவுகளுக்கும், கற்பனைகளுக்கும் அப்பாலானவை. ஒரு தொகுதி தமிழ் மக்களை ஓட்டாண்டிகளாகத் தெருவில் துரத்தி விட்டமைக்கு உதாரணமாகக் கொள்ளத்தக்கவை. முட்கம்பிகளால் அடைக்கப்பட்ட முகாம்களில் இருந்து, திறந்த வெளிக் காட்டுக்குள் மனிக்பாமியர்கள் கைவிடப்பட்டிருக்கின்றனர்.

**மனிக்பாம்**

அது பெருங்காடு. வவுனியாவின் ஓர் எல்லையில், கடந்த நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் மட்டும் மனிதர்கள் வாழ்ந்திருக்கின்றனர். வவுனியா மாவட்டத்தின் தனித்தன்மையான பண்ணைகள், அந்தக் காலப் பகுதியில் இங்கும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதனாலேயே காலப் போக்கில் மனிக் பாம் என்ற பெயர் பெற்றிருக்கின்றது இந்தக் காடு.

இனக்கலவரங்களோடு பண்ணைகள் மூடிக்கொண்டன. முதலில் பற்றைக் காடுகள் ஆக்கிரமித்துக் கொண்டன. பின்னர் பெருங்காடு அடர்த்தியானது. அதிலிருந்து புளியங்குளத்தினூடாக அனுராதபுரம் செல்லும் போராளிகளுக்கும், வவுனியாவின் தலை சிறந்த வேட்டையாடிகளுக்கும் மனிக்பாம் காடு கோட்டையாக இருந்தது. ஆனால் அந்தக் கோட்டைத்தனமும் நீண்டகாலம் நிலைத்திருக்கவில்லை. மனிக்பாம் காட்டுக்கும் அழிவு கிட்டியது.

**செத்து வீழ்ந்தது காடு**

முள்ளிவாய்க்கால் ஓர் இனத்தின் வாழ்க்கையை மட்டும் அழித்துப் போடவில்லை. இந்தக் காட்டையும் சேர்த்தே அழித்தது. முள்ளிவாய்க்காலில் அழிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வு கொடுப்பதற்காக இந்தக் காடு அழிக்கப்பட்டதால் இதற்கு அழிவடைந்தோர் வரலாற்றில் சிறு பெருமையுண்டு.

லட்சக்கணக்கான அகதிகளுக்கு வாழ்வு கொடுப்பதற்காக தசாப்தகால மரங்கள் இரவோடு இரவாக அழிக்கப்பட்டன. இயந்திரக் கோடாரிகள் மறுபடியும் மனிக்பாம் என்ற, சூரியனைக் காணாத காட்டை வெளிச்சமுறச் செய்தன. வெட்டையாகிய காட்டில் தறப்பாள் குடிசைகள் அதி விரைவாக முளைத்தன. 3 இரவுகளில் லட்சக்கணக்கான குடிசைகளும், அதற்குள்ளான 5 பிரதான வலயங்களும், ஒவ்வொரு குடிசைக்குள்ளும் மூன்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களும் முளைக்கச் செய்யப்பட்டன.

**பசியாற்றிய நிழல்**

ஏதுமற்று, ஒட்டிய வயிறுகளுடன் மட்டும் புதுமனை புகுந்த அகதிகளுக்கு மனித அந்தஸ்தின் சிறு பகுதி இங்குதான் வழங்கப்பட்டது. ஓர் இனம் எப்படியெல்லாம் அவமானப்பட்டு வாழக் கூடாது என்பதற்கு உதாரணமான சுவாரஸ்யக் கேவலங்களை மனிக்பாம் போராடும் அனைத்து இனங்களுக்கும் கற்றுக் கொடுத்தது.

நீண்ட துயரனுபவித்தலின் பின் மயக்கமுற்ற மக்கள், ஒரு கோப்பை அகதி உணவுக்காக இங்குதான் வரிசையில் நிற்க வைக்கப்பட்டனர். உணவுக்கான வரிசையில் நெரிசல்பட்டு மரணித்தவர்களும் இங்குதான் வாழ்ந்தனர். அனைத்தையும் மூடி மூடிக் காக்கும் இனமொன்று பால், வயது பேதமின்றி வரிசையில் இருந்து இங்குதான் மலங் கழித்தது. மானம், மரியாதை, கட்டிக்காத்த கௌரவம் [illegible]தெல்லாம் காற்றில் பறந்ததை மனிக்பாம்தான் மக்களுக்குக் காட்டியது. ஆனாலும் அது பிள்ளைகளின் பசியாற்றிய நிழல்.

**எஞ்சியவர்கள் சுதந்திரமாயிருந்தனர்**

முள்ளிவாய்க்கால் அகதிகளைச் சிறைப்பிடித்ததிலிருந்து இலங்கைக்கு சர்வதேச அழுத்தம் அதிகரித்த வண்ணமேயிருந்தது. பான்-கி-மூன் தொட்டு, இந்தியாவின் முக்கிய அமைச்சர்கள் வரை மனிக்பாமுக்கு பயணித்தனர். அழுது அரற்றிய மக்களின் அவலங்களை நேரில் தரிசித்தனர். வந்த அனைவரும் அடைக்கப்பட்ட மக்களைப் பார்த்து தமது கண்ணீரை வடித்துப்போக, கனிமொழி மட்டுமே அரசுக்கு அங்கீகாரம் வழங்கிப்போனார்.

மற்றையவர்களின் வேதனை சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிரான அழுத்தமாக மாறியது. இதனால் அரசு கொஞ்சம் கொஞ்சமாக மனிக்பாம் அகதிகளைச் சொந்த ஊர்களுக்குத் திருப்பியது. ஆனாலும் இராணுவம் முழுதாக ஏப்பம் விட்டுக் கொண்ட முள்ளிவாய்க்கால், கேப்பாபிலவு மக்கள் இங்கேயே தங்கவைக்கப்பட்டிருந்தனர். சனநெரிசல் குறைவடைய இராணுவக் கவனிப்பும் குறைந்தது. முன்னரைவிட சுதந்திரத்தை அந்து முகாம் வாசிகள் அனுபவிக்கத் தொடங்கினர்.

**இந்தியப் பயணத்தில் திருப்பம்**

தமிழக மக்கள் கொதித்துக் கொண்டிருந்தனர். சிங்களவரோ அல்லது மஹிந்தரோ தமது நாட்டில் கால்வைக்கக்கூடாது என்பதில் அக்கறையாயிருந்தனர். இருப்பினும் மஹிந்தரை வரவேற்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தது அந்த நாடு. தன் நாட்டு வாசியின் தீக்குளிப்பைக் கூட மதிக்காத இந்தியா, மஹிந்தருக்கு செங்கம்பள வரவேற்பளித்தது.

தன்னைச்சூழும் பாகிஸ்தான், சீனா [illegible] மஹிந்தரை மடக்குவதைத் தவிர வேறுவழியிருக்கவில்லை. தமிழ்நாட்டு அழுத்தத்தை தெளிவாக விளக்கிய மன்மோகன், அதனை போக்க தமிழரின் தீர்வு விடயத்தில் எதையாவது செய்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். மனிக்பாம் எனும் இறுதி முகாம் மூடப்படுவதோடு, ஈழத் தமிழர்களை இலங்கை அரசு அகதி முகாம்களில் அடைத்து வைத்திருக்கின்றது என்ற தமிழகத்தின் பிரதான அழுத்த கோசத்துக்கு முடிவுகட்டியது இலங்கை. இனி தமிழகத்தவர்கள் ஈழ அகதிகள் பற்றி கதைக்க முடியாது. ஏனெனில் இங்குதான் அகதிகளே இல்லையே?

**67ஆவது கூட்டத்துக்கும் பதில்**

கடந்த முறை நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் அமெரிக்கா விடாப்பிடியாக நின்று இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுவந்தது. அதிலும் இலங்கையில் அகதிகள் அற்ற நிலை உருவாக்கப்படும்போதே, அந்த நாடு மீதான சர்வதேசக் கவனிப்பு குறைவதற்கான வாய்ப்பிருக்கிறது என்ற சாரப்பட்ட விடயம் முக்கிய நிலைப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இப்போது ஐ.நாவின் 67ஆவது பொதுச் சபைக் கூட்டத் தொடர் ஆரம்பிமாகியுள்ளது. அதிலும் இலங்கை விடயம் குறித்து கேள்வி எழுப்பவும், தீர்மானம் கொண்டுவரவும் வாய்ப்புள்ளது என்பதை ஊகித்துக் கொண்ட இலங்கை பிரதான அழுத்ததிலிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிக்கிறது.

இலங்கையில் அகதி முகாம்கள் இல்லை. அகதிகள் இல்லை. மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார ஒழுங்குகளை ஏற்படுத்திக் கொடுக்கத்தான் பணம் தேவைப்படுகின்றது என்ற விடயங்களை முன்வைத்து அரசு இனித் தப்பித்துக் கொள்ளும்.

**இதற்குள் கவனிக்கபடாதவர்களின் சுடலை வாழ்க்கை**

மனிக்பாம் அகதி முகாமிலிருந்து மக்கள் முற்றாக வெளியேற்றப்பட்டுவிட்டார்கள். வெளியேற்றப்பட்டவர்கள் அவர்களது சொந்தக் கிராமத்துக்கு அருகிலிருக்கும் சீனியாமோட்டை எனப்படும் சுடலையில் வாழ விடப்பட்டுள்ளனர். செத்துப் போனவர்களின் சுடலைக்குள் வாழத் தொடங்கியிருக்கும் அவர்களை ராணுவத்தையும், இராணுவத்தின் பொம்மைகளான சில அதிகாரிகளையும் தவிர ஏனையவர்கள் சந்திப்பது மிகக் கடினம்.

அண்மையில்கூட உண்மையறியச் சென்ற 'உதயன்' செய்தியாளர் இராணுவத்தால் திருப்பியனுப்பட்டார். சீனியாமோட்டையில் விடப்பட்டிருக்கும் மக்களுக்கு எந்தவித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. உறவினர்கள் வந்து சந்திக்கக்கூட தடைவிதிக்கப்பட்டுள்ள இன்னொரு மனிக்பாமுக்குள், தீவிரமான ராணுவக் கண்காணிப்பில் அந்த மக்கள் கைவிடப்பட்டுள்ளனர்.

**அவர்களுக்கும் ஊர் உண்டு**

கேப்பாபிலவு அவர்களின் ஊர். கிட்டத்தட்ட 5,000 ஏக்கர் சுற்றுப்பரப்புடைய அந்த அழகிய கிராமத்தை ஆட்சி புரிந்தது அந்த மக்கள் மட்டுமே. நிறைவான விவசாயம், நந்திக் கடலில் செழித்த நன்னீர் மீன்பிடி, கள்ளியடி வெளி வயல் விதைப்பு, கால்நடை வளர்ப்பு என அந்தக் கிராமத்தவர்களின் வாழ்க்கை, வன்னியிலேயே தனித்துவமாக இருந்தது.

கேப்பாபிலவு என்ற சிறு கிராமத்துக்குள், கள்ளியடி, கொண்டமடு, சூரியபுரம் ஆகிய கிராமங்கள் தொழில் ஈட்டத்தில் சிறப்புற்றிருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் எந்தக் காலத்திலும் குறையாமல் இருப்பது நெல்லும், தயிரும் மட்டுமே. ஆனால், இன்று அவர்களிடம் எதுவுமில்லை. சொந்தக் கிராமத்தின் வாசலிலேயே அகதியாய் வீழ்த்தப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கென்று இருந்த கிராமம் எட்டாக்கனியாக யாருக்கோ சுவைகொடுத்துக் கொண்டிருக்கின்றது. இப்போது அவர்களிடம் இருந்த ஒரு மனிக்பாம் மூடப்பட்டு பல மனிக் பாம்கள் திறக்கப்பட்டுள்ளன. அதில் வாழும் வேதனையை அவர்கள் வெளியே சொல்லவும் முடியாது.

**முழுவதும் இராணுவமயம்**

அந்தக் கிராமம் முற்றிலுமாக இராணுவத்தினரால் விழுங்கப்பட்டிருக்கின்றது. வீடுகள், வயல்நிலங்கள், தோட்டங்கள், பாடசாலை, மைதானம், மாட்டுப் பட்டிகள் என அனைத்திலும் இராணுவத்தினர் குடிகொண்டிருக்கின்றனர் அல்லது அவர்களின் நினைவுத் தூபிகளைக் கட்டிவைத்திருக்கின்றனர். கிராமத்தைக் காத்து நின்ற காடுகள் பரந்தளவில் அழிக்கப்பட்டு விமானப்படைத் தளம் உருவாக்கப்பட்டுள்ளது. பல்வேறு படைப்பிரிவுகளின் தலைமையகங்களும் அங்குதான்.

கிராமம் முழுவதுமே பல்வேறு கூறுகளாக மண் அணைகளால் பிரிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான காணிகளுக்கு வேலிகளோ, எல்லைகளோ இல்லை. அனைத்தும் அழித்து, தெருவோரத்துக்கு மட்டும் ஒழுங்கான இராணுவ வேலி போடப்பட்டுள்ளது.

கேப்பாபிலவை ஊடறுத்து முள்ளியவளைக்கு செல்லும் வீதிக்குப் பதிலாக புதிய வீதி அந்தக் கிராமத்துக்குப் பின்புறமாக அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே பொது மக்கள் கேப்பாபிலவைப் பார்ப்பது அரிது.

*லட்சக்கணக்கான அகதிகளுக்கு வாழ்வு கொடுப்பதற்காக தசாப்தகால மரங்கள் இரவோடு இரவாக அழிக்கப்பட்டன. இயந்திரக் கோடாரிகள் மறுபடியும் மனிக்பாம் என்ற, சூரியனைக் காணாத காட்டை வெளிச்சமுறச் செய்தன. வெட்டையாகிய காட்டில் தறப்பாள் குடிசைகள் அதி விரைவாக முளைத்தன.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> சிங்கள அரசு ஒன்றே ஆட்சியில் இருக்கும் போது சிங்களவர்கள் ஏன் இடம்பெயர்கிறார் கள், அதிலும் ஆபத்தான பய ணங்களை மேற்கொண்டு ஏன் ஆஸ்திரேலியாவுக்கு வருகிறார்கள்?

# ஆஸி. தடுப்பு முகாம்களை நிறைக்கும் சிங்களவர்கள்

கிறிஸ்மஸ் தீவிலிருந்து **ஜெயா.பி**

தாயகத்தில் சுமார் 30 வருடகால மாக இடம் பெற்ற போரால் உலக நாடுகள் முழுவதும் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்தனர். தற்போதும் புலம் பெயர்ந்து கொண்டுதான் உள்ளனர். ஆபத் தான கடலலைகளில் மிதந்து அக்கரை தேடுகின்றனர்.

இலங்கையில் போர் முடி வுற்று சுமார் 3 வருடங்கள் நிறை வடைந்து விட்டன. ஆனாலும் அங்கிருந்து தமிழர்கள் புலம் பெயர்வது இதுவரை முடிவுக்கு வரவில்லை. தற்போது ஆஸ்திரே லியாவை நோக்கித்தான் அவர்கள் அதிகளவில் படகுமூலம் புலம் பெயர்கின்றனர்.

போர் நடந்து கொண்டிருந்த போது புலம்பெயர்ந்த தமிழர் களின் எண்ணிக்கை இப்போது குறைந்துவிட்டது என்றாலும் அது தொடர்கிறது. ஆனால் போர் முடிந்த பின்னர் இலங் கையிலிருந்து புலம்பெயரும் சிங்களவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. அதுதான் ஆச்சரியத்துக்குரிய விடயம்.

இங்கே கிறிஸ்மஸ் தீவில் சுமார் 400 பேர் வரையில் சிங்களவர்கள் இருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் கோரித்தான் அவர்கள் இங்கு வந்துள்ளார்கள். இன் னும் வந்து கொண்டிருக்கிறார் கள்.

சிங்களவர்களின் நாட்டில் சிங்கள அரசு ஒன்றே ஆட்சி யில் இருக்கும் போது சிங்கள வர்கள் ஏன் இடம்பெயர்கிறார் கள், அதிலும் ஆபத்தான பய ணங்களை மேற்கொண்டு ஏன் ஆஸ்திரேலியாவுக்கு வருகிறார் கள் என்பது அனைவரும் ஆராய ஆசைப்படும் விடயம்தான்.

புத்தளம், சிலாபம், நீர் கொழும்பு, அலவத்தை, கொழும்பு, மகரகம போன்ற பிரதேசங் களிலிருந்தே அதிகமான சிங்க ளவர்கள் ஆஸ்திரேலியா நோக்கி வந்திருக்கிறார்கள்.

அரசுக்குப் பயந்துதான் தாங் கள் ஆஸ்திரேலியாவை நோக்கி ஓடிவந்தோம் என்கிறார்கள் இந்தச் சிங்களவர்கள். இவர் களில் அதிகமானோர் தமக்கு இலங்கை அரசால் அச்சுறுத்தல் என்றும், ஒரு சிலர் இலங்கை யில் நாளுக்கு நாள் விலைவாசி அதிகரித்து செல்வதால் ஏற்படும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க வந்தோம் என்றும் ஆஸ்திரேலியக் குடிவரவு குடிய கல்வு அதிகாரிகளிடம் தெரிவித் துள்ளனர்.



> இங்கு சிங்களவர்களை விட தமிழர்களே பெரும் பான்மை. எனவே தமிழர் களுக் குக் கிடைக்கும் வாய்ப்புக்கள் தமக்கும் வேண்டும் என்று அவர்கள் போராடு கின்றனர்; கெஞ்சுகின்றனர்.

தமிழர்களால் தமக்கு இலங் கையில் பிரச்சினை என்று கூறிக்கொண்டு ஆஸ்திரேலியா வில் தஞ்சம் கோருகின்ற சிங்க ளவர்களும்கூட இங்கு இருக்கி றார்கள்.

''எங்களுடைய பெற்றோர் கள் பரம்பரை பரம்பரையாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதர வானவர்கள். எனவே நாங்களும் அக்கட்சிக்கே ஆதரவு தெரிவித்து வந்தோம். அப்படி, அரசுக்கு எதிரான கட்சிக்கு ஆதரவாகச் செயற்படவேண்டாம் என்று இலங்கை பொலிஸார் அச்சு றுத்தி வருகின்றனர். இதனா லேயே நாட்டை விட்டு வெளி யேறியுள்ளோம்'' என்று சிங்கள வர் ஒருவர் தெரிவித்தார். அரசி யல் தஞ்சத்துக்கு விண்ணப் பித்துவிட்டு கிறிஸ்மஸ் தீவில் கடந்த 4 மாதங்களுக்கு மேலாகக் காத்திருக்கிறார் அந்த நபர்.

அவர் இவ்வாறு தெரிவித்துக் கொண்டிருக்கும் போது இடை நடுவில் புகுந்த 50 வயது மதிக்கத்தக்க ஒரு வர், ''தம்பி நான் எல்.ரி.ரி. இருக்கேக்க அவர்களுக்கு உதவி செய்தனான். போர் முடிந்த பிறகு அதை கண்டுபிடிச்சிட்டாங்கள். பிறகென்ன இராணுவ மும் பொலிஸும் சேர்ந்து வழமையான பாணியில் என்னையும் பழிவாங்கத் தொடங்கிட்டார்கள்'' என்றார். ''புலிகளுக்கு நீங்கள் ஏன் உதவி செய்தீர்கள்'' என்று கேட்டதும் மெல்ல அடங்கிவிட்டார் அந்த நபர்.

இன்னொரு சிங்களவரோ [illegible] வெளியேறியதற்கான காரணத்தை பையப் பையச் சொல் லத் தொடங்கினார். ''எனது சகோதரி சுவிஸ்ஸில் உள்ளார். நான் சிலாபத்தில் சொந்தமாக ஓட்டோ வைச்சு ஓடினனான்.




அங்கு சகலவிதமான வசதிகளும் உள்ளன. எனக்கு இங்கு வர வேண்டிய தேவை ஏற்படவே இல்லை. ஆனால் நான் தாய் நாட்டை விட்டு வெளியேற வேண் டியிருந்ததற்கு அரசும் பொலிஸா ரும்தான் காரணம்.''

தான் ஐ.தே.கட்சிக்கு வேலை செய்வது அரசுக்குப் பிடிக்காதத னால் பொலிஸாரைப் பயன் படுத்தி அரசு தன்னையும் குடும் பத்தையும் அச்சுறுத்துகின்றது என்று அவர் கூறுகின்றார்.

ஆனால், கிறிஸ்மஸ் தீவில் உள்ள சிங்களவர்களில் அதிக மானோர் தங்களுக்கு நாட்டில் வாழ்வதற்கு போதுமான வருமா னம் இல்லை என்பதற்காகவே புறப்பட்டு வந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது: நாளுக்கு நாள் உயரப் பறக்கும் விலை வாசிக்கு ஈடுகொடுக்க அவர் களால் முடியவில்லை. ''அதனை சமளிக்க முடியாததாலேயே உயிர் அச்சுறுத்தலான கடல் பயணத்தை மேற்கொண்டோம்'' என்றும் தெரிவித்துள்ளார்.

தாங்கள் நாட்டைவிட்டு வெளியேறியமைக்கு அரசையும் பொலிஸாரையும் இரணுவத் தினரையும் குற்றம்சாட்டும் சிங் களவர்கள் மஹிந்தவைப் பற்றி வாய் திறப்பதற்கு மட்டும் மறுத்துவிடுகின்றனர்; அச்சப் படுகின்றனர். ஒருவேளை தாம் திருப்பி அனுப்பப்பட்டால், அவ ரைப்பற்றிக் கருத்துத் தெரிவித் திருப்பது பிரச்சினையாகும் என்று அஞ்சுகின்றனர்.

இதேவேளை ஆஸியின் தடுப்பில் உள்ள காலத்தில் நடைமுறைபடுத்தப்படும் செயற்றிட்டத்தில் தமக்கும் சம வாய்பளிக்குமாறு ஆஸ்திரேலிய அலுவலர்களிடம் அவர்கள் கெஞ்சுகின்றனர். தடுப்பு முகாம் களில் தமிழர்களே பெரும் பான்மை என்பதால் சிங்கள வர்கள் இங்கு சிறுபான்மை யினராக விடுகின்றனர். எனவே எல்லா விடயங்களிலும் தமிழர் களுக்குக் கிடைக்கும் வாய்ப்புக் கள் தமக்கும் வேண்டும் என்று அவர்கள் போராடுகின்றனர்; கெஞ்சுகின்றனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



■ சந்திரசேகர ஆஷாத்

# மீண்டும் ஓர் அரசியல் படுகொலை

**ஒருவர் தனது வாழ்நாளில் ஒருமுறைதான் கொலை செய்யப்பட முடியும். சிங்கள தேசிய எழுச்சியின் ஒப்பற்ற அரசியல் தலைமைச் சக்தியாக விளங்கிய எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்கா இறந்த பின்பும் மீண்டும் மீண்டும் கொலை செய்யப்படும் சம்பவங்கள் அவரின் பேரிலேயே இடம்பெற்று வருகின்றன. அதுமட்டுமன்றி அவரின் கட்சியும் அதன் கொள்கைகளும் தொடர்ந்து விற்கப்பட்டு வருகின்றன.**

அண்மையில் மறைந்த முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்காவின் ஐம்பத்து மூன்றாவது சிரார்த்த தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அவரது சமாதி அமைந்துள்ள ஹொரகொல்லயில் இடம்பெற்றது.

1959 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26 ஆம் நாள் அவர் சோமவன்சதேரோ என்ற ஒரு புத்தபிக்குவால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். அவரும் அந்தக் கொலைக்கு சதித்திட்டம் தீட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்ட களனி விகாரையின் பீடாதிபதி புத்தகுந்ததேரரும், ஜெயவர்த்தன என்ற ஒரு ஆசிரியரும் மேற்படி கொலை தொடர்பாகத் தண்டிக்கப்பட்டனர்.

ஒருவர் தனது வாழ்நாளில் ஒருமுறைதான் கொலை செய்யப்பட முடியும். சிங்கள தேசிய எழுச்சியின் ஒப்பற்ற அரசியல் தலைமைச் சக்தியாக விளங்கிய எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்கா இறந்த பின்பும் மீண்டும் மீண்டும் கொலை செய்யப்படும் சம்பவங்கள் அவரின் பேரிலேயே இடம்பெற்று வருகின்றன. அதுமட்டுமன்றி அவரின் கட்சியும் அதன் கொள்கைகளும் தொடர்ந்து விற்கப்பட்டு வருகின்றன.

அவருடைய சிரார்த்த தினம் கூட அவரின் கொள்கைகளைக் கொலை செய்யும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற புத்த பிக்குகளின் பிரித் ஓதலுடன் இடம்பெற்றன. அவரைக் கொல்லத் திட்டம் தீட்டியவரும் அவரைக் கொன்றவரும் புத்தபிக்குகளே.

1948 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் பெற்றபோதிலும் அது பல விதங்களிலும் பிரிட்டனின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வந்தது. இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் எந்த ஒரு சட்டமும் பிரிட்டிஷ் அரசின் பிரதிநிதியான மகாதேசாதிபதி கையெழுத்து வைத்தாலே செல்லுபடியாகும் என்ற நிலை நிலவியது. திருமலைத் துறைமுகம், கட்டுநாயக்கா விமான நிலையம் என்பன பிரிட்டிஷ் படைக் கட்டமைப்பின் கீழேயே இருந்தன. இலங்கையின் பொருளாதாரத்தில் பிரதான பங்கு வகித்த பெருந்தோட்டத்துறை, கொழும்புத்துறைமுகம் என்பன பிரிட்டிஷ் நிறுவனங்களினாலேயே நிர்வகிக்கப்பட்டன. ஏறக்குறைய ஒரு பொம்மை ஆட்சி போன்றே இலங்கை அரசு செயற்பட்டு வந்தது. நீதித்துறையில் கூட இலங்கையின் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மாற்றியமைக்கும் அதிகாரம் பிரிட்டனின் பிறிவி கவுன்சிலுக்கே இருந்தது.

இப்படியான ஒரு நிலையில் 1951 ஆம் ஆண்டில் எஸ். டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறி தொழிலாளர்கள், விவசாயிகள், மதகுருமார்கள், கிராமிய ஆசிரியர்கள், சுதேச வைத்தியர்கள் எனப் பரந்து கிடந்த சக்திகளை ஒன்றிணைத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தார்.

1953 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியையே திணறடித்த இடதுசாரிகளின் தலைமையில் இடம்பெற்ற ஹர்த்தால் காரணமாக ஏற்பட்ட பேரெழுச்சியையும் அவர் நன்கு பயன்படுத்திக் கொண்டார். 1956 இல் தன்னுடன் இலங்கையின் மாக்சியத் தந்தை என வர்ணிக்கப்பட்ட பிலிப் குணவர்த்தனா, தகநாயக்கா, முஸ்லிம் மக்களின் தலைசிறந்த முற்போக்குக் கல்விமான் பதியுதீன் மஹ்மூத் ஆகியோரை ஒன்றிணைத்து மக்கள் ஐக்கிய முன்னணி என்ற பேரில் போட்டியிட்டுப் பெரு வெற்றி பெற்றார். 1956 இல் அவரின் தலைமையில் அரசு அமைக்கப்பட்டபோது அது ஒரு தேசிய எழுச்சியாகவே கருதப்பட்டது. ஆனால் ஆங்கிலம் அரச கரும மொழியாக இருந்து வந்த அந்த நாள்களில் சிங்களத்தையும் தமிழையும் அரச கருமமொழிகளாக்கப் போவதான கொள்கையை முன் வைத்திருந்தால் அவர் தமிழ் மக்களின் ஆதரவையும் பெற்றிருக்க முடியும். ஆனால் அவரோ சிங்களம் மட்டுமே அரச கரும மொழி என்ற கோஷத்தை முன்வைத்த காரணத்தால் அவர் தமிழ் மக்களின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருந்ததுடன் அவரின் இலங்கைத் தேசியம், சிங்களத் தேசியமாகச் சுருங்கிவிட்டது.

எனினும் அவர் ஒரு தலைசிறந்த ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகவும் சுயாதிபத்தியமுள்ள ஒரு நாட்டைக் கட்டியெழுப்பும் தலைவராகவும் விளங்கினார்.

ஞாயிறு காரம்

ஆனால் இவர் ஆட்சிபீடமேறியதும் கொண்டு வந்த சிங்களச் சட்டமும் அதற்கெதிராக தமிழரசுக் கட்சியினர் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தின் மீது சிங்களக் காடையர்கள் நடத்திய படுமோசமான தாக்குதல்களும் இவரைத் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து வெகு தொலைவிலேயே தள்ளிவிட்டன. எனினும் தமிழ் மக்கள் நடத்திய தொடர்ச்சியான போராட்டங்கள் காரணமாக பண்டா - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதுமட்டும் நிறைவேறியிருந்தால் இன்று நாடு சந்தித்த பேரழிவுகள் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. தமிழ் மக்களும் சிங்கள, முஸ்லிம் மக்களும் ஒன்றிணைந்து ஒரு சுயாதிபத்தியமுள்ள தன்னிறைவுப் பொருளாதாரம் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். ஆனால் சிங்களப் பேரினவாதிகள் ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் உருவாக்கிய பெரும் எதிர்ப்பலை காரணமாகவும் புத்த பிக்குகள் பிரதமர் வாசஸ்தலத்தின் முன் நடத்திய சத்தியாக்கிரகத்தின் காரணமாகவும் இந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. அதுமட்டுமன்றி 1958 இல் தென்னிலங்கையில் இனவாதிகள் மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கைகள் காரணமாக உயிர்ச்சேதம், பொருள் சேதம் உட்பட தமிழ் மக்கள் பேரழிவுகளைச் சந்திக்க வேண்டியிருந்தது.

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் ஒரு ஊசலாட்டப் போக்கைக் கடைப்பிடித்த அவர் உறுதியான ஏகாதிபத்திய எதிர்ப்பாளராக விளங்கியதை எவரும் மறந்துவிட முடியாது. திருமலையிலிருந்து பிரிட்டிஷ் றோயல் கடற்படை முகாமை வெளியேற்றியதும் கட்டுநாயக்காவிலிருந்து பிரிட்டிஷ் விமானப் படைத் தளத்தை அகற்றியதும் மிகவும் துணிச்சலானதும் வெற்றிகரமானதுமான ஒரு சாதனைகளாகும். அதையடுத்து மேற்கு நாடுகள் பல பொருளாதார நெருக்கடிகளையும் மிரட்டல்களையும் ஏற்படுத்திய போதிலும் அவர் அசைந்து கொடுக்கவில்லை. பஸ் போக்குவரத்துத் தேசிய [illegible] மயம், துறைமுகங்கள் தேசிய மயம் என அவர் மக்கள் நலன்பேணும் திட்டங்களை மேற்கொண்டார். சர்வதேச அரங்கிலும் இலங்கையை ஒரு நடுநிலை நாடாக நிலை நிறுத்தி சீனா, ரஷ்யா, கியூபா போன்ற நாடுகளுடன் ராஜரீக உறவுகளைப் பலப்படுத்தினார். அணிசேரா நாடுகளின் அணியில் இலங்கையின் நிலைப்பாட்டைப் பலப்படுத்தினார்.

அதுமட்டுமன்றி உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறும் பொருட்டு வெளிநாட்டு உணவு வகைகளை மட்டுப்படுத்தியதுடன் விவசாய உள்ளீடுகளுக்கு மானியம் வழங்கும் முறையைக் கொண்டு வந்தார். இலங்கை வங்கியைத் தேசிய மயமாக்கியதுடன் மக்கள் வங்கியையும் ஆரம்பித்துச் சாதாரண மக்கள் வங்கிகளைப் பயன்படுத்தும் வழிவகைகளை மேற்கொண்டார்.

இவர் காலத்தில் பல உள்ளூர் கைத்தொழில் நிறுவனங்கள் உருவாகித் தேசிய உற்பத்திக்குப் பலம் சேர்த்தன.

ஒட்டுமொத்தத்தில் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா உண்மையான ஒரு தேசியவாதியாகவும் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயபூர்வமான நிரந்தரமான தீர்வைக் காண விரும்பியவராகவும் சுய ஆதார தன்னிறைவுப் பொருளாதாரம் கொண்ட ஒரு சுதந்திர நாட்டைக் கட்டியெழுப்பும் உத்வேகம் கொண்டவராகவும் விளங்கினார்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அந்நிய உளவு நிறுவனங்களின் திட்டமிட்ட சதியாலும் இனவெறி பிடித்த புத்த பிக்குகளின் அராஜகத்தாலும் அவர் கொல்லப்பட்டுவிட்டார். இன்று அவரையும் அவரால் ஆரம்பிக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் சொல்லி ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றியவர்கள் இன்று அவரின் கொள்கைகளுக்கு நேர் விரோதமான போக்கில் நாட்டைக் கொண்டு செல்கின்றனர். ஒரு தேசிய சுயாதீபத்தியமுள்ள நாட்டைக் கட்டியெழுப்ப அவர் எடுத்த முயற்சிகளை சிதைத்து நாட்டை அந்நிய தேசங்களின் நுகத்தடியில் பிணைப்பதன் மூலம் அவரை மீண்டும் மீண்டும் கொலை செய்து கொண்டிருக்கின்றனர்.

இன்று அபிவிருத்திக்கு சுற்றுலாத்துறை வளர்ச்சி என்ற பேரில் எமது பொருளாதாரம், முழுமையாகவே வெளிநாடுகளில் தங்கியிருக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறது.

அந்நிய முதலீடுகளைக் கவர்வது என்ற பேரில் எமது நிலங்கள் அந்நிய நாட்டு நிறுவனங்களுக்கு விற்கப்படுகின்றன. அல்லது நீண்ட காலக் குத்தகைக்கு விடப்படுகின்றன. ஒரு சில இடங்களில் எமது மக்களின் குடியிருப்புக்கள் பறிக்கப்படுகின்றன. இன்னும் சில இடங்களில் எமது விவசாயம், மீன்பிடி என்பன பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக சம்பூர், குச்சவெளி, கொக்கிளாய், கொழும்பு, காலிமுகத்திடல் என்பன சில உதாரணங்களாகும்.

இன்று எமது பொருளாதாரத்தில் ஆடை ஏற்றுமதி முக்கிய பங்கை வகிக்கின்றது. இதற்கான மூலப்பொருள்கள், இயந்திரங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. எமது மின்சாரமும் மனித உழைப்பும் மலிவான விலையில் பெறப்பட்டு உற்பத்தி செய்யப்படுகின்றது. அதாவது மூலப் பொருள்களுக்கும் சந்தைப்படுத்தலுக்கும் வெளிநாடுகளையே நம்பி இருக்க வேண்டியுள்ளது. ஒரு சிறு சர்வதேசப் பொருளாதார நெருக்கடி கூட எம்மைப் பெரும் நிலை குலையச் செய்துவிடும். அதுமட்டுமன்றி எமது பொருள்களைக் கொள்முதல் செய்பவர்கள் வல்லரசு நாடுகளே. எனவே அதை வைத்து மிரட்டி எம்மை அடிபணிய வைத்துவிடவும் முடியும்.

சுற்றுலாத்துறை கூட வெளிநாடுகளில் தங்கியுள்ள ஒரு துறையாகும். அதில் பெரும் முதலீடுகளைச் செய்பவர்களும் வெளிநாட்டு நிறுவனங்களே. ஆனால் இதன் காரணமாக எமது நாட்டின் சுற்றுச்சூழல் பாதிப்பு, விபசாரம் போன்ற கலாசார சீரழிவுகள் மலிந்துபோயுள்ளதை நாம் காணலாம்.

பண்டாரநாயக்க அவர்கள் துறைமுகங்களைத் தேசிய மயமாக்கினால் இன்று அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் சீனாவின் மேலாதிக்கம் ஓங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இனப்பிரச்சினை விவகாரத்தில் இரண்டு சுற்றுப் பேச்சு நடத்திய பின் மூன்றாவது சுற்றில் பண்டா - செல்வா ஒப்பந்தம் கையழுத்தானது. ஏனெனில் அவர் இனப்பிரச்சினையைத் தீர்க்க விசுவாசமாக விரும்பினார். இன்று பல சுற்றுப் பேச்சுக்கள் நடந்தும் ஒரு அங்குலம் கூட முன் செல்லவில்லை.

அடிப்படையில் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவும் அவரின் கொள்கைகளும் இன்று மஹிந்த அரசால் கொலை செய்யப்படுகின்றன. ஆனால் இந்தக் கொலை நாட்டை அடிமைப்படுத்தும் ஒரு பயங்கரக் கொலையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க!

■ ராகவன் அல்பி

மாற்றம் செய்வதென்பது எளிதானது சுயமுன்னேற்றம் என்பது ஏணியில் ஏறுவது போன்றதாகும். நீங்கள் உயரத்தை அடைவதில் குறியாக இருந்தால் ஒவ்வொரு அடியையும் உறுதியாகப் பற்றியிருக்க வேண்டும். வேகமாகப் போனால் தவறி விழ வாய்ப்பிருக்கிறது. மிக மெதுவாகப் போனாலும் தவறி விழ வாய்ப்பிருக்கிறது. மிக வேகமாகப் போனால் களைத்துச் சோர்ந்து போவீர்கள்.

வாழ்க்கை யதார்த்தத்தில் ஏணியானது நேரானதாக இருக்காது. வாழ்க்கையில் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் மாற்றிக் கொண்டு மற்றவற்றை அப்படியே விட்டுவிடுவதை நீங்கள் அரிதாகவே விரும்புவீர்கள். ஆகவே உங்கள் ஏணியை நீங்கள் தயார் செய்யும் போது ஏணிப் படிகளின் இடைவெளியானது சரிசமமானதாக இருக்க வேண்டும். அதிக தூரமாக இருக்கக்கூடாது. உங்களைநீங்கள்உற்சாகப்படுத்திக்கொண்டு வெற்றிப் பாதையில் முன்னேற நீங்கள் செய்ய வேண்டிய சின்னச்சின்ன மாற்றங்கள் பற்றிப் பார்க்கலாம்.



**தலைமுடிக்கு வண்ணமிடுங்கள்:** உங்கள் கேசத்துக்கு தற்போதைய நிறம் உற்சாகத்தைத் தராவிட்டால் புதிய வண்ணம் இடலாம். நீங்கள் ஆணாக இருந்தால் குறிப்பாக அது மற்றவர்கள் உங்களைக் கவனிக்க வழிவகுக்கும்.

**முடியை மழித்து விடுங்கள்:** நீண்ட நாள் வளர்த்த தாடியை மழித்துவிடுங்கள். உங்கள் தோற்றத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை மற்றவர்கள் கவனிப்பார்கள்.

**ஆடைகள்:** நீங்கள் வழக்கமாக உடுத்தும் ஆடைகளுடன் தன்னம்பிக்கை துளிர்க்கும் வகையான ஆடைகளைத் தேர்ந்தெடுத்து உடுத்துவது உற்சாகத்தைக் கூட்டும்.

**காரை சுத்தம் செய்தல்:** புதிய அழகைத் தர காரில் ஏற்கனவே படிந்திருக்கும் அழுக்குகளை துடைத்தல், சொக்லேட் தாள்கள் மற்றும் சிதறிக்கிடக்கும் பிற தாள்களை அகற்றி விடுதல் போன்றவை காருக்கு புதுப்பொலிவைத் தரும்.




17

**உங்கள் அம்மாவுக்கு முத்தம் கொடுங்கள்:** நீங்கள் யாரை நேசிக்கிறீர்களோ அதை அவர்களிடம் காட்டுவது எளிதானது. இது பல புதிய நண்பர்களைப் பெற வைக்கும். எனவே உங்கள் முதல் நண்பரான அம்மாவிடமிருந்து அன்பைப் பொழியத் தொடங்குங்கள்.

**சீனி சேர்ப்பதைத் தவிருங்கள்:** இது கலோரியைக் குறைக்க உதவுவதுடன் ஏன் சீனி சேர்ப்பதை நிறுத்திவிட்டீர்கள் என்று மற்றவர்கள் உங்களைக் கேட்கவும் வைக்கும். அதில் ஒரு புத்துணர்வு கிடைக்கும்.

**பூக்கள் அளியுங்கள்:** வீட்டிலோ அல்லது பணிபுரியும் இடத்திலோ அல்லது இனிய நண்பனுக்கோ கொஞ்சம் செலவு செய்து வாங்கிக் கொடுக்கும் பூக்கள் பெரும் மதிப்பை உங்களுக்குத் திருப்பிக் கொடுக்கச் செய்யும்.

**பஸ்ஸைத் தவிருங்கள்:** அலுவலகங்களுக்கு பஸ்ஸிலோ வேறு வாகனத்திலோ செல்வதாக இருந்தால் கடைசி ஒரு மைல் தூரத்துக்கு இறங்கி நடந்து செல்லுங்கள். அப்போது நடந்து செல்வதன் இனிய விளைவுகளைக் கண்டு ஆச்சரியமடைவீர்கள்.

**மேசையை சுத்தம் செய்யுங்கள்:** மேசையில் இறைந்து கிடக்கும் பொருள்கள் நீங்கள் அதிக வேலையாய் இருக்கிறீர்கள் என்று சொன்னாலும், ஒழுங்கற்று இருக்கிறீர்கள் என்றே மற்றவர்களால் புரிந்து கொள்ளப்படும். அதனால் மேசையை சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.

**முக்கியமான செய்தியை வெட்டி வையுங்கள்:** செய்தித்தாளில் அல்லது பத்திரிகையில் உங்களைக் கவரும் செய்திகள் வந்தால் அதை உடனே வெட்டி ஒரு கோப்பில் போட்டு வையுங்கள். அது உங்கள் நண்பனுக்குத் தேவைப்படும் என்றால் அதை அவனுக்கும் அனுப்பி வையுங்கள். இதுபோன்று இணையத்தில் வரும் கட்டுரைகளையும் சேர்த்து வையுங்கள்.

உங்கள் வாழ்க்கையில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் நீங்கள் இருக்கிறீர்கள் என்று பிறருக்குத் தெரிந்தால் அவர்களும் ஆதரவுக்கரம் நீட்டுவார்கள். அதுவே உங்கள் வெற்றியை மேலும் ஊக்கப்படுத்தி வழிநடத்தும்.

## காதல் கடிதம்

காதல் கடிதத்திற்குள்
மறைந்துள்ள கவிதைகள்
கடிதம் தரவில்லை
அத்தனையும்
என்கவிதைகள்
கவிதைகளுக்குள்
ஒளிந்திருக்கும்
என் இதயம்
கடிதம் கொடுத்து
காதல் சொல்ல
வேண்டுமா?
என் கவிதையே
உனக்கு புரியவில்லையா?

சா. ஜிந்துஜா

## அம்புலிக்கு ஒரு மடல்

அம்புலிக்கு ஒரு
மடல்
வெண்ணிலவே
நில்லு
எங்கள் துயரத்தை
கேளு

உறவுகளை
இழந்து விட்ட
இளைய மொட்டின்
சோகத் கதை
கேளு

பசுமை தொலைத்த
வயல்வெளியை
இடிந்த கோயிலைப்
பார்

நிலாவே
கீழ் இறங்கி வா
கூடுகளுக்குள்
இருக்கும்
குருவிகளைப் பார்

பலதேசம்
செல்லும் நீ
அடுத்த இரவு
வரும் போது
நல்ல சேதி
சொல்லு

ஆ. முல்லைதிவ்யன்

# மறைந்துபோன கதைசொல்லிகள்

■ அம்பிகாபதி

ஓர் ஊரில, ஒரு ராஜா இருந்தாராம். அந்த ராஜாவுக்கு...'' எனத் தொடங்கி,கேட்பவர் மனதுக்குள் கற்பனைக் குதிரைகளை கட்டவிழ்த்து விடும் கதை சொல்லிகளின் நிலை இப்போது கேள்விக்குறியாகிவிட்டது.

கதை என்று சொல்லும்போதே உள்ளத்தில் ஏற்படும் மகிழ்ச்சி, துள்ளலை அதை அனுபவித்தோர் மட்டுமே உணர முடியும். அதிலும் கிராமத்துக் கதைகள் என்றால் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. குழந்தைகளுக்குச் கதை சொல்லித் தருவது சிறப்பு வடிவம்.

சுமார் கால் நூற்றாண்டுகளுக்கு முன்வரை ஓரளவுக்குப் பாதிப்பில்லாமல் நிகழ்ந்து வந்த கதை சொல்லும் பழக்கம் மெல்ல, மெல்ல நலிந்து, இப்போது அதன் தடம் மறைந்து வருகிறது.

புதிய சிந்தனைக்கான கருவாகக் கருதப்படும் கதைகள் நீதி போதனைகளை உணர்த்தவும், வெற்றிக்கான கனவு, தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதோடு, திறமைகளை மேம்படுத்தவும் வகை செய்யும் வலிமையுடையது. அந்த வகையில் நல்ல கருத்துகளை விதைக்கும் கதைகளை இன்றைய இளைய தலைமுறையினருக்குச் சொல்வது அரிதாகி வருகிறது.

மாறாக, கல்வி பெறுவதில் ஆங்கில மோகமும், எப்படியாவது கூடுதல் புள்ளிகளை எடுக்க வேண்டும் என்ற வேகமும் மேலோங்கி வருகிறதே தவிர, பிற திறன் வெளிப்பாட்டுக்கான முயற்சிகள் குறைவே. அதற்கான நல்ல திட்டங்கள் இருந்தாலும் செயல்திறனைப் பொறுத்த வரையில் அவை நிராகரிக்கப்பட்டவையே.

சுருங்கச் சொன்னால், மாணவ சமுதாயம் எதிர்காலத்தில் பணம் சம்பாதிக்கும் இயந்திரங்களாகவே தயாரிக்கப்படுகின்றனர். இதனால் மன அழுத்தம், உளைச்சலுக்கு அவர்கள் ஆளாக்கப்படுவதோடு, சில நேரங்களில் தவறிழைக்கவும் நேரிடுகிறது.

நூல்களைப் படிப்பது, விளையாடுவது, பயிற்சிபெறுவது என பல நிகழ்வுகளோடு, நீதி போதனைகளை உணர்த்தும் கதைகளைச் சொல்லித் தருவதில் காட்டும் முக்கியத்துவம் குறைக்கப்பட்டதன் விளைவும் சமூகச் சீரழிவுகளுக்குப் பெரிய காரணம் என்பதை மறுக்க முடியாது.

பல ஆண்டுகளுக்கு முன்வரை பள்ளிகளில் நீதி போதனைக்கென நேரம் ஒதுக்கப்பட்டு தனி வகுப்புகள் நடத்தப்பட்டன. அங்கு சொல்லப்பட்ட மரம் வெட்டியின் கதை, வடை சுட்ட பாட்டி, அப்பம் பிரித்த குரங்கு, ஆமையும் முயலும் எனப் பல கதைகள்... நேர்மை, பேராசை, தியாகம், ஒற்றுமை, உழைப்பு, விட்டுக்கொடுக்கும் தன்மை எனப் பல வாழ்வியல் போதனைகளை உணர்த்துவதாக இருந்தது.

இன்றைய அவசர உலகத்தில் அவற்றுக்கெல்லாம் எங்கே நேரம்? பாடசாலைகளில்தான் இந்த நிலை என்றால் பெரும்பாலான வீடுகளிலும் கதைகளுக்குத் தட்டுப்பாடுதான் உள்ளது. இன்றைக்கு கதை என்ற பெயரில் தொலைக்காட்சிகளில் வரும் மாயாஜாலங்களைக் காண்பதன் விளைவு தெரியாமல் மாணவர்கள், இளைஞர்கள் அடிமையாகி வருகின்றனர்.

பொதுவாக, மொழி, கலாசாரம், பண்பாடு என சமூகத்தில் நேரிடும் அனைத்துச் சீரழிவுகளுக்கும் சினிமா, தொழில்நுட்ப வளர்ச்சி போன்ற சில காரணிகளைக் கூறி தப்பித்து விடுகிறோம், கடமையை மறந்து விடுகிறோம்.

சமுதாயத்தின் எதிர்காலமாகக் கருதப்படும் மாணவர்களுக்குக் கதைகளைக் கூறி, நீதி போதனைகளைக் கற்பிப்பது அவசியம். கல்விக்காகப் பல திட்டங்களை உருவாக்கும் அரசுகள், நீதி போதனைகளைக் கற்பிக்கத் தனி வகுப்புகளை ஏற்படுத்த வழிவகுக்கலாம்.

குழந்தைகளுக்குக் கதை பிடிக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். அதை அவர்களுக்குச் சொல்லித்தரும் பழக்கம் நம்மிடையே இப்போது குறைந்து போகலாம். ஆனால், எதிர்காலத்தில் அவர்கள் தங்களது வாரிசுகளுக்குச் சொல்வதற்கு ஒரு கதை இப்போதே தயாராகி வருகிறது. அதை இப்படித் தொடங்குவார்கள்.

''ஒரு காலத்தில் வீட்டுக்கு வீடு இரண்டொரு கதை சொல்லிகள் இருப்பார்களாம்; அவர்கள் நிறைய கதைகளைச் சொல்லித் தருவார்களாம்; அவர்கள் வேற்றுக் கிரகவாசிகள் இல்லையாம், நமது தாத்தா, பாட்டிகளாம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

■ பா.உண்மை

ஆபிரஹாம் லிங்கன் படிப்பதில் கொண்டிருந்த ஆர்வத்துக்கு நிகராக நேர்மையாக நடப்பதிலும் ஆர்வம் காட்டி வந்தார்.

கடையில் பொருள் வாங்கியவர் விட்டுவிட்டுப்போன ஆறு சென்ட்டுகள் பணத்தை எத்தனை தூரம் நடந்து சென்றென்றாலும் கொடுத்துவிடவேண்டும் என்று வேகம் கொள்ளும் அளவுக்கு அவரது நேர்மை விசுவாசம் இருந்தது.

ஒருநாள் தனது கடையை மூடும் நேரத்தில் பொருள் வாங்கிப் போன பெண் இரண்டு டொலர், ஆறு சென்ட்டுகள் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போயிருந்தார். அந்தப் பெண்ணின் பெயர் திருமதி டன்கேன். அந்தப் பெண்ணை ஆபிரஹாம் லிங்கனுக்கு நன்றாகத் தெரியும். அவரது வீடு இரண்டு மைல்கள் தொலைவில் இருந்தது.

லிங்கன் கடையை மூடிவிட்டு நடந்தார். இரண்டு மைல் தொலைவில் இருந்த திருமதி டன்கேன் வீடு நோக்கி. அவரிடம் ஆறு சென்ட்டுகள் பணத்தைக் கொடுத்தார். நடந்தே வீட்டுக்குத் திரும்பினார். அன்று இரவு மிக நிம்மதியாக உறங்கினார். டன்கேனுக்கு ஆச்சரியம். இப்படியுமா மனிதர்கள் இருப்பார்கள் என்று!

அதேபோல, இன்னொரு சம்பவமும் கடையில் நடந்தது. இரவு நேரம். கடையை அடைக்கும் வேலைகளில் இறங்கியிருந்தார் லிங்கன். அப்போது ஒரு பெண் வந்தார்.

'தேயிலை வேணும்.'

' எவ்வளவு?'

' அரை பவுண்டு'

ஆபிரஹாம் அந்தப் பெண்ணிடம் பணத்தை வாங்கிக் கொண்டு, மளமளவென்று தேயிலையை அளந்து கொடுத்தார். அந்தப் பெண் போனதும், கடையை மூடிவிட்டு வீட்டுக்குப் போனார்.

அடுத்த நாள் கடையைத் திறந்ததும், அதிர்ந்து போனார் ஆபிரஹாம். அரை பவுண்டு தேயிலை என்பது கிட்டத்தட்ட எட்டு அவுன்ஸ். முதல் நாள் தேயிலை வாங்கிய பெண்ணுக்கு நான்கு அவுன்ஸ்களைத்தான் அளந்து போட்டிருந்தது தெரிந்தது. அதாவது அரை பவுண்டுக்குப் பதிலாக கால் பவுண்டு தேயிலைதான் அவர் கொடுத்திருந்தார்.

ஆபிரஹாம் உடனே கால் பவுண்டு தேயிலையை அளந்து பொட்டலம் கட்டி எடுத்துக் கொண்டார். கடையைப் பூட்டினார். அந்தப் பெண்ணின் வீட்டுக்குப் போய், அவரிடம் மன்னிப்புக் கேட்டு, கால் பவுண்டு தேயிலையைக் கொடுத்துவிட்டு வந்தார். அதன் பின்னர்தான் நிம்மதியடைந்தார்.

★

*1833.* நியூ சேலத்தில் இருந்த தபாலகத்துக்கு அதிகாரியாக ஆபிரஹாம் லிங்கன் நியமிக்கப்பட்டார். ஏனென்றால், நியூ சேலத்தில் இருந்த யாரை விடவும் தபாலதிகாரியாக இருக்கும் தகுதி லிங்கனுக்குத்தான் இருக்கிறது என்று அரசு கருதியது. ஹில் என்பவரின் கடையின் ஒரு பகுதியில் தபாலகம் இருந்தது. அங்குதான் லிங்கனுக்கும் வேலை. லிங்கன் வேறு வேலையாக வெளியில் போகும்போதெல்லாம் தபாலகத்தை ஹில் கவனித்துக் கொள்வார்.

தபாலகத்தில், எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு வரும் கடிதங்களை, லிங்கனே பிரித்து வாசித்துக் காட்டுவார். தபால் அதிகாரிகயாக இருந்ததால் லிங்கனுக்குச் சில சலுகைகள் கிடைத்தன. லிங்கன் தமது சொந்தக் கடிதப் போக்குவரத்துக்குக் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. அதேசமயம், தபாலகத்துக்கு வரும் எல்லாச் செய்தித் தாள்களையும் படிக்கும் வாய்ப்பு லிங்கனுக்குக் கிடைத்தது. எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் லிங்கன் படித்த பிறகுதான் அது உரியவரைப் போய்ச் சேரும். சில சமயங்களில் பத்திரிகைகளை கடைக்கு வெளியே நின்று , சத்தம்போட்டு வாசிப்பார் லிங்கன். படிக்கத் தெரியாதவர்கள் லிங்கன் செய்திகள் வாசிப்பதை ஆர்வத்துடன் கேட்டுவிட்டுப் போவார்கள்.

''லிங்கன் தபாலகத்தைத் தன் தொப்பியில் வைத்திருந்தார்'' என்று சொல்வார்கள். அது உண்மைதான். லிங்கன் நியூ சேலத்துக்கு வரும் தபால்கள் அனைத்தையும் தமது தொப்பியில் வைத்துக் கொள்வார். இன்றைய காலத்தில் வருவதைப்போல அந்நாள்களில் பை பையாகத் தபால்கள் வராது. ஒரு நாளைக்கு ஐந்தாறு கடிதங்கள் வந்தாலே அதிகம். எனவே, லிங்கன் தன் தொப்பியில் தபால்களை எடுத்துக்கொண்டு போய் , உரியவர்களிடம் கொடுத்துவிடுவார்.

நெடுந் தொடர்

19

இவ்வளவு கஷ்டங்களுக்கு இடையில் ஒரு வழக்கறிஞராக வர வேண்டும் என்ற எண்ணத்தை மட்டும் லிங்கன் விடவில்லை . ஒரு பழைய புத்தகக் கடையில் ' பிளாக்ஸ்டோன்ஸ் கமெண்டரீஸ்' என்ற புத்தகத்தை ஏலத்தில் வாங்கினார். சில வாரங்கள்தான் அந்தப் புத்தகத்தை படித்தார். புத்தகம் முழுவதும் மனப்பாடமாகிவிட்டது லிங்கனுக்கு. இன்னொரு புத்தகத்தை ஒரு பழைய புத்தகக் கடையில் ஏலத்தில் எடுத்தார். அது விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வது எப்படி என்று அறிமுகப்படுத்துகிற புத்தகம் . அதைப் படித்து முடித்ததும், ஒப்பந்தப் பத்திரங்கள், உள்ளிட்ட சட்டம் சம்பந்தமான எல்லாப் பத்திரங் களையும் தாமே சுயமாக எழுதும் அளவுக்குத் தேர்ச்சி பெற்றுவிட்டார் லிங்கன். பதின்னான்கு மைல்கள் தூரத்திலிருக்கும் ஸ்பிரிங்ஃபீல்டுக்கு அடிக்கடி நடந்து போவார். சட்டப் புத்த கங்கள் எதையாவது இரவல் வாங்கிக் கொண்டு வருவார். வரும்வழியிலேயே நாற்பது ஐம்பது பக்கங்களைப் படித்தும் விடுவார்.

லிங்கன் பார்த்து வந்த போஸ்ட் மாஸ்டர் வேலையும் விரைவில் அவருக்கு இல்லையென்று ஆகிப் போனது. அந்த ஊருக்கு அதிகம் தபால்கள் வருவ தில்லை என்ற காரணத்தைக் காட்டி போஸ்ட் ஓபீஸை மூடிவிட்டது அரசு.

இண்டியானாவில் இருந்தபோது, நிலத்தை அளப்பது பற்றி ஓரளவுக்குக் கற்று வைத்திருந்தார் லிங்கன். அது இப்போது லிங்கனுக்குக் கை கொடுத்தது.

சங்கமன் மாவட்டத்தில் நிலம் வாங்கிக் குடியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருந்ததால், லிங்கனுக்கு உதவிசேவியர் வேலை கிடைத்தது. பீட்டர்ஸ்பர்க், பாத், நியூ பாஸ்டன், உரான் போன்ற நகரங்களில் நில அளவை வேலைகளைப் பார்த்தார் லிங்கன்.

இவ்வளவு கஷ்டமான வாழ்க்கைச் சூழலில் லிங்கனின் வாழ்வில் காதல் இருந்திருக்க வாய்ப்பிருக்கிறதா?

லிங்கனின் காதல் உண்மை என்று அடித்துச் சொல்கிறார்கள் சிலர். வேறு சிலர் கட்டுக்கதை என்கிறார்கள். கட்டுக்கதை என்று சொல்லப்படுகிற லிங்கனின் காதலில் ஒன்று ஆன்ரட்லெட்ஜ் என்ற பெண்ணின் மேல் லிங்கன் கொண்டிருந்த காதல்.

சாதாரண குடும்பத்தில் பிறந்து வறுமையோடு போராட்டம் நடத்திக் கொண்டிருந்தவர் லிங்கன். இயல்பாகவே பெண்களிடம் அவருக்கு கூச்சம் இருந்தது. நியூ சேலத்தில் இருந்தபோது. லிங்கன் ஒரு விடுதியில் தங்கியிருந்தார். ஒரு சமயம் அந்த விடுதியில் பெண்கள் சில பேர் வந்து தங்கியிருந்தார்கள் என்பதற்காக, அந்தப் பக்கமே போகாமல் யாரோ நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்தார். அப்படிப்பட்ட லிங்கனும் காதல் வலையில் விழத்தான் செய்தார்.

(மீட்பர் வருவார்...)

# ஒரு கோடையின் கனவு

சித்தாந்தன்



இன்னும் மீதமிருக்கும்
ஒரு கோடையின் கனவு
அந்தியின் நிழலுருக்களாய் அசைகின்றது

நடைவழியில் முகம் திருப்பிய
ஒரு முதியவனின் அகாலப் புன்னகை
தூக்கங்களில் மிதந்து வருகின்றது

'யாரோடும் யாருமில்லை'யென
யாரோ சுவரில் எழுதிய மகா வாக்கியங்கள்
ஞாபகக் காட்டில் புதராய் முளையிடுகின்றன
[illegible]
இலைகளை உதிர்த்துப் பூக்களைச் சூடும்

சிறுமியின் புன்னகை முகம்
வாழ்வைப் பெரும் கதையாகச் சொல்கிறது

யாரும் உலாவாத நிராதர வெளியில்
இரண்டு பட்ஷிகள்
பசியின்தருணங்களை மேய்கின்றன

இன்னும் இன்னுமாய்
நீளும் பாலையின் எரியும் வர்ணத்தோடு
வாழ்க்கை
ஒரு கொடுங்கனவின்
மூன்று காலத்தோடும்
முடிவிலியாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அற்ற சிரமதானம்?

## விழிப்புணர்வற்ற கிளிநொச்சி சமூகம்?

விகேளம்

வானம் பூமியைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. மாணவன் வானத்தைப் பார்த்துக் கொண்டு கற்க வேண்டியிருந்தது. பல வகுப்புக்களை வானத்தைப் பார்த்த வண்ணமே கற்று முடித்திருக்கிறான். வீட்டுக் கஷ்டம் ஒரு புறம் பாடசாலையின் வறுமை மறுபுறம் அவனது கல்வியில் தவணைப் பரீட்சை நடுவில் நாள் பரீட்சைகளும் நடத்திக்கொண்டிருந்தன. எப்படியோ அந்தக் குடும்பத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு அவனிடம் இருந்ததால் எல்லாக் கஷ்டங்களையும் தாங்கி தனது கல்வியை தொடர்ந்தான்.

சாதாரண தரம் முடிந்துவிட்டது. உயர்தரப் பாடசாலை, ஓரளவுக்கு வசதி வாய்ப்பு இருந்தாலும் அந்தப் பாடசாலையின் மாணவர் தொகைக்கு அந்த வசதி வாய்ப்பு போதியதாக இருக்கவில்லை. உயர் தரமும் படித்து முடித்துவிட்ட அவனுக்கு பல்கலைக்கழக கல்வி மட்டும் முற்றுப்புள்ளி வைக்காமல் அவ்வப்போது வெட்டுப்புள்ளிகளின் மாற்றத்தோடு அவனது பல்கலைக் கனவு மறைந்து தொங்கிக்கெண்டிருக்கிறது.

ஆரம்பங்களில் இருக்கக் கூடிய நடைமுறைச் சிக்கல்கள் முதற்கொண்டு ஒரு மாணவன் பல்கலைக்கு தெரிவாகும் வரையான எந்த ஏதுக்களும் வெளியாரின் (அரசின்) தலையீடுகள் நிறைந்தே காணப்படுகிறது. மாணவர்களுக்கு இதில் எந்த சுதந்திரமும் கிடையாது. இருக்கக் கூடிய பிரச்சினைகளை தீர்ப்பதை விட்டு மேலும் பிரச்சினைகள் உருவாக்குவதிலே அரசு அல்லது அது சார்ந்த அனைவரும் ஈடுபட்டு வருகின்றனர். இன்று இங்கையில் உயர் கல்வித்துறை மூன்று மாத காலமாக முடங்கிக் கிடக்கிறது. யார் பக்கத்திலாவது நியாயம் இருப்பதற்கான சூழல் இல்லாத நிலையில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூட திராணியற்று அரசு திக்குமுக்காடி வருகிறது.

இவ்வாறான குழப்பமான சூழ்நிலையில் ஒரு குழு கிளிநொச்சியில் மாணவர்களுக்கு பாடம் கற்பிக்க முன்வந்திருக்கிறது. அதற்காக கல்வி நிறுவனம் ஒன்றின் கிளையை அல்லது பகுதியை வேறு இடத்தில் உருவாக்குவதற்கு விழிப்புணர்வு ஊட்ட வேண்டும் என்பதுதான் வியத்தகு விடயம்.

சில நாள்களுக்கு முன்னர் வட பகுதிக்கு பயணம் மேற்கொண்டிருந்த கல்வி அமைச்சர் கிளிநொச்சியில் அமையவுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடம் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும் என்று சொல்லிச் சென்றாராம். இதனால் விழிப்படைத்த கிளிநொச்சி கல்விச் சமூகம் அதற்காக ஒரு மாநாடு நடத்தி அதில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கக் கூடிய உயர்தர மாணவர்களுக்கு கிளிநொச்சியில் பொறியியற் பீடம் அமைவது தொடர்பில் விழிப்புணர்வூட்ட எண்ணியதாம்.

இதற்காக கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கக் கூடிய பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்கள் உள்ள பாடசாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் இணைத்து பெரும் எடுப்பிலான சிரமதானப் பணியொன்றை அறிவியல் நகர் பகுதியில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.




கல்வி அமைச்சர் கிளிநொச்சி மாவட்டத்தில் பொறியியற் பீடம் அமைப்பதற்கு மக்கள் தடையாக இருப்பர் என்றோ, மாணவர்கள் கல்வி கற்க வரமாட்டார்கள் என்றோ எண்ணி தனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தினாரா அல்லது கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாறான உயர் கல்வி நிறுவனம் அமைவதை ஏளனம் செய்தாரா என்பது பற்றித் தெரியவில்லை.

ஆனால் கிளிநொச்சி மாவட்ட கல்விச் சமூகம் என்ற போர்வையில் அந்த சமூகத்தையே சிலர் ஏளனம் செய்துள்ளனர். இது தான் உண்மையான நிலைப்பாடு.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் திருநெல்வேலிப் பகுதியில் அமையும் போது அதற்குப் பல எதிர்ப்புகள் கிளம்பியிருந்தன. பலரிடையே முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. இந்த முரண்பாட்டுக்கும் எதிர்ப்புக்கும் தக்க காரணம் உண்டு என்பதை இன்று சிலர் உணர்ந்திருக்கிறார்கள். சிலர் உணர்ந்தும் இனியென்ன ஆவது என்பதால் அடங்கியிருக்கிறார்கள்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் திருநெல்வேலியில் ஒரு விவசாய நிலப் பரப்பில் உருவாக்கப்படுவது தேவையற்ற ஒன்று. இது வேறு பின்தங்கிய இடத்தில் உருவாக்கப்படுமானால் அந்த பின்தங்கிய கிராமமும் வளர்ச்சி அடையும். ஒரு விவசாய உற்பத்திக் கிராமமும் காப்பாற்றப்படும் என்பதே அன்றைய முரண்பாட்டுக்குக் காரணம். ஆனால் சிலரது சுய கொள்கைகளுக்காகவும் சௌகரியத்துக்காகவும் அந்த நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி தோற்றுப்போய்விட்டது.

குறித்த பல்கலைக்கழகத்தை தீவகப் பகுதியிலோ வட மாகாணத்தின் மையப் பகுதியான மாங்குளத்திலோ அமைக்கப்பட்டிருந்தால் இன்று அந்த இடங்கள் வளர்ச்சி அடைந்திருக்கும் அதே வேளை, திருநெல்வேலியும் பச்சைப்பசேலென்று இருந்திருக்கும்.

உயர் கல்வியைப் பெறுவதற்கு மாணவர்களைத் தேடி கல்வி நிறுவனம் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இலங்கையிலுள்ள இலவசக் கல்வித் திட்டத்தில் அப்படி ஒரு நடவடிக்கை தேவையும் இல்லை.

க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் தகுதி அடிப்படையில் வெவ்வேறு பல்கலைக்கழகங்களுக்கு தாம் சார்ந்த கற்கைநெறிகளுக்கு ஏற்றவாறு தெரிவாகின்றனர். விரும்பியோ விரும்பாமலோ அந்தந்தப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்க முனைகின்றனர். இந்த இழுவிசை ஒரு கல்விக் கூடம் எங்கிருந்தாலும் நகரக் கூடியதே.

ஆனால் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் அந்த நிலை மாறுபட அதன் இரண்டு பீடங்களை கிளிநொச்சியில் நிறுவுவது என தீர்மானிக்கப்பட்டது. விவசாயம் சார்ந்து கிளிநொச்சி மாவட்டம் அமைவதால் விவசாய பீடத்தை கிளிநொச்சிக்கு மாற்ற முடிவு செய்யப்பட்டது. அது போல புதிதாக ஆரம்பிக்கப்படும் பொறியியல் பீடத்தையும் இடவசதி கருதி கிளிநொச்சியில் அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டது.

கிளிநொச்சியில் பீடங்களை நிறுவி மாணவர்களை அங்கு கல்வி கற்க தேர்வு செய்தால் எவரும் அங்கு வரமாட்டார்கள். பதிலாக வேறு பல்கலைக்கழகங்களுக்கே செல்ல வேண்டுமென போராடுவார்கள். பீடங்களை அமைப்பதற்கு முன்னரே ஏன் இவர்கள் கருத வேண்டும். பீடங்களுக்குத் தேவையான அனைத்து வசதியும் செய்துகொடுத்துவிட்டு அங்குதான் படிக்க வேண்டும் என்றால் மாணவர்கள் அதை மறுக்கமாட்டார்கள்.

விவசாய பீடம் கிளிநொச்சியில் இருக்க வேண்டியதன் அவசியம் அந்தத் துறை மாணவர்களுக்கு சாலவே தெரியும். அவர்களுக்கு விழிப்புணர்வூட்டித் தான் அனுமதி வழங்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது.

போரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு வகை நிலைப்பாட்டில் மக்கள் உள்ளனர். அவர்கள் மத்தி[illegible] அபிப்பிராயங்களுக்கு மேலாக சொந்த மனோ நிலைகளை



> கிளிநொச்சியில் முன்னணி பாடசாலை ஒன்றின் அதிபரிடம் சிரமதானப் பணி தொடர்பாக உதயன் செய்தியாளர் வினவிய போது அதனை உறுதிப்படுத்திய அவர் 'இது அரசியல் கலப்பற்றது' என கேட்காமலேயே பதிலளித்திருந்தார்.

திணிக்க முற்படுகின்றனர். எதிர்காலத்தில் தங்கள் நிலைத்திருப்புக்காக மக்கள் சமூகத்தை கீழ்மைப்படுத்துவது அநாகரிக அரசியல் செயற்பாடாகும்.

வன்னியில் உள்ள பாடசாலைகளில் எவ்வளவோ பற்றாக்குறைகள் இருக்கின்றன. கற்றலுக்கான அடிப்படைத் தகுதி கூட இல்லாமல் பாடசாலைகள் இயங்குகின்றன. மாணவர்கள் மர நிழல்களிலும் பாவனைக்குதவாத தளபாடங்களில் இருந்தே கல்வி கற்க வேண்டிய அவல நிலை காணப்படுகிறது.

மக்கள் மீது அல்லது எதிர்கால கல்விச் சமூகத்தின் மீது அக்கறை கொள்ளக்கூடிய புத்திஜீவிகள், அரசியல் வாதிகள் ஏன் இந்தக் குறைகளை காணாமல் இருக்கின்றனர். ஏன் வெளியில் சுட்டிக் காட்ட அஞ்சுகின்றார்கள். இதற்கும் காரணம் இருக்கின்றது. எதிர்க் கதைகள் கதைத்தால் இருக்கைகளுக்கே ஆபத்தாகிவிடுகிறது.

குறைபாடுகளை நிறைவேற்றிக் கொடுத்தால் மாணவர்கள் திறமையான கல்விமான்களாக மாறுவார்கள். சிறந்த பெறுபேற்றைப் பெறுவார்கள். உயர் கல்வி தகுதிகளை தட்டிச் செல்வார்கள். அதன் பின் தாமாகவே தாம் விரும்பும் துறைகளில் கல்வியைத் தொடர்வார்கள். இதற்கு அரசியல் வாதிகள் வழிகாட்ட வேண்டிய விழிப்புணர்வூட்ட வேண்டிய அவசியம் தான் என்னவென்றே புரியவில்லை. இருட்டுக்குள் கறுப்புப் பூனையைத் தேடும் அரசியல் வாதிகள் வெளியில் வந்து வெளிச்சத்தை அவதானிக்க வேண்டும். மக்களின் தேவைகளை என்னவென்று புரிந்துகொள்ள வேண்டும். தமது அரிசியல் நோக்கங்களுக்காக தலை அசைக்கும் மந்தைகளாகவே இனியும் மக்களை கருதிக்கொள்ளக்கூடாது.

கிளிநொச்சியில் இராணுவத்தினரின் அதிகார ஆளுகையும் அரசியல் கட்சிகள் சில வற்றின் எதேச்சதிகாரமுமே தலைதூக்கியுள்ளன.

நிர்வாக செயற்பாடுகளில் மக்களுக்காக பணியாற்றுபவர்களும் அவர்களின் கருத்துகளுக்கெல்லாம் தலை அசைப்பதும் கவலை தரும் விடயம்.

மாணவர்களுக்கு போதிய வசதி இல்லை. கற்றல் உபகரணம் இல்லை. கட்டட வசதி இல்லை. தொழில்நுட்ப பொழுதுபோக்கு வசதிகள் இல்லை என்பதற்காக இவற்றைக் கேட்டுப் பெறுவதற்கு யாராவது போராட்டம் நடத்த முன்வருவார்களா அல்லது அந்தப் போராட்டத்துக்கு இவ்வாறான குறு நிலை அரசியல் வாதிகள் தலைமை வகிப்பார்களா என்பது கேள்விக்குரியதே.

அரசியல் நோக்கமற்ற இதய சுத்தியுடன் இவர்கள் இந்த சிரமதானப் பணியை முன்னெடுத்திருந்தால் அதை நாம் வரவேற்கிறோம். இந்தப் பணியோடு நின்றுவிடாமல் வன்னியில் இருக்கக் கூடிய பாடசாலைகளையும் சென்று பார்வையிடுங்கள். அங்கு ஒவ்வொரு மாணவனும் ஆசிரியர்களும் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகளை அவதானியுங்கள். அங்கு அடிமட்டப் பிரச்சினைகளை முதலில் தீர்த்து வையுங்கள். பிள்ளைகள் தமது கல்வியை சீராகப் பெற்று பல்கலைக்கு தகுதி பெறுவார்கள். அப்போது நீங்கள் எதிர்பார்க்கும் விழிப்புணர்வுக் கப்பால் பல்கலையில் மாணவர்கள் நிரம்பி வழிவார்கள். அப்போது உங்கள் செயல் தானாகவே ஜெயித்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் - முதியோர் அவதானிப்புக்கள் அவசியம்

**மைதான ஓட்டப் போட்டிகளிலும் தொடங்குதல் , நிறைவு செய்தல் போன்றவையே வெற்றியைத் தீர்மானிப்மானிக்கின்றன அதைப்போன்றதே இதுவும். வாழ்வை முறையாக தொடங்கி நிறைவாக முடிவுறுத்தலே அறிவுடைமையாகும்.**

மருத்துவர்
இ.சிவசங்கர்

## சிறுவர் நலம்

சரியான தொடக்கம் நலமான பயன்மிக்க வாழ்வை நல்கும். வாழ்வு சரியான தொடக்கத்துக்கான உள்ளார்ந்த உந்துதலைப் கொண்டுள்ளது. அந்த உள்ளார்ந்த வளர்ச்சி உந்துதலுக்கு அமைவான புறச்சூழ்நிலைகள் அமைக்கப்பட்டு வழங்கப் பட்டால் முறையான தொடக்கம் வளர்ச்சி உறுதிப்படுத்தப்படும். மனித உயிரி தனக்கான வளர்ச்சித் திறனையும் உந்துதலையும் கொண்டிருந்தாலும் புறச்சூழ்நிலைகள் அதற்கு சாதகமாக அமையாவிடில் வளர்ச்சிதடைப்படும். கோணலானவளர்ச்சியும் ஏற்படலாம்.

இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில் வளர்ச்சிக்கான புறச்சூழ் நிலைகள் வழங்கப்படுவதே வளர்ச்சியை உறுதிப்படுத்த தேவையானதும் போதுமானதும் ஆகும். ஆகவே வளர்ச்சி விருத்தி தேவைகள் எவையென்பதை அறிந்துகொள்ளல் சரியான புறச்சூழ்நிலைகளை வழங்குவதற்கு உதவிசெய்யும்.

வளர்ச்சி விருத்தி தேவைகள் வழங்கப்பட வேண்டிய காலகட்டங்களும் அறிந்து கொள்ளப்பட வேண்டியது முக்கியம். சிறுவர் பிராயத்தில் வெவ்வேறு காலகட்டத் தில் வெவ்வேறு வளர்ச்சி, விருத்திகள் ஏற்படுதலால் அந்தந்த வளர்ச்சிக்குரிய தேவைகள் அந்தந்த காலகட்டங்களில் விளங்கப்படுதலே வளர்ச்சி, விருத்தியை ஏற்படுத் தும் காலத்துக்கு முந்திய, பிந்திய வழங்கல் பயனைத் தராது. எனவேதான் சர்வ தேச ரீதியில் சிறுவர்களுக்கான தேவைகள் எந்தச் சந்தர்ப்பங்களிலும் வழங்கப்படு வது உறுதிப்படுத்தப்படுகின்றது. பௌதிக உடல் வளர்ச்சிக்குத் தேவையான உணவுப் போசாக்குகள், ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்கும் அதனோடி ணைந்த புத்தி அறிவு வளர்ச்சிக்கும் தேவையானது. வெவ்வேறு வகையான போசாக் குகள் வெவ்வேறு காலகட்டங்களில் சிறுவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். போசாக்கு கூறுகளையும் அவை அதிகளவில் வழங்கப்பட வேண்டிய காலகட்டங்களைத் தெரிந்து நடந்துகொள்வது ஆரோக்கிய உடல் வளர்ச்சியை உறுதிப்படுத்தும்.

உடல் திறன் விருத்திகளுக்கு ஆரோக்கிய உடல் இன்றியமையாததாகும். தசை, எலும்பு, நரம்பு என்பனவும் ஏனைய உயிரியல் விடயங்களும் உச்ச தொழில்பாட்டு நிலையில் இருத்தல், உடல் திறன்கள் விருத்தியடைவதற்கு உதவியளிக்கும். இங்கு உடல் திறன்கள் எனும்போது நடத்தல், தமது கையால் உணவருந்துதல், வாகனம் ஓட்டுதல் போன்றவை அடங்கும். மூளையின் நல் உயிரியல் செயற்பாட்டில் தங்கியுள்ள கற்றல், அறிவு வளர்ச்சி என்பனவும் குறிப்பிட்ட காலகட்டங்களில் கிடைக்கப்பெறும் போசாக்கில் தங்கியுள்ளது. சிறுவயது களில் மூளைவளர்ச்சிக்குத் தேவைப்படும் போசாக்குகள் கிடைக்கப் பெறுதலே மாணவப் பருவத்தில் கற்றல், அறிவு விருத்தி பரிணமிக்க அவசியமாகும்.

உடல் திறன் விருத்திகளுக்கு ஆரோக்கியமான உடலுடன் திறன் பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெறுதலும் அவசியமாகும். உடல் திறன் விருத்திகள் தொடர் பயிற்சிகளினாலேயே சாத்தியமாகின்றது. நடத்தல், உணவருந்துதல், தலைவாருதல் போன்ற விருத்திகளுக்குப் பயிலுதலுக்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெறுதல், வழங்கப்படல் என்பது அவசியமாகும்.

போசாக்கான உணவு, பயிற்சி சந்தர்ப்பங்களுடன் தூண்டல் காரணிகள் அமைதல், உச்ச திறன் விருத்தியை ஏற்படுத்தும். கல்வி கற்போருடனான சேர்க்கை, கற்றலுக் கான தூண்டலையும் இளைஞர்கள் மட்டத்தில் எதிர்பாலோரின் உறவு, பிரசன்னம் உயர் செயற்பாட்டுத் தூண்டலையும் ஏற்படுத்துகின்றது. மனவெழுச்சி விருத்திக்கும் தூண்டலை ஏற்படுத்தும் உறவுகள், சந்தர்ப்பங்கள் அவசியமாகின்றன.

குழந்தைகள் மூன்று தொடங்கி ஐந்து வயது காலங்களில் உள்ளார்ந்த தூண்டலின் விளைவாகவும் பெற்றோர்களின் நடத்தை முன்மாதிரிகளாலும் காய்கறி வெட்டல், வீடு பெருக்குதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவர். தகுந்த வாய்ப்புக்களுடன் உற்சாகப்படுத்தப்பட்டால் இந்தச் செயற்பாடுகள் வளர்ச்சியடையும். மேலும் இந்தச் செயற்பாடுகளில் சிறுவருடன் பெற்றோரும் மூத்தோரும் சேர்தல் திறன் விருத்தியை நிரந்தரமாக்கும்.

சிறுவர்களிடம் கேட்டு கற்றலை விட பார்த்து கற்றலே அதிகமாக நிகழ்கின்றது. ஒத்த பால் பெற்றோரின் செயற்பாடுகளையும் ஆசிரியர்களின் செயற்பாடுகளை யும் சிறுவர் அபிநயத்தல் காணக்கூடியது. இத்தகைய அபிநய செயற்பாடுகள் நடத்தை உருவாக்கத்தை ஏற்படுத்தும். பிள்ளைகளிடம் ஏற்பட விரும்பும் நடத்தைகளை மூத்தோர் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை இது காட்டு கின்றது. கைகழுவி உணவுண்ணல், பாதணியணிந்து மலசலகூடம் செல்லல் போன்ற நடத்தைகளை மூத்தோர் கடைப்பிடிப்பதால் சிறுவர்களிடத்திலும் அந்த நடத்தையை ஏற்படுத்தலாம். இந்த நடத்தை உருவாக்க தத்துவார்த் தத்துக்கு "குரங்குகளும் தொப்பி வியாபாரியும்" கதை உதாரணமாகலாம்.

வெவ்வேறு வயது மாற்றங்களுக்கேற்ப வெவ்வேறு முன்னுதாரண மாதிரிகள் அமைவர். ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்குப் பெற்றோரும் குடும்ப மூத்தோரும் ஆறு வயதிலிருந்து பத்து வயதுவரை ஆசிரியர்களும் பத்து வயதுக்கு மேற்பட்ட இளமைக் காலத்தில் நண்பர்கள் எனப்படும் சகபாடிகளும் நடத்தை முன்மாதிரிகளாக அமைவர். அத்துடன் இளைஞர்களிடத்தில் அக்காலத்தில் பிரபல்யம் பெற்றோரும் (நடிகர்கள், விளையாட்டு வீரர்) நடத்தை முன்மாதிரிகளாவர். இதனாலேயே சினிமா, தொலைக்காட்சி தொடர் நாடகங்களின் செல்வாக்கை எமது சமூகத்தின் நடைஉடை பாவனைகளில் காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே சிறுவர்களின் வாழ்வுச் சூழலில் தவறான நடத்தை முன்மாதிரிகள் பிரசன்னமற்றிருத்தல் அவசியமாகும்.

சாதகமான சூழ்நிலைகள் உள்ளார்ந்த தன்மையை வெளிக்கொணருகின்றன. நல்ல முன்மாதிரிகள் நல்நடத்தை எண்ண விருத்திக்கு வழிவகுக்கின்றன. அதே வேளையில் பாதகமான சூழ்நிலைகள் வளர்ச்சிகளை தடைப்படுத்துவதுடன் நிரந்தர பாதிப்புக்களையும் ஏற்படுத்திவிடும். வீட்டு வன்முறைகள், போர்ச் சூழல் சடுதியான இழப்புக்கள், இறப்புக்கள், நெருக்கீடுகள், நிரந்தர உளப்பாதிப்பை ஏற்படுத்திவிடும். பாதகமான சந்தர்ப்பங்களை சிறுவர்கள் சந்திக்காத சூழ்நிலைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். வாழ்வை சரியான ஆரோக்கியமான வகையில் வாழ்வதற்குரிய தகுதி, திறனை பெற்றுக் கொள்ளும் காலமாக சிறுவர் பராயம் கண்டுகொள்ளப்பட வேண்டும். இந்தப் பராயத்தில் அனுபவிக்கும் கசப்பான விடயங்கள் நிரந்தர மனப்பதிவை ஏற்படுத்தி வாழ்வை வளமாக்க முடியாததாக்கிவிடும்.

ஆரோக்கியமான அத்திபாரத்துக்கு வளர்ச்சி, விருத்திகளுக்கான தேவைகள் வழங்கப்படுவதுடன் நிரந்தர பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய பாதகமான சூழ்நி லைகள் தவிர்க்கப்பட வேண்டும். எம்மிடையே வந்துதிக்கும் புதிய உ[illegible] உறுதிப்படுத்தலை எமது கடமையாக பொறுப்பாகக் கண்டுகொள்வோம்.

நல்லதோர் ஆரம்பம் நல்குமே ஆனந்தம்..

## மூத்தோர் நலம்

முதிர்வு காலம் உடல் இயலாமைக்குரிய காலமாகக் கூறப்பட்டாலும் இது அக செயற்பாட்டுக் காலமாக கண்டுகொள்ளப்பட வேண்டும். வாழ்வின் அனுபவங்களை அசைபோட்டு முழுமையாக்கி நிறைவாக்கும் காலமாகும். உடல் தேவைகள், உந்தல்கள் குறைந்து ஓரளவு உளபதனிலையும் ஏற்பட்டு ஆத்ம தேடல் முனைப்பு பெறும் காலமாகும். வாழ்வோட்டத்தில் மிதந்து வந்தோமா மூழ்கித் தத்தளித்தோமா என்பதற்கமைய முதிர்வுகால செயல்முறைகள் வேறுபடும்.

வாழ்வில் பற்று வைக்கும்போது இறுகப்பிடித்தல் நிகழும். வாழ்வை இறுகப் பிடித்தலின் விளைவாக மூழ்கித் தத்தளித்தல் தவிர்க்க முடியாதது. இத்தகைய அனுபவங்களுக்கூடாக முதிர்வு காலத்தை அடைந்த வர் விரக்தியடைந்து சோர்வு, மூர்க்கம் போன்ற மாறுபட்ட உளநிலையில் ஒன்றை அனுபவிக்கலாம். இத்தகைய உள நிலைகள் ஆரோக்கியமான வகையில் கையாளப்பட்டால் உடல் மரணத்தை, உலக விடலை மனச்சாந்தத்துடன் ஏற்றுக் கொள்ளலாம். மறுதலையாக இந்த விரக்தியுணர்வுகள் கையாளப்படவில்லையாயின் மரணத்தை கண்டு பயம் கொள்ளல் நிகழும். இது முதிர்வு காலத்தை நிம்மதியற்றதாக்கிவிடும். அத்துடன் கடந்து வந்த வாழ்வு முழுவதுமே 'பயனற்றது' ஆகிவிடும்.

இடைக்காலத் தற்காலிக உலகியல் காலத்தைப் பற்றிப் பிடித்தல் விரக்தியையே விளைவாக்கும்.

அனைத்துப் புதிர்களிலும் ஆழமான புதிராக -விடைகாணாத புதிராக -இருப்பது பிரபஞ்ச இருப்பும் அதன் பயன்படு நோக்கமுமாகும். இருப்பின் அர்த்தம் அவிழ்க்கப்பட வில்லையாயினும் எமது மனித வாழ்வின் இலக்கும் பயணப்பாதையும் ரிஷிகளினாலும் ஞானிகளாலும் வெளிப்படுத்தப்பட்டுவிட் டது. நாம் அந்தத் திசையில் பயணிக்காது நமக்கு நாமே அல்லல்களைத் தேடி அலைக்கழிகி றோம். வாழ்வு வேதனையாகி இலக்கு அடை யப்படாமலே இறப்பைச் சந்திக்கின்றோம்.

இங்கு கவனிக்கப்பட வேண்டியது இலக்கு அடையப்படாமல் விடப்படுவது மட்டுமல்ல. இலக்கை அடைவதற்கான பய ணப் பாதையில் பயணிக்காமையும் ஆகும். ரிஷிகள் ஞானிகளால் முன்வைக்கப்பட்ட "வாழ்வியல் பாதை" இலக்கை அடைவ தற்கு மட்டும் பயன்படுவது அன்று. உலகியல் வாழ்வில் அல்லல்படாத ஆனந்த நிலையை எமக்கு அது தருகின்றது. ஆற்றில் மிதந்து செல்லலுக்கு ஒப்பான வாழ்வில் நகர்ந்து செல்லும் அணுகு முறையை, பொறி முறையை ரிஷிகள் தந்துள்ளனர்.

இந்தப் பிறவியின் தொடக்கம் பருவமா கிய சிறுவர் பராயமும் நிறைவு பருவமாகிய முதிர்வு (முதுமை) பராயமும் இங்கு ஆராயப்பட முனைகின்றது. மைதான ஓட்டப் போட்டிகளிலும் தொடங்குதல் , நிறைவு செய்தல் போன்றவையே வெற்றி யைத் தீர்மானிப்பதை போன்றதே இதுவும். வாழ்வை முறையாகத் தொடங்கி நிறைவாக முடிவுறுத்தலே அறிவுடைமையாகும்.

வாழ்வு முறையாக தொடங்குவதற்கு பெற்றோரும் சமூகமும் பொறுப்பாளர் ஆகின் றனர். வாழ்வில் சரியான திசையில் முறையாக பயணித்து நிறைவான முடிவை அடைவதில் அவரவர் பொறுப்பாளர் ஆகின்றனர்.

பிரபஞ்ச முழுமையிலிருந்து விலகுதலா கிய உடலில் பிறப்புடன் தொடங்கி அதேமுழுமையில் சங்கமிக்கும் உடலின் மரணத்துடன் முடிவுறும் மனித வாழ்வானது அமைதியும் ஆனந்தமுமான பயணமாகும்.

விட்டுவிடும் நிர்ப்பந்தத்துக்குரியதை நிரந்தர மாக்கலுக்கான முயற்சி ஈற்றில் சோர்வையே விளைவாக்கும். இவை எல்லாம் ஆரோக்கிய மற்ற முதிர்வு காலத்தை ஏற்படுத்தும்.

வாழ்வில் மிதந்து நகர்ந்தவரின் நிலை வேறாகும். எதிலும் பற்றுக் கோடில்லாது, விட்டுவிடும் உணர்வுடனே உலகியலில் இருந்தவர் மனச்சாந்தத்துடன் முதிர்வுகாலத்திற் குள் நகர்வார். உண்மையில் இத்தகையோ ருக்கே "முதிர்வு " காலமாக இது அமையும். இத்தகையோருக்கு இக்காலத்தில் முதிர்வு நிகழ்தல் சாத்தியமாகும்.

உடல் இச்சைகள் பலம் கெட்ட நிலையில், உளத்தேவைகளின் உத்வேகம் குறைந்த நிலையில் ஆத்மஉணர்வு மேலோங்கி முனைப்பு பெறும் "நான்" என்பது என்ன?"நானுக்கும்" இப்பிரபஞ்சத்திற்குமான உறவுப் பிணைப்பு என்ன-? என்ற கேள்விகளுடனான தேடல் உள்ளார்ந்து நிகழும். இதன் போது "நான் " நானாதல் என்ற வளர்ச்சித் தவிப்பு ஏற்படும் முடிவில் "நான் நானாவதுடன்", பிரபஞ்சத்துடனான மீள்இணைப்பு நிகழும் இந்நிலையில் உடல் மரணமென்பது வெறுமனே "உடலைவிடல்" என்றாகிவிடும். அந்நிலையில் மரணஉணர்வு அற்று, விடுபடல், கடத்தல் உணர்வே ஏற் படும் . சோக்கிரட்டீஸ் இவ்வுணர்வுடனேயே உடல் மரணத்தை எதிர்கொண்டார்.இதையும் தாண்டிய உயரியநிலையே ஞானிகளின் உடல்விடலாகிய "சமாதி" யாகும்.

"நான்" நானாக வளர்ச்சியடைந்து, பிரபஞ்ச முழுமையுடன் "இணைதல்"அல்லது கலத்தலே வாழ்வின் உயரிய அடைவாகும்.

முதிர்வு காலத்திலாவது மேற்கூறியது நிகழ் வதை உறுதிப்படுத்த முனைதலே இடைப் பட்ட வாழ்வின் கவனமாக அமையவேண் டும். இத்தகைய நோக்கில் கவனத்தை குவிப் பது நிரந்தர பயனாகும்

எமது சமுதாய வாழ்வுக் கட்டமைப்பில்



சந்நியாச ஆச்சிரம காலமே முதிர்வு காலமாகும். இவ்ந்த முதிர்வு காலத்தில் முழுமைபெறலை உறுதிப்படுத்தலுக்கான தயார்நிலையை பெறுதலே கிரகஸ்த, வானப்பிரஸ்த ஆச்சிரம கால வாழ்வியல் பயணமுறையாக அமைய வேண்டும்.

மேற்கூறிய ஆச்சிரம காலங்களில் எமது வாழ்வை முறைப்படுத்த சில தெளிவுகள் பயனுடையதாக அமையும். அவையாவன-

1. பிரபஞ்சத்தின் நிலைத்த நிலையற்றதுகளின் வேறுபாட்டு அறிவு.
2. கிரகஸ்த, வானப்பிரஸ்த ஆச்சிரமங்கள், சந்நியாச ஆசிரமத்துக்கு எம்மை தயார்ப்படுத்தும் வாழ்வு கட்டமாகும் என்பதை உணர்ந்துகொள்ளல்.
3. வாழ்வின் இன்ப நுகர்ச்சியும் துன்பங்களை தாங்குதலும் எமது அங்கலாப்புகளை அமைதிப்படுத்தும் கருவிகளாக இருப்பதை உணர்ந்துகொள்ளல்
4. எமது வாழ்வில் அமையும் உறவுகளும் சமூக நிலைகளும் நிறைவை நோக்கிய எமது பயணத் துக்கு எம்மைத் தயார்படுத்தும் ஒத்துழைப்பு காரணியாக தொழிற்படுவதை விளங்கிக் கொள்ளல்
5. வாழ்வு என்பது அனுபவித்தல் அல்லது விலகுதல் ஊடாக "கடந்துசெல்லலை' பொறிமுறையே' என்னதைக் கற்றுக்கொள்ளல்.

இத்தகைய தெளிவுகளை நாம் பெற்று கிரஸ்த வானப்பிரஸ்த காலத்தில் வாழ்வை நகர்த்தும் போது சந்நியாச காலத்துக்குள் தயார்படுத்தப்பட்ட தகுதியுடன் நுழைதல் சாத்தியமாகும். அத்தகைய நிலையில் நான் நானாதலும் பிரபஞ்ச முழுமையுடனான இணைவு கலத்தலும் தவிர்க்க முடியாததாகி விடும். ஆரோக்கியமான தயார்படுத்தலுடன் சந்நியாச கால கட்டத்துக்குள் நுழையாதவர்கள் இந்தச் சந்நியாச காலத்தில் தயார்ப்படுத்தல் பக்குவப்படுத்தலில் முழு வீச்சாக ஈடுபடுவதனூடாக நிறைவு நிலையை உறுதிப்படுத்தலாம். இதற்கு உலகியல் வாழ்வு ஆனது விட்டு விடும் நிர்ப்பந்தத்துக்குரியது [illegible] எமது இணைப்பே நிலையானது என்பதையும் உள்ளார்ந்து விளங்கிக் [illegible] மனிதர்கள் ஒவ்வொருவரும் இந்தப் பயண நிறைவுக்கான உள்ளார்ந்த சத்தியப்பாட்டுடனேயே இருக்கிறோம் என்பது உண்மையாகும். அதை சாத்தியப்படுத்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணதாசனைக் கவர்ந்த யாழ்ப்பாணத்து கவிதை....

ரம்யன்

ஆயிரக்கணக்கான சினிமாப் பாடல்களையும் பொதுப்பாடல்களையும் தனிப் பாடல்களையும் எழுதிப் புகழ் பெற்றவர் கவிஞர் கண்ணதாசன். ஆரம்ப காலத்தில் வெறும் சினிமா பாடல் எழுதுபவர்தானே என்று நகையாடியவர்களும் கூட பிற்காலத்தில் அவர் ஒரு பெரும் கவிஞர் என்பதை ஒப்புக் கொண்டார்கள். சூழ் நிலைக்கும் காலத்துக்கும், சந்தர்ப்பம் அறிந்தும் பாடல்களை உருவாக்குவதில் மட்டுமல்ல ஏற்கனவே உருவாக்கப்பட்டுவிட்ட இசைக்கு ஏற்பவும் அவர் பாடல் யாப்பதில் வல்லவர்.

யேசுகாவியம் கவிஞரின் சிறந்த படைப்புக்களில் ஒன்று என்பார்கள்.

கவிஞர் நோய்வாய்ப்பட்டு அமெரிக்காவில் சிகிச்சைக்குச் சென்றிருந்தபோது யாரோ ஒருவர் கவிஞரை மகாகவி பாரதியுடன் ஒப்பிட்டு பேசினார்களாம். அதை மறுத்துப் பேசிய கவிஞர் நான் எழுதியவைகளின் எண்ணிக்கை அதிகம், பல பீரோக்களில் அடுக்கி வைக்கலாம். ஆனால் அவை அனைத்தும் மகாகவி பாரதியின் கையடக்க நூல் ஒன்றுக்கு ஈடாகமாட்டா என்று கூறினாராம்.

கவிஞர் கண்ணதாசனைப்பற்றி கண்டதும் கேட்டதும் என்ற நூலில் இரமா. கண்ணப்பன் பின்வரும் தகவலை வெளியிட்டுள்ளார்.

காலைப்பொழுது, கவிஞரைச் சந்திக்கக் காத்திருந்தவர்களில் இலங்கையைச் சேர்ந்த ஒரு பெரியவரும் நீண்ட நேரத்துக்கு முன்னரே வந்து காத்திருந்தார். அழுக்கேறிய ஜிப்பாவும் வேட்டியும் அணிந்திருந்தார்.

கைப்பையில் இருந்து நோட்டுப் புத்தக தாளளவில் நான்கு பக்கம் அச்சிடப்பட்ட தாள்களைத் தந்து கவிஞரிடம் காட்டும்படி கேட்டுக் கொண்டார். தமிழ் விடுதூது என்ற தலைப்பில் கவிதை அச்சிடப்பட்டிருந்தது. நான் சென்று அதை கவிஞரிடம் கொடுத்தேன்.

கட்டிலில் ஒருக்கனித்து படுத்தபடிஅய அதைவாங்கி இப்படியும் அப்படியுமாகப் பார்த்துவிட்டு விரித்துப் படிக்கத் தொடங்கியவர் ''ஆகா'' என்று வியந்து போனவராய் எழுந்து உட்கார்ந்தார். ''இந்தக் கவிஞரை உடனே கூப்பிடு' என்றார். அவர் வந்ததும் வணங்கி அமரச் செய்து தாமும் அமர்ந்தார். இலக்கியத்தைப் பற்றி இருவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு 'நெய்த நூலினும் தைத்த நூல் அதிகம்'' என்று பாடி இருக்கிறீர்களே ரொம்பவும் நல்லா இருக்கு. தரித்திரத்தை உவமிக்க இதைவிட வார்த்தைகளே இல்லை என்பதுபோல் இருக்கிறது. அற்புதம் அற்புதம் என்று அவர் கைகள் பற்றிக் கொண்டு பாராட்டினார்.

''என்னய்யா பாடிவிட்டேன், என் வாழ்க்கை அப்படி.. அதைத் தான் பாடி இருக்கிறேன். என்ன பாடி, என்ன பிரயோசனம். தமிழ் சோறு போடாது என்று தெரிந்தும் அதன் மீதுள்ள காதலால் இயற்றாமல் இருக்க முடியவில்லை என்று தன் ஆதங்கத்தை யாழ்ப்பாணத் தமிழில் ரசிக்கத் தகுந்த ஓசையில் வெளியிட்டார்.

பிறகே தானொரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப் புலவர் என்றும் தன் மகன் அண்ணாமலை சர்வகலாசாலையில் இசைத்துறையில் பயிலுகிறான் என்றும் அவனது இறுதித் தேர்வுக்குப் பணம் கட்ட இயலாமைக்கான வறுமை நிலையையும் நாணி நாணி விளக்கினார்.

அதற்கென்ன ''நான் தருகிறேன்' என்று கூறிய கவிஞர் அவர் சொன்ன தொகையை விடவும் அதிகமாகத் தந்து உபசரித்து அனுப்பிவைத்தார்.

புவியரசர்கள் மட்டுமே கவியரசர்களுக்குப் பரிசளித்துக் கௌரவித்ததை இலக்கிய வரலாறுகளில் படித்ததறிந்த எனக்கு ஒரு கவிஞர் இன்னொரு கவிஞருக்கு அதுவும் அவர் கவிதையைப் பாராட்டிப் பரிசளித்தது மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாகும்.



கவிஞர் அந்தக் கவிதையை மறந்ததே இல்லை. தான் கலந்து கொள்ளச் செல்லும் இலக்கியக் கூட்டங்களில் எல்லாம் தனக்குப் பிடித்த கவிதையின் வரிகளைக் கூறும் போது தமிழ் விடுதூது கவிதை வரிகளைக் கூற மறப்பதே இல்லை. ஒரு தோட்டத் தொழிலாளியின் மனைவி பொருள் நிமித்தம் பிரிந்திருக்கும் தனது கணவனுக்கு தமிழைத் தூது விடுகிறாள். அவனைப் பற்றிய அடையாளத்தைக் கூறுகிறாள். அது எப்படி இருக்கும் என்றால் 'நெய்த நூலினும் தைத்த நூல் அதிகம்' என்று கூறுகிறாள். எவ்வளவு அற்புதமான கவிதை. இதை விட கொடுமையான தரித்திரத்தைக் காட்ட வேறு ஒப்புவமைகளே இல்லை என்று நான் வியந்தேன் என்று மனதாரக் கூறி மகிழ்வார்.

கவிஞர் காலமானதற்குப் பிறகு இலங்கை எழுத்தாளர் ஒருவரை சந்தித்தபோது இந்த நிகழ்ச்சியைக் கூறி அந்தக் கவிஞர் இப்போதும் இருக்கிறாரா அவர் பெயர் என்ன என்று விசாரித்தேன். அவர் கூறினார், அல்வாய் ஊர் செல்லையா என்பது கவிஞரின் பெயர். அவரது மகனின் பெயர் விவேகானந்தன். கவிஞர் காலமாகிப் பத்தாண்டுகளுக்கு மேலாகிவிட்டன'' என்று.

அசை போட ஒரு விடயம் 46

## 55 வயதில் மரணமான வளர்ப்புக் கிளி

உலகின் மிக வயதான வளர்ப்புக் கிளி தனது 55 வயதில் அண்மையில் உயிர் நீத்துள்ளது. இறப்பதற்கு முன்பாக தனது எஜமானிக்கு 'சீரியோ' கூறிவிட்டு நித்திரை கொண்ட அந்தக் கிளி காலையில் இறந்துபோய் இருப்பது தெரிய வந்தது. ஆப்பிரிக்க சாம்பல் நிறக் கிளியான அதற்கு தார்பு என்று பெயரிட்டிருந்தார் அதன் உரிமையாளரான நினா மோகன் (89 வயது).

தனது கிளிக்கு அவர் ஒருபோதும் பேசக் கற்றுக் கொடுக்கவில்லை. ஆனால் தார்பு தானே மற்றவர்கள் பேசுவதைக் கேட்டு பல சொற்களைப் பேசப் பழகிக் கொண்டது. உள்ளூர் நாய்களைக் கண்டால் ''பூப் பூப்'' என்று குரைத்துக் காட்டும். பூனைகள் வந்தால் 'மியாவ் மியாவ்' என்று கத்தி கிண்டல் செய்யும். எஜமானி நீனா எப்போதாவது வெளியில் செல்கிறார் என்றால் 'சீரியோ பைபை, சீக்கிரம் வாங்கோ'' என்று குரல் கொடுக்கும். கிளியின் மரணம் நீனாவுக்குப் பெரிதும் கவலையாகவுள்ளது. அது மிகவும் விவேகமான பறவை. கெட்டித்தனமுள்ளதும் கூட. ஒரு சொல் தானும் நான் சொல்லிப் பழக்கவில்லை. அதுதானே பல சொற்களை பழகிக் கொண்டது அது மரணமாவதற்கு முதல் நாள் இரவு நான் படுக்கச் சென்றேன். கூட்டுக்குள் இருந்தபடியே 'சீரியோ' சொன்னது. அதுதான் தார்பு கூறிய கடைசி வார்த்தைகள் கவலையுடன் கூறுகிறார் எஜமானி நீனா.

# சுரண்டப்படும் வன்னி

பாண்டியம்மா

வன்னிப் பெருநிலப் பரப்பின் வளங்கள் போர்ச் சூழலாலும், இயற்கை அனர்த்தங்களாலும் அழிக்கப்பபட்டமை போதாது தற்போது தென்னிலங்கையைச் சார்ந்தவர்களாலும் வியாபார நோக்கத்துடன் மீதமான வளங்களும் சூறையாடப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

ஆனால், வன்னி மக்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ள விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும் வளங்களை மக்கள் பயன்படுத்த முடியாத அளவுக்குத் தள்ளியுள்ளன.

வன்னி மண்ணில் இயற்கையாகவே, பொக்கிசமாகக் கிடைக்கப்பெற்றுள்ள காட்டு வளம் துறை சார்ந்த அதிகாரிகளால் பாதுகாக்கப்படாத நிலையில் வகை தொகையாக பெறுமதி மிக்க காட்டு வளங்கள் தென்னிலங்கைக்கு கடத்தப்படுகின்றன.

இந்த நிலையில் இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதால் எதிர்காலத்தில் இயற்கையாக ஏற்படக்கூடிய அழிவுகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த அழிவில் இருந்து எவ்வாறு வன்னி நிலப்பரப்பைக் காப்பாற்ற முடியும் என்பதை துறை சார்ந்த அதிகாரிகள் கருத்தில் கொள்ளவில்லை என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனை விட இயற்கை வளங்கள் வன்னி மக்களுக்கு கிடைக்க கூடிய பலன்களும் கை நழுவிப் போகின்றன என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம்.

தற்போது வன்னி மாவட்டத்தில் பெறுமதிமிக்க காட்டு மரங்கள், மணல் என்பன தென்னிலங்கைக்கு வர்த்தக நோக்கத்துடன் கடத்தப்படுகின்றன என்பது மக்களின் குற்றச்சாட்டாக உள்ள நிலையில் வன்னியில் மீள்குடியமர்ந்த மக்கள் தமது தேவைகளுக்காக சொந்த மண்ணில் கிடைக்கக்கூடிய வளங்களை பெறமுடியாத நிலையிலும் உள்ளனர்.

வன்னி மாவட்டத்தில் மீள் குடியமர்வுகள் படிப்படியாக இடம்பெற்று வருகின்ற நிலையில் மக்கள் தமது வாழிடங்களை அமைத்துக் கொள்ள மரங்கள், மணல் என்பவற்றைப் பெறுவதற்கு உரிய அனுமதிப் பத்திரங்கள் பெற்று வரிப்பணம் செலுத்தியும் குறிக்கப்பட்ட காலத்துக்கு நீண்டகால இழுபறிக்குப் பின்பே அவற்றைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இதனால் உரிய காலத்துக்கு அவற்றைப் பெறுவதற்கு இரகசியமான முறையில் பணப் பரிமாற்றம் செய்து மரங்கள், மணல் என்பவற்றைப் பெறுவதாகவும் மக்கள் குறை கூறுகின்றனர்.

> அபிவிருத்தி எனும் போர்வையில் வீதியோரங்களில் நின்ற பயன்தரு மரங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன. இவ்வாறு வெட்டப்பட்ட மரங்கள் எங்கே என்பது தொடர்பில் உரிய பதில் அளிக்க எவரும் முன்வரப் போவது இல்லை.

இந்த நிலையில் வன்னி மக்களின் இயற்கைச் சொத்துக்களை தென்னிலங்கையைச் சார்ந்தவர்கள் எடுத்துச் செல்வதற்கு மட்டும் தாரளமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி எனும் போர்வையில் வீதியோரங்களில் நின்ற பயன்தரு மரங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன. இவ்வாறு வெட்டப்பட்ட மரங்கள் எங்கே என்பது தொடர்பில் உரிய பதில் அளிக்க எவரும் முன்வரப் போவது இல்லை. இவை உரிய அதிகாரிகளால் கண்டும் காணாமலும் தென்பகுதிக்குக் கடத்தப்பட்டுவிட்டன.

இந்த நிலையில் வன்னியில் உள்ள தொழில் முயற்சியாளர்கள் தமது தொழிலுக்குத் தேவையான மரங்களை அதிக பணம் கொடுத்து தென்னிலங்கையைச் சார்ந்தவர்களிடம் பெற வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

நாளாந்தம் 15 பேருக்கு மேற்பட்டவர்களுக்கு மேல் தொழில் வாய்ப்பு வழங்கிவரும் தச்சுத் தொழிலாளியான மோகன் என்பவர் கூறும் போது

சாதரணமாக ஒரு மரம் ஏற்றுவது என்றால் கிராம சேவகர், பிரதேச செயலர், மாவட்ட செயலாளர் என அனுமதிக் கடிதம் கிடைத்தால் மட்டுமே மரங்களை வெட்ட முடியும். ஆனால் தென்னிலங்கையைச் சார்ந்தவர்கள் யாரிடமாவது தொடர்பு இருந்தால் அவர்கள் நாம் கேட்கும் நாளில் தாமே வாகனத்தில் கொண்டு வந்து மரங்களைப் பறித்துவிட்டுப் போவார்கள். என்ன அவர்கள் கேட்கும் பணத்தொகையைக் கொடுக்க வேண்டிவரும். கூடுதலாகத் தொழிலாளர்கள் தற்போது தரகர்கள் மூலம்தான் தேவையான மரங்களை வாங்கிக் கொண்டு இருக்கின்றனர்.


இந்த நிலையில் பல தொழிலாளர்கள் இன்று இழுபறி நிலையில் தான் காலத்தைக் கடக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சாதாரண தொழிலாளர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளே இவை. இந்த நிலையில் மீள் குடியமர்ந்துள்ள மக்கள் தமது வீடகளைக்கட்டி முடிப்பதற்கு எதிர் கொள்ளும் பிரச்சினைகள் சொல்லித் தெரிய வேண்டியது இல்லை.

வன்னியில் சூறையாடப்படும் வளங்கால் சொந்த மண்ணில் இருக்கும் மக்கள் தமது தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

வன்னியில் வறுமையின் பிடியில் வாழும் மக்கள் குறிப்பாக காட்டு வளத்தின் மூலம் விறகு விற்று சீவியம் நடத்தியவர்கள் தற்போது அதற்கும் அனுமதி பெற வேண்டியவர்களாகவே உள்ளனர். இயற்கை வளங்களைப் பெற்றுக் கொள்ள பிரதேசம் சார்ந்த் மக்களுக்கு அனுமதி மறுத்துள்ள துறை சார்ந்த அதிகாரிகள் ஏன் தென்னிலங்கையைச் சார்ந்தவர்கள் அதே வளங்களைச் சூறையாடுகின்ற போது கண்டும் காணாதது போல் இருக்கின்றனர்? வன்னி மக்களின் தேவைகள் நிராகரிக்கப்படுவது மட்டுமல்லாது பிரதேசத்தின் சொத்துக்களும் களவாடப்படுகின்றன. இதற்கு துறை சார்ந்த அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுப்பார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெளிச்சம் பிறக்கிறது

காலையிலேயே வீதியில் கடக்கு புடக்கு .... என்ற சத்தம் கேட்டு முற்றம் கூட்டிக்கொண்டிருந்த அம்மா எட்டிப் பார்த்தாள். அதனை கணேசும் எட்டிப் பார்த்துவிட்டு அர்த்தமுள்ள புன்னகை பூத்திருக்கும் அம்மாவின் முகத்தையே உற்றுநோக்கினான். "கணேசும்..." பெரிய பெருமூச்சை இழுத்து விட்டுக் கொண்டு மீண்டும் முற்றம் கூட்டும் வேலையில் அவனது அம்மா மும்முரமாக ஈடுபட்டாள். குளிருக்கு இதமாக தோளைச் சுற்றி மூடி இருக்கும் துவாயை இறுகப் பற்றியபடி 'ஷேற்' அருகே சென்றாள்.

வண்டிச்சத்தத்தோடு சேர்ந்து கால் செருப்பு இழுபடும் சத்தம் கேட்டால் அது.. அவனது பெரியப்பா வீட்டில் குடியிருக்கும் பரஞ்சோதி அப்பு! என்பது அவனுக்கு தெரியும். அட ..... நேற்று வெளிநாட்டில் நிற்கும் மகன் காசு அனுப்பினவர் எண்டு பரஞ்சோதி அப்புவிட ஆச்சி சொன்ன பிறகு எதுக்கு வண்டில் இழுப்பு கணேஸ் எண்ணினான்.

ஒரு எருது பூட்டிய வண்டியில் மட்டைகள், இத்துப்போன பனையின் சில பகுதிகள், விறகுகள், சகிதம் வில்போல் வளைந்தும் வளையாத உரம்பாய்ந்த உடம்போடு பரஞ்சோதிஅப்பு. ஆனாலும் முழங்கால் மூட்டு வலியால் அவஸ்தைப் பட்டு இரவில் நித்திரை கொள்ள முடியாமல் அல்லல்படும் அவரின் நிலைமை; ஆச்சிக்கும் .... அவர் வீட்டில் இரவுப் படிப்புக்காக செல்லும் கணேசுக்கும் தான் தெரியும். இந்த வயதில் இப்படி உழைக்க வேண்டும் என்று அப்புவுக்கு என்ன தலைவிதி?

பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்து காத்து இருக்கும் இந்த இரண்டு மாதமும் தான் கணேஸ் பரஞ்சோதி அப்புவின் சில நடைமுறைகளைமிகுந்த ஆச்சரியத்தோடுபார்த்தான். "என்ன ராசா இந்த வயசில இவருக்கு ஏன் இந்த ஏலாத உத்தியோகம் என நினைக்கிறாய் இல்லையா?" இந்த வண்டிக்குள் அடைத்துக் கொண்டிருக்கும் இவ்வளவு விறகை பொறுக்கி எடுக்க எவ்வளவு நேரம் செண்டிருக்கும்? இனி இதக்கொண்டு ..... போய் ...... வித்து.... வர... என கணேஸ் நினைத்ததையே வாய்கொள்ளாப் புன்சிரிப்போடு அப்பு சொல்ல அவனுக்குப் புல்லரித்தது .

"அப்பு....." அவனது குரல் கேட்டு "என்ன ராசா நீ நினைக்கிறதுக்கு நான் பதில் சொல்லட்டோ ..." இல்லை நீ கேள்வி கேட்டாப் பிறகு சொல்லட்டோ சரிந்து கொண்டு வந்த விறகுகளைச் சீர்செய்வதிலேயே குறியாக அப்பு நின்றார்.

"தம்பி இந்த வயதில உழைக்க வேண்டும் எண்ட கட்டாயமோ... இல்ல காசு சேர்க்க வேண்டும் என்ற பேராசையோஎனக்கு இல்லை ஆனால் உழைச்சுக் காசு குடுத்து கஞ்சி குடிச்ச அனுபவம் உழைக்காமல் இருந்து உண்டு உறங்க மனசு கேக்குது இல்ல... உடம்பில தெம்பு இருக்கும் மட்டும் உழைப்பம்... உழைக்காட்டில் வீட்டிற்கும் வாழுகிற நாட்டுக்கும் ஏன் சாப்பிடுகிற சோத்துக்கும் பாரமாப் போயிடுவம்.." அதுதான் அழகான ஒரு தத்துவத்தையும் கூறி தனது தத்துவத்தை நினைத்து தானே சிரித்தவாறு மீண்டும் .... மெதுவாக ... வண்டியில் ஏறிவிட்டு.... தம்பி தொழில் படிப்பு.... வசதி... வாய்ப்பு ... எங்களைத் தேடி வருமட்டும் நாங்கள் காத்திருக்கக் கூடாது கடவுள் நம்பிக்கையோடு முயன்று முன்னேற முயற்சியோடு உழைக்க வேணும் இல்லையா தம்பி.....? கேள்வியோடு மீண்டும்.... றோட்டில் கடக்கு... புடக்கு .... சத்தம் தேய்ந்துமறையும்வரைசிலை போல் நின்று கொண்டிருந்தான் கணேஸ்.

"டேய் சற்ஸ்கோர் புள்ளி முறையின் படி பார்த்து உனக்கும் எனக்கும் கம்பஸ் கிடைக்காது எண்ட மாதிரி கதைக்கினம் அது தான் கவலையாக் கிடக்கு" இடி விழுந்தது போல் இந்தச் செய்தி காதில் விழ. "என்ன கணேசுக்குக் கம்பேசுக்கு வராதோ ....?" என்று அழுது விடுவார் போல் மாறினான் தாய்.

நாட்டுப் பிரச்சினையில் நைந்து நலமிழந்து சொந்த ஊர் திரும்பி சொற்பகாலம், வாழ்க்கையில் கடவுள் சிலருக்கு பணத்தையும் வளத்தையும் அள்ளி அள்ளி கொடுத்த போதும் ... பலருக்குச் துளியும் கிள்ளிக் கொடுக்க மறந்து விடுகிறான் அந்த வகையில் விரலுக்கு ஏற்ற வீக்கமாய் பற்றாக்குறையோடு போராடும் குடும்பத்தில் பிறந்த கணேசுக்கு எங்கேயோ இருந்து இடம்பெயர்ந்து வந்து பெரியப்பா வீட்டில் குடியிருக்கும் பரஞ்சோதி அப்பு தான் இப்போது எல்லாம்.

"தம்பி ..... முன்பு எல்லாம் கல்வி முறை சரியான மாற்றம், எங்கட தாய் தகப்பனவிட சட்டம்பி மார் எங்களில் சரியான அக்கறை. எங்களுக்கு அவையளக் கண்டால் புளுத்த பயம். அங்க கண்டால் இஞ்ச சகலமும் ஒடுங்கி அடங்கி நடப்பம். பாடங்களை முழுக்க மனப்பாடம் செய்வம் நிறைய நிறைய நல்ல பழக்க வழக்கங்களை சொல்லித் தருவினம். நாங்களும் அதுக்கேற்றால் போல் நடப்பதும் ஆனா... இப்ப ... விழுந்து விழுந்து கணிப்பீடுகளையும் ஒப்படைகளையும் படிச்சவேறு ஆக்களை வைச்சு விட்டுச் செய்து போட்டு அதக் கொண்டு வந்து குடுத்து "மாக்ஸ் " எடுக்கிறது. சொந்த மூளையைப் பிரயோகித்து சிந்தித்து தன் முயற்சியில செய்ய நேரமும் இல்ல. செய்தா "மாக்ஸ் சும் " இல்ல. படிக்கிறத பரீட்சை எழுதுறதோட சரி. வாழ்க்கையில கடைப்பிடிச்சு ஒழுக வேண்டிய நல்ல நெறிகளை படிக்க படிப்பிக்க இப்பத்த வாத்திமாருக்கு நேரமும் இல்ல. வசதியும் இல்ல.

வாத்திமார் பாவம். தலைக் கொள்ளாத வேலை. கணிப்பீடு குடுத்துச் செய்விச்சு, திருத்தி புள்ளி பதிஞ்சு, பாடக்குறிப்பெழுதி ஆயத்தப்படுத்தி ஒப்படை செய்து அதத் திருத்தி பதிஞ்சு இஞ்சால வீட்டு வேலை நிமிரமுடியாமல் வீட்டில் பிள்ளை குட்டியள நல்லமுறையில் வளக்க முடியாத சங்கடம், அதிபர்மாரிட ஆளுகை ஆலோசகர் மாரிட அறிவுறுத்தல்கள், எண்டு அப்பப்பா தலைகொள்ளாத பிரச்சினையில இலகுவான தெளிவான கல்விமுறை இல்லாம எனி எதிர் காலம் எங்கள மாதிரி யதார்த்தம் விளங்கி நடக்கிற மாதிரி வருமா தம்பி? நீண்ட பிரசங்கம் செய்து நிறுத்தவார்.

பெரியப்பா வீட்டில் குடிவந்ததில் இருந்து குப்பி விளக்கில் கணேஸ் குந்தி இருந்து படித்ததைக் கண்டு விட்டு "தம்பி பாவிக்காமல் கிடக்கிற அறைக்குள்ள தான் நான் துப்பரவாக்கிப் போட்டு படுக்கிறனான். அங்க வா... வசதியாய் இருந்து படிக்கலாம் என்பார்.

இரவில் உழைக்கும் அரைவாசிக் காசுக்கு குடித்து விட்டு வந்து "என்னால் இவ்வளவு தான் வீட்டுச் செலவுக்கு தரமுடியும். ஏலுமெண்டால் குடும்பத்த நடத்து இல்லாட்டில் உன்ர அருமந்த புத்திரன்ட படிப்ப நிறுத்தி உழைக்கச் சொல்லு" என உறுமும் தந்தையின் உறுமலைக் கேட்கமுடியாது அடங்கி ஒடுங்கி குரல் கேட்காத தூரத்தில் இருந்து மகன் படிப்பது நல்லதென்றோ என்னவோ மறுநாளே பரஞ்சோதி அப்பு வீட்டிற்கு கணேசை அனுப்பிவிட்டாள். கதிரை மேசைகள் தூசு தட்டி கழுவிப் போட்டு மின்குமிழ் இருந்த இடத்தில் கண்ணுக்கு இதமாய் இருக்கும் என்று "ரீயூப் பல்ப்" போட்டு படிக்க வசதி செய்து கொடுத்தார் பரஞ்சோதி அப்பு. நன்றாய் படித்து அம்மா சகோதரத்தை நன்றாய் பார்த்து உழைத்து உயர வேண்டும் என்ற நோக்கோடு அவனும் படித்து பல்கலைக்கழக அனுமதிக்காய்க் காத்திருந்தான் .

வாசலில் நின்ற அன்னையின் அழைப்பில் உள்ளே சென்ற போது "தம்பி காலையிலேயே கோயிலுக்கு போக எண்டு வெளிக்கிட்டன். சாப்பிட்டுட்டு விடுங்கோவன்" அம்மாவின் அவசரம். "அண்ணா ஒப்படை ஒண்டு செய்யோணும் செய்து தாறியே" தம்பியின் வேண்டுகோள். இவற்றை நிறைவு செய்து வெளியே வர பேயறைந்தது போல் நண்பன் செல்வம் வந்தான்.

"என்ன செல்வம் ஏன் ஒரு மாதிரி" "டேய் சற்ஸ்கோர் புள்ளி முறையின் படி பார்த்து உனக்கும் எனக்கும் கம்பஸ் கிடைக்காது எண்ட மாதிரி கதைக்கினம் அது தான் கவலையாக் கிடக்கு" இடி விழுந்தது போல் இந்தச் செய்தி காதில் விழ. "என்ன கணேசுக்குக் கம்பேசுக்கு வராதோ ....?" என்று அழுது விடுவார் போல் மாறினான் தாய். இந்த சற்ஸ்கோர் புள்ளி முறையைப் பற்றி எவ்வாறு விளங்கப்படுத்தி ஆறுதல் வார்த்தை கூறுவது எனத் திண்டாடிப் போனான் கணேஸ்.

அவனும் நன்றாகத் தனது குடும்ப நிலைமை தனது எதிர்கால வாழ்வு எல்லாவற்றையும் எண்ணி நன்றாகப் படித்து நல்ல பெறுபேறு எடுத்தும் ஏனோ இந்த சற்ஸ்கோர் முறையில் புறந்தள்ளப்பட்ட நிலைமையை சகிக்க முடியவில்லை. இப்படிப்பட்ட பரிதாப நிலையில் எதுவுமே சரியாகப் புரிந்து கொள்ளாத அவனது அப்பாவின் கூச்சல் ஒவ்வொன்றும் கூரிய அம்புகளாக அவனைத் தாக்கும் போது துயரங்களுக்கு அழுது ஆதரவு தேடி கணேஸ் ஓடி வருவது பரஞ்சோதி அப்புவிடம் தான்.

"தம்பி என்ன செய்யிறது நீர் கஷ்ரப்பட்டு நித்திர முழிச்சு படிச்சது எனக்குத் தான் தெரியும் அதுக்கு ஏற்ற மாதிரி நல்ல றிசல்சும் எடுத்தீர் ஆனா.... இந்தப்புள்ளி முறை பற்றி உங்கட அப்பாவுக்கு விளங்கப்படுத்தி அத அவர் பொறுமையாகக் கேட்டு புரிஞ்சு கொள்ளுறது..... கஷ்ரம்"

பல்கலைக்கழகம் கிடைக்காட்டாலும் தொழிலை நோக்கியதான அல்லது வினைத் திறமையும் அனுபவமும் உள்ளதான கல்வி முறையா எங்கட கல்வி முறை? இல்லையே தம்பி வெளிநாடுகளில படிக்கிறத பரீட்சையில எழுதித்தள்ளுறதோட நிற்காம அனுபவக் கல்வியைப் பெற்றார்கள். உம்ம மாதிரி ஆட்களுக்கும் எதிர்பாராம குறைய றிசல்ஸ் எடுக்கிறவங்களுக்கும் அவனவன் திறமைக்கு ஏற்ற மாதிரி மேற்படிப்போ... அல்லது தொழில்முறையோ இருக்கு... எல்லாரும் அவனவன் திறமைக்கு ஏற்றால் போல் முன்னேறிக் கொண்டு போய்விடுவான்.

கவலைப்படாதையும் வாழ்க்கையில முயன்று முன்னேற வேண்டும் என்று நினைக்கிற உம்மை மாதிரி மாணவ சமுதாயம் இருக்கும் மட்டும் எந்தக் கல்வி முறையானாலும் யோசிக்காமல் முன்னேறுற முயற்சியை மட்டும் பாரும்.

தம்பி எனக்கு ஆர் வெளிநாட்டில நின்று காசு அனுப்பினாலும் என்ர கையை நம்பி நான் உழைத்த காசு கொஞ்சம் வங்கில கிடக்கு. எடுத்து தாரன். இரண்டு கொம்பியூட்டர் வாங்கி உம்மடை படிப்புக்கு ஏற்ற மாதிரி ஒரு தொழிலைத் தொடங்கும். 'பிறின்ற்' பண்ணுற சின்னச் சின்ன வேலையள முதல் செய்யும் பிறகு உழைச்சு என்ர கடனக் கட்டலாம் ராசா..." சொன்னதோடு கணேசின் முதுகிலே ஆதரவாய்த் தட்டி மீண்டும் பொக்கைவாய்ச் சிரிப்புடன் அவன் நிறுத்த இது கனவா நிஜமா எனத் தெரியாத மகிழ்வோடும் கண்ணீரோடும் பரஞ்சோதி அப்புவைக் கணேஸ் நோக்கினான்.

ஒளி நிறைந்த எதிர்காலம் கணேசின் கண்முன்தோன்றியது அப்பாவின் பேச்சுக்களை எதிர் கொண்டு தனக்கான ...... அவன் முன் வாழ்ந்து காட்டி தன்குடும்பத்தாரை இரைசேர்க்கும் நம்பிக்கை பிறக்க அவன் எழுந்தான் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹார்மோனிய இசையால் மயக்கிய சோமு

■ எஸ்.எம்.கோபாலரத்தினம்

அவ்வழியால் சென்றவர்கள் அதைப் பார்த்து சில நிமிடங்கள் நின்று நகர்ந்து கொண்டிருந்தனர். வில்லுப் பாட்டுத் தொடங்குவதற்கு முன்னரே மக்கள் குழுமியிருக்கவில்லை என்பதால் மேடைக்கு வந்த வீரமணி எழுந்து போய்விட்டார். வில்லு மேடையில் காட்சியளித்துக் கொண்டிருந்தது. நிர்மலா நாடக விழாவில் கரிபூசிய உடலுடன் உயரத்திலிருந்து குதித்து பேயாக நடந்த காட்சி மறக்க முடியாதது.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பெரும் கலைஞர் ஒருவரை இப்போது யாரும் நினைத்துப் பார்ப்பதே இல்லை. ஆர்மோனியம் சோமு என்று சொன்னால் ஆர்மோனியமே தானாக வாய்திறக்கும்.


ஒரு கையால் காற்று வரும் விசிறி அலகை ஆட்டி வாசித்தபடி மறுகையால் கட்டைகளை தட்டி அமர்த்தி பாட்டுக்கு இசை எழுப்பி, கூத்தில் கதாநாயகன் பாடும் பாட்டைத் திருப்பி உச்சக் குரலில் பிற்பாட்டுப் பாடி இடையே நாடகம் காட்சி மாறுவதற்குள் தனது இனிய குரலால் உச்சஸ்தாயியில் பாட்டும் பாடி இரசிகர்களைக் கட்டிப் போட்டு வைக்கும் மாயா ஜால வித்தைக் காரனைப் போல் இயங்கியவர் ஆர்மோனியம் சோமு என்றழைக்கப்பட்ட சோமசுந்தரம்.

காத்தவராயன் நாட்டுக் கூத்திலிருந்து காலால் மிதித்து இரண்டு கைகளாலும் கட்டைகளைத் தட்டி ஹார்மோனியம் வாசித்து வில்லுப் பாட்டிலும் இசை வழங்கிய பெருமை ஆர்மோனியம் சோமுவுக்குரியது. வன்னிக் காடுகளுக்குள் இயக்கங்கள் நுழைவதற்கு முன்னே அங்கொன்றும் இங்கொன்றுமாகக் குடியேறிய தமிழர்கள் அமைத்த கோயில்களில் ஆண்டுக்கொரு தடவை நடக்கும் திருவிழாக்களில் நாட்டுக் கூத்துக்களும் இடம்பெற்றன. இந்தக் கூத்துக்களில் ''ஆர்மோனியமும் பிற்பாட்டும் சோமு என்று துண்டுப் பிரசுரங்கள் அறிவிக்கும். இப்படி ஒரு நிகழ்ச்சியில் யானை ஒன்று வந்து மேடையை இழுத்து வீழ்த்தியபோது ஓடியவர்களுடன் சோமுவும் ஆர்மோனியத்துடன் ஓடிப் பதுங்கிய நிகழ்வுகளும் உண்டு.

ஆர்மோனியம் சோமுவின் குரலையும் வாத்திய இசையையும் மட்டுமல்ல அவரது நீண்ட இனிய இசை வரலாற்றையும் பதிவு செய்யக் கூடிய வசதி வந்த பின்னரும் பதிந்து வைக்கத் தவறியது கலையுலகுக்கு மட்டுமல்ல கலைக்கே பெருநட்டம். ஆர்மோனியம்சோமு அவர்களின் தோற்றம் இளம் வயதில் பிரபல இந்திய வயலின் வித்துவான் குன்னக்குடி வைத்தியநாதன் இருந்தது போலிருக்கும். அவர் வயலினில் வித்தை காட்டினார். எங்கள் சோமு ஹார்மோனியத்தில் காட்டிய வித்தை குறைந்ததல்ல. நாட்டுக் கூத்துக்கள், நாடகங்கள், மெல்லிசைக் குழுக்களின் இசை நிகழ்ச்சி, வில்லிசை நிகழ்ச்சியிலும் கூட பின்னணியிலும் முன்னணி இடம் வகித்தவர் ஆர்மோனியம் சோமு. எனக்கு அவருடன் தொடர்போ நட்போ இருக்கவில்லை.

இந்தக் கட்டுரைத் தொடரில் யாழ்ப்பாணத்தில் நடந்த இரசிக ரஞ்சன சபா இசை விழா பற்றியும் இந்தச் சபாவின் தலைவராக து.சீனிவாசக மாஸ்ரர் செயலாற்றியது பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். யாழ்ப்பாண ரசிக ரஞ்சன சபாவை உருவாக்கிய பெருமை முனீஸ்வரா கபே கே.வி.தம்புவையே சாரும். இவர் சங்கீத வித்துவான்.

சென்னையில் சங்கீத சபாக்கள் பல இருக்கின்றன. ஆண்டுதோறும் அங்கு டிசெம்




பர் மாதத்தில் சங்கீத சபாக்களில் இசை விழாக்கள் நடைபெறுவதும் வழக்கம். இசை விழாக்களில் கலந்துகொண்டு இசை விருந்தளிப்பதற்கு இடம்பிடிப்பதில் வித்துவான்களுக்கிடையில் போட்டி நடக்கும். சில சபாக்களில் இடம்பிடிப்பதற்காக செல்வாக்குடையவர்களின் உதவியை நாடி வித்துவான்கள் அலைவதுண்டு. இதேசமயம் வித்துவான்களை முதலில் பிடித்து நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துவிட வேண்டுமென்று சபாக்காரர்கள் வித்துவான்களைத் தேடி அலைவதுமுண்டு.

சில சபாக்களில் பாடக்கிடைத்தவர்கள் பாக்கியசாலிகளாகக் கருதப்படுவது இன்றுமிருக்கிறது.

சென்னை சங்கீத சபாக்களில் ஒன்றிரண்டில் கலந்துகொண்டு பாடும் வாய்ப்புப் பெற்ற இலங்கைக் கலைஞர்கள் இரண்டொருவர் இருக்கிறார்கள்.

சென்னையில் போல யாழ்ப்பாணத்திலும் ஒரு சங்கீத சபாவைத் தொடங்கி இங்கும் ஆண்டுதோறும் இசை விழாவை நடத்த வேண்டுமென்ற பேராசை ஒரு நல்ல மனிதருக்கு ஏற்பட்டது.

இவர் சங்கீத பரம்பரையைச் சேர்ந்தவரல்லர். ஆடம்பரமில்லாத அடக்கமான அமைதியான தேநீர்க் கடை, சாப்பாட்டுக்கடை முதலாளி. இவருக்கு ஒரு பலசரக்குக் கடையும் அதாவது ''கூப்பன் கடையும் இருந்தது.

இன்றும் இவருடைய சாப்பாட்டுத் தேநீர்க்கடை 'முனிஸ்வரா கபே' என்ற பெயரில் மணிக்கூட்டு வீதி, ஸ்ரான்லி வீதிச் சந்தியில் - இது சில காலம் வெலிங்டன் தியேட்டர் சந்தியாகவும் இன்றும் அவரது பெயரைச் சொல்லும் தம்பு கடைச் சந்தியாகவுமுள்ள இடத்தில் (இது சிறாம்பியடிச் சந்தி என்றும் சொல்லப்படும்) இயங்கிக் கொண்டிருக்கிறது.

(தொடரும்)

# பெயர்கள் தரும் பாதைகள்... 5

■ இ.சத்தியன், கொக்குவில்

(சென்றவாரத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| கடமை<br>நம்பிக்கை } | முயற்சி<br>உயர்வு<br>தாழ்வு } |
| சமாதானம்<br>அடைக்கலம்<br>சரணாகதி } | கூடுதல்<br>பிரிவு<br>உறவு } |

| | | |
|---|---|---|
| சிவம் | சத்தியம் | சக்தி |
| தியானம் | மனிதன் | அமைதி |
| விரதம் | அமிர்தம் | சமாதி |
| சிவராத்திரி | பைபிள் | நவராத்திரி |
| விநாயகர் | அகிம்சை | சதுர்த்தி |
| | அதியமான் | சஷ்டி |
| | வசிட்டர் | காயத்ரி |

இங்குள்ள சொற்களில் அதிகமாக எமது கண்களுக்குத் தெரிந்து கொள்வதாவது - தி சி கி ரி டி போன்ற விசிறி அமைப்புள்ள எழுத்துக்கள் இவை மனித குலத்துக்குச் சாதகமான சொற்களாக அமைக்கின்றன.

மனித குலத்துக்கு என்ன தேவை?
பணம் பொருள் வேண்டுமா?
அமைதி சமாதானம் வேண்டுமா?

யாவரும் விரும்புவது அமைதி சமாதானம்

ஆகவே மேலே கொடுக்கப்பட்ட விசிறி அமைப்புள்ள உதாரணம் போன்ற பெயர்ச் சொற்களை நாடிச் சென்று நாம் முன்னேற்றம் அடைய முடியும்.

சொற்களில் சூ மூ பீ தே மே மோ ஆகிய நெடில் எழுத்துக்கள் அமைகின்ற பொழுது இவைகளின் சாதக பாதகங்கள் எவ்வாறு அமைகின்றது.

| | |
|---|---|
| சூரன் | சனீஸ்வரன் |
| சூரியன் | அர்த்தநாரீஸ்வரர் |
| மூலிகை | பகீர்த்தனன் |
| வேடர் | தண்ணீர் |
| மேசன் | சதீஸ் |
| பேக்கரி | பன்னீர் |
| கூலி | |
| தேவி | |
| கோவலன் | |

| | | |
|---|---|---|
| திரிசங்கு ஸ்ரீ | விதி - சிறி | } சொற்களில் வருகின்ற பாதக வடிவங்களாகும் |
| முருகன் | மு ரு | |
| நளினி | ளி னி | |
| பத்மினி | மி னி | |
| கருணாநிதி | நி தி | |
| தட்சாயினி | யி னி | |

மேலே அமைக்கப்பட்ட பெயர் தொகுதிகளை கவனிக்கும் போது கஷ்டமான வேலை குறைந்த வேதனம் சிறைவாசங்கள் உறவினரை பிரிதல் என்பன நிகழ்கின்றன.

| | | |
|---|---|---|
| தாடகை | பரமேஸ்வரி | கோடீஸ் |
| தமயந்தி | தங்கேஸ்வரி | கோணேஸ் |
| தட்சன் | புவனேஸ்வரி | கேதீஸ் |
| தாரை | மகேஸ்வரி | |

மேலே அமைக்கப்பட்ட சொல் தொகுதிகள் மனித வளர்ச்சிக்கு சுபீட்சம் தருகின்றதா?
சிந்திப்போமா...

பெயர் சொற்களில்

ர,ற எழுத்து அமைகின்ற போது பிரிவு, துன்பம், சோகம் என்பன உணர கூடியதாக உள்ளது.

உதாரண பெயர் சொற்களை கவனிப்போம்

| | |
|---|---|
| ராட்சதன் | அசுரன் |
| ராவணன், | கமக்காரன் |
| நளமகாராசன் | தமயந்தி |
| அரிச்சந்திரன் | சந்திரமதி |
| பிரம்மா | சரஸ்வதி |
| திரவம் | திண்மம் |
| குரங்கு | பூனை |
| நாரதர் | முருகன் சிவன் குடும்பம் |

பெயர் சொற்களில்

க, க எழுத்து இரட்டிப்பாக அமைகின்றபோது சொற்களில் ஒற்றுமை, பலம், சந்தோஷம், அழகு என்பன உணரக் கூடியதாக உள்ளது.

உதாரண பெயர் சொற்களைக் கவனிப்போம்

| | | |
|---|---|---|
| காகம் | - | ஒற்றுமை + |
| மேக்கப் | - | சோடினை + |
| அமெரிக்கா | - | தலைமைப்பீடம் |
| தூக்கணாங்குருவி | - | அழகான, பலமான கூடு அமைத்தல் |
| மைக்கல் பரடே | - | மின்சாரம் |
| டேவிட் பெக்காம் | - | விளையாட்டு வீரர் |
| சொர்க்கம் | - | அளவுகடந்த இன்பம் |
| சுவர்க்கம் | | |
| பதக்கம் | - | அதிக பெறுமதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லுக நற்சொல்

தர்மினி பார்த்திபன்

பேசுதல் என்பது இயல்பானது. ஏசுதல் என்பது வலிந்து சினம் கொண்டு ஒருவரைப் பேசுவதைக் குறிக்கிறது. சினம் கொண்டு ஏசுதலை எவருமே விரும்புவதில்லை. அது மனித மனத்தின் தூய்மையைக் கெடுத்து விடுகிறது. இந்தச் சொல் வாண்மை குறித்து வள்ளுவர் தமது குறட்பாக்கள் மூலம் தெளிந்த நிறைந்த கருத்தைக் கூறியுள்ளார்.

ஆனால் நாமோ அவரின் குறட்பாக்களைக் கற்றாலும் அதன்படி ஒழுகாமையால் எமது சொற்கள் பலவேளைகளில் அர்த்தமற்றவையாகவும் பயன்தராதவையாகவும் வெளிவருகின்றன. ஆத்திரமிகுதியால் பேசுவதை என்னென்றுணராது கெட்டவார்த்தைகளைப் பேசி எதிரியைத் தோல்வியடையச் செய்ய முயற்சிக்கிறோம்.

உண்மை, நேர்மை, வலிமை கொண்டு நீதியான சொற்களைக் கற்றறிந்து சிந்தித்துப் பேசவோ துணிவதில்லை.

**சொல்லுக சொல்லைப் பிறிது ஓர்சொல் அச்சொல்லை**
**வெல்லும் சொல் இன்மை அறிந்து**

சொல்கின்ற வார்த்தைகள் ஒவ்வொன்றும் உள்ளத்தால் ஆய்ந்தறிந்து சொல்லப்படுவது நிச்சயிக்கப்படவேண்டும். அப்போதுதான் அதனை வெல்லும் வகையான எதிர்வார்த்தை சொல்ல வாய்ப்பின்றி ஏனையோர் எமது கருத்தை, சொல்லை ஏற்றுக் கொள்வர். ஒரு சொல் சொல்லப்படுவதற்கு முன்னரே அதற்கு எதிர்ச் சொல் எழாதவகையில் அதனை எதிர்த்து வெல்லும் சொல் இல்லா வகையில் சொல்லப்படுவதே சிறப்பாகும்.

'சொல் வெளிவருவதற்கு முன்னர் அச்சொல்லுக்கு நீயே எசமானன். ஆனால் சொல்லொன்று வெளிவந்துவிட்டால் அச்சொல்லே உனக்கு எசமானன்' என்பார்கள். எனவே நீ சொல்ல முந்துகின்ற எந்தச் சொல்லும் உனக்கு எசமானன் ஆகாதவகையில் சிந்தித்து வலிமையுள்ள நல்ல சொற்களைச் சொல்லுதலே மேலானதாகும்.

**சொலல்வல்லன் சோர்வுஇலன் அஞ்சான் அவனை**
**இகல் வெல்லல் யார்க்கும் அரிது**

எண்ணிய கருத்தைத் திண்ணியதாக்கும் சொல்வல்லமை கொண்டவன் சோர்வற்ற செயல்வீரனாவான். அஞ்சா நெஞ்சம் கொண்டவனான அவனை எந்த வார்த்தைகளாலும் வெல்லுதல் இயலாது என்பது சாத்தியமாகும். வார்த்தைகள் வலிமையும் உயிர்ப்பும் உடையவை. அவற்றின் சிறப்பு, அவற்றைப் பேசுபவன் நாவிலே புத்துணர்ச்சியைக் கொடுக்கிறது. அவனது நாவிலிருந்து பிறக்கும் சொல் ஒவ்வொன்றும் அவனது சிந்தனைச் சிறப்பின் வெளிப்பாடாகும். எனவே சிந்தித்து ஆய்ந்து தேர்ந்து சொல்லும் சொற்களே மக்கள் கேட்க விரும்பும் சொற்களாகும். அதுவன்றி வேறு சொற்களைச் சொல்பவர்கள் அறிவுடையோர் அல்லர் என்கிறார் திருவள்ளுவர்.

**பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார்**
**மருள்தீர்ந்த மாசு அறு காட்சியவர்**

நல்லறிவுடையோர் மாசற்றோர், குற்றமற்றோர் எவரும் மறந்தும் பயனற்ற சொல்களைப் பேசமாட்டார். அவர்கள் எப்பொழுதும் நல்லனவற்றையும் மற்றையோர் விரும்பிக் கேட்கும் வகையிலே விருப்பைத் தூண்டுவதுமான சொற்களையே பேசுவர்.




எனவே வார்த்தைகள் நல்லன என்று போற்றப்படுவதற்கும் எமக்கு ஏற்றன எனக் கேட்கப்படுவதற்கும் பேசுபவன் சிந்தித்து ஆராய்ந்து தெரிந்து நல்லனவற்றையும் இனிமையானவற்றையும் பேசுதலே உயர்ந்ததாகும். எனவே,

**சொல்லுக சொல்லில் பயன்உடைய சொல்லற்க**
**சொல்லில் பயனிலாச் சொல்**

பயனுடைய சொற்களைச் சொல்லுதலே சிறப்பானது. பயனற்ற சொற்களைத் தவிர்த்து விடுதலும் அவற்றைப் பேசாதிருத்தலும் பயனுடையதாகும். ஆனால் இன்றைய எமது சுற்றாடலில் எமக்குப் பயன்தராத வார்த்தைகளே கேட்கப்படுவதாகவும் அத்தகைய வார்த்தைகளுக்கு அர்த்தங்காணுதல் இயலாத நிலையில் அவை ஆத்திரமூட்டும் செயல்களைத் தூண்டுவதாகவும் இருப்பதையே காணுகின்றோம். கெட்டவார்த்தைகளைப் பேசுதலும் எமது வாழ்நாளின் ஒரு பகுதி இத்தகைய பயனற்ற பேச்சுக்களால் விரயமாவதும் எம்மை வீணே வருத்துவனவாக அமைந்துவிடுகின்றன.

உண்மையும் நீதியும் இல்லாத சொற்களும் அர்த்தமும் இனிமையும் இல்லாத சொற்களும் யாரெவரின் வாயிலிருந்து பிறப்பினும் அவர் பொய்யர், நீதியற்றவர் என்றோ அறிவில்லாதவர், வன்மனத்தர் என்றோ தூற்றப்படுவர். இத்தகைய பேச்சுக்களுக்குச் சொந்தக்காரராகத் தம்மை இனங்காட்டும் பலரையும் நீங்கள் கண்டறிந்து விலகி நடத்தல் உங்களுக்கு இலகுவானதாக இருக்கலாம்.

'வாய்க்குள்ளே போவது உன்னைத் தீட்டுப் படுத்தாது. ஆனால் உனது வாயிலிருந்து வெளி வருபவைகளே உன்னைத் தீட்டுப்படுத்தும்'. எனவே உனது வாயிலிருந்து வெளிவரும் சொற்களில் கவனம் தேவை என்பதை வலியுறுத்துகிறார் இயேசுநாதர்.

எனவே உன் வார்த்தைகளை நீ ஆராய்ந்து சிந்தித்துப் பேசுவதில் உனது கவனம் அவசியமாகும். இன்று அரசியல்வாதிகளும் ஆன்மிக வாதிகளும் எதனைப் பேசுகிறோம், எதனைச் செய்கிறோம் என்பதை உணராதவர்களாக சொல்லும் செயலும் ஒன்றுக்கொன்று வேறுபட்டு நிற்க, இவர்கள் மக்களை மயக்கத்துக்கு உள்ளாக்கி. விடுகின்றனர்.

உன் வார்த்தைகளைக் கேட்கவும் அதன்படி ஒழுகவும் நல்லனவற்றை உன் வாய் பிறப்பிக்கட்டும். நீ கேட்கும் வார்த்தைகள் உன்னை வழி நடத்தும் வகையில் உன்னைச் சூழ்ந்தோருக்கும் ஒலிகள் நல்லவர் வாயிலிருந்து பிறக்க நல்லவர்களோடும் வல்லவர்களோடும் சேர்ந்திருங்கள்.

# சைவ சமயத்தின் தனித்துவம் காக்க ஒன்றிணைவீர்

ரவிசாந், குப்பிளான்.

இந்து சமயம் மிகவும் பழமையான ஒரு சமயமாகும். மிக மிகப் பழைய காலத்திலேயே சிவ வழிபாடு உலகின் பல பாகங்களிலும் பரவியிருந்தது என்பது ஆராய்ச்சி வல்லாரின் கூற்று. இன்று சைவசமயம் இந்தியாவில் பரவலாகக் காணப்பட்டாலும் அதற்கு அடுத்த படியாக ஈழத்தில் தனித்துவம் மிக்க ஒரு சமயமாக வேரூன்றி நிற்பதை இந்த அண்ட சராசரமே நன்கறியும். அதனால் தான் ஈழமணித் திருநாட்டை தவசிரேட்டர் திருமூலர் சுவாமிகள் 'சிவபூமி' என்று விதந்து போற்றினார்.

இத்தகு பெயர் பெற்ற ஈழத்தில் காலத்துக்குக் காலம் சைவத் தமிழ் பெரியார்களும் கல்வியியலாளர்களும் மகாஞானிகளும் வாழ்ந்த பெருமை பெற்ற புண்ணிய பதியாக விளங்குவது எமது குப்பிளான் கிராமம். இங்குள்ள மக்கள் சைவத் தமிழ்ப் பண்பாட்டைத் தவறாது பேணுபவர்களாகவும் சைவ ஒழுக்க ஆசார சீலர்களாகவும் வாழ்ந்து வருவது யாவரும் அறிந்ததே. எமது கிராமத்தில் விநாயகர் ஆலயங்கள் மூன்றும் அம்பாள் ஆலயங்கள் ஆறும், வீரபத்திரர் ஆலயம் ஒன்றும் காணப்படுவதால் குப்பிளான் ஊரைக் கோயில்களின் ஊர் என்று அழைப்பது மிகவும் பொருந்தும். தொன்று தொட்டு அண்மைக்காலம் வரை பிறமத ஊடுருவல்களுக்குச் சற்றும் இடம்கொடுக்காமல் தனிச் சைவக் கிராமமாக பரிணமித்த காரணத்தாலேயே பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஐயாவின் பார்வையில் அன்று எமது கிராமம் ஈழத்தின் திருப்பரங்குன்றமாய்த் தோன்றியிருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இவ்வாறு சைவத் தமிழுலகின் கலசமாக விளங்கிய எம் கிராமத்தில் மழை காலத்தில் முளைத்த திலர்களைகளைப் போல எதிர்பாராத வகையில் ஏற்பட்ட கிறிஸ்தவ மதத் தாக்கம் கடந்த சில வருடங்களாக இங்குள்ள மக்களிடையே ஒரு வித சலனத்தை ஏற்படுத்தியுள்ளது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் முதலான அந்நிய தேசத்தவர்கள் கீழைத் தேசங்களைக் கைப்பற்றி ஆண்ட காலங்களில் மிக வேகமாகப் பரவிய மத மாற்றம் உச்சமடைந்து பின்னர் தணிந்த வரலாறு உங்கள் எல்லோருக்கும் தெரியும். இப்படிப்பட்ட துரதிர்ஷ்ட நிலையிலும் எமது கிராமத்தவர்களின் மன வலிமை காரணமாக பிற மதத்தவர்கள் எம் மக்களைத் திசைதிருப்ப படுத்தமுடியாது பின்வாங்கினர்.

அதன் பின்னர் சைவத்தின் காவலர் நாவலர் காலத்தில் சைவத் தமிழ்ச் சூழலில் மிகப் பெரும் சவாலாக கிறிஸ்தவ மத மாற்றம் நடைபெற்று வந்தது. அந்த வேளையில் எம்மதத்தவர்கள் சிலர் பணத்துக்காகவும் பதவிக்காகவும் சோரம்போயினர். அதனைக் கண்ட நாவலர் எரிமலையாய் வெகுண்டெழுந்தார். சைவத் தமிழ்ச் சூழலின் பெருமைகளை விளக்கி நூல்களை வெளியிட்டார். சைவப் பாடசாலைகள், சைவ அமைப்புக்களை நிறுவினார். அதுமட்டுமன்றி கிறிஸ்தவ மத மாற்றத்துக்கெதிராகப் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு இறுதியில் வெற்றியும் கண்டார். மத மாற்றத்துக்கெதிரான 'கண்டன உரை' நூல் வெளியீட்டில் நாவலரால் பிரதானமாக ஈடுபடுத்தப்பட்ட காசிவாசி செந்தி நாதையர் குப்பிளான் தந்த பெருமகான் என்பதையிட்டு நாமனைவரும் பெருமைப்பட்டுக் கொள்ள முடியும்.

1990 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலங்களிலே நாட்டில் ஏற்பட்ட குழப்பகரமான சூழ்நிலை ஈழத்தில் பிற மத ஊடுருவல்களுக்குவாய்ப்பாகிப்போனது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய கிறிஸ்தவ மதத்தின் [illegible] லங்களுக்குப் பொய்யான வரையறைகளை உருவாக்கி மதத்தின் பெயரால் ஆதாயம் தேட முனைந்தனர். இவ்வாறா கால கட்டத்திலும் கூட சைவத் தமிழ்ச் சான்றோர்களின் அரும்பெரும் முயற்சியால் எமது கிராமத்தின் தனித்துவம் மாறாது பேணப்பட்டது.

ஆனால், அண்மைக்காலமாக எமது ஊரினர் ஒருவரின் வெகுளித்தனத்தால் கிறிஸ்தவ மதம் மெல்ல மெல்ல ஊடுருவ ஆரம்பித்திருப்பது எங்கள் மத, கலாசார, பண்பாடு உணர்வுகளைப் புண்படுத்துவதாய் அமைந்துள்ளது. 'பணம் பத்தும் செய்யும்' என்பதற்கிணங்க பணத்தாசை காரணமாக விற்ற காணியை அதிக பணம் கொடுத்து வாங்கித் தமது மத ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகின்றனர். தம் மதச் சின்னங்களை நிறுவுவது தொடர்பாக அப்பாவி மக்கள் சிலரிடம் பணம் கொடுத்து ஏமாற்றிக் கையெழுத்து வாங்கியமை கடந்த காலங்களில் வெட்ட வெளிச்சத்துக்கு வந்துள்ளது. தற்போது குப்பிளான் சந்திக்கருகில் விசாலமானதோர் தேவாலய வழிபாட்டு மண்டபம் அமைக்கப்பட்ட வருவதோடு, ஊரே கேட்கும் ஒலியமைப்பில் ஜெபம் ஓதி, கூட்டங்கள் நடத்தி தீவிர சைவத்தமிழ்ப் பற்றாளர்கள் மத்தியில் ஒருவித அமைதியின்மையைத் தோற்றுவித்து வருகின்றனர். இவர்கள் பழமை வாய்ந்த குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயத்துக்கு அருகில் காணி கொள்வனவு முயற்சியில் ஈடுபட்டிருப்பதோடு கிறிஸ்தவ மதம் வழிபாட்டுத் தலமொன்று அமைப்பதற்கான ஆரம்ப முயற்சிகளில் இறங்கியிருப்பதாகவும் நம்பகமான சில தகவல்கள் கிடைத்துள்ளன.

இப்படியே போனால் உலக மதங்களுக்கெல்லாம் ஒப்பற்றதாகத் திகழும் எமது சைவ சமயத்தின் நிலை என்னவாவது? கிறிஸ்தவ மதம் ஆலம் விழுது போல் எம் மண்ணில் வேரூன்ற ஒருபோதும் நாம் இடமளிக்கக் கூடாது. சைவத் தமிழ்ப் பெரியார்கள் இம்மத மாற்றத்துக்கெதிராகக் குரல் கொடுக்க முன்வர வேண்டும். யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேசங்களிலும் இவ்வாறாக இடம்பெற்றுவரும் கட்டாய மதத் திணிப்பு கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டும்.

அன்பார்ந்த குப்பிளான் வாழ் மக்களே சைவத் தமிழ் அபிமானிகளே! சிந்தியுங்கள். பாராமுகமாக உறங்கிக்கிடந்தது போதும். எழுமின்! விழுமின்! காலத்தின் தேவையறிந்து ஒன்றிணைவீர். செயற்படுவீர்! (இறுதியாக உங்களோடு ஒரு நிமிடம்- நான் கிறிஸ்தவ சமயத்துக்கு எதிரானவன் இல்லை. ஆனால் மதத் திணிப்புக்கெதிரானவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏட்டுச்சுரைக்காய் தேவைதானா?

காயத்திரி விஜயரட்ணம்
டிஷானி கிறிஸ்தோபர்
(யாழ். பல்கலைக்கழகம்)

ஒரு காலத்தில் இலங்கையின் கல்வித்தரம் ஏனைய நாடுகள் திரும்பிப் பார்த்துபொறாமையும், ஆச்சரியமும் அடையும் வகையில் கொடிகட்டிப் பறந்தது. எழுத்தறிவு வீதத்தில் எமது அயல் நாடான இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளை விட இலங்கையின் கல்வியறிவு உயர்வாக இருந்த போதிலும் உயர்கல்வியினை எடுத்து நோக்கின் வீழ்ச்சியடைந்து செல்வதனைக் காணமுடிகின்றது. அதாவது இன்றைய நவநாகரிக உலகில் வாழும் நாம் உயர் படிப்புக்கள் மூலம் பலவகையான பட்டங்களைப் பெற்றாலும் கூட இப் பட்டங்கள் நிலையான பெறுமதியைத் தருகின்றனவா? அல்லது அதனால் எமது சமுகத்திற்கு ஏதாவது பயன் கிடைக்கின்றனவா? என வினவின் அதற்கு இல்லை என்றே பதிலளிக்கவேண்டியுள்ளது. ஏனெனில் இவ் இலவசக்கல்வி முறைமையானது அதி வேகமாக வளர்ந்து வரும் அறிவுசார் தகவல் தொழில் நுட்ப உலகில் போட்டியிடத்தக்க கல்வி முறையாகக் காணப்படவில்லை.இதற்கு எமது கல்வி முறைமையையே குற்றம் சுமத்த வேண்டியுள்ளது. அதாவது தொழிலுக்கான கல்வியா?? அல்லது கல்விக்கான தொழிலா?? என்பதே அனைவரினது மனதிலும் தோன்றும் வினாவாகும்.

தொழிலாளர் கேள்விக்கும் கல்வியின் நிரம்பலுக்கும் இடையில் நிலவும் பொருத்தப்பாடின்மையே கல்விக் கொள்கையிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் துறைசார் முக்கியத்துவத்திற்கேற்ப வேலைவாய்ப்புக்களை வழங்குவதில் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. இலங்கையைப் பொறுத்தவரை வருடாந்தம் எம்மைப் போன்ற பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகள் உயர்கல்வியை முடித்து வெளியேறுகின்ற போதிலும் தேர்ச்சியான மனிதவலு என்பது பற்றாக்குறையாகவே உள்ளது. இதனால் பெறப்படும் பட்டத்திற்கும், தொழில் வாய்ப்புக்கும் இடையில் எதிர்மறையான தன்மையே நிலவுகின்றது. காரணம் பட்டம் பெறும் துறை வேறு? பெறப்படும் தொழில் வாய்ப்புக்கள் வேறு?.

இதற்கு தக்க சான்றாக தற்போது பட்டதாரிப் பயிலுநர்களாக தெரிவுசெய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தமது பயிற்சி நெறிக்குப் பொருத்தமற்ற பிரிவுகளுக்குள் உட்புகுத்தப்பட்டுள்ளனர். இவை நிர்வாக ரீதியான தகுதியுள்ளவர்களுக்கே வழங்கப்பட்டிருக்க வேண்டும். தெரிவு செய்யப்பட்டவர்களில் அநேகமானோர் அரச தொழில் என்பதற்காகவும், வாழ்நாள் முழுவதும் நிலைத்திருக்கும் என்பதற்காகவும் இதனை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றிருக்கின்றனர். இத்தொழில் மூலம் கிடைக்கும் சிறுதொகைப் பணம் கூட அவர்கள் இவ்வளவு காலமும் கல்விக்கு செலவிட்ட தொகையை ஈடுசெய்யமாட்டாது. எனவே சகல துறைகளைச் சேர்ந்தவர்களுக்கும் பட்டதாரிப் பயிலுநர்நியமனம் வழங்கப்பட்டதால் இவர்கள் வேறுபட்ட துறைகளில் கற்றதன் பயன் என்ன? அவ்வாறாயின் இவர்களின் கற்கையை எந்தத் தராசில் நிறுப்பது? இந்நிலையில் எப்படி போட்டித்தன்மையான, தரம் வாய்ந்த பட்டதாரிகளை உருவாக்க முடிவதுடன் நாட்டின் அபிவிருத்தியில் மொத்ததேசிய உற்பத்தியை உயர்த்த முடியும்?



இன்று வாழ்க்கைச் செலவுகள் கிடுகிடுவென உயர்ந்து நாட்டின் பொருளாதாரமே கேள்விக்குறியாக உள்ளது. இந்நிலையில் கல்விக்கு ஒதுக்கப்படும் 1.9மூ ஐ 6மூ ஆக்குவதே அரசுக்கு முடியாத ஒன்றாகும். இந்நிலையில் போட்டித்தன்மையான பட்டதாரிகள் எப்படி உருவாகுவார்கள்? எனும் வினா எழுவதற்கு ஆச்சரியமில்லை. இன்று சிறுவர்களுக்கு கல்வி திணிக்கப்பட்டு வருவதால் அவர்களிடம் மறைந்திருக்கும் ஏனைய திறன்கள் வெளிக்கொணரப் படாமல் மழுங்கடிக்கப்படுகின்றது. இதனால் அவர்கள் தங்களிடம் எந்த ஆற்றலும் இல்லை என விகாரப்படும் மனோபாவத்தைக்கொடுக்கின்றனர். இதற்கு பெற்றோரும் ஒரு விதத்தில் காரணமாகின்றனர். ஏனெனில் அவர்கள் வேலைவாய்ப்பினையும் தம் அந்தஸ்தினையும் காரணம் காட்டி ஒருவழிப்பாதையை வற்புறுத்தி நிற்பதால் துறைசார் அறிவியல் சிந்தனைகள் நிராகரிக்கப்பட்டு அவர்களதுவாழ்வியல் வீணடிக்கப்படுகின்றது.

ஆரம்பத்திலிருந்தே புத்தகப்படிப்பில் மாத்திரம் கவனம் செலுத்துவதால் தான் இன்றும் பெரும்பாலான பட்டதாரிகள் புத்தகப்பூச்சிகளாகவே உள்ளனர் என்ற விமர்சனங்களும் கல்வியியலாளர்களால் எழுகின்றது. இப்படி இருக்க எவ்வாறு போட்டித்தன்மையான பட்டதாரிகள் உருவாகுவார்கள். மூன்றாம்நிலைக் கல்வியில் பிரயோக ரீதியான பயிற்சிகள் இன்றி வெறும் அறிமுறை சார் பயிற்சிகள் மட்டும் வழங்கப்பட்டு வருவதுடன் அவை கூட சில பாடங்களைப் பொறுத்த வரை இன்னமும் தமிழிலே வழங்கப்படுவதால் பட்டதாரி மாணவர்களிடையே ஆங்கில அறிவென்பது மிகக் குறைவாகவே உள்ளது. இதன் காரணமாக நல்ல வருவாய் தரக்கூடிய தொழில்களை மேற்கொள்வது அவர்களுக்கு கடினமாக உள்ளது. இதனுடன் தொழில்நுட்ப அறிவும் குறைவாகவே உள்ளது. எமது மாணவர்கள்



> துறைசார் அறிவிய சிந்தனைகள் நிராகரிக்கப்பட்டு அவர்களது வாழ்வியல் வீணடிக்கப்படுகின்றது. ஆரம்பத்திலிருந்தே புத்தகப்படிப்பில் மாத்திரம் கவனம் செலுத்துவதால் தான்இன்றும் பெரும்பாலான பட்டதாரிகள் புத்தகப்பூச்சிகளாகவே உள்ளனர்.

எல்லோரும் வசதிபடைத்தவர்கள் இல்லை. அனேக மானவர்கள் கிராமப்புறத்தவர்களாகவும் அதிலும் பலர் உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களாகவும் இருப்பதால் அவர்களுக்கு கணினிக் கல்விக்கான வாய்ப்புக்கள் சரிவரக் கிடைக்கப்பெறாமை அவர்களின் முன்னேற்றத்தை தடுக்கின்றது. எனவே எமது அரசு இதனை இரண்டாந்தரக் கல்வியில் அனைத்து பாடசாலை மட்டத்திலும் கட்டாயபாடமாக அறிமுகப்படுத்தின் இவ்வாறான பிரச்சினைகள் எழுவது குறைவாகும்.

பல்கலைக்கழகக் கல்வியில் புத்தகக்கல்விக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தில் அரைப் பங்கேனும் ஆய்வு தொடர்பான கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இறுதி வருடத்தில் மட்டுமே ஆய்வு செய்ய வேண்டும் என மாணவர்களை நிர்ப்பந்திப்பதால் பெரும்பாலான மாணவர்கள் ஆய்வு என்றால் என்ன?? என்பதை முழுமையாக அறிந்து கொள்ளாமல் ஏனோதானோ என்ற மனப்பாங்கிலும் பட்டப்படிப்பை புர்த்தி செய்யும் நோக்குடன் மட்டுமே ஆய்வினை மேற்கொள்கின்றார்கள். இது மாணவர்களின் தவறல்ல. அரசின் கல்வித்திட்டதில் உள்ள பெருந்தவறே ஆகும்.

இலங்கையில் உள்நாட்டுப்போர், பல்கலைக்கழகங்களில் நிகழும் வேலை நிறுத்தப் போராட்டங்கள், என்பன பட்டக்கல்வியை பூர்த்தி செய்யும் வருடங்களை நான்கு வருடத்தில் இருந்து 5 6 வருடங்கள் வரை அதிகரித்துச் செல்கின்றமை மாணவர்களுக்கு தொழில் சந்தையில் நிலவும் கேள்வியை குறைத்து வருகின்றது. இதற்குக் காரணம் அவர்களின் வயதெல்லை அதிகரித்து செல்கின்றமை. ஆனால் மேலை நாடுகளில் முதலாம் வருடத்தில் பல்கலைக்கழகத்திற்குள் நுழையும் மாணவன் ஒருவனுக்கு அவன் பட்டக்கல்வியை பூர்த்தி செய்யும் ஆண்டு ஏன் மாதம், திகதி கூட அறிந்திருப்பான். ஏனெனில் அங்கு முறையான ஒழுங்கு முறைமை பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆனால் இங்கு மாணவர்களுக்கோ அல்லது கல்விச்சமுகத்திற்கோ இது பற்றிய விழிப்புணர்வு சரியாக வெளிப்படுத்தப்படுவதில்லை. இது அரசின் முறையான திட்டமிடாமையையும் கல்வியில் செலுத்தும் ஆர்வத்தினையும் பறைசாற்றுகின்றது.

நான்கு வருடங்கள் பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்யும் உள்வாரி மாணவர்களை விட இரு வருடங்கள் கல்வி பெறும் வெளிவாரி மாணவர்கள் அதிக பயன் அடைகின்றனர். இவர்களுக்கான வகுப்புக்கள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நடைபெறுவதால் ஏனைய நாள்களில் தொழில்சார் நடவடிக்கையில் ஈடுபட முடியும். ஆனால் வெகு சிரமப்பட்டு பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்யும் எம்மை அவர்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதில்லை. ஏனெனில் இரு சாராருக்கும் வழங்கப்படும் பட்டமும், தொழில் வாய்ப்பும் ஒரே விதமானதாகவே உள்ளது என்பது மாணவர்களாலும், பல்கலைக்கழக கல்விச் சமூகத்தினராலும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டாக உள்ளது. இது எமது கல்வி முறைமையில் உள்ள தவறாகும்.

தொழில் வாய்ப்பு என வரும் போது பட்டதாரி மாணவர்கள் கூட அரசின் சுயலாபங்களுக்கு விலை போகின்ற தன்மையை காணமுடிகின்றது. குறிப்பாக இலங்கை அரசாங்கம் நாட்டிற்கு தேவையான சகல புள்ளிவிவரங்களையும் சேகரிப்பதற்காக இவர்களை ஆயதமாகப் பயன்படுத்தி வருகின்றது. இவ்வாறான வேலையை அரச உத்தியோகத்தில் இருப்பவர்களைப் பயன்படுத்திச் செய்யும் போது பலகோடி ரூபா செலவாகும் என்பதால் அரசின் நுட்பமான அறிவு இதற்கான பணச்செலவைக் குறைக்கின்றது.

பல பட்டதாரிப் பயிலுநர்கள் அரச உத்தியோகத்தில் இருக்கும் சில நிர்வாகிகளால் ஏளனப்படுத்தப்படுகின்றார்கள். அதிலும் குறிப்பாக பல்கலைக்கழகம் வரை சென்று பட்டம் பெறாத சில உத்தியோகத்தர்களாலே இவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பது பல கல்வியியலாளர்களால் முன்வைக்கப்படும் மாபெரும் குற்றச்சாட்டாகும். இதுவா அரசு கல்விமான்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம்? என்பது பெரும்பாலானோரின் ஏகோபித்த கேள்வியாக எழுகின்றது. எனவே எமது நாட்டில் தேர்ச்சி வாய்ந்த சமுகத்தை உருவாக்கி நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டும் எனில் தேசிய கல்விக் கொள்கையில் ஆக்க பூர்வமான மாற்றங்களை ஏற்படுத்துவதுடன் மூன்றாம் நிலைக்கல்வியானது பொருளாதாரத்தில் விரைந்து மாற்றமடைந்து வரும் கேள்வியை பூர்த்தி செய்யும் வகையில் ஆற்றல் வாய்ந்ததாக மாற வேண்டும். இதற்காக பல்வேறுபட்ட ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

*★இலங்கையின் கல்வி முறையில் பாரியளவான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமெனில் முதலில்மாற்றமடைந்து வரும் தொழிலாளர்சந்தையின் போக்குடன்*

17ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழ்நிலைக்கேற்ப அனுசரிக்கப் பழகிக் கொள்ளுங்கள்





அதற்காக உங்கள் நோக்கத்தைக் கைவிட வேண்டியதில்லை. வெளிப்படையாகப் பேசுங்கள். ஆனால் முரட்டுத்தனம் வேண்டாம்.

துணிவுடன் இருங்கள். ஆனால், எதிர்ப்புணர்வைக் காட்டாதீர்கள்.

தொடர்ந்து கடுமையாக உழையுங்கள் விட்டு விட்டு உழைப்பதில் பலனில்லை. ஏதாவது ஒன்றில் விசேஷமான திறமை பெறுங்கள். அதற்காக உங்களை குறுக்கிக் கொண்டு தெளிவை இழக்க வேண்டியதில்லை.

எழுத்திலும் பேச்சிலும் திறமையினை வளர்த்துக் கொள்ளுங்கள். வெறும் வார்த்தை ஜாலங்களில் ஈடுபடாதீர்கள்.

அடிப்படைகளையும் விவரங்களையும் தனித்தனியாகப் பிரித்துக் கொள்ளுங்கள். செயலுக்குத் திட்டமிடுங்கள். அதே சமயம் விவரங்களை அலட்சியப்படுத்தாதீர்கள்.

மனித இனத்தில் நம்பிக்கை வையுங்கள். தன்னம்பிக்கையுடன் இருங்கள். ஏமாளியாகவோ, தலைக் கர்வத்துடனோ இருக்காதீர்கள்.

மனதில் சித்திரம் உருவாக்கி முன்கூட்டியே திட்டமிடுங்கள். உடனடியான எதிர்காலத்தை மறந்து நீண்ட எதிர்காலத்திற்குத் திட்டமிடாதீர்கள்.

மரியாதைக் குறைவினையோ, வெறுப்பையோ வளர்த்துக் கொள்ளாதீர்கள்.

வேலையை நேசியுங்கள். அதுவே முழு திருப்தியை அளிக்கும். முயற்சியை வளர்த்துக் கொள்ளுங்கள். சிறிய குழிகள்தான் பெரிய பள்ளங்களாகின்றன. துணிவுடன், நேர்மையுடன் இருங்கள். கஷ்டங்களைக் கடக்க அது உங்களுக்கு உதவும்.

# புன்னகைப் பூக்களை வீசிவிடு...

அலை பாயும் கண்கள்
சாதாரணமாய்
அடங்குவதில்லை.

பேசிக்கொண்டிருக்கும்
வார்த்தைகள்
சட்டென்று
ஊமையாவதில்லை.

தேடிக்கொண்டிருக்கும்
மனங்கள்
தேடலை நிறுத்துவதில்லை
தொடரும் தேடல்கள் நம்மை
தொலைக்காமல் விடுவதில்லை

அடக்கம் இல்லா வாழ்க்கை
அமைதியை தருவதில்லை..


துரத்தும் மனசாட்சிகள் நம்மை
கொல்லாமல் விடுவதில்லை

உண்மையில்லாத பொய்கள்
உறங்கவிடுவதில்லை

கண்ணீரால் நம் பாவங்கள்
கழுவப் படுவதுமில்லை.

நிமிர்ந்து நேர்மையாய்
இருப்பதால்
புன்னகைப் பூக்கள்
பூக்காமலும் போவதில்லை.

# வலிகளே வலிமையாகியதால்.....



*அனைத்தும் என் வாழ்வில்*
*அவலங்களாகி விட்டதால்*
*அடங்காத வேதனை கொண்டது மனது*
*யாரிடம் வேண்டுவேன் ஆறுதல்களை*
*ஆற்றுவார்களே ஆக்கினைகளை*
*அளவின்றி அள்ளிக் கொட்டியபோது*
*யாரை நோவது!*
*வாழ்வே வலிகள் என்றான போதும்*
*மனசுக்கு வலிகள் இல்லை*
*ஏனெனில் அந்த வலிகளால்தான்*
*என் எழுத்துக்கள் உயிர் பெறுகின்றன*
*எத்தனை முறை துன்பத்தால்*
*என் இதயம் கசக்கி பிழியப்பட்டாலும்*
*வழிகின்ற வலிகளால்*
*அத்தனை முறையும்*
*என் இதயம் புது முனைப்பு பெறும்*
*ஏனெனில் வலிகளே*
*என் வாழ்வில்*
*வலிமையான எழுத்துக்களைப் பிரசவிப்பதால்*


சு.சி.தமிழினி, சிவாஜினி
சுன்னாகம்.

**திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .**



# புரிந்து நட....!

அ.ஜெசி
அச்சுவேலி.



ஒரு பெண்ணால்தான் இன்னுமொரு பெண்ணின் மனதைப் புரிந்துகொள்ள முடியும். அப்படிப்பட்ட சூழலில் ஒரு பெண்ணே இன்னுமொரு பெண்ணைத் தூற்றுவதும் அவர் மனம் நோகும்படி நடந்து கொள்வதும் தப்பு இல்லையா? முன்னைய காலத்தில்தான் பெண்கள் வீட்டுப்படி தாண்டாதவர்களாய் இருந்தார்கள். ஆனால் இன்றைய நவீன காலத்தில் எத்தனையோ சாதனைகளைப் பெண்கள் படைக்கிறார்கள். ஆண்களுக்கு நிகராக வேலைகளைச் செய்கிறார்கள். உயர் பதவிகளில் அமர்ந்துகொண்டு தமது திறமைகளை வெளிக்காட்டிக்கொண்டு இருக்கிறார்கள். இவர்களுக்கு இன்னும் உற்சாகம் ஊட்டி தட்டிக் கொடுக்க வேண்டுமே தவிர தட்டி வீழ்த்துதல் கூடாது.

இந்தக்கால கட்டத்தில் எத்தனை குடும்பங்கள் ஆண் துணை இல்லாமல் இருக்கிறார்கள். அந்தக் குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்த வேண்டிய கடமை அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணுக்குத் தானே இருக்கிறது. அந்தப் பெண் தனது குடும்பக் கஷ்டத்தைப் போக்க வேலைக்குச் செல்ல வேண்டிய ஒரு கட்டாயத்துக்குத் தள்ளப் படுகின்றாள். அப்படி வேலைக்குச் செல்லும் பெண் வேலைத் தளங்களில் இருந்து தாமதமாக வீடு வந்து சேரும் சூழ்நிலைகளும் உருவாகும் அல்லவா? அதற்காக அந்தப் பெண்ணைப்பற்றி தவறான வார்த்தைகளையும் தவறான கதைகளையும் பிரயோகித்தல் சரியானதா? அநேகமான பெண்களுக்கு தாமும் எல்லோரையும் போன்று சாதிக்க வேண்டும் என்ற ஆசை, கனவு [illegible] இருக்கும். ஆனால் தான் சாதிக்க நினைக்கும் [illegible] மற்றவர்களை எண்ணுவதைப்போல் தன்னையும் எண்ணுவார்களோ என்ற பயத்தால் தமது ஆசைகள், கனவுகள், திறமைகள் எல்லாவற்றையும் மறைத்துவிட்டு வாழ்ந்துகொண்டு இருப்பார்கள். திறமைகள் இருக்கும் பெண்களுக்கு நாம் எல்லோரும் உற்சாகம், உதவிகள் எம்மால் இயன்ற அளவு செய்யவேண்டும். ஒரு பெண் சாதித்தாலும் இந்தப் பெருமை ஒட்டுமொத்த பெண்களுக் குத்தானே. ஏன் நாம் இதனைப் புரிந்து கொள்வது இல்லை?

எங்களைப் பெற்ற அன்னை எங்களைச் சமுதாயத்தில் உயர்ந்த பெண்ணாக ஆக்க எத்தனையோ கஷ்டங்களைத் தாங்குகிறாள். ஆனால் அவளைப் புரிந்துகொள்ளாமல் நாம் பேசுகிறோம். அவர்களின் முழுமையான ஆசைகளையும் எம்மால் நிறைவேற்ற முடியாமல் போனாலும் சிலவற்றையாவது நிறைவேற்றலாம் அல்லவா? அவர்களின் மனம் நோகாமல் நடந்து கொள்ளலாம் இல்லையா?

நாளை இன்னுமொரு வீட்டில் போய் வாழப்போகும் நாம் பெரியவர்களின் அறிவுரைகளைக் கட்டாயம் கேட்கவேண்டும். பெரியவர்களின் அறிவுரைகள்தான் நாளை எம்மை வழிநடத்துகின்ற ''ஒளிக் கீற்றுக்கள்'' எப்போதும் எம் வயதை உடைய பெண்களை எமது சகோத ரர்களாகவும் பெரியவர்களை எமது பெற்றோர்களாகவும் நினைத்து திறமை உடையவர்களாகவும் உதவி செய் பவர்களாகவும் வாழ்ந்தால் எப்போதும் எமக்கு மகிழ்ச்சி தான். புரிந்துகொள்ளும் மனமும் உற்சாகம் கொடுக்கும் குணமும் தினமும் இருந்தால் நாம் படைக்கும் சாதனைகளும் நீண்டுகொண்டே போகும் என்பதில் ஐயம் இல்லை சகோதரிகளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடாமுயற்சியே வெற்றி தரும்



அழகான மலைகள் சூழ்ந்த கிராமம். மலைகளின் ஊடாக சலசல வென பாய்ந்து ஓடும் ஆற்றின் கரையோரத்தில் இரண்டு குருவிகள் ஒரு மரத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன.

ஒருசமயம் பெண் குருவி மூன்று முட்டைகள் இட்டது. முட்டைகளிலிருந்து குஞ்சுகள் எப்போது வெளியே வரும் என எண்ணி குருவிகள் இரண்டும் ஆவலாகக் காத்திருந்தன.

ஒரு நாள் ஆற்றில் நீரோட்டம் அதிகமாக இருந்தது. ஆற்றில் அலை உயர்ந்து கொண்டே இருந்தது. காற்றும் வேகமாக வீசிக் கொண்டிருந்தது. அப்போது ஓர் அலை மேலெழுந்து குருவிகளின் கூட்டையும் அத்தோடு சேர்த்து உள்ளிருந்த முட்டைகளையும் ஆற்றுக்குள் தூக்கிப் போட்டது.

ஆற்று வெள்ளத்தில் முட்டைகள் அடித்துச் செல்லப்பட்டன. இதை சற்றும் எதிர்பாராத குருவிகள் இரண்டும் மனம் வருந்து அலறின. ஆற்று தேவதையை நோக்கிப் பிரார்த்தனை செய்தன.

எனினும் ஆற்று தேவதை அலைவகளின் பிரார்த்தனைக்கு செவிசாய்த்ததாகத் தெரியவில்லை! மனம் வருந்திய குருவிகள் தங்களது சிறிய அலகுகளால் ஆற்று நீரை எடுத்துக் கரையில் கொட்டிக் கொண்டிருந்தன. இப்படியே நாள்கள் பல சென்றன.

ஒருநாள் அவ்வழியே வந்த நாரதர், "குருவிகளே, என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். குருவிகள் நடந்ததை விளக்கிக் கூறின. குருவிகள் கூறிய கதையைக் கேட்ட நாரதர் சிரித்துக் கொண்டே, "நீங்கள் செய்யும் இந்த முயற்சி வீண்! ஒருநாளும் ஆற்று நீர் முழுவதையும் உங்களால் எடுத்துவிட முடியாது!" என்று கூறிவிட்டுச் சென்றார்.

அவர் கூறியதை எண்ணி மனம் வருந்தாமல், தாங்கள் செய்து கொண்டிருந்த பணியைத் தொடர்ந்து செய்தன அந்தக் குருவிகள். எத்தனை நாள்கள் தொடர்ந்து செய்தாலும் ஆற்றுநீர் குறைந்தபாடில்லை. திடீரென்று ஒரு நாள் ஆற்றின் நடுவே ஒரு அழகிய தேவதை தோன்றினாள்.

தேவதையின் முகத்தில் புன்னகை! தேவதை பரிவுடன் குருவிகளிடம், "குருவிகளே, நான்தான் ஆற்று தேவதை! இதோ பெற்றுக் கொள்ளுங்கள் உங்களது முட்டைகளையும் கூட்டையும்.

நான் இதை உங்களிடம் ஒப்படைத்ததற்குக் காரணம், நாரதர் உங்களை எள்ளி நகையாடினாலும், நீங்கள் விடாமுயற்சியுடனும் மன உறுதியுடனும் உங்களது பணியைத் தொடர்ந்து செய்ததுதான்" என்று கூறிவிட்டு முட்டைகளையும் கூட்டையும் ஒப்படைத்துவிட்டு மறைந்து போனாள்.

இது போலத்தான்... கல்வியெனும் கரையினைக் கடக்க விடாமுயற்சியும் மன உறுதியும் தேவை!

ப.பிரிலைல்

## மாணவர் தூரிகை







ம.காவியா, தரம்-7சி, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை







ஜீ.ஆர்.நிந்தியா, தரம்-4சி, சண்டுக்குளி மகளிர் கல்லூரி



த.திவ்வியா, தரம்-7, யா/சன்.மார்க்.மகா.வி.



அ.கயானா, தரம்-2, பெரியபண்டிவிரிச்சான் ம.வி.

# சிறந்த உடற்பயிற்சி

சிறுவர் சிறுமியருக்குத் தோட்டத்தில் விளையாடுவது என்றால் கொள்ளைப் பிரியம்தான். அதிலும் மரங்களில் ஏறி இறங்குவது என்றால் கேட்கவே வேண்டாம். உண்மையிலேயே அது அவர்களுக்கு ஒரு சிறந்த உடற்பயிற்சியாக அமையும். அவர்களின் கை கால்களில் உள்ள தசைகள் விருத்தி அடைவதற்கு உதவி செய்யும்.

உடற்பயிற்சி தருவது மட்டும் அல்லாது வேறு ஒரு நன்மையும் இந்த வகையான தொழிற்பாடுகளில் கிடைக்கின்றது. அதாவது, சிறுவர்கள் தாம் வாழும் சூழலை ஆராய்ச்சி செய்து கற்கும் இயல்பு உடையவர்கள். இவ்விதமான மரம் ஏறும் தொழிற்பாடுகள் பிள்ளைகளில் ஆராய்ச்சி இயல்புகளை அதிகப்படுத்துகின்றன. இவ்விதமாகத் தமக்கு விருப்பமான, சுதந்திரமான விளையாட்டுக்களினூடாக அவர்கள் கற்கும் அனுபவக் கல்வியானது அவர்களின் பாடசாலைக் கல்விக்கு நிச்சயம் உதவி செய்யும்.

பெற்றோர்களாகிய நாம், பிள்ளைகள் நல்ல சூரிய ஒளியிலும் சுத்தமான காற்றிலும் வெளிப்புறச்சூழலிலும் விளையாட சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். வெளிப்புறச் சூழல் விளையாட்டுக்களில் ஆபத்துக்கள் அதிகம். பிள்ளைகளின் பாதுகாப்பிற்கு பெற்றோர் பூரண உத்தரவாதம் அளிக்க வேண்டும்.



# அறிந்து கொள்ளுங்கள்

★ வேகமாக நீந்தும் மீன் எது?
சுறா

★ வேகமாக ஓடும் விலங்கு எது?
சிறுத்தை

★ நாக்கு இல்லாத பிராணி எது?
முதலை

★ சிறிய இதயம் கொண்ட மிருகம் எது?
சிங்கம்

★ நினைவாற்றல் கூடிய விலங்கு எது?
யானை

★ சத்தம் போடாத விலங்கு எது?
ஒட்டகச்சிவிங்கி

★ விண்வெளிக்குச் சென்ற முதல் உயிரினம் எது?
லைக்கா என்ற நாய்

சி.பிரியங்கா,
தரம் 8டி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

## விடை தெரியுமா? 179

### உங்களுக்கும் பரிசில்கள்

1. தமிழில் முதலில் தோன்றிய இலக்கண நூல் எது?
2. பறக்கும் போதே தூங்கும் பறவை எது?
3. ஐரோப்பாவின் நோயாளி என அழைக்கப்படும் நாடு எது?
4. இலங்கையின் தேசிய மலர் எது?
5. சர்வதேச சிறுவர் தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?

### விடைகள் 176

1. ஆனந்த சமரக்கோன்
2. சேர்.சீ.வி.இராமன்
3. ஃப்ளோரன்ஸ் நைற்றிங்கேல்
4. [illegible]
5. [illegible]

## வெற்றி பெற்றோர் விவரம் (176)

* உ.ஜெனா, தரம்- 10, கி[illegible] / வேரவில் இ.ம.வி.
* சோ.சங்கீதன், தரம்- 6பி [illegible]ரீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
* ர.ஜோகினி, தரம்-9பி, [illegible].உ.பா.
* ந.சஜீவன், தரம்- 7டி, வ[illegible]ா தமிழ் மத்திய மகா.வி.
* பி.வினுஜா, உடுவில் மக[illegible] கல்லூரி
* தி.சுஜீவன், தரம் -7பி, ஹாட்லிக் கல்லூரி.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 06.10.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருமாறாத கைக்குட்டைகள்

ஆடைகளே இல்லாமல் இருந்தான் மனிதன் ஒரு காலத்தில். அதை நாகரிகமற்ற கற்காலம் என்றோம். பின்பு உடல் முழுவதையும் மறைக்கும் வகையில் இலை தழைகளைக் கொண்டு தன்னை மறைத்துக் கொண்டான்.

சிந்திக்கத் தொடங்கியிருந்தான் மனிதன். பின்பு இன்னும் வளர்ச்சி அடைந்து ஆடைகள் என்ற பெயரில் பல துணிகளை உடல் முழுவதும் சுற்றிக்கொண்டான். மனிதன்தான் நாகரிகத்தின் உச்சம் அடைந்தான். சுற்றிய ஆடைகளை சற்று தேவைகளுக்கு ஏற்ப அழகு படுத்த தொடங்கினான். அதே ஆடை இன்று மெல்லமெல்லகுறையத்தொடங்கி மீண்டும் ஆதிகாலத்திற்கு செல்லும் நிலைமைதான்.

கைக்குட்டை அளவில் உடுத்திக் கொள்வதுதான் இன்றைய அதி நவீன வளர்ச்சியின் அழகான மகத்துவம் என்று ரசிக்கத் தொடங்கிவிட்டோம். இனி வரும் காலங்களில் ஆடை என்ற ஒன்று முகவரி இழந்து எங்கேனும் தொலைந்து போகும் நிலை வரலாம். சரி இது ஒரு பக்கம் இருக்கட்டும்.

உலகத்தில் இதுவரை உருவாக்கப்பட்ட ஆடைகளின் வடிவமைப்பை கணக்கெடுக்கத் தொடங்கினால் பல நூற்றாண்டுகளைப் பிடிக்கும் என்று ஒரு தகவல் கூறுகிறது. இதுதான் உண்மையும் கூட என்று சொல்ல வேண்டும். காரணம் காலத்தின் வேகத்தை மிஞ்சும் அளவுக்கு மனிதனின் புதுமைகள் அதிவேகமாக பயணித்துக் கொண்டிருக்கிறது இன்றைய அவசர உலகத்தில்.

இன்று வட்டமாக இருக்கும் ஆடை ஒன்று நாளை சதுரமாக மாறிவிடுகிறது. நாளைக்கு சதுரமான ஆடை எந்த வடிவத்தில் உருவம் பெரும் என்று யாரும் யூகிக்க முடியாத அளவில் மனிதர்களாகிய நாம் ஆடைகளில் தினமும் ஒரு புதுமையை உருவாக்கி கொண்டே இருக்கிறோம்.

என்னதான் இந்த உலகத்தில் இதுவரை ஒவ்வொரு ஆடையும் பல வடிவங்களைக் கொண்டு திகழ்ந்தாலும் இன்னும் உலகத்தில் ஒரே வடிவத்தை மட்டுமே அதிகமானவர்கள் பயன்படுத்தும் ஒன்று உள்ளது என்றால் அது கைக்குட்டை ஒன்றுதான் என்று சொல்லவேண்டும்.

சரி இந்தக் கைக் குட்டையில் அப்படி என்ன சிறப்பு என்று கேட்கத் தோன்றலாம். நமது மனித இனத்தில் பலர் ஆடைகளை பயன்படுத்துவதற்கு முன்பாகவே இந்தக் கைக்குட்டைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒரு காலத்தில் இன்று மொபைல் போன்களைப் போல அனைவரின் கைவசம் இந்தக் கைக்குட்டைகள்தான் அதிகம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்றும் பயன்படுத்தப்பட்டும் வருகிறது.

சரி இதன் வடிவத்தில் என்ன சிறப்பு என்று நாம் பார்க்கலாம். பொதுவாக இதுவரை கைக்குட்டைகள் அதிகமாக சதுர வடிவத்தில்தான் உருவாக்கப்பட்டு வருகின்றன. இதற்கு ஒரு மிகப் பெரிய காரணமும் அடங்கி இருக்கிறது என்று பலருக்கு தெரிந்திருக்க வாய்ப்புகள் இல்லை.

உலகத்தில் இவ்வளவு மாற்றம் கண்ட நமது நாகரிக துணி வகைகளில் நாம் பயன்படுத்தும் கைக்குட்டை மட்டும் இன்னும் அதிக மாற்றங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு ஒரு மன்னன்தான் காரணம்.

பிரஞ்சு மன்னன் ஒருவர் உலகத்தில் ஆடைகளில் ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணினார்.

அப்பொழுது மனிதன் உடுத்தும் ஆடைகளில் ஒரு போதும் நாம் மாற்றம் ஏற்படாத வகையில் செய்ய இயலாது என்ற எண்ணிய மன்னன், முதன் முதலில் மனிதர்களாகிய நாம் பயன்படுத்தும் கைக்குட்டைகளில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி கைக்குட்டைக்கு என்று முதன் முதலில் சதுர வடிவத்தில்தான் இருக்கவேண்டும் என்று 1785 ஆம் ஆண்டு இதற்காக ஒரு சட்டமே இயற்றி இருக்கிறார்.

ஒருவேளை யாரேனும் இதை மீறி வேறு வடிவத்தில் கைக்குட்டைகளைப் பயன்படுத்தினால் அவர்கள் இறக்கும்வரை சிறையில் அடைக்கப்படுவார்கள் என்ற பயங்கர தண்டனையையும் அறிவித்து இருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இந்த சட்டத்திற்குப் பிறகுதான் சர்வதேச கைக்குட்டை தயாரிப்பாளர்களும் கைக் குட்டைகளை சதுர வடிவில் மட்டுமே தயாரிக்கத் தொடங்கி இருக்கிறார்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். அடு மட்டுமல்லாது ஜப்பான் , இலங்கை போன்ற நாடுகளில் கைக்குட்டை வைத்திருப்பது நன்கு படித்தவர்களின் அடையாளமாகவும் கருதப்படுகிறது.





Portrait of King Ludwig
by Ferdinand von Piloty, 1865

# ஏட்டுச்சுரைக்காய் ...

14ஆம் பக்கத் தொடர்ச்சி..

நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சித்துறைகளை மாற்றியமைக்க வேண்டும்.

★வளர்ந்து வரும் தொழில் சந்தை தேவைப்பாடுகளுக்கு பொருந்தும் வகையில் தகவல் மற்றும் தொடர்பூட்டல், கணிதம், ஆங்கிலம் போன்ற துறைகளை முன்னேற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

★ஆங்கிலமொழி மூலமான கற்றல் போன்ற உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களின் பண்புகளை உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களும் பின்பற்ற வேண்டியதோடு, உள்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் சுயநிர்ணயம், ஆராய்ச்சியில் உயர்தரம், மற்றும் நிதியிடல் என்பவற்றை மேலும் அதிகரிக்க வேண்டும்.

★அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள், உயர்தொழில் நுட்பக் கல்லூரிகளின் சான்றிதழ்கள் ஊடாக மாத்திரம் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும். இந் நிறுவனங்களே தம் பட்டதாரி மாணவர்களின் தகுதியை அறிந்து அவர்களை தேர்ந்தெடுத்து தொழில் வாய்ப்பினை வழங்க வேண்டும்.

★பெற்றோர்கள் மாணவர்களது விருப்பத்திற்கு அமையவும், அவர்களின் திறமையை அறிந்து அதற்கேற்ப அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். ஜப்பான் போன்ற மேலை நாடுகளில் கல்வியில் அக்கறை குறைந்த மாணவர்களை தொழில் சந்தையில் ஈடுபடுத்துகின்ற நிலை உள்ளது. எமது அரசாங்கமும் இந்நிலையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

★பாடசாலை மட்டங்களில் தொழில்சார் கல்வியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுவதுடன் வெளிநாடுகளில் 18 வயதைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு கல்வியைத் தொடர்வதன் தொழில் செய்து கற்க வேண்டும் எனும் நிபந்தனையுடன் தொழிலையும் கல்வியையும் அந் நாட்டு அரசுகள் வழங்கி வருகின்றது. இந்நிலையை எமது நாட்டிலும் ஏற்படுத்துவதுடன் அதிலும் குறிப்பாக பல்கலைக்கழகங்களில் கற்கும் மாணவர்களுக்கு அவர்களின் கற்கை காலங்களின் போது குறைந்தது ஆறு மாத தொழிற் பயிற்சியை அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுடன் வழங்கப்பட வேண்டும்.

★பட்டதாரிகள் எமக்கான பட்டங்கள் என்ற குறுகிய வட்டத்திற்குள் நின்று வெறும் பட்டதாரிகளாக இருக்கின்றோம் என்ற நிலையை மாற்றி தமது ஆளுமையை விருத்தி செய்ய வேண்டும். அதாவது எம்மை மட்டும் நினைத்து சுயலாபமாக வாழ்வதை விடுத்து தன் சமூக, இன நலன் கருதி பொதுநல நோக்கோடு செயற்படுபவர்களாக மாற வேண்டும்.

★உள்நாட்டு, பன்நாட்டு மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புக்களை உருவாக்கக் கூடிய இயலாற்றலைக் கொண்ட அறிவு மையமொன்றாக இலங்கையை உருவாக்குவதற்கு இலங்கைப் பொதுப்பல்கலைக்கழக முறைமையை சர்வதேச தரத்திற்கு தரம் உயர்த்தப்பட வேண்டும். பல்கலைக்கழகக் கல்வியில் ஆராய்ச்சி முறையிலான கற்றல் செயற்பாடுகளை முதன்மைப்படுத்துவதோடு, ஆராய்ச்சி மனப்பாங்கை ஊக்குவிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்வர வேண்டும்.

★அரச நியமனங்கள் இன்று அரசியல் வாதிகளின் நியமனங்களாக உருவாகியுள்ளமையால் படித்துப் பட்டம் பெற்றவர்கள் கூட அரசியல்வாதிகளுக்கு துதி பாடியே அவற்றைப் பெறும் நிலை உருவாகியுள்ளமையால் இதற்கு எது முக்கிய காரணம் என்று சற்று யோசிக்கத் தூண்டுகின்றது. அதாவது பட்டதாரிகளின் தகுதிக் குறைவா? அல்லது அரசியல்மயப்பாடா? காரணம் எனும் நிலை முற்றிலும் மாற வேண்டும்.

★உள்வாரிப் பட்டதாரிகளை வெளிவாரிப் பட்டதாரிகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டப்பட வேண்டும். அதாவது வழங்கப்படும் கல்வி முறைமை, சம்பள உயர்வு, என்பவற்றில் முற்றிலும் வேறுபடுத்தப்பட வேண்டும். பல்கலைக்கழக பாட ஒழுங்கு முறைமை மாற வேண்டும். அத்துடன் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை இலகுவில் தெரிந்து கொள்வதுடன் எந்தவகையான போராட்டங்கள் நிகழ்ந்தாலும் கூட ஏனைய விருத்தியடைந்த நாடுகளைப் போல் மாணவர்களின் கல்வி ஸ்தம்பிதம் அடையாமல் தொடர்ச்சியாக விரிவுரைகளை நடத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

★ஓய்வூதியம் பெறுபவர்களின் வயதெல்லையை குறைப்பதன் மூலம் இளம் சந்ததியினரிடையே காணப்படும் வேலையின்மைக்கு ஓரளவேனும் தீர்வு காண முடியும்.

★குறைவிருத்தி நாடுகளின் கல்வியில் இலங்கை முன்நிலையில் வகிப்பது எமக்கு பெருமை தருவதாக இருந்தாலும் கூட இன்று வளர்ந்து




வரும் அறிவு சார் தகவல் தொழிநுட்ப உலகில் போட்டி போடத்தக்கதாக இல்லாமல் இருப்பதே வேதனைதரும் ஒன்றாக உள்ளது. இதற்கு பிரயோக ரீதியான கல்விக் கொள்கை புரையோடியுள்ளமையே காரணமாகும்.

எனவே இவ்வாறான கல்வி முறைமையை மாற்றியமைப்பின் திறமை வாய்ந்த புலமையாளர்களை நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்ற விதத்தில் உருவாக்க முடியும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 254



அனுப்புபவர் பெயர்:..............................

விலாசம்:..............................

..............................

கையொப்பம்:..............................

### இடமிருந்து வலம்

1.காலக்கெடு
5.இது இரண்டொழிய வேறில்லை
7.திரவத்துள் கலத்தல்
8.பாராட்டுக்குரிய பெறுபேறு
9. தற்போதைய காலம்
11. கரியில் இதுவே அதிகம்
13. திரவத்திலிருந்து ஒன்றைப் பிரித்தெடு
15. மன்மதன் காதலி
16. மரியாதை செய்தல்
18. சேவை
19. தலைமைப் பொறுப்பில் இருக்கும் பெண்மணி
20. சேய்க்குத் தாய் ஊட்டுவது
21. வாழ்த்தும்போது இதுபோல தழைத்து, அறுகு கோல வேரோடி என்று கூறுவர்
22. வேத நூல்
23. ஓர் ஏவுகணை வகை

### மேலிருந்து கீழ்

1.செருக்கு
2. கீறு
3. கொடூரம் புரிபவன்
4. பணம்
5. சோறு
6. ஒரு தானிய வகை
8. இறக்கச் செய்தல்
10. இளம் பெண்
12. தலைவன்
14. நான்கு வகை
16. ஒலிக்கும்
17. சிரசு
18. ஊர்வன வகை
20. பாவம் செய்தவன்
21. இணக்கச் சொல்

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 232 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) முதுகு (4) நீதிபதி (8) கரும்பு (10) திண்ணை (11) தாம் (12) சிசு (14) புகுத்தல் (18) தூதன் (19) மேரு (20) சுக்கல் (21) அகம் (22) தழும்பு (23) விளம்பரம்

**மேலிருந்து கீழ்**

(1) முகதா (2) துரும்பு (3) கும் (5) திதி (6) பண்ணை (7) திணை (9) புசித்தல் (13) சுதன் (15) குதூகலம் (16) கரும்புள் (17) ஆசுகவி (19) மேகம் (21) அழும் (22) தர

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 254**
***நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.***

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (10.10.2012 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.234இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 14.10.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 232 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**சி.உதயகுமார்,**
கைதடி மேற்கு, கைதடி.

**2 ஆம் பரிசு**
**க.கோமதி,**
இல. 54/2, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.

**3 ஆம் பரிசு**
**P. சண்முகநாதன்,**
மதுசன் ஸ்ரோர்ஸ், இலுப்பைக் கடவை, மன்னார்.

**4 ஆம் பரிசு**
**திருமதி தி.புவனா,**
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

**5 ஆம் பரிசு**
**எஸ்.அட்சயா,**
இல.27, மெமோறியல் ஒழுங்கை, மானிப்பாய்.

**பாராட்டுப் பெறுவோர்**

**சி.பாலசுந்தரம்,**
கல்வளை, சண்டிலிப்பாய்.

**அ.ஸ்ரீஸ்கந்தராஜா,**
13/11 புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

**வி.செல்வநாயகம்,**
சிவன்கோயில் வீதி, புத்தூர்.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு பணப் பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.*

## தாழ்ப்பாள் போடப்பட்ட சந்தோஷங்கள்

கூப்பிடுங்கள்
அந்தச் சுதந்திரத்துக்கு
தூசு பிடிக்காத பொழுதுகளை
அமைதி கண் சிமிட்டாமல்
அன்னையும் அண்ணனும்
கூடவேயிருந்த
அந்த வெட்டவெளியில்
பௌர்ணமி நனைத்த
எம் குடிசையின் முற்றத்தை

எம் ஆடு, மாடு, கோழி
எல்லாம் கூடு திரும்பிய பின்
நாம் குடிசைக் கதவைச்
சாத்திவிட்டு
எதிரே இந்த
பனங்கூடல்களுக்குள்
ஒளித்துப் பிடித்து
விளையாடிய
காலத்தைக் கூப்பிடுங்கள்

என் சுதந்திரம்,
எங்களிடமிருந்த அந்த
அமைதி இந்த இரண்டும்
கசாப்புக் கடைக்காரனின்
இடது கரத்தில் மாட்டிய
எலும்புகளாக இருந்தன

செவிடாகிப் போகாத
அந்தப் பொழுது
தூசு மண்டாத அந்த
சந்தோஷம், கட்டுப்பாடில்லாத
அந்த இன்பம்
அழுக்குப் படியாத
அந்தப் புன்னகை...

செவிடாகி, தூசு மண்டி
ஒரு கட்டுக்குள் அடைபட்டு
அழுக்குப் படிந்து
அலுத்துப் போனது

நடைமுறை வாழ்க்கை

வன்முறை என்பது
கத்தியும் கத்தியும்
குத்தப்படுவது மட்டுமல்ல
அதிகாரங்களால்
ஆளப்படுபவர்களின்
மனங்களில்
இயலாமையை உண்டு
பண்ணுவதும்
வன்முறைதான்

நவீன மயமாக்கலை
தடுப்போம்
உள்நாட்டில் ஏழைகளை
உற்பத்தி செய்துவிட்டு
கூப்பிடுங்கள்
வெளிநாட்டு
முதலாளித்துவத்தை
எங்களுக்கு குழி
தோண்டுவதற்கு

எம்.நேதா, நெடுந்தீவு.



## எங்கள் வாழ்வு

தறப்பாளும்
நாலு தடிகளுமே
எங்களை
வரவேற்கின்றன

நெல்லும் புல்லும்
விளைந்த நிலத்தில்
மண்டை ஓடுகளும்
சிதைந்த கூரை
ஓடுகளுமே
அறுவடை
செய்யப்படுகின்றன

மெழுகுதிரியும்
குப்பி விளக்குமே
விழிகளுக்கு
ஒளியூட்டி நிற்கின்றன

காட்டும் பாம்புகளும்
காமுகப் பாம்புகளும்
ஜீவனம்
கொள்ளும்
இந்த மண்ணில்

நாங்கள்
மேய்ப்பான் அற்ற
மந்தைகளாக
அலைந்து உலைந்து
தொலைந்து
போகின்றோம்

ஆ.முல்லைதிவ்யன்



## என் மனம்

என் மனம்
என் மீது
குற்றம் சொல்கிறது
தான் அழுது
கொண்டு
இருக்கையில்
நான்
சிரிக்கின்றேனாம்...

தாவடியூர் கதிரவன்



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எங்கே போகிறோம்..

■ தானா

குடாநாட்டிலிருந்து வெளி வரும் தமிழ்த் தினசரிப் பத்திரிகையொன்றின் நான்கு நாள்களுக்கு முந்திய பதிப்பொன்றில் வெளியாகியிருந்த செய்தியொன்றின் சாராம்சம் இது.

கட்டம் கட்டப்பட்டு "வாடகைக்கு மலர் தூவிய விமானப்படை ஹெலி" என்ற தலைப்பில் வெளியாகியிருந்த அந்தச் செய்தியில் யாழ்.குடாநாட்டின் குறிப்பிட்டதொரு பகுதியிலுள்ள ஆலயமொன்றின் தேர்த்திருவிழாவின்போது சுமார் ஒன்றரை லட்சம் ரூபா கட்டணம் பெற்றுக் கொண்டு விமானப் படையின் உலங்கு வானூர்தியொன்று சுவாமி தேரில் பவனி வந்தவேளை தேரின் மீது வானத்தில் பறந்தபடியே மலர்தூவிச் சென்றது" எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட செய்தி மனதில் ஏற்படுத்திய உணர்வலைகள் காரணமாக அந்தக் காலத்தில் நாட்டில் போர் உச்சம் பெற்றிருந்த வேளையில் அரச விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்களும் விநியோக விமானங்களும் உலங்கு வானூர்திகளும் போரில் தமது பங்களிப்பைச் செலுத்திய சம்பவங்களை நேரில் கண்டும் கேட்டும் அனுபவித்த நிகழ்வுகளை மனது இரைமீட்டிப் பார்க்க முயன்றது.

போர் முடிவுக்கு வந்ததன் பின்னரான காலகட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர் உற்சவத்தன்று சுவாமி தேரில் வீதியுலா வரும் வேளை படைத்தரப்பினரின் ஏற்பாட்டில் உலங்குவானூர்தியிலிருந்து தேர்மீது மலர் தூவும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. அதையொட்டி தாமும் அத்தகைய புதுமையை, சாதனையை நிகழ்த்திக் காட்ட சம்பந்தப்பட்ட கோயிலின் தேர்த் திருவிழாவை நடத்தும் தரப்பினர் விரும்பியிருக்கக் கூடும். பெயரும் புகழும் விளம்பரமும் தேடிக் கொள்ள விளைவது இயற்கையான மனித சுபாவம்தானே? ஆனால் தேரில் பவனிவந்து தன்னைத் துதிக்கும் அடியார்களுக்கு அருள் பாலிக்கும் ஆண்டவன், இந்தப் பெரும் பணச் செலவில் மலர் தூவியதன் மூலம் மன மகிழ்ந்திருப்பாரா என்பது சந்தேகமே.

யாழ்.குடாநாட்டில் போர் நடவடிக்கைகள் உச்சம் பெற்றிருந்த வேளையில் விட்டு விட்டு வெவ்வேறு அரசுத் தலைமைகளாலும் அந்நிய நாட்டின் அமைதிப் படையினராலும் போர் தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட வேளைகளிலெல்லாம் விமானப்படை விமானங்களினதோ உலங்கு வானூர்திகளினதோ இரைச்சல் சத்தம் குடாநாட்டு மக்களை, பெரியவர், சிறுவர் சிறுமியர் என்ற பாகுபாடின்றி ஒட்டுமொத்த மக்களையும் கிலிகொள்ள வைத்ததுண்டு. வானில் வட்டமிடும் குண்டு வீச்சு விமானங்களைக் கண்டதும் பருந்தைக் கண்ட கோழிக்குஞ்சுகள் அலறி அடித்துக் கொண்டு தாய்க் கோழியின் சிறகுகளுக்குள் அடைக்கலம் தேடிக் கொள்வது போன்று வீடுகளுள் இருந்தோர், பாதைகளில் பயணித்தோர் மற்றும் வெவ்வேறு அலுவல்களில் ஈடுபட்டிருந்தோர் போட்டது போட்டபடி விட்டு விட்டு பாதுகாப்புத் தேடி அருகில் எவர் வீட்டிலாவது இருந்த பதுங்குழிகளுக்குள் தஞ்சம் புகுந்த காட்சிகள், நினைவுகள் மனதில் விரிகின்றன.

நோட்டம் பார்த்தல் என்ற பெயரில் இலக்கின்றி வானில் அங்குமிங்கும் பறந்து திரிந்த உலங்கு வானூர்திகள், ஒரு சிறு சந்தேகம் தோன்றினாலும் பாதைகளில், குறுக்கொழுங்கைகளில் ஏதோ வெவ்வேறு சோலிகளுக்காக பயணித்த வாகனங்களை அவை கார், வான், மோட்டார்சைக்கிள், ஏன் பலசந்தர்ப்பங்களில் துவிச்சக்கர வண்டிகளில் பயணித்தோரையும் கூட இலக்கு வைத்து பலியெடுக்கும் நோக்கில் வானத்தில் பயணித்தபடியே சூடு நடத்திய சம்பவங்கள் குறித்த நினைவுகளையும் மனது இரைமீட்டிப் பார்க்கின்றது.

தமக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்கள் சரியானவை தானா? அல்லது தவறானவையா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வக்கற்றுப் போய் குடாநாட்டின் பல பகுதிகளில் பல சந்தர்ப்பங்களில் அப்பாவிப் பொதுமக்களது வீடுகளின்மீது குண்டுவீச்சு விமானங்கள் குண்டு வீச்சு நடத்தி அப்பாவிப் பொதுமக்கள் பலரின் உயிர்களைப் பலியெடுத்ததையும் படுகாயங்களுக்கு உள்ளாக்கி, அங்க அவயவங்களை இழக்கவைத்ததனையும் ஒரு கணம் மனது மீள்பார்வை செய்கிறது.

இத்தனைக்கும் அவர்களது இலக்கெல்லாம் விடுதலைப் புலிகளை தாக்கி அழித்தல் என்பதாகவே இருந்தது; அடையாளப்படுத்தப்பட்டது. தமது இலக்கற்ற தாக்குதல் மூலம் இத்தனை விடுதலைப் புலி உறுப்பினர்களைக் கொன்றொழித்தோம் என்ற அவர்களது வீரதீரப் பிரதாபங்கள் அடுத்துவரும் வானொலிச் செய்தி அறிக்கையில் விஸ்தாரமாக விளம்பப்படும். இத்தனைக்கும் இலக்கற்ற விமானக் குண்டுத் தாக்குதல்களால் சேதமுற்ற வீடுகளில் வாழ்ந்தவர்களில் உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்டெடுக்கவும் படுகாயமுற்றோரை மீட்டு வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கவும் முன்வரும் அண்டை அயலார்களுடன் எங்கிருந்தோ அங்கு வந்து பேரும் விடுதலைப் புலிப் போராளிகளும் இணைந்து செயற்பட்டமையையும் மனது ஒரு கணம் எண்ணிப் பார்க்கிறது.

லலித் அத்துலத்முதலி அரசின் பாதுகாப்பு அமைச்சராகச் செயற்பட்ட ஜே.ஆர். தலைமையிலான ஐ.தே.கட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் விமானப் படையின் சகடை விமானங்கள் யாழ்.குடாநாட்டில் மேற்கொண்ட புதுவித தாக்குதல் உத்தி குறித்து இன்றைய எம் இளைய சமுதாயத்தினரில் பெரும்பாலோர் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். வானில் பறக்கும் சகடை விமானம் இருந்தாற்போலிருந்து விமானத்திலிருந்து பீப்பாக்களை, மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் வீழ்த்திச் சென்றுவிடும். உயரத்திலிருந்து வேகமாக கீழ்நோக்கி வரும் பீப்பாக்கள் எங்கோ மக்கள் குடியிருப்புப் பகுதியொன்றில் நிலத்தில் வீழ்ந்து உடைந்து சிதறும். பெரும் வெடிபொருள்கள் வெடித்துச் சிதறப் போகின்றன; பெரும் உயிராபத்தை விளைவிக்கப் போகின்றன என்று ஒரு கணம் அஞ்சி நடுங்கி தேகமெல்லாம் விதிர்விதிர்த்துப் போகும் அந்தப் பகுதிப் பொதுமக்கள் வெடிச் சத்தமேதும் கேட்காததால் ஒரு கணம் மனதைத் தேற்றிக் கொண்டாலும் மறுகணமே தமது மூக்கைப் பொத்திக்கொள்ளும் அளவுக்கு அந்தப் பீப்பாக்களிலிருந்து வெடித்துச் சிதறி ஒழுகும் கழிவுப் பொருள்களின் துர்நாற்றத்தால் அந்தப் பிரதேசமே நாற்றமெடுக்கும்.

இந்த இடத்தில் மற்றொரு விடயத்தையும் குறிப்பிட்டுக் கூறியாக வேண்டியுள்ளது. அந்த வேளையில் குடாநாட்டுப் பொதுமக்கள் விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்கள், உலங்கு வானூர்திகளுக்குத் தத்தம் இரசனைக்கு ஏற்றவாறு வெவ்வேறு பெயர்கள் சூட்டி நாமகரணம் செய்து தமக்குள் அவற்றை அடையாளப்படுத்தி வந்தனர். அந்த வகையில் சகடை, முதலைக் ஹெலி என்ற பெயர்கள் பொதுமக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்தன.

சகடை விமானங்கள் விமானத்திலிருந்து மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் தள்ளி வீழ்த்திய பீப்பாக்களில் மனிதக் கழிவுகள் நிறைக்கப்பட்டிருந்ததாக அந்தக் காலத்தில் பரவலாகப் பேச்சடிபட்டது. அந்த வகையில் தமக்கு வேண்டாத தரப்புக்கள் மீது, எதிரான தரப்பினர் மீது, கட்டடங்கள் மீது கழிவு ஒயில், மிருகக் கழிவுகள் ஊற்றிச் சேதப்படுத்தும் அண்மைக்கால புதிய தாக்குதல் உத்திக்கு அன்றைய சகடை விமானங்களின் "பீப்பாத்" தாக்குதலே 'ஐடியா' வழங்கியிருக்கலாம் என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

எம் ஈழத் தமிழ் உறவுகள் கடின உழைப்புக்கும், கட்டுப்பாடான செலவின் மூலம் சேமிப்புப் பழக்கத்துக்கும் பெயர் போனவர்கள் எனப் பேசப்படுபவர்கள். ஆனால் இன்றைய எமது வாழ்வியலில் நாகரிக மோகத்தால் எமது கலாசார விழுமிய கட்டுக்கோப்பிலிருந்து நாம் விலகிச் செல்கிறோம் என நண்பரொருவர் கவலைப்பட்டார். உலங்கு வானூர்தியிலிருந்து பூத்தூவிய சம்பவத்தை நான் விவரித்தபோது "பார்த்தீரா, பார்த்தீரா நாம் எங்கே போகிறோம் என்று. தெரிந்தவரோ, உறவினரோ ஒருவர் காலமாகிவிட்டால் அங்கு சென்று அவரது இழப்பால் துயரமுறும் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறித் தேற்றி, அவர்களது துயரத்தில் நாமும் பங்குகொள்வது அன்றைய நடைமுறை. அண்மைக்காலமாக 'பசை' உள்ள தரப்பைச் சேர்ந்த ஒருவரோ, சமூக மட்ட பிரபல்யம் கொண்ட ஒருவரோ காலமாகிவிட்டால் மலர் வளையங்களுடன் செல்லும் வழக்கம் பிரபல்யமாகியுள்ளது. யார் கண்டது? நல்ல பசையுள்ள ஒருவரின் மரண ஊர்வலத்திலும் உலங்கு வானூர்தியிலிருந்து பூத்தூவி அஞ்சலி செய்தாலென்ன என்று எமது தரப்பினரில் ஒரு சிலர் சிந்தித்தால் அதுவென்ன இயலாத காரியமா? பணம் பாதாளம் வரை பாயும் என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள்" என்றார் எனது நண்பர் வேடிக்கையாக. 'வாடகைக்கு மலர் தூவிய விமானப் படை ஹெலி' என்ற தலைப்பில் செய்தி பிரசுமாகியிருந்த அந்தப் பத்திரிகையின் அன்றைய தலைப்புச் செய்தியின் சாராம்சம் "வவுனியா செட்டிக்குளம் மெனிக்பாம் முகாமில் கடைசியாகத் தங்கியிருந்த 1600 இடம்பெயர்ந்த முல்லைதீவுப் பகுதிப் பொதுமக்களை மீளக்குடியமர்த்துவதாக அழைத்துச் சென்று முல்லைத்தீவு சூரியபுரம் காட்டுப் பகுதியில் எதுவித அடிப்படை வசதிகளுமின்றி சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் அநாதரவாக இறக்கிவிட்டுள்ளனர்" என்பதாகும்.

போரால் பாதிக்கப்பட்டு தமது சொந்த நிலங்களிலிருந்து வெளியேறி தமது சொத்து, சுகங்கள் அத்தனையையும் இழந்த நிலையில் இடைத்தங்கல் முகாம்களில் தஞ்சமடைந்து கடந்த மூன்று ஆண்டுகளாக துன்பதுயரங்களுடன் வாழ்க்கையை ஓட்டிய எம்மவர்கள் இன்று தமது சொந்த இடங்களுக்குத்தானும் திரும்பிச் சென்று குடியேற இயலாது வாழ்க்கைச் சிரமத்தின் மத்தியில், இல்லாமையால் இடர்பட்டு, ஏதிலிகளாய் நிற்கும் நிலையில் எம்மால் அவர்களுக்கோ, அவர்களைப் போன்ற போரின் பாதிப்பால் தமது எதிர்கால வாழ்க்கையைக் கட்டியெழுப்ப இயலாது தடுமாறும் ஏனைய பாதிக்கப்பட்ட எம்மவருக்கோ இயன்ற உதவியெதனையும் செய்துதவ நாம் மனம் கொள்ளாதிருப்பதேன்? மனமிருந்தும் அதற்கு இடமில்லாதிருப்போர் எம்மில் பலர் உள்ளனர். ஆயினும் மனமிருந்தால் இடமுண்டு என்பதற்கேற்ப வசதி வாய்ப்புக் கொண்டோர் இன்று இன்னல்களால் துவண்டு நிற்கும் எம்மவர்களுக்குத் தம்மாலான உதவிகளை வழங்க முன்வரலாமல்லவா?

தனியொரு கையை அசைத்து ஓசை எழுப்ப இயலாது என்பது யதார்த்தம். எமது சமூகம் இந்த விடயத்தில் மனது வைத்தால் ஒன்றிணைந்து முயன்றால் இத்தகைய ஏதிலிகளின் இருண்ட வாழ்க்கையை ஒளிமயமாக்கலாம். சமூக மட்ட அமைப்புக்கள், எமது எதிர்கால இளைஞர் சமூகங்கள் இது குறித்து மனது வைத்துச் செயற்பட்டாலென்ன? ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பது முதுமொழி. எமது சமயம் சார் அமைப்புக்கள், கோயில் நிர்வாகங்கள் இந்த விடயத்தில் அக்கறை காட்டினால் அது முழுச் சமுதாயத்துக்குமே பயன் தருவதாய் அமையும்.

வலி.வடக்கில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஆலயமொன்றின் நிர்வாகத் தரப்பு இதற்கு ஏற்கனவே முன்னுதாரணமாகச் செயற்பட்டு பெரும் அறப் பணிகளை முன்னெடுத்துப் பெயரீட்டியுள்ளதே. நாமும் அவ்வழி சிந்தித்தாலென்ன? ★



# வருமுன் காப்போம்

மாரி காலம் தொடங்கிவிட்டது. மழையோடு சேர்ந்து இடியும் மின்னலும் இலங்கையை இனி அடிக்கடி முத்தமிடப் போகின்றன. "இடி மின்னல் தாக்கி உயிரிழப்பு" என்றோ அல்லது இலத்திரனியல் உபகரணங்கள் சேதமென்றோ செய்திகளும் பிறக்கப்போகின்றன.

ஆனால், உண்மையிலேயே முன்னெச்சரிக்கையோடு இருந்தால் இந்த இடி மின்னல் தாக்குதலில் இருந்து தப்பிக்க முடியும். பொதுவாக மின்சாரம் பாயும் இடங்களில் மழை பெய்யும் நேரங்களில் நடமாடுவதைத் தவிர்க்க வேண்டும். அத்தோடு வெட்ட வெளியாக உள்ள பிரதேசங்களில் நடமாடுவதும் மின்னல் தாக்குதலில் பாதிக்கப்படும் சம்பவங்களை அதிகரிக்கவே செய்யும்.

இதேவேளை வீட்டிலுள்ள மின் உபகரணங்களை எப்போதும் மின் இணைப்போடு பொருத்தி வைத்திருக்கக் கூடாது. அத்தோடு தற்போது வீட்டுக்கு வீடு கூரைகளில் குந்தியிருக்கும் 'டிஸ் அன்ரனாக்கள்' வழியாக தொலைக்காட்சிக்கு வரும் இணைப்பும் மின் தாக்கத்தை அதிகரிக்கச் செய்யும். ஏனெனில் செய்மதிகளில் இருந்து பரவுகின்ற அலைக் கதிர்களை ஓரிடத்தில் குவியப்பண்ணி, அதில் இருந்து கிடைக்கும் சமிக்ஞைகள் மூலமே அலைவரிசைகளை தொலைக்காட்சிக்கு அனுப்புவதே 'டிஸ் அன்ரனாக்களின்' வேலை. எனவே விண்ணில் பரவும் மின்சாரக் கதிர்களையும் இந்த அன்ரனாக்கள் குவியப் பண்ணி தமக்குள் உள்ளீர்த்துக்கொள்வதற்கான சாத்தியங்கள் அதிகம். எனவே இத்தகைய 'டிஸ் அன்ரனா', மற்றும் கேபிள் இணைப்புகள், மின்சார இணைப்புகள் என்பவற்றை மழை பெய்யும் நேரங்களில் தற்காலிகமாக துண்டித்து, மின்னல் தாக்குதலில் இருந்து இயலுமானவரை நம்மையும் மின்னியல் உபகரணங்களையும் காத்துக்கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மோடிக் கூத்தில் பேராற்றல் கொண்டவர் மரபுக்கலை வாரிதி செ.டானியல் பெலிக்கான்

■வயாவிளான் தவமைந்தன்

இனிமையான மெட்டுக்களையும் அழகான ஆடல்களையும் சந்தம் கொண்ட கச்சிதமான பாடல்களையும் கொண்டமைந்து காணப்படுவது தென்மோடிக் கூத்தாகும். கூத்து வடிவங்களுள் இராக நுட்பம் நிறைந்ததாகவும் இதுவே விளங்குகின்றது. கத்தோலிக்க மக்களின் உயிராக விளங்கும் இக்கலை வடிவமானது அந்த மதத்தின் வேதசாட்சிகளின் (புனிதர்கள்) வரலாறுகளை நாடகமாக நிகழ்த்திக் காட்டும் சிறந்த ஊடகமாக இன்று வரை திகழ்ந்து வருகின்றது.

இந்தத் துறையில் எழுபது ஆண்டுகளுக்கும் மேலான பட்டறிவு கொண்ட மேதையாகவும் எண்பதுக்கும் அதிகமான கூத்துக்களில் நடித்த முதுகலைஞராகவும் நூற்றுக்கும் மேற்பட்ட கூத்துக்களை நெறிப்படுத்தியிருக்கும் அண்ணாவியாராகவும் இன்றுவரை மேடையேறி நடிக்கும் ஆற்றலுடையவராகவும் கலைப் பணியாற்றி வருபவர் நாட்டுக்கூத்து மாமேதை செ.டானியல் பெலிக்கான்.

மறைந்த செபஸ்ரியான் - மேரிப் பிள்ளை தம்பதியரின் மகனாக 07.07.1928 இல் நாவாந்துறையில் இவர் பிறந்தார். நாவாந்துறை றோ.க.த.க பாடசாலையில் கல்வி கற்ற இவர் பள்ளிப் பருவத்திலேயே கலைத்துறையில் திறன் கொண்டவராகப் புகழ் பெற்று வந்தார். இசை நாடகத் துறையில் பேரார்வம் கொண்டிருந்த இவர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களில் பெண்பாத்திரம் ஏற்று நடிப்பதில் வல்லவராக மாணவப் பருவத்திலேயே விளங்கி வந்தார்.


எனினும் உறவினர்களும் ஊரவரும் தென்மோடிக் கூத்தின் மரபு வழிக் கலைஞர்களாக இருந்தமையால் இவரது ஈடுபாடானது கூத்துக் கலையை நோக்கியதாக மாற்றம் கண்டது. இனிமையாகப் பாடியவாறு நடிக்கும் திறன் கொண்ட இவர் நாவாந்துறை, குருநகர், பாசையூர் போன்ற கூத்துக் கிராமங்களில் அந்தக் காலத்தில் நடைபெற்ற தென்மோடிக் கூத்துக்களைப் பார்த்து இரசித்துத் தனது கேள்வி ஞானத்தை வளர்த்து வந்தார்.

இருபத்து மூன்றாவது வயதில் செபஸ்ரியான் என்னும் கூத்தில் இளவரசனின் தந்தையாக முதன் முதலாக நடித்துப் பெரும் புகழைத் தனதாக்கிக் கொண்ட இவர், தொடர்ந்து பல கூத்துக்களில் கதாநாயகனாகத் தோன்றி நடித்து விரைவான வளர்ச்சியைக் கண்டு கூத்துக்களை நெறிப்படுத்தும் ஆற்றலுடையவராகவும் உயர்வுற்று ஆற்றுகையாளனாகவும் அண்ணாவியாராகவும் தனது கலைப் பணிகளை விரிவுபடுத்திக் கொண்டார்.

ஆழமான இசையறிவு கொண்ட பாடகனாக அந்தக் காலத்தில் தென்மோடி அரங்குகளை அதிர வைத்த, பக்கிரி சின்னத்துரையின் நுட்பமாகப் பாடும் முறைகளால் கவரப்பட்டு அவரையே தனது மானசீகக் குருவாக மனதில் இருத்தி இந்தத் துறையில் ஈடுபட்டு வந்தார் இவர். ஐம்பதுக்கும் அதிகமான கூத்துக்களில் பிரதான பாத்திரமேற்றுச் சிறப்பாக நடித்ததுடன் எந்தப் பாத்திரத்தையும் மனமுவந்து ஏற்று நவரசங்களையும் உள்ளுணர்ந்து வெளிப்படுத்தும் தனித்துவமான கலைஞராகவும் மிளிர்ந்து வந்தார்.

பாடசாலை மாணவர்களுக்கும் சனசமூக நிலையங்களின் இளையோருக்கும் பொறுமையுடன் கூத்துக்களை நெறிப்படுத்திப் போட்டிகளிலும் பங்கு கொண்டு, வெற்றியீட்டச் செய்து அவர்களின் கூத்துக் கலையார்வத்தை தூண்டிப் பல கலைஞர்களை உருவாக்கிய ஆசானாகவும் திகழ்கின்றார். ஊர்காற்றுறை, கரம்பன், நெடுந்தீவு, நாரந்தனை போன்ற இடங்களிலும் மன்னார் மாவட்டத்தின் ஏராளமான கிராமங்களிலும் கூத்துக்களை நெறிப்படுத்தி மேடையேற்றிய சாணையாளராகவும் மிளிர்கிறார்.

நாட்டுக்கூத்துக் கலாநிதி பூந்தான் யோசேப்பு, பாசையூர் குணசிங்கம், குருநகர்சாமிநாதன், நாவாந்துறை வின்சன் டிபோல் போன்ற மேதைகளுடன் இணைந்து ஏராளமான கூத்துக்களில் நடித்த இவர் சுருதி, இலயம் பிசகாது உயர்ந்த நிலையில், எந்த விதமான தளர்வும் இன்றிப் பாடும் அற்புதத் திறன் கொண்டவராக இன்றுவரை மிகுந்த உற்சாகத்துடன் இந்தத் துறையில் ஈடுபட்டு வருகின்றார்.



சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம்

62

யாழ்.நவரச நாடக மன்றம் முதலான பல கலை நிறுவனங்களின் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இவர், தென்மோடிக் கூத்தில் கையாளப்படவேண்டிய இராகங்கள், மெட்டுக்கள், தாளக்கட்டுக்கள், ஆடல் முறைமைகள் போன்ற அனைத்தையும் அறிந்த ஆளுமை கொண்டவராகவும் விளங்குகின்றார்.

இலங்கை வானொலி, தொலைக் காட்சி போன்ற ஊடகங்களிலும் பல நிகழ்வுகளை வழங்கிய இவரால், உருவாக்கப்பட்ட கலைஞர்கள் பலர்ஈழத்திலும் புலம் பெயர்நாடுகளிலும் கூத்துக் கலையை வளர்த்து வருகின்றமை போற்றுதற்குரியதாகும்.

''ஒலிபெருக்கி இல்லாத காலத்தில் கூத்துக்களில் நடித்தவன் நான். மிக உயர்ந்த குரல் வளம் கொண்ட பாடகர்களையே அந்தக் காலத்தில் கூத்துக்களில் நடிப்பதற்குத் தெரிவு செய்வார்கள். இவ்வாறு நன்கு பாடும் திறன் கொண்ட நடிகர்களை மட்டும் கொண்டதாகத் தயாரிக்கப்படும் கூத்துக்கள் பல மாத கால ஒத்திகைகளின் பின்னர்பணச்சடங்காக ஆற்றுகைப்படுத்தப்பட்டு அதன் பின்னர் மேடையேற்றப்படும். நடிகர்களாகிய நாமும் பணம் கொடுத்தே நடிப்போம். பிரதான பாத்திரம் ஏற்பவர்அதிக பணம் கொடுக்க வேண்டும்.


பல ஆண்டுகளாகக் கதாபாத்திரங்களிலும் துணைப் பாத்திரங்களிலும் நடித்து வந்த நான் இந்தக் கலையின் ஊடாகப் பொருளீட்ட நினைத்ததில்லை. இன்று வரை எனது சொந்தச் செலவில் 'கூத்துக்களை நெறிப்படுத்தி மேடையேற்றவும் எந்தப் பாத்திரத்திலும் நடிக்கவும் தயாராகவே உள்ளேன். ஆனால் தற்கால இளையோரிடம் அப்படியான மனப் பக்குவத்தைக் காண முடியவில்லை. எல்லோரும் தமக்கு அரச பாத்திரம் தர வேண்டும் என்றே கேட்கின்றனர்.

அதை விட ஒத்திகைகளிற்கு எவருமே ஒழுங்காக வருவதில்லை. வீடு வீடாகச் சென்று அழைத்து வரவேண்டிய நிலையே தற்போது காணப்படுகின்றது. நவீன வசதிகள் கொண்ட தற்காலத்தில் எமது கூத்துக் கலையை மிகச் சிறப்பாக வளர்க்கலாம் என்றே நான் நினைக்கின்றேன். ஏனெனில் குரல் வளம் குறைந்தவர்களும் மேடையேறி நடிக்கக் கூடிய கிடைத்தற்கரிய வாய்ப்பினை ஒலிவாங்கி தந்திருக்கின்றது. எனவே தற்கால இளையவர்கள் தென்மோடிக் கூத்தின் பெறுமதியை உணர்ந்து அந்தக் கலையை வளர்த்தெடுக்கும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும்'' எனத் தனது ஆழமான கருத்துக்களை முத்தாய்ப்பாக கூறுகிறார் டானியல் பெலிக்கான்.

# சாரப்பருப்பு உடற்பலவீனம் நீக்கும்

## நலம் தரும் தெய்வீக மூலிகைகள்





**காட்டு மாமரம்**

**வேறுபெயர்- சாரப்பருப்பு மரம்**

**தாவரவியற்பெயர் -** Buchanania Lanzan **(புக்கனேனியா லான்சன்)**

**குடும்பம் -** Anacardiaceae **(அனகாடியேசியே)**

இது நடுத்தர உயரமுள்ள மரம். இலையுதிர் காடுகளில் பொதுவாகக் காணப்படும். பட்டை தடித்து கருநிறமாக இருக்கும். அழுத்தமற்றது.

இலைகள் மாவிலை போன்றவை. ஆனால் சற்றுப் பெரிதாகவும் முனை மழுங்கியும் இருக்கும். மாசி, பங்குனியில் பூக்கும். பூங்கதிரில் இருபால் பூக்களுமிருக்கும்.

கனிகள் 1 செ.மீ. அளவுடையவை. பழுக்கும்போது கருநிறமாகும்.

இந்தக் கனிச் சதையினுள் கொட்டை இருக்கும். கொட்டையினுள் இருக்கும் பருப்பே சாரப்பருப்பு எனப்படுகிறது.

100 கிராம் சாரப்பருப்பில் 19 வீதம் புரதம், 59 வீதம் கொழுப்பு, 12 வீதம் மாப்பொருள் என்பனவும் 279 மி.கி. கல்லிசம், 528 மி.கி. பொஸ்பரஸ், 8.5 மி.கி இரும்புச் சத்து, 5 மி.கி. விற்றமின் சி என்பனவும் காணப்படுகின்றது.

சாரப்பருப்பைப் பச்சையாகவோ வறுத்தோ உண்ணலாம்.

இது வாதுமைப் பருப்பின் குணத்துக்கு இணையானதாகக் கொள்ளப்படுகிறது.

சாரப் பருப்பைத் தனித்தோ அல்லது கற்கண்டு, பசுப்பால், சவ்வரிசியுடன் சேர்த்துப் பாயாசமாகவோ செய்து சாப்பிட்டு வர நீர்க்கட்டு, நீரெரிவு, நீர்க்கடுப்பு என்பன மாறும். உடற் பலவீனம் நீங்கும்.

இதன் இலையை வாட்டிப் புண்களுக்குப் போட்டு வர புண் ஆறும்.

இதன் பட்டையில் 13 வீதம் தனின் உள்ளது. பட்டையை அவித்த நீரால் கரப்பன், கிரந்திப் புண்களைக் கழுவிச் சுத்தம் செய்யலாம்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

30.09.2012 முதல் 06.10.2012 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- பிறர் மனம் அறிந்து பேசி நற்பெயர் பெறுவீர்கள். குடும்பத்தின் முக்கிய தேவைகளை நிறைவேற்றுவதில் அதிக ஆர்வம் இருக்கும். இதனால், கடுமையாக உழைத்து தாராள பணவரவு பெறுவீர்கள். இளைய சகோதரர் வாழ்வில் பெறவேண்டிய முக்கிய நன்மை ஒன்றைப் பெற துணைபுரிவீர்கள். உறவினர்களின் வருகையும், புதிய சொந்தங்களின் அறிமுகமும் குடும்பத்தில் அதிக மகிழ்ச்சியை உருவாக்கும். எதிரித்தனம் இல்லாத சுமுக வாழ்வு முறை ஏற்படும். இல்லறத்துணையின் அன்பும், உதவியும் பலமாகப் பெறுவீர்கள். தொழில், வியாபாரம் சார்ந்த வகையில் திட்ட இலக்கு நிறைவேற அனுகூல சூழ்நிலை அமைந்து துணை நிற்கும்.

**இடபம்**- மனதில் குழப்பம் தோன்றும். பின்னர், உங்கள் நலம் விரும்புவோரின் ஆலோசனையின் உதவியால், சில நன்மை பெறுவீர்கள். இளைய சகோதர வகையில் அன்பு, பாசம் சிறந்து உறவினர்களின் நன் மதிப்பு கிடைக்கும். வீடு, வாகன வகையில் கூடுதல் பாதுகாப்பு, பராமரிப்பு அவசியம். பூர்வீக சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். சிலருக்கு கூடுதல் சொத்து சேர்க்கை உண்டு. கடந்த காலத்தில் எதிர் மனப்பாங்குடன் உங்களிடம் நடந்தவர், சமரச அணுகு முறையைப் பின்பற்றுவர். உடல் நல ஆரோக்கியம் பலமுடன் அமைந்து, புதிய பணிகளில் ஆர்வம் கொள்வீர்கள்.

**மிதுனம்**- நற்சிந்தனை, கருணை மனதுடன் செயற்பட்டு, நல்லவர்களின் கூடுதல் அன்பைப் பெறுவீர்கள். உடல்நலத்தில் தகுந்த கவனம் கொள்வதால், அன்றாடப்பணி தாமதமின்றி நிறைவேறும். குடும்ப உறுப்பினர்கள், உங்களின் செயல்களை உற்சாகப்படுத்தும் வகையில் பாராட்டிபேசுவர். சொத்தின் பேரில் கடன் பெற விரும்புவோர் நம்பகமானவரிடம் பெறுவது நல்லது. தாய்வழி உறவினர்களிடம் இருந்த மனக்கிலேசம் சரியாகும். தொழில் வியாபாரத்தில், சிறியளவில் நடைமுறை மாற்றம் பின்பற்றி முன்னேற்றம் காண்பீர்கள். பணியாளர்கள், பணி இலக்கை நிறைவேற்றி சலுகைப்பயன் பெறுவர். மாணவர்கள் கல்வியில் நல்ல தேர்ச்சி பெறுவர்.

**கடகம்**- உறவினர், நண்பர்களின் நன்மதிப்பு மற்றும் அவர்களால் விருந்து உபசரிப்பும் உங்களுக்கு பலமாகக் கிடைக்கும். எதிர்பார்த்த நிலுவை பணவரவு, குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவில் வந்து சேரும். இளைய சகோதரர் தகுதி, திறன் வளர்த்து வாழ்வியல் நடைமுறையில் முன்னேற்றம் அடைவர். நன்னடத்தை குறைவான எவருக்கும், இரக்க மனதுடன் பண உதவி, பிணை வழங்குவதால் சிரமம் வரலாம். கவனம் தேவை. புத்திரரின் நீண்ட நாள் எதிர்பார்ப்பு ஒன்றை மனமுவந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்** -உங்களின் தன்னம்பிக்கை நிறைந்த பேச்சு, சிலருக்கு அலட்சியமாகப் பேசுவதுபோல தோன்றும். அவர்களின் நடவடிக்கைகளை பொருட்படுத்த மாட்டீர்கள். புத்திரர் தன் சேர்க்கை சகவாசங்களினால், மனவருத்தம் அடைவர். உங்களின் ஆறுதல், அன்பு அவர்களுக்கு ஊக்கம் தரும். எதிரி, கஷ்டப்படுகிற சூழ்நிலை தெரிந்து அவர்களுக்காக மனம் இரங்குவீர்கள். இல்லறத் துணையின், புத்திசாலித்தனம் நிறைந்த செயல்களை பாராட்டி, அவர்களுக்கு பரிசுப் பொருள் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குளறுபடியை அக்கறையுடன் சரி செய்வீர்கள்.

**கன்னி**-உங்கள் பேச்சில், அவதூறான வார்த்தை வரும் வகையிலான சந்தர்ப்பத்தை உருவாக்கும். பொறுமையும், நிதானமும் பின்பற்றுவதால் சிரமத்தைத் தவிர்க்கலாம். சமூக நிகழ்வுகளைப் பற்றி, அறிந்து கொள்கிற ஆர்வம் குறையும். ஆரம்பிக்கும் விடயம் நிறைவேற காலதாமதமும், கூடுதல் பணச்செலவும் இருக்கும். புத்திரர், எதிர்பார்ப்புக்களை பெறுவதில் பிடிவாத எண்ணத்துடன் செயற்படுவர். அவர்களிடம் பண்பும், பக்குவமும் வளர பொறுமையுடன் வழி நடத்த வேண்டும். உடல் நலக்குறைவு வராமல் இருக்க, ஊட்டம் தரும் உணவு, சீரான ஓய்வு நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.

**துலாம்**- நீண்ட நாள் திட்டமிட்ட செயல்களை நடைமுறைப்படுத்துவதில் கால தாமதமும், அதனால் மனவருத்தமும் ஏற்படும். மனதில் உள்ள விரக்தியை, பேச்சில் வெளிப்படுத்துவதைத் தவிர்ப்பது நல்லது. இளைய சகோதரர், உங்களுக்கு தம்மால் இயன்ற உதவி செய்வார். புத்திரர் ஆர்வ மிகுதியால் செயல்களில் கவனக் குறைவான நிலையை அடைவர். அவர்கள் படிப்பு, திறமை வளர்ப்பில் முன்னேற்றம் பெற கூடுதல் பயிற்சி முறை கொடுப்பீர்கள். அலைச்சல் பயணங்களைக் குறைப்பதால், உடல் நல ஆரோக்கியம் சீர்பெறும்.

**விருச்சிகம்**- உங்களின் நல்ல அணுகுமுறை சமூகத்தில் நற்பெயர், புகழ்பெற்றுத் தரும். இளைய சகோதரரிடம் பண விடயத்தில் கடினமான போக்கைப் பின்பற்றக்கூடாது. எதிரி, உங்களுக்கு எதிராக உருவாக்கிய கெடு செயல், அவர்களையே திருப்பித் தாக்குவதாக அமையும். பூர்வ சொத்தில் நல்ல வருமானம், கூடுதல் சொத்து சேர்க்கையும் உண்டு. நண்பர் உபசரிப்பு மனப்பாங்குடன் செயற்படுவர். இல்லறத்துணை உங்களின் நல்ல குணங்களை பாராட்டி குடும்ப நன்மைக்காக தேவையான பணி புரிவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பெறத் தேவையான அனுகூல காரணி பலம் பெறும். அரச உதவி எளிதில் கிடைக்கும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு, விரும்பிய சலுகை கிடைக்கும்.

**தனுசு** - உங்களின் நல்ல முயற்சி எளிதில் நிறைவேறும். நண்பர், உறவினர் பாராட்டுவர். இளைய சகோதரர் உறுதுணையாக நடந்து கொள்வர். படிப்பு, திறமையில் நல்ல வளர்ச்சி ஏற்படும். உடல் நலம் சிறந்து அன்றாட பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். நிலுவை பணக்கடன் அடைப்பீர்கள். வெளியூர் பயணம் சிறப்பாக அமைந்து இனிய அனுபவம் பெற்றுத்தரும். இல்லறத்துணை உங்கள் கருத்துக்கு கூடுதல் முக்கியத்துவம் தருவர். குடும்பத்தில் மகிழ்ச்சியும், மங்கல நிகழ்வும் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி, வருமானம் அதிகரிக்கும். பெண்கள், தம் நற்செயலால் குடும்ப உறுப்பினர்களிடம் அன்பு, பாசம் அதிகம் பெறுவர்.

**மகரம்**- பணிச்சுமை அதிகரிப்பதால் மனதில் சோர்வு, தயக்கநிலை ஏற்படலாம். இருப்பினும், கடந்தகால செயல்களுக்கு கிடைத்த வரவேற்பு மனதுக்கு உத்வேகம் தரும். பொது விவகாரங்களை பெரிதும் தவிர்ப்பீர்கள். புத்திரரின் செயல்களில் குளறுபடி வராத அளவுக்கு கவனித்து வழிநடத்துவீர்கள். பூர்வீக சொத்தில் கிடைக்கிற பணவரவு முக்கிய செலவுக்கு பயன்படும். உழைப்புக்கு தகுந்த ஓய்வு, உடல்நல ஆரோக்கியம் சீர்பெற உதவும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கை அடைய புதிய நுட்பங்களைப் பயன்படுத்துவது நல்லது.

**கும்பம்** - உங்களின் பெருமையும், மனஉறுதியும் வாழ்வியல் நடைமுறை சீர்பெற நிச்சயம் உதவும். நன்னடத்தை குறைவான எவருக்கும் அடைக்கலம், பாதுகாப்பு தரக்கூடாது. இளைய சகோதரர் உங்கள் செயல்களில் அதிருப்தி அடைவர். புத்திரரின் எதார்த்த சொல் உங்களின் எதிர்கால முன்னேற்றம் பற்றி சிந்திக்க வைக்கும். இல்லறத்துணையின் நடவடிக்கையில் தேவையற்ற விதமாக குறைகண்டு பிடிக்கக் கூடாது. தொழில், வியாபாரத்தில் உருவாகிற மந்தகதியைச் சரி செய்வதால் மெல்ல மெல்ல வளர்ச்சி நிலையை அடையலாம். அவசியமற்ற பணக்கடன் பெறக்கூடாது.

**மீனம்**-உங்களின் உடல் மற்றும் பணதகுதிக்கு மீறிய செயல்களில் ஈடுபடக் கூடாது. நல்லோரின் ஆசியால் சில நன்மை பெறுவீர்கள். புத்திரர், உங்கள் அன்பு, பாசத்தில் நெகிழ்ந்து படிப்பில் கூடுதல் ஆர்வம்கொள்வர். வழக்கு விவகாரங்களில் எதிர்மறை சூழ்நிலை உருவாகலாம். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து தம் [illegible] வியாபாரத்தில் உருவாகிற மாறுபட்ட சூழ்நிலையை [illegible]. பணிபுரியும் பெண்கள், பொறுப்பான செயல்களால் பணி இலக்கு நிறைவேற்றுவர். சலுகைப்பயன் அடுத்து வரும் வாரங்களில் கிடைக்கும்.

# தனி மரம்...

கருணை மிகு மாந்தர்களே!
வடக்கில் நான் பிறந்ததினால்
வாழ்வினிலே பட்ட துன்பம்
உரைக்கிறேன் கேளீர்

அப்பா பெரியப்பாவும்
அயலவர் சிலபேரும்
சென்ற தசாப்தக்
கலவரத்தில் மாண்டார்கள்

குறியற்ற செல்வீச்சு
குட்டித் தங்கையை கூட்டியே
சென்றது
கோரக்குண்டு வீச்சில்
தாத்தா பாட்டியுடன்
சித்தி குடும்பமும்
சிதறியே மாண்டது
கிளாலிக் கடலிலே
உற்ற நண்பிகள்
மீனுக்கு உணவாயினர்

பெரியண்ணா கொழும்பில்
சந்தேகநபரானார்
பகிடி வதையிலே பரிதாப மரணத்தை
சின்னண்ணா ஏற்றார்
சித்தப்பா இன்று உயிருடனில்லை
ஆனால் பெயர் மட்டும்
காணாமற்போனார் பட்டியலிலே!

மாமா வெலிக்கடையில்
மச்சான் களுத்துறையில்
அக்கா செம்மணியில்
ஆங்காங்கே அவர்களும்
பிணமாகிப் போனார்கள்

குருநகர்க் கடலிலே
பெரியம்மா ஒதுங்கினார்
கோரக் கொலராவால்
தம்பியும் சென்றுவிட்டான்
பெண்மை பறிபட்டு
பெரியக்கா பிணமானார்
ஏக்கம் கொண்ட அம்மா
பித்துப் பிடித்து
பிதற்றியே மடிந்தாள்

காலமெல்லாம் உன்னைக்
காத்திடுவேன் என்று
கனிமொழி பேசிய காதலன் - இன்று
களம் பல கண்டு
மண்ணுக்கு மைந்தனாகி
விண்ணுலகம் சென்றுவிட்டார்

சூரியக்கதிரில்
சுற்றத்தை இழந்தேன்
வன்னிப் பயணத்தில்
வாழ்க்கையை வெறுத்தேன்
ஊர் திரும்புகையிலே - பல
உறவுகளை இழந்தேன்

யாருமற்ற அநாதையாய்
வீதி வழி சென்ற நான்
கண்ணிவெடியிலே
கால் சிதறுண்டு கருகிய நெஞ்சுடன்
தனிமையிலே வாடுகின்றேன்

கேட்பீரோ! எந்தன்
சோக வரலாறு
என்னைப் போல் எத்தனையோ
ஈழ மாந்தர்கள் இருக்கையிலே
நான் மட்டும்
விதிவிலக்காக வாழவும் முடியுமா?

சா.கிருஸ்ஷிகா,
கற்கோவளம், பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சுகளின் எதிர்காலம் உங்கள் கைகளில்.....



■ அருவி

ஒரு விதையை மண்ணினில் விதைத்து விட்டால் அந்த விதை நன்றாக வளர தண்ணீர் ஊற்றி, மண்ணைப் பதப்படுத்தி பசளையிட்டு ஆடு, மாடுகள் அதை மேய்ந்து விடாமல் வேலியிட்டு பத்திரமாய் அந்த விதை வளர்ந்து மரமாகி நல்ல பயனைத் தரும்வரை பாடுபட்டு உழைக்கவேண்டும்.

அதேபோல்தான் குழந்தை என்ற பயிரை வளர்க்க ஆரோக்கியமான உணவை, அறிவை, ஒழுக்கத்தைப், ப பை வளர்க்கக்கூடிய நல்ல நூல்கள், நல்ல வழிப்படுத்தல்கள் இருந்துவிட்டால் போதும். அவர்கள் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து விடுவார்கள்.

இங்கேதான் ஒருவன் நல்லவனாவதும் கெட்டவனாவதும் ஆரம்பமாகின்றது. இன்றைய சிறுவர்கள் தான் நாளைய தலைவர்கள், வருங்கால சமுதாயத்தைத் தாங்கி நிற்கும் தூண்கள். இந்தச் சின்னஞ் சிறியவர்களை நல்ல குடிமக்களாக, சான்றோர்களாக ஆக்கவல்ல சக்தி சிறுவர் இலக்கியங்களின் கைகளில்தான் தங்கியிருக்கின்றது.

முன்பொரு காலம் எங்கள் சமூகத்தில் வீட்டில் குழந்தைகளை பக்குவமாக வளர்க்கும் பொறுப்பு அம்மம்மா, அப்பம்மா, பாட்டி என முதிர்ந்த பழுத்த அறிவும் அனுபவமும் மிக்க மூத்தவர்களின் கைகளில் இருந்தது.

ஆனால் இன்று நிலைமை அப்படியல்ல. மூத்தவர்களோடு சேர்ந்து வாழும் கொடுப்பினையை இன்று நூற்றுக்குத் 90 வீதமான குழந்தைகள் இழந்துவிட்டன. இவ்வாறு வாய்ப்புகள் கிடைத்தாலும் குழந்தைகளோடு நேரத்தைக் கழிக்கும் பாட்டிமார்கள் அருகிவிட்டார்கள். குழந்தை கேட்கும் கதைகளைக் கேள்விகளைக் கூட உள்வாங்கிக் கொள்ளாது தொடர் நாடகங்களுக்குள் மூழ்கிப் போய் இருக்கும் மூத்தவர்களையே இன்று பலரது வீடுகளில் உள்ளனர்.

அடம் பிடிக்கும் குழந்தைக்கு அம்புலி காட்டி, சோறூட்டி, அழகாய்க் கதை சொல்லி பக்குவமாய் உறங்க வைப்பதும், குடிசை வீட்டில் பெற்றெடுத்த குழந்தையாயினும் தேசத்து ராசாவாக, இளவரசியாக, இளவரசனாக, கொடிபிடிப்பான், கோட்டை ஏறுவான், வரலாறு எழுதுவான் என்று 'இராஜகுலம் பெற்றெடுத்த கண்மணியே கண்வளராய்'.... என்று பெரும்கற்பனையோடு பிள்ளைகளுக்குத் தாலாட்டுப் பாடி பிள்ளைகளின் மனதில் உயரிய எண்ணங்களை விதைத்து விடுவார்கள் முன்னைய பெற்றோரும் ,மூத்தவர்களும்.

அது மட்டுமல்ல குழந்தைகளுக்கு இயற்கையைப் பற்றிச் சொல்லிக் கொடுத்தார்கள். உறவு முறைகள் பற்றிக் கற்றுக்கொடுத்தார்கள். அன்பு வழியை, பக்தி நெறியை நல்லொழுக்கத்தை சொல்லிக் கொடுத்தார்கள். அதனால் அந்தக் காலப் பகுதியில் குழந்தைகளுக்கு நல்ல அத்திபாரம் இடப்பட்டு அவர்கள் சமூகத்தில் நல்ல பிரஜைகளாக வாழ்ந்தார்கள்.

எழுதப்படாத இலக்கியங்களாய் வாய்மொழி மரபில் செவி வழிக் கதைகளாக பிள்ளைகளுக்காக நம் முன்னோர்கள் உருவாக்கியது ஏராளம். தாலாட்டுத் தொட்டு குழந்தைகளுக்கு ஊட்டப்படும் கதைகளும் பாட்டுக்களும் உலகின் வேறெந்த நாட்டை விடவும் நம் தமிழ் பண்பாட்டில் தான் அதிகமாகக் காணப்படுகின்றன.

ஒரு குழந்தை பள்ளிக்குப் போகத் தொடங்கும் போதே முதலில் போதிக்கப்படுவது 'ஆத்திசூடி', கொன்றை வேந்தன்' போன்ற நூல்களைத் தான். பெரிய நீதிக் கதைகளில் உள்ள நீதிக் கருத்துக்களையும், ஒழுக்க நெறிகளையும் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்கின்றன இந்த இலக்கியங்கள்.

இதைச் செய், இதைச் செய்யாதே, இப்படிச் செய்தால் நன்மை, இப்படிச் செய்தால் தீமை எனச் சொல்லித் தரும் இந்த இலக்கியங்களை குழந்தைகளும் மிக எளிதாக மனனம் செய்து தன் அடி மனதில் பசுமரத் தாணி போல் பதித்து வைத்து விடுவார்கள். இதுவே குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆனபோதும் அவர்களது அடிமனதில் பதிந்து போன நல் எண்ணங்களில் இருந்து அவர்கள் ஒரு முறையும் வழிதவறிப் போகாமல் நல்ல மனிதர்களாகத் திகழ்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தன.

பஞ்சதந்திரக் கதைகள், மாயாஜாலக் கதைகள், நீதிக் கதைகள், தென்னாலிராமன் கதைகள், பரமார்த்த குரு கதைகள், விக்ரமாதித்தன் கதைகள், சிபிச் சக்கரவர்த்தி கதைகள் என சிறுவயதில் நாம் கற்றவைநிறைய. எத்தனை பெரிய பெரிய இலக்கியத்தைக் கற்ற பின்னும் மனதில் ஒரு மூலையில் எமது குழந்தைப் பருவத்தை நினைவூட்டிக்கொண்டே இருக்கின்றன இந்தக் குழந்தை இலக்கியங்கள்.

குழந்தைகளுக்கான நாவல்கள், சிறுவர் நாடகங்கள், குழந்தைக் கவிதைகள், புதிர்கள், படக் கதைகள், சுற்றுலாப் பயணக் கட்டுரைகள், பெரிய மகான்களின் வாழ்க்கை வரலாறுகள், சுயசரிதைகள், விஞ்ஞானம் தொடர்பான தொகுப்புகள் என் பவற்றை சிறுவர் இலக்கியம் என்ற வரம்புக்குள் அடக்கிக் கொள்ளலாம்.

இந்த இலக்கியங்களில் குழந்தைகளின் கள்ளமில்லா வெள்ளை உள்ளம் பிரதிபலிக்க வேண்டும். எளிய மொழி நடையில் எதுகை. மோனை.சந்தங்கள். உணர்வுக் குறிப்புகள் உள்ளதாக அமையும்போது அது குழந்தைகளைக் கவர்ந்து விடும். சிறுவர்களுக்கு ஏற்ற அவர்களுக்கு ஈர்ப்பான விடயங்களைக் கண்ணைக் கவரும் விதத்தில் பொருத்தமான வர்ணப் படங்களுடனும் பெரிய எழுத்துக்களில்,எழுத்துப்பிழையின்றி அமைத்தல் சிறப்பானது.

சிறுவர் இலக்கியங்களில் வாழும் கலையைப் போதிக்கும் எவ்வளவோ வார்த்தைப் பிரயோகங்கள் அடங்கி இருக்கின்றன.

"அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று"
"ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு
சொல்லவேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு
இணங்கவேண்டாம்"
"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே".

இப்படி சிறுவர் இலக்கியங்களைக் கற்கும்போது வாழ்க்கை நெறியை வாழும் வழியை அவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். இதனால் நல்ல ஒழுக்க சீலராக, நல்ல மனிதராக வாழ்ந்தார்கள். அன்று மூத்தவர்கள், பெற்றவர்கள், ஆசிரியர்கள் என்று எல்லோருமே ஒரு முகப்படுத்தப்பட்டு குழந்தைவளர்ப்பில் கூடிய கவனம் செலுத்தினார்கள்.

ஆனால், இன்று நிலைமை அப்படியல்ல. வளர்ந்துவரும் ஊடகங்களின் தாக்கம் ஏராளம். குழந்தைகளின் உலகத்தை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும், கணினி விளையாட்டுக்களும் மிகுதியாக ஆக்கிரமித்துக்கொண்டு இருக்கின்றன.

அர்த்தமற்ற வீடியோ விளையாட்டுக்களை வெறித்துப் பார்த்தபடி குழந்தைகள் முட்டாள் பெட்டி முன் அமர்ந்து விடுவதற்கு பெற்றோரே காரணமாகியும் விடுகிறார்கள்.

இன்று தொழில் நுட்ப ரீதியில் உலகம் முன்னேறி விட்ட நிலையில் 'கார்ட்டூன்' சித்திரங்களும் நாடகங்களும் சிறார்களின் மனதைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றன. வேகமாக மாறும் காட்சிகளாலும் நிறங்களாலும் கண்கள் சீர்குலைந்து போகின்றன.

பெற்றவர்களே.... வீட்டின் மூத்தவர்களே... உங்கள் குழந்தைகளைக் காப்பாற்றிக்கொள்ள முதலில் நீங்கள் மாறிக் கொள்ளுங்கள். 'சீரியல்' பார்ப்பதைக் குறைத்து, நல்ல புத்தகங்களைத் தேடி எடுத்து முதலில் நீங்கள் வாசியுங்கள். உங்கள் வழியையே பிள்ளையும் பின்பற்றும்.

இன்று சமூகத்தில் புரையோடிக் காணப்படும் கொலை, கொள்ளை, பாலியல் வக்கிரங்கள், உதவி செய்ய முன்வராமை, மூத்தோரை மதியாமை என மனிதநேயம் அற்ற அனைத்துச் செயற்பாடுகளுக்கும் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் நீங்கள்தான்.

எனவே, முதலில் நீங்கள் மாறிக் கொள்ளுங்கள். உங்கள் குஞ்சுகளை நல்லவழிக்கு அழைத்துச் செல்லுங்கள். அழகான எதிர்காலத்தை உங்கள் பிஞ்சுகளின் கைகளில் கொடுங்கள்.

# ஆணுக்கு வேண்டிய அடிப்படைத் தகுதிகள்

■ லோ.துஷிகரன்

இராமாயணக் காவியத்தில் விசுவாமித்திரர், தனது வேள்வியைக் காப்பதற்காக இராமனைத் தரும்படி தசரதனிடம் அவனது அரண்மனைக்கு வந்துகேட்கின்றார். பல்வேறுபட்ட கருத்தாடல்களின் இறுதியில் இராமனை விசுவாமித்திரர் அழைத்துச் செல்கின்றார். அப்படி அழைத்துச் சென்றவர் நேரடியாக மிதிலைக்குச் சென்று சீதா கல்யாணத்தை நடத்தி இருந்தால் வாசகர் மனங்களில் சங்கடம் ஏற்பட்டிருக்கும். ஏனெனில் அங்கு இராமன் பாலனகச் சித்திரிக்கப்படுகிறான். இந்த நிகழ்வு இடம்பெறும் பகுதியும் பாலகாண்டமே. எனவே கம்பர் ஓர் உத்தியைக் கையாளுகின்றார். மிதிலைக்குக் கூட்டிச் செல்லும் வழியில் சில நிகழ்வுகளை ஏற்படுத்துவதன் ஊடாக கற்போர் மனங்களில் இராமனைத் திருமணத்துக்கு ஏற்றவனாகத் தயார்ப்படுத்துகின்றார். இந்தத் தயார்ப்படுத்தலில் காட்டப்படும் மூன்று விடயங்கள் ஊடாகச் சமூகத்துக்கு செய்தி கூறுவது கம்பனின் சமூகப் பார்வைக்குச் சிறந்த சான்றாகின்றது. அதன்மேலேதான் கம்பனும் இராமாயணமும் இன்னும் வாழ முடிகின்றது.

கம்பன் முதலில் இராமனையும் தாடகையையும் சந்திக்க விடுகின்றார். அப்போது தாடகையின் அரக்க குணங்களையும் அவளது தீய செயல்களையும் விசுவாமித்திரர் விவரமாக இராமனுக்குக் கூறுகின்றார்.

அவள் பெண்ணல்லப் பேய் என்பதை உணர்த்திய பின்னர் தம்மை அழிக்க வந்த தாடகையுடன் தற்காப்பு யுத்தத்தை இராமன் தொடுக்கின்றான். இராமன் பாணம் எடுத்தையோ, வில்லை வளைத்ததையோ எவரும் பார்க்கவில்லை. அவ்வளவு வேகமாக வீசிய பாணம், தாடகையின் சூலத்தைத் தாக்கி அது துண்டுகளாக விழுந்ததைத்தான் பார்த்தார்களாம். இறுதியாக இராமபாணம் கல் போன்று இருந்த தாடகையின் நெஞ்சை ஊடுருவிப் பாய்கிறது. இதனைக் கம்பன்

"கல்லொக்கும் நெஞ்சில் தங்காது
அப்புறம் கழன்று, கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன
பொருளெனப் போயிற்றன்றே"

என்று பாடுகின்றான். கல்வியறிவு இல்லாதவர்கள் நல்ல அறிவுரைகளை ஒரு காதால் வாங்கி மறுகாதால் எவ்வளவு வேகமாக விடுவார்களோ, அவ்வளவு வேகமாக இராம பாணம் பாய்ந்தது என்று கூறி 'கைவண்ணம்' காட்டி இராமனின் கன்னிப் போரை நிகழ்த்திக் காட்டினான் கம்பன்.

இதனூடாக 'முதல் நி[illegible] கொடுத்து' வில் 'தொழிலை' ஆரம்பித்து வைக்கிறார் கம்பர். இப்போது இராமன் தொழிலுடையவனாகின்றான். தொழில் தானே புருஷலட்சணம்.

அடுத்த நிகழ்வாக கல்லாய்க் கிடந்த அகலிகைக்கு இராமனது கால்தூசி பட்டு சாபவிமோசனம் கிடைக்கின்றது. அகலிகை மீது இராமனது கால்பட்டால் கூட இராமனுக்கும் இழுக்கு, அகலிகைக்கும் இழுக்கு. ஏனெனில் பின்னாலே சீதையைத் திருமணம் செய்தபோது முதலிரவு அன்று சீதைக்கு இராமன் சத்தியம் செய்கிறான். "வேறொருபெண்ணை சிந்தையாலும் தொடேன்" என்ற சத்தியத்தை இந்தக் காட்சி மேலும் வலுவூட்டி அழகுபடுத்துகின்றது.

வேறொரு ஆடவன் தீண்டியதால்தானே அகலிகைக்குச் சாபம் கிடைத்தது. மீண்டும் ஓர் ஆடவன் தீண்டினால் சாபத்துக்குப் பெறுமதி அற்றது ஆகிவிடும் அல்லவா. எனவே கம்பன் இருவரையும் 'தொடுகை' அடையாதவாறு காப்பியம் புனைத்தது புதுமையே.

இதனூடாக இராமனின் தூய்மையைக் கூறக் 'கால்வண்ணம்' காட்டுகின்றார். இதனால் இராமனின் நடத்தைப் பண்பை உயர்த்தி ஒழுக்கசீலனாகக் காட்டுகின்றார் கம்பர்.

இறுதியாக இராமன் திருமணத்துக்குரிய தகுதியாக - பருவத் [illegible] காட்டச் சீதையையும் இராமனையும் சந்திக்க வைக்கின்றார் கம்பர். அப்போது...

"....கண்ணொடு கண்ணினைக்
கவ்வியொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா னவளும்
நோக்கினாள்"

என இருவரும் காதல் வயப்பட்ட உணர்வை வர்ணிக்கின்றான் கம்பன். வரிசிலை அன்னலாகிய இராமனும் வாட்சகன் நங்கையாகிய சீதையும் காதல் வயப்பட்டதாலே இருவருடைய இதயமும் ஒருவருக்கொருவர் இடம்மாறிப் புகுந்துகொண்டது என மேலும் வர்ணிக்கின்றான். இவ்வாறு இராமனுடைய காதலுணர்வைக் காட்டித் தனது கருத்தை நிரூபித்து இராமன்-சீதை திருமணத்துக்கு வாசகர்களைத் தயார்படுத்திவிடுகிறான் கம்பன்.

அன்று இரவு இராமன் படுக்கையில் இருந்து தனது உள்ளம் சீதையிடம் பறிபோன காட்சியை நினைத்துப் பார்க்கின்றான். தான் நோக்கிய பெண் திருமணமான பெண்ணாக இருப்பாளா? என்ற சந்தேகம் வருகின்றது. மணமான பெண்ணாக இருந்து விட்டால் தான் பெரும் தவறு செய்து விட்டேனே எனத் தவிக்கின்றான். இறுதியில் 'என் மனம் நல்ல வழியிலேயே செல்லும், நெறி பிறழ்ந்து வழிமாறிப் போகாது. எனவே சீதை திருமணமாகாத பெண்ணாகத்தான் இருத்தல் வேண்டும் என முடிவு செய்கின்றான்.

"ஆகும் நல்வழி, அவ்வழி என்மனம்
ஆகுமோ? இதற்கு ஆகிய
காரணம்பாகுபோல் மொழிப் பைந்தொடி
கன்னியே ஆகும்"

என்கிறது இராமனது மனநிலை. இதனூடாக இராமனது உணர்வுகள் திருமணத்துக்கு ஏற்றாற்போல் உள்ளன என்பதை மட்டுமல்லாது அந்த உணர்வுகள் அவனது கட்டுப்பாட்டினுள்ளேயே உண்டு என்பதையும் காட்சிப்படுத்துவது மேலும் அழகு பெறுகிறது. இன்றைய இளைஞர் பலரிடம் அவர்களது உணர்வுகள் அவர்களது கட்டுப்பாட்டை மீறுவதால்தான் பல கலாசாரப் பிறழ்வுகள் நடைபெறுவதற்குக் காரணமாகி விடுவதையும் காணலாம்.

இராமன் திருமணத்துக்கு ஏற்றவனாக இருந்ததாலேயே மிதிலை நகர் பச்சைக்கொடி காட்டி அவர்களை உள்ளே அழைப்பது போன்று அசைந்தது என கம்பன் பாடுகின்றான். இதனூடாக வாசகர்களுக்கு இராமனைத் திருமணத்துக்குப் பொருத்தப்பாடு உடையவனாக மட்டும் காட்டாமல் அதனூடாக நம் சமூகத்து இளைஞர்களுக்கும் செய்தியைக் கூறுகின்றான்.

ஆடவன் ஒருவன் திருமணம் செய்வதானால் அவனுக்குத்தொழில், நற்பண்புடன் கூடிய நடத்தையும் கட்டுப்பாட்டுடன் கூடிய உணவுகள் அடிப்படைத் தகுதிகளாக இருக்க வேண்டும் எனச் சமூகத்துக்குக் கூறும் கருத்துக்களைஇராமாயணஇலக்கியம்கொண்டிருப்பதாலேயே அது இன்றும் சமூகத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ரெங்கன்

* சிரியா - ஈரான் நாடுகள் மீது உறுதியான நடவடிக்கைக்கு அமெரிக்கா, பிரான்ஸ் முயற்சி
* ஈரான் அணுகுண்டு தயாரிப்பதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் - ஒபாமா
* சிரியா மீது அரபு நாடுகள் இராணுவ ரீதியில் தலையிட வேண்டும் - கட்டார் அமீர்
* பாதுகாப்புச் சபையின் கட்டமைப்பை மாற்ற வேண்டும்- ஈரான் அதிபர்
* எகிப்து மத சார்பற்ற நாடு - அந்நாட்டு பிரதமர்

# இராணுவ ரீதியில் அரபு நாடுகள் சிரியாவில் தலையிட வேண்டும்




சிரியா மற்றும் ஈரானிய நாடுகள் மீது மேற்கு நாடுகள் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமான ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் கடும் தாக்குதல்களை நடத்தினார்கள்.

அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா பேசிய போது ஈரான் அணு ஆயுதங்கள் மீது கைவைப்பதை எந்த வகையிலும் தடுத்து நிறுத்த முயலப்போவதாக உறுதிப்படுத்தினார்.

சிரியா மற்றும் ஈரான் மீது கடுமையான சர்வதேச நடவடிக்கை எடுப்பது தொடர்பாக உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள மகாசபையில் அமெரிக்கா, பிரான்ஸ், கட்டார் ஆகியவை பெரும் பிரயத்தனம் மேற்கொண்டன.

ஐ.நா. செயலாளர் நாயகம் பேசியபோது, சிரியாவில் இடம்பெற்றுவரும் இரத்தக்களரியை குறிப்பிட்டுக்கொண்டிருந்தார். சிரிய அரசு தொடர்ந்தும் தம் மக்கள் மீது தாக்குதல் நடத்தி வருவதை பல நாடுகள் கண்டித்தன. சிரியாவில் அமைதியை ஏற்படுத்த நியமிக்கப்பட்டுள்ள தூதுவர் சிரியா அந்த நாட்டுமக்களை மத்திய சரித்திர காலத்தில் போன்று துன்புறுத்துகிறது என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

மகாசபையில் அமெரிக்க அதிபர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் சிரிய அதிபர் பாஷர் அல் -அசாத் தம் நாட்டின் மக்கள் படும் துன்பத்தை நிறுத்துவதற்கு ஒரு முடிவெடுக்க வேண்டும். அப்பொழுது தான் அங்கு புதிய ஒளி பிறக்கும் என்றார்.

### அரபு நாடு தலையீடு வேண்டும்

சிரியாவில் எதிர்தரப்பினருக்கு முக்கியமான ஆதரவு அளித்துவரும் கட்டார் நாட்டின் அமிர் ஷெயிக் ஹமத்பின் கலிபா அல் - தானி பேசுகையில், அரபு இராணுவம் சிரியாவில் தலையிட வேண்டும் என்று வற்புறுத்தினார்.

மனிதாபிமானம் அரசியல் மற்றும் இராணுவ ரீதியிலான கடமைகளை அரபு நாடுகள் நிறைவேற்றும். அதற்காக சிரியாவில் அரபு நாடுகள் இராணுவ ரீதியில் தலையிட வேண்டும். அதன் மூலம் அங்கு இரத்தம் சிந்தப்படுவதை நிறுத்த முயல வேண்டும் என்றார்.

### எதிர்தரப்புக்கான அமெரிக்க உதவி அதிகரிக்கும்

சிரியாவுக்கான அமெரிக்க உதவிகளை அதிகரிப்பதற்கான அறிவித்தல் ஒன்று விரைவில் விடுக்கப்படவிருப்பதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் செய்தியாளர்களிடம் கூறினார். ஆனால் ஆயுதங்கள் மற்றும் குண்டுகள் வழங்கப்படமாட்டாது என்றார் அவர்.

பிரான்ஸ் அதிபர் பிராங்கொய்ஸ் ஹொலாண்டே மகாசபையில் பேசும் போது சிரியாவில் எதிர்தரப்பினர் வசமுள்ள பகுதிகள் விடுவிக்கப்பட்ட பகுதிகளாக அறிவித்து பாதுகாக்கப்படவேண்டும் என்ற கருத்தை கூறினார். இதன் மூலம் மனிதாபிமான உதவிகள் அப்பகுதிகளுக்குச் சென்றடைவதை உறுதிசெய்யலாம் என்றார் அவர்.

ஐ.நா. மகா சபையில் பராக் ஒபாமா முதற்கொண்டு உலகத் தலைவர்கள் பலரும் சிரியாவில் போர் நிறுத்தம் ஏற்படுவதை வற்புறுத்திக்கொண்டிருந்த அதே வேளையில் அரசபடைகளுக்கும் புரட்சிப் படைகளுக்கும் இடையில் சிரியாவில் போர் தொடர்ந்து உச்சமடைந்து வருவதாகவும் அன்றைய தினம் மட்டும் நூறு பொது மக்களுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதாகவும் தகவல்கள் வந்துள்ளன.

### இஸ்லாத்தை அவமதிக்கும் திரைப்படம்

இஸ்லாத்தையும் நபிகள் நாயகத்தையும்அவமதிக்கும் விதத்தில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டுள்ள திரைப்படத்துக்கு முஸ்லிம் நாடுகள் அனைத்திலும் எதிர்ப்பும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றுவரும் அதேநேரம் அமெரிக்க நிறுவனங்களும், அமெரிக்க பிரஜைகளும் தாக்குதல்களுக்கு ஆளாவதை அமெரிக்க அதிபர் கண்டித்துள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை ஐ.நா. மகாசபையில் அவர் பேசிய போது, கடந்த இரண்டு வார காலமாக அமெரிக்கர்கள் மீதும் அமெரிக்க சொத்துக்கள் மீதும் நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களை உலகத்தலைவர்கள் கண்டிக்க வேண்டும். அது அவர்களின் கடமை என்றார்.

அதேவேளை முஸ்லிம் தலைவர்களும், முஸ்லிம் அரசர்களும் அத் திரைப்படத்தைக் கடுமையாகத் தாக்கிப் பேசியுள்ளார்கள்.

முஸ்லிம்கள் அதிகமாக வாழும் நாடான இந்தோனேசியாவின் அதிபர் சுஸிலோ பம்பாங் யுதோயோனோ பேசுகையில் சமயங்களை இழிவுபடுத்தும் இன்னொரு இழிவான முகமாகும் இந்தப் படம் என்று வர்ணித்தார்.

தார்மீகத்தையும் பொது ஒழுங்கையும் அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று கூறிய அவர் அந்த வகையில் பார்க்கும் போது கருத்து வெளிப்பாட்டு சுதந்திரமானது முழுமையானது அல்ல என்றார்.

ஜோர்தானிய மன்னர் இரண்டாவது அப்துல்லா திரைப்படத்தை கண்டித்த அதேநேரம் அதன் காரணமாக வன்செயல்கள் நடைபெற்றிருப்பதையும் கண்டித்தார்.

பாகிஸ்தான் அதிபர் ஆஸிம் அலிசர்தாரி முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புணர்ச்சியை பரப்புவதாக அப்படம் அமைந்துள்ளது என்றார். அமெரிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஆப்கானிஸ்தான் அதிபர் மகா சபையில் பேசுகையில், இஸ்லாத்துக்கெதிரான இந்தப் போக்கானது அமைதியையும் சமாதான சுக வாழ்வையும் கெடுத்துவிடுவதாக உள்ளது என்றார்.

### பேச்சு சுதந்திரம் தடுக்கிறது

அதிபர் ஒபாமா தொடர்ந்து பேசிய போது அந்த வீடியோ படத்தை தம்மால் தடைசெய்ய முடியாமைக்கான காரணத்தைக் கூறினார். அமெரிக்க அரசமைப்பு பேச்சு சுதந்திரத்தைப் பாதுகாக்கின்றது. அதனால்அந்த வீடியோவை தம்மால் தடைசெய்ய முடியாமல் இருக்கிறது என்றார் அவர்.

அமெரிக்க அதிபர் மற்றும் பிரதம இராணுவத்தளபதி என்ற முறையில் என்னை மக்கள் பல்வேறு வகையில் தினமும் சாடுவார்கள் என்பதை ஏற்றுக் கொள்கின்றேன் இருந்தும் அவர்களுக்கு அந்த உரிமை இருக்கிறது என்றவகையில் அவர்களுக்காக வாதாடவும் தயங்கேன் என்றார். கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்றுள்ள தாக்குதல்கள் வெறுமனே அமெரிக்கா மீதான தாக்குதல்கள்அல்ல, ஐக்கிய அமெரிக்கா எந்த தத்துவத்தின் மீது உருவாக்கப்பட்டுள்ளதோ அதன் மீதான தாக்குதல்களாகும். மக்கள் தமது முரண்பாடுகளை அமைதியாகத் தீர்த்துக்கொள்ள முடியும் என்பது அதன் நோக்கம் என்றார் அவர்.

### சமய சார்பு அற்றது புதிய எகிப்து

முஸ்லிம் அல்லாதவர்களின் உரிமைகளும் பெண்களின் உரிமைகளும் எகிப்தில் மிகப் பாதுகாப்பாக உள்ளன என்று கூறினார் எகிப்தின் புதிய பிரதமராக பதவி ஏற்றுள்ள மொகமத் மோர்ஸி.

முன்னாள் அமெரிக்க அதிபர் பில்கிளின்ரனின் தலைமையில் நியுயோர்க்கில் நடைபெற்ற அமெரிக்கர்களே அதிகமாகக் குழுமியிருந்த கூட்டத்தில் பேசிய எகிப்திய பிரதமர் எகிப்து எப்பொழுதுமே சமயசார்பு அற்ற நாடாகவே இருக்கும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்.

எகிப்தியர்கள் அன்னவரும், ஆண்கள், பெண்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள். அவரவரின் நம்பிக்கைகள் எதுவாய் இருந்தாலும், அவர்களின் நிறம் எதுவானாலும் அவர்கள் எகிப்தியர்களே என்று அவர் கூறினார்.

எமது நாடு ஒரு புதிய ஜனநாயக நாடு. சமயவாதிகள் உருவாக்கப்படாத, இர்ாணுவ ஆட்சியில்லாத, ஒரு மக்கள் ஆட்சியுடையது எமது நாடு என்றார் அவர்.

### பாதுகாப்புசபையின் அமைப்பை மாற்றி அமைக்கவேண்டும்

சர்வதேச நாடுகளுக்கிடையிலான தொடர்புகளில் சட்ட ஒழுங்குகள் சீராகச் செயற்படும் வகையில் பார்த்துக்கொள்வதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அமைப்பு முறை முழுமையாக மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று ஈரானிய அதிபர் மகம்மூத் அகமடின்நெஜாத் வலியுறுத்தியுள்ளார்.

பாரபட்சமான சிறப்புரிமைகள், பாதுகாப்பு சபையின் செல்வாக்கு செலுத்தும், மற்றும் திணிக்கும் செயற்பாடுகள் மட்டுமன்றி சில நாடுகளின் இரத்து அதிகாரங்கள் போன்றவற்றை ஈரானிய அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த அதிகாரங்கள் கொண்டுள்ள சில நாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமுடியாதவை, மற்றும் சட்டபூர்வமற்றவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் காரணங்களால் பாதுகாப்புச்சபையால் நீதியை நிர்வகிப்பதற்கும், உலகில் பாதுகாப்பு ஒழுங்கு முறையை நிலைநாட்டவும் முடியாமல் இருக்கிறது என்றார் அவர். ஐ.நா. பொதுசபையின் 67 ஆவது மகாநாட்டின் உயர்மட்ட தலைவர்கள் கூட்டத்தில் இந்த கருத்துக்களை முன்வைத்தார் ஈரானிய அதிபர்.

நீதியின் பேராலும் உலக நாடுகளின் பேராலும் ஐ.நா பாதுகாப்புச் சபையை முழுமையாக சீர்திருத்தி அமைக்க வேண்டும். இதற்கு சபையின் உறுப்பு நாடுகள் ஒரு தீர்மானத்துக்கு வர வேண்டும் என்று வலியுறுத்தினார். அவர் மேலும் கூறுகையில், இன்று நாம் பார்க்கின்றோம் சில இரத்து(வீட்டோ) அதிகாரம் கொண்ட நாடுகள் சியோனிஸ போலி நாடான இஸ்ரேலின் அணுகுண்டுகள் தொடர்பாக மௌனம் சாதிக்கின்றன. அல்லது அதனை ஆதரிக்கின்றன. ஆனால் அதே சமயம் ஏனைய நாடுகள் விஞ்ஞான ரீதியில் முன்னேறுவதை தடுக்கப் பார்க்கின்றன என்றார். எல்லா நாடுகளும் சமமாக மதிக்கப்படவேண்டும், சர்வதேச சட்டங்களுக்கு அமைவாகவும் இருக்க வேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்து வரும் வீதி விபத்துக்களும் வீண் உயிரிழப்புக்களும்


கோ.நந்தகுமார்
விரிவுரையாளர், தாதியர் கல்லூரி, யாழ்ப்பாணம்

அண்மையில் ஒரு வாகனத்தில் பிரயாணம் செய்ய நேர்ந்தது. அவ்வாகனத்தில் சாரதியின் இருக்கைக்கு எதிரே மேலே ''வேகம் விவேகம் அல்ல'' என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது. அச்சாரதி அநேகமான நேரத்தில் தனது வாகனத்தை வேகமாகச் செலுத்துவார் இடையிடையே மறுவாகனத்திற்கு விலகி வழிவிடும் போது இவங்களுக்கு வாகனம் ஓட்டத் தெரியாது இடையிலே கொண்டு வந்து செருகிப் போட்டு நிற்கிறாங்கள் என்று எரிந்து விழுந்த படியே வருவார். எனக்கு அவர் வாகனம் செலுத்த தகுதியில்லாத ஒருவராகவே தெரிந்தார்.

ஆம் இன்று இவ்வாறு தான் பல சாரதிகளின் நிலையுள்ளது. மனம்பொறுக்க முடியாது, உங்களுக்கு முன்னால் எழுதப்பட்ட வாக்கியத்தை அவதானித்தீர்களா? என்றேன். இதெல்லாம் வெறும் வசனம் தான்; வெட்டியாடி ஓடாட்டில் நாலு காசு உழைக்க முடியுமா என்றார். உண்மைதான் அதற்காக உங்களை நம்பி எத்தனை உயிர்கள் இந்த வாகனத்தில் என்றேன். உடனே சற்று கடினமான தொனியில் அது எனக்குத் தெரியும் என்றார். இவருடன் கதைப்பதில் பயன் இல்லை என்பதை உணர்ந்து கதையை நிறுத்தி விட்டேன்.

இன்று இலங்கையில் நடைபெறும் அநேகமான விபத்துக்களுக்கு மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துதலே பிரதான காரணமாகிறது. யாழ்ப்பாணத்தில் மது பாவனை மிகவும் அதிகரித்துள்ளது. பல வாகன சாரதிகள், வாகன நடத்துநர்கள் மது போதையில் வாகனத்தை செலுத்துகிறார்கள் மேலும் தற்போது யாழ்ப்பாணத்தில் வீதி அபிவிருத்திப் பணிகள் பல முனைகளில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனால் ஒரு வாகனம் இன்னொரு வாகனத்துக்கு விலகி இடம் விடுவது மிகவும் கடினமாகவே உள்ளது. அதே நேரத்தில் ஒன்றை ஒன்று முந்துவதற்காக துரத்தப்படும் வாகனங்களால் வீதியில் பயணிப்போர் பலவிதமான இடர்களை அனுபவிக்கின்றார்கள். இதனால் பலர் தங்கள் வாகனங்களை கரைப் பக்கத்திற்கு கொண்டு செல்ல முற்பட்டு, அகலிப்பிற்காக வெட்டப்பட்ட கான்களில் விழுந்து பயணிகள் கை, கால்களை முறித்துக் கொண்ட சம்பவங்கள் ஏராளம். மரணங்கள் கூட சம்பவித்துள்ளது. துரத்தப்படும் வாகன சாரதிகளின் விலை மதிக்க முடியாத மனித உயிர்களை பற்றி கவலைப்படுங்கள்.

என்னுடன் கதைக்கும் போது எனது நண்பர் பகிடியாகக் கூறினார். தற்போது ஜெட் விமானம் எல்லாம் தரையில் ஓடுகின்றது என்று. எனக்கு விளங்கவில்லை அவர் சொன்னது. இப் தம்பி மோட்டார் சைக்கிள் எல்லாம் ஜெட், பிளேனை விட வேகமாக தரையில் ஓடுகிறது பார் என்றார். அப்போது தான் அவர் கூறியது முழுவதும் உண்மையென்று விளங்கியது.

தற்போது வீதி விபத்துக்களில் சிக்கி யாழ்.போதனா வைத்திய சாலையில் பெருமளவானோர் அனுமதிக்கப்படுகிறார்கள். ஏன் இந்த அவலம். இவ்வாறு அனுமதிக்கப்படுபவர்களில் பலர் காயங்களின் விளைவால் இறந்து போகிறார்கள். இன்னும் பலர் நிரந்தர ஊனமடைகிறார்கள். இதனால் நமதும் நமது குடும்பத்தினரதும் நிரந்தர வேதனைக்கு காரணமாகின்றீர்கள். அநேகமாக விபத்துக்கள் சரியான வீதி ஒழுங்கை பின்பற்றுவதனால் தவிர்க்கப்படக்கூடியவை.

**சைக்கிளில் செல்வோர் கவனத்திற்கு**

★வீதியின் ஓரமாகவும் ஒன்றின் பின் ஒன்றாகவும் செல்லவும். சமாந்தரமாக செல்வதைத் தவிர்க்கவும். இளைஞர்களே, யுவதிகளே முக்கியமாக இது உங்களின் கவனத்திற்கு.

★கைகளால் சைகை காட்டும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் இரு கைகளும் சைக்கிளின் கைப்பிடியில் இருக்கட்டும். முக்கியமாக மழை காலங்களில் ஒரு கையில் குடையையும் மறுகையால் சைக்கிளையும் பிடித்து சைக்கிள் ஓடுவது தவறானது. வெயிலுக்குத் தொப்பியும் மழைக்கு மழை அங்கியையும் அணியவும்.

★சிலர் சைக்கிள் ஓடும் போது மோட்டார் சைக்கிளில் செல்பவரிடம் ஒரு கையைப் பிடித்துக் கொண்டு செல்வார்கள். இது மிகவும் ஆபத்தானது.

★சிறு வீதிகளில் இருந்து பிரதான வீதிகளுக்குள் பிரவேசிக்கும் போது வேகத்தைத் தணித்து நிதானித்துச் செல்லவும்.

★மது அருந்தி விட்டு சைக்கிள் ஓட வேண்டாம். மது போதையில் உள்ள ஒருவனால் அவசர நிலைமைகளை சமாளிக்க முடியாது.

★இரவில் பயணிக்கும் சைக்கிளின் முன்னால் விளக்கும், பின்னால் சிவப்பு நிற தெறிப்பானும் கட்டாயமாக இருக்க வேண்டும். (முன்னர் குடாநாட்டில் சைக்கிளில் டைனமோவும் விளக்கும் பூட்டியிருப்பது கௌரவமாகக் கருதப்பட்டது.)

★குழந்தைகளை சைக்கிளில் ஏற்றிச் செல்லும் போது அவர்களின் கால்களைக் கவனமாக வைத்திருங்கள். கால்கள் சில்லுக்குள் செல்வதால் பாரதூரமான விபத்து ஏற்படும்.

**மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு**

★மது அருந்திய நிலையில் மோட்டார் சைக்கிள் செலுத்த வேண்டாம்.

★வேகக் கட்டுப்பாட்டுடனும் சமிக்ஞைகளுக்கு அமைவாகவும் வாகனத்தைச் செலுத்தவும்.

★வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் உங்களிடம் இருக்க வேண்டும். 18 வயதுக்குப் பின்னரே அனுமதிப் பத்திரம் பெற முடியும் வயது குறைந்த பிள்ளைகளை வாகனம் ஓட பெற்றோர் அனுமதிக்க வேண்டாம்.

★ மோட்டார் சைக்கிள் ஓட்டியும், கூடப் பயணிப்பவரும் தலைக்கவசம் கட்டாயம் அணிந்திருக்க வேண்டும். அநேகமாக விபத்துக்களில் இறப்பவர்கள் தலைக்கவசம் அணியாதோரே.

★எப்போதும் இரண்டு கைகளையும் வாகனத்தின் கைபிடிகளில் வைத்திருக்கவும்.

★முன்னால் செல்லும் வாகனத்தில் இருந்து பாதுகாப்பான அளவு தூரத்தில் இடைவெளி விட்டு பயணிக்கவும்.

★இரவில் பயணிக்கும் போது முன் பக்க விளக்கை தணிக்க வேண்டிய நேரத்தில் தணித்து தேவையான போது பிரகாசமாக ஒளிர விட வேண்டும். அநேகமாக குடாநாட்டு மோட்டார் செலுத்திகள் தங்கள் head light இல் dim light ஐ ஒளிர விடுவதில்லை இதனால் இரவு நேரத்தில் பிரயாணம் செய்பவது மிகுந்த சிரமமாகின்றது.

★திரும்பும் போது முன் கூட்டியே சைகை காட்டவும். இன்று குடாநாட்டில் பலர் திடீர் எனத் திரும்பும் பழக்கம் உடையவர்களாக உள்ளனர். சிலர் திரும்பும் போது ஒளிரச் செய்த சைகையை நிறுத்தாது பயணம் செய்கிறார்கள். இதனால் பின்னால் வருபவர் ஒவ்வொரு வளைவிலும் இவர் திரும்பப் போகிறாரா என நினைத்து நின்று நின்று வரவேண்டிய நிலைமை. ஆனால் அவரோ நேரே சென்று கொண்டிருப்பார்.

★கைத்தொலைபேசி மிகுந்த தொல்லை தரக்கூடியது. காதிற்குள் இதை வைத்துக் கொண்டு வாகனம் செலுத்த வேண்டாம்.

★குழந்தைகளைத் தனியாக பின்னால் இருத்திக் கொண்டு செல்லவேண்டாம் அத்துடன் இருவருக்கு மேல் மோட்டார் சைக்கிளில் செல்வதைத் தவிர்க்கவும்.

**பாதசாரிகளின் கவனத்திற்கு**

★வீதிகளை கடக்கும் முன்னர், முதலில் வலதுபுறம், பின்னர் இடது புறம் மீண்டும் வலது புறம் பார்த்து பின்னர் விரைவாகக் கடக்க வேண்டும்.

★வீதியில் நடைபாதையில், நடைபாதைகள் இல்லாத வீதிகளில் வீதியின் அதாவது உங்களது வலது கைப் பக்கமாகவே நடக்கவும்.

★பாதசாரி கடவையிலேயே வீதியைக் கடக்கவும்.

★வீதியில் பிள்ளைகளுடன் செல்லும் போது அவர்களை வீதியோரமாக அழைத்துச் செல்லுங்கள். பிள்ளைகள் வீதியை திடீர் என குறுக்காக கடக்க அனுமதிக்காதீர்கள்.

★இரவில் வீதியால் நடமாடும் போது வெண்நிறமான மேலாடையை அல்லது மென் நிறமான ஒளிரும் பொருள்களை கொண்டு செல்லுங்கள். அப்போது வாகன சாரதிகள் இலகுவில் உங்களை இனங்காண முடியும்.

★வீதியில் நடக்கும் போது கைத்தொலை பேசியில் கதைத்த வண்ணம் வீதியைக் கடப்பதை தவிருங்கள்.

ஆம் அன்பர்களே சரியான வீதி ஒழுங்குமுறைகளை பின்பற்றுவதும், மதுபோதையின்றியும், நிதானமான வேகத்துடனும் வாகனத்தைச் செலுத்துவது தற்போது குடாநாட்டில் அதிகரித்து வரும் வாகன விபத்துக்களையும், அநியாயமான உயிர் இழப்புக்களையும் தடுக்க ஏற்ற வழிகளாகும். வாகனம் ஓடும் போது அவசரமோ, பதற்றமோ வேண்டாம். நிதானத்தைக் கடைப்பிடியுங்கள். நித்தியசுகத்தை அனுபவிப்பீர்கள்.

# கண்காணிக்கப்பட வேண்டிய பாதிப்புக்கள்

■ தென்னவன்

அண்மைக் காலமாக நாட்டில் இளம் பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்புணர்வுகள் தொடர்பான செய்திகள் தினமும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் குற்றச் செயலைத் தடுப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வரும் வேளையில் பாதிக்கப்படும் பெண் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகிறது.

18 வயதுக்கு குறைந்த பெண்கள் விரும்பியோ விரும்பாமலோ பாலியல் ரீதியில் துன்புறுத்தப்படுவது வன்புணர்வு என்று நீதித்துறையினரால் தெளிவாகக் குறிப்பிடப்படுகிறது. பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்புணர்வுகள் தொடர்பான பரிசோதனைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் போது பாதிப்புக்கு தேவையான ஆதாரங்கள் கிடைக்கக் கூடியதாக இருக்கும். சம்பவம் நடைபெற்ற சில மணி நேரத்தினுள் அப்பெண் வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டால் நகக்கீறல்கள், கடிபடும் இடத்தில் இருக்கும் உமிழ்நீர் மற்றும் ஆணின் விந்து போன்றவற்றை உரிய பரிசோதனைக்கு அனுப்பி ஆதாரங்களைச் சேகரிக்க முடியும். குற்றவாளியையும் இனங்காணலாம்.

பாதிப்புக்கு உள்ளான பெண்ணை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவிர்ந்த ஏனையோர் விசாரணைகள் செய்வது தவிர்க்கப்படல் வேண்டும். உதாரணத்துக்குப் பொலிஸ் நிலையத்துக்கு செல்லும் பாதிக்கப்பட்ட பெண்ணை அங்கு கடமையாற்றும் அனைவரும் விசாரணைக்கு உட்படுத்துகின்றனர். இதனால் குறித்த பெண்ணுக்கு பெரும் மன உளைச்சலை ஏற்படுத்துகின்றது. பொலிஸ் நிலையங்களில் உள்ள மகளிர் விவகாரத்துக்குப் பொறுப்பான பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்டவரிடம் இரகசியமாக வாக்குமூலம் பெற்று உடனடியாக வைத்தியசாலைக்கு அனுப்ப நடவடிக்கை வேண்டும்.

வைத்தியசாலையில் எந்த நேரமும் அனுமதிக்கப்பட்டாலும் சட்ட வைத்திய அதிகாரி பார்வையிட்டு பரிசோதனை நடத்தி ஆதாரங்களைச் சேகரித்து பரிசோதனைகளுக்கு அனுப்ப வேண்டும். சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைகள் முடியும்வரை பாதிக்கப்பட்ட பெண் தடங்களை அழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது. முக்கியமாகக் குளிப்பது கிடைக்கும் தடங்களை அழிப்பதற்குச் சமமாகும்.

பாதிக்கப்படும் பெண்ணின் வாழ்க்கையை எதிர்காலத்தில் கேள்விக் குறியாக மாற்றும் வகையில் எந்தவொரு நடவடிக்கைகளும் அமையக் கூடாது. குறித்த பெண்ணைப் பாதிப்புக்கு உள்ளாக்கிய ஆணைக் கைது செய்து பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அவருக்கு பாலியல் தொடர்பான நோய்கள் உள்ளதா என்றும் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் பாதிக்கப்பட்டவரைப் பற்றிய பரிசோதனை அறிக்கைகளை பொலிஸாரிடம் ஒப்படைத்துவிட்டால் தமது கடமை முடிந்ததாக வைத்திய நிர்வாகத்தினரும் இது தொடர்பான அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்து விட்டால் சரியென பொலிஸாரும் கருதுகின்றனர்.

இது உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். பாதிக்கப்பட்ட பெண்ணின் மனோநிலை தொடர்பான பரிசோதனைகள் மன நோய் வைத்திய நிபுணராலும் இதனால் பெண்ணுக்கு ஏற்படும் நோய்கள் தொடர்பான பரிசோதனைகள் உரிய வைத்திய நிபுணர்களால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு சமூகத்தில் வருங்காலத்தில் ஏற்படக் கூடிய விளைவுகள், பாதிப்பால் கர்ப்பம் தரிக்காமல் தடுப்பது, பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு மேலும் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாமல் தடுக்கும் சமூகப் பாதுகாப்பு போன்றவை தொடர்பாக உரிய அதிகாரிகளால் கண்காணிக்கப்பட வேண்டும். இது குறித்த கூட்டங்களையும் நடத்த வேண்டும்.

இந்தக் கூட்டத்தில் வைத்திய சாலை சட்ட வைத்திய அதிகாரி, சமூகப் பாதுகாப்பு அலுவலர், மகளிர் விவகார உத்தியோகத்தர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், மனநோய் சிகிச்சை நிபுணர், பொலிஸார், இலவச சட்ட ஆலோசகர் கொண்ட குழுவினர் மாதத்தில் ஒருநாள் ஒன்று கூடி நிலைமைகளை ஆராய வேண்டும். அடிக்கடி எமது மாவட்டத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதால் பாதிக்கப்படும் பெண்களுக்குப் இது பெரும் ஆறுதலாக இருக்கும்.

நாட்டின் அனைத்துக் கிராமங்களிலும் மகளிர் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இவ்வாறான அமைப்புக்கள் பாதிக்கப்படும் பெண்களுக்கு ஆதரவாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குற்றவாளிகள் தப்பிக்காமல் தண்டனை கிடைக்கப் பாடுபட வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உரிய ஆறுதல்கள் சொல்லி அவரின் மனோ நிலையை சீராக்கி மீண்டும் சமூகத்தில் இணைக்கும் செயற்பாட்டை ஊக்குவிக்க வேண்டும்.

நீதிமன்றங்கள் இவ்வாறான வழக்குகளை காலங்கடத்தாமல் குறுகிய காலத்தினுள் வழக்கை முடிவுறுத்துவது பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஆரோக்கியமானதாக அமையலாம். வழக்கை நீண்டகாலத்துக்கு நடத்துவது சந்தோஷமான குடும்ப வாழ்வில் பிரிவினை ஏற்படுத்தும் நிலையை உருவாக்கிவிடும்.

நீண்டகாலம் நீதிமன்றங்களில் வழக்குகள் தாமதிப்பதால் பல பெண்கள் இல்லற வாழ்வில் இணைய முடியாத நிலையும் ஏற்படுகிறது. இவ்வாறான வழக்குகளை விரைவாக குறுகிய காலத்தில் நடத்தி முடிவுறுத்துவது பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கும் வரப்பிரசாதமாகக் கருதலாம்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளில் நம்பிக்கை வைத்து அசண்டையீனமாக இருப்பது ஒரு காரணமாகஅமையலாம். சில விடயங்கள் தவிர்க்க முடியாத போதிலும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். சில இடங்களுக்கு தனியே செல்வதை தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களின் உயிர்களைப் பணயமாக வைத்து அலை கடலுக்குள் இறங்கி நின்று நடத்திய போராட்டம் இதுவரை நாம் கேள்விப்படாதது. இந்தப் போராட்டம் அனைவரையும் நெக்குருகச் செய்திருக்கிறது.



# தலைவர்கள்

## பிறப்பதில்லை; உருவாகிறார்கள்

பழ.நெடுமாறன்

கூடங்குளம் அணு மின் நிலையத்திற்கு எதிரான மக்களின் அறவழிப் போராட்டம் புதிய பரிமாணத்தில் தொடர்ந்து நடைபெறுகிறது. துப்பாக்கிச் சூடு, கண்ணீர்ப் புகை வீச்சு, தடியடி ஆகிய கொடிய அடக்குமுறைகளுக்கு ஆளாக நேர்ந்த போதிலும் அந்த மக்கள் கொஞ்சமும் அஞ்சாமல் தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்து வருகிறார்கள்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களின் உயிர்களைப் பணயமாக வைத்து அலைகடலுக்குள் இறங்கி நின்று நடத்திய போராட்டம் இதுவரை நாம் கேள்விப்படாதது. இந்தப் போராட்டம் அனைவரையும் நெக்குருகச் செய்திருக்கிறது.

கடந்த 400 நாள்களுக்கு மேலாக அப்பகுதி மக்கள் ஜனநாயக நெறிமுறைகளின்படியும், காந்திய வழியிலும் தங்கள் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்தப் போராட்டத்தில் தொடர்ந்து உணர்வுபூர்வமாக ஈடுபட்ட போதிலும் இதுவரை ஒரு சிறு வன்முறைக்குக்கூட இடம் தராமல் கட்டுப்பாட்டுடன் போராடி வந்திருக்கின்றனர்.

அந்த மக்கள் வன்முறையில் ஈடுபட்டனர் என்று காவல்துறையினர் கூறுவது நம்பத்தகுந்ததாக இல்லை. போராட்டத்தை எப்படியேனும் ஒடுக்கியே தீர வேண்டுமெனத் திட்டமிட்டு வீண் பழியைச் சுமத்தி மிகக் கொடுமையான வகையில் அடக்குமுறைகளை காவல் துறை கையாண்டுள்ளது என்பது அப்பட்டமாகத் தெரிகிறது.

400 நாள்களுக்கு மேலாக போராடி வரும் அந்த மக்களின் நியாயமான சந்தேகங்களுக்கு இதுவரை விளக்கம் தரப்படவில்லை. அணுமின் நிலையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் யாரும் மக்களைச் சந்தித்துப் பேசவில்லை. மாறாக, கூடங்குளம் பகுதியில் உள்ள மக்கள் தொகையைவிட அதிகமான எண்ணிக்கையில் பொலிஸ் படை குவிக்கப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். அங்கு பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

தங்களுக்கும் எதிர்காலத் தலைமுறையினருக்கும் அணு உலையால் நேரிடக்கூடிய அபாயத்தை எண்ணிப் பார்த்தே அந்த மக்கள் தொடர்ந்து போராடுகிறார்கள். இந்த உண்மையை மத்திய-மாநில அரசுகள் உணர்ந்து தங்களின் பிடிவாதத்தைக் கைவிடவேண்டும்.

அணு உலையில் மின் உற்பத்தி தொடங்க உள்ள நிலையில் எப்படி நிறுத்துவது என மத்திய அரசு வாதம் செய்கிறது. ஆஸ்திரியாவில் மின் உற்பத்திக்கு முந்தைய நாள் அணு உலை மூடப்பட்டுள்ளது. உலகின் பல நாடுகளில் மின் உற்பத்தி தொடங்கிய பிறகும் அணு உலைகள் மூடப்பட்டுள்ளன.

காற்றாலை மின் உற்பத்தி, சூரிய ஒளி மின் உற்பத்தி போன்ற - அபாயம் இல்லாத இயற்கையான வழிமுறைகளுக்கு தமிழ்நாட்டில் தாராளமாக இடம் இருக்கும்போது அபாயகரமான அணுமின் உலைகள் தேவையா? குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பிறகு அணு உலைகள் இயங்கா. ஆனால் அவற்றிலிருந்து வெளியாகும் அணுக்கதிர் வீச்சைத் தடுப்பதற்கு மேலும் பல ஆயிரம் கோடி ரூபாய்களைச் செலவழிக்க வேண்டியிருக்கும். ஆனாலும் முழுமையாகத் தடுத்துவிட முடியாது.

பிறகு ஏன் மத்திய அரசு இதில் பிடிவாதமாக இருக்கிறது? அணுமின் உலைகளில் கிடைக்கும் புளுட்டோனியம், அணு ஆயுதங்கள் செய்வதற்குப் பயன்படும். காந்தியடிகளைத் தேசத் தந்தையாகக் கொண்ட நாடு அணு ஆயுத உற்பத்திக்காக அப்பாவி மக்களைப் பலியிடத் துணிந்திருப்பது வேதனை மிக்க செய்தியாகும்.

கூடங்குளம் பகுதியில் - குறிப்பாக இடிந்தகரை சிற்றூரில் - குடிதண்ணீர் அறவே கிடையாது. வெளியிலிருந்து லொறிகள் மூலம் வாரத்துக்கு ஒரு முறை மட்டுமே குடிதண்ணீர் வழங்கப்படுகிறது.

6,000 பேர் வாழும் அந்தக் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்கூட கிடையாது. அவசர மருத்துவ உதவிகளுக்கு நாகர்கோவில் அல்லது திருநெல்வேலிக்குத் தான் செல்ல வேண்டியுள்ளது. சாலை வசதி மிக மோசமாக உள்ளது.

இத்தகைய அடிப்படை வசதிகள் அப்பகுதியில் உள்ள பல கிராமங்களில் அறவே இல்லை. இப்பகுதியில் சாலை வசதி, மருத்துவமனை, குடிதண்ணீர்த் திட்டம் போன்ற குறைந்தபட்ச வசதிகளை மேற்கொள்வதற்காக ரூ.200 கோடியில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் அளித்த திட்டத்தின் கதி என்ன ஆயிற்று என்பதே தெரியவில்லை. இந்தக் குறைகளைப் போக்க மாநில அரசோ மத்திய அரசோ இதுவரை அக்கறை காட்டவில்லை.

போராடும் மக்களைச் சாதியின் பெயராலும், மதத்தின் பெயராலும் பிளவுபடுத்த முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால் அந்த மக்கள் ஒன்றுபட்டு நின்றனர். அந்நிய நாடுகளிலிருந்து பணம் பெற்று போராட்டத்தை நடத்தும் தேசத் துரோகிகள், அந்நிய கைக்கூலிகள் என போராட்டக் குழுவினர் மீது பழி சுமத்தப்பட்டது.

உறுதியாகப் போராடிவரும் மக்கள் மீது நூற்றுக்கணக்கான பொய் வழக்குகள் புனையப்பட்டன. சுதந்திரப் போராட்ட காலத்தில் ஆங்கிலேய ஆட்சி கையாண்ட பிரித்தாளும் சூழ்ச்சிகளையும் அவதூறுப் பரப்புரைகளையும் காங்கிரஸ் இப்போது கையாளுவதுதான் வேடிக்கையிலும் வேடிக்கையானதாகும்.

அடக்குமுறைகள், அவதூறுகளை அள்ளிப் பொழிதல், சுயநல சூழ்ச்சிகள் இவற்றைக் கையாளுவதன் மூலம் மக்கள் போராட்டங்களை ஒடுக்கிவிட முடியாது. போராட்ட களங்களில்தான் உண்மையான மக்கள் தலைவர்கள் உருவாகிறார்கள்.

தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கு எதிரான போராட்டத்தில் பூத்த புரட்சி மலர்தான் அண்ணல் காந்தியடிகள். வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தில் இராஜாஜியின் தலைமை உருவாயிற்று. வைக்கம் போராட்டம் பெரியார் இராமசாமி அவர்களைப் பெற்றெடுத்தது. நீலன் சிலை அகற்றும் போராட்டம், நாகபுரி வாள் போராட்டம் போன்ற போராட்டங்களைத் திட்டமிட்டு நடத்திய போதுதான் காமராஜரது செயற்திறனை மற்றவர்கள் உணர்ந்தார்கள்.

மேற்கண்ட போராட்டங்களையும் தலைவர்களையும் அடியொற்றி நடைபெற்ற கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டத்தில் உதயகுமாரின் தலைமைத்துவம் உருவாயிற்று. போராட்டக்களங்கள் ஈன்றெடுத்த தலைவர்களை யாராலும் மிரட்டி பணிய வைக்க முடியாது என்பதை ஆட்சிபீடத்தில் இருப்பவர்கள் உணர வேண்டும்.

அறப்போராளியான உதயகுமாருக்கு எதிராக இராணுவம், கடற்படை, மாநிலக் காவல் படை ஆகியவை கூட்டாக நடத்திவரும் மனித வேட்டையை உடனடியாகக் கைவிடவேண்டும்.

உதயகுமார் தனி மனிதரல்லர், அந்தப் போராடும் மக்களால் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவர்; அதனால்தான் அவரால் இந்தப் போராட்டத்தை இன்னமும் உறுதியுடன் தொடர்ந்து நடத்த முடிகிறது. யதார்த்தபூர்வமான இந்த உண்மையை உணர்ந்து அவரை அழைத்துப் பேச மத்திய-மாநில அரசுகள் முன் வரவேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் மத்தியில் போட்டி வேண்டாம் புத்துயிர் ஊட்டும் புத்துணர்ச்சியே வேண்டும்

■ ஆனந்த்

1987 ஆம் ஆண்டு 'கூடி விளையாடு பாப்பா' நாடகத்தை நாடக அரங்கக் கல்லூரி தயாரித்து மேடையேற்றியதில் இருந்து யாழ்ப்பாணத்தில் சிறுவர் நாடகம் என்ற எண்ணக் கரு விருத்தியாகி வந்திருக்கிறது.

பல பாடசாலைகளில் தொடர்ச்சியாக சிறுவர் நாடகங்கள் தயாரித்து மேடையேற்றப்பட்டு வந்திருக்கின்றன. விழாக்களுக்காகவும் போட்டிகளுக்காகவும் சிறுவர் நாடகங்கள் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டு வந்திருக்கின்றன. இதில் குழந்தை ம. சண்முகலிங்கம் அறிமுகம் செய்த சிறுவர் நாடக வகையில் ஒன்றான மிருகங்களைப் பாத்திரங்களாகக் கொண்ட சிறுவர் நாடகங்களே பாடசாலைகளில் பரவலாக்கப்பட்டுள்ளன. ''அதுவே சிறுவர் நாடகம்'' என்ற எண்ணத்தையும் வடக்குக் கல்விப்புலத்தில் வலுவாக நாட்டியுள்ளது. ஆனால் மிருகங்களை பாத்திரங்களாகக் கொண்டவை மட்டுமே சிறுவர் நாடகங்கள் என்ற எண்ணக்கரு ஏற்புடைய ஒன்று அல்ல, அதில் வெவ்வேறு வகைகள் உண்டு.

சிறுவர் நாடகங்களுக்கான தனியான போட்டி அகில இலங்கை ரீதியில் பல ஆண்டுகளாக நடைபெறவில்லை. தமிழ் தினப்போட்டியில் திறந்த போட்டியாக நடைபெறுகின்ற நாடகப் போட்டியில் பெரிய மாணவர்களின் நாடகங்களோடு சிறுவர் நாடகங்களும் கடந்த காலங்களில் போட்டி போட்டு வந்திருக்கின்றன. இது சிறுவர்களின் மனநிலையை பெரிதும் பாதிக்கும் என்றும் கட்டிளமைப் பருவத்தினருடன் இவர்களை ஒன்றாக மதிப்பிடுவது தவறு என்றும் கருத்து நிலைகள் மேலோங்கியதன் காரணமாக சிறுவர் நாடகத்துக்கான தனியான போட்டிகள் 1993களில் அறிமுகப்படுத்தப்பட்டன. அப்போது ஒரே கல்வி வலயமாக இருந்த யாழ்ப்பாண கல்வி வலயம் அதனை அறிமுகம் செய்தது.

இதிலும், ''போட்டி நல்லதல்ல, போட்டியென்று வருகின்றபோது குரோதம், வன்மம், முரண்பாடுகள் மேலெழுகின்றன. அவற்றைத் தவிர்த்தல் வேண்டும்'' என்ற சிந்தனை முன்வைக்கப்பட்டது. இதனால், பின்னர் சிறுவர் நாடக விழாக்கள் என்ற எண்ணக்கரு முன் வைக்கப்பட்டு கோட்ட ரீதியாக, வலய ரீதியாக, மாவட்ட ரீதியாக மாகாண ரீதியாக விழாக்கள் வைக்கிறோம் என்று விழாக்கள் வைத்தார்கள். பங்கு பற்றிய எல்லோருக்கும் சான்றிதழ் என்றும் எல்லாப் பிள்ளைகளையும் ஊக்கப்படுத்தி செயற்பட ஊக்குவிப்பது இதனது நோக்கமாகவும் சொல்லப்பட்டது.

இருப்பினும் அந்த சிந்தனைகள் ஒருபோதும் செயல்வடிவம் பெறவில்லை. கல்வித்திணைக்களங்கள் தம் போக்கில் தொடர்ந்தும் போட்டிகளையே நடத்துகின்றன. இந்தப் போட்டி உலகில் பிள்ளைகள் அதற்குப் 'பழகிக் கொள்ளவும் வேண்டும் என்று அதிகாரிகள் தம் செயலை நியாயப்படுத்துகிறார்கள். இதனால் சிறுவர் நாடக விழாக்கள் போட்டிகளாகவே நடத்தப்பட்டன. அதுவே இன்று வரை தொடர்கிறது.

இந்தச் சிறுவர் நாடகப் போட்டிகள் தற்போது தடல்புடலாக நடக்கின்றன. அண்மையில் ஒரு கோட்ட மட்ட போட்டியில் ஆறு சிறுவர் நாடகங்கள் கலந்து கொண்டன. அதனை அவதானிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்தப் போட்டி முடிவில் நடுவர்கள் ஐந்து பேர் தமக்குள் கலந்துரையாடி நாடகங்கள் தொடர்பான விமர்சனங்களை முன்வைத்து தமது தீர்ப்பை அறிவித்தனர். அந்த விமர்சனங்கள் நாடகத்துறை சார்ந்தோர் மத்தியில் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கின்றன.



சிறுவர் நாடகம் என்ற எண்ணக்கரு தொடக்கப்பட்டு கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளுக்கு மேலான காலம் உருண்டோடி விட்டது. ஆனாலும் இன்றும் இந்தத் துறை காத்திரமான வளர்ச்சியைக் காணாத நிலையிலேயே காணப்படுகிறது என்பதை அங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் எடுத்துக் காட்டின. இது கவலையளிக்கின்ற ஒரு விடயமும்கூட. இது விடயத்தில் கல்வித் திணைக்களம் அதிகளவு கவனம் செலுத்துதல் அவசியமாகும்.

அந்தப் போட்டியில் மேடையேற்றப்பட்ட ஒரு நாடகம், போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை இலக்காகக் கொண்டு உளவியலாளர் ஒருவரால் எழுதப்பட்ட கதையை அடியொற்றியது. நான்ஸிபரன் அம்மையார், இலங்கையில் காணாமல்போனோரின் குடும்பங்கள் மத்தியில் வேலை செய்த பின்னர் சிறுவர்களுக்காக எழுதிய கதையே அது. அதனை அடிப்படையாகக் கொண்டே அந்த நாடகம் தயாரிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கதை, காட்டுத் தீயில் அகப்பட்ட மிருகங்களுக்கு உதவச் சென்ற தனது தந்தை திரும்ப வராததால் தந்தையைத் தேடிச் செல்லும் குட்டியானை ஒன்றின் தன்னம்பிக்கையையும் விடாமுயற்சியையும் துன்பத்திலிருந்து மீள்வதையும் சொல்கிறது. தன்தந்தை இறந்ததை வேறு யானைகள் மூலம் அறியும், இறப்பு என்றால் என்னவென்று புரிந்து கொள்ள முடியாத வயதையுடைய அந்த குட்டியானை எப்படி அந்தச் சூழலில் இருந்து மீள்கிறது என்று நான்ஸிபரன் அம்மையார் கூறுகிறார்.

''அப்பா திரும்ப வரமாட்டார்'' என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் திணறும் அந்தக் குட்டியானைக்கு ஏனைய பெரிய யானைகள் அதனை புரியவைக்க முயற்சிக்கின்றன. நீண்ட முயற்சியின் பின்னர் குட்டியானை அப்பா இனிமேல் நினைவில் மட்டும் தான் வாழ்வார், நேரில் வரமாட்டார் என்பதைப் புரிந்துகொள்கிறது. பின்னர் எல்லோருமாகக் கூடியிருந்து செய்யவேண்டியவைகளைச் செய்து, துணிவு பெறுகிறார்கள் என்பதாக அந்தக் கதை முடிகிறது.

இந்தக் கதைக்கான நாடக வடிவமே போட்டியில் மேடையேற்றப்பட்டிருந்தது. இந்தக் கதை சிறுவர்களுக்கு பொருத்தமற்றது என்று நடுவர் குழாமின் பிரதிநிதி ஒருவர் பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அடித்துக்கூறியிருந்தார். இதனை அங்கு போட்டியை ஒழுங்கு செய்திருந்த கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் இருவரும். ஆமோதித்தார்கள். இதற்கு அவர்கள் சொன்ன காரணம் ''சிறுவர்களுக்கு மகிழ்ச்சியான முறையிற்றான் கதைகள் சொல்ல வேண்டும். மேற்சொன்னது போன்று சொல்ல முடியாது'' என்பதாகும். அதாவது சிறுவர் நாடகத்தில் யாரும் அழக்கூடாது என்று விதியை நிர்ணயித்திருக்கிறார்கள் அவர்கள்.

இன்று எம்மத்தியில் எத்தனை பிள்ளைகள் தமது தாய், தந்தையர், உறவினர்களுக்கு என்ன நடந்ததென்று தெரியாமல் வாழ்கிறார்கள். அதை அவர்களுக்கு விளக்குவதில்லை. மாறாக மறைப்பதிலேயே அதிகம் கவனம் செலுத்துவோம். ஒரு பிள்ளை ஆசையாக வளர்த்த செல்லப் பிராணி இறந்து விட்டாலோ, ஆசையாக வைத்து விளையாடிய பொருள் காணாமல் போனாலோ அல்லது உடைந்து போனாலோ அதைக்கூட நம்மில் பலர் பிள்ளைக்குச் சொல்வதில்லை. அவர்களுக்கு நாம் நடந்ததைச் சொல்லி அதனை விளங்கப்படுத்தி அதில் இருந்து மீட்டெடுத்து மகிழ்ச்சியான சூழலைக் கொடுத்திருக்கிறோமா? அதை எப்படிக் கையாளப் போகின்றோம் என்பது பற்றி சிந்திப்பதே முக்கியமானது. சிறுவர்கள் அதனைப் புரிந்து கொள்ளத் தயாராகவே உள்ளார்கள். அவர்களுக்கு அது புரியும். ஆனால் பெரியவர்களுக்கு சிறுவர்களை கையாளத் தெரியவில்லை என்பதுதான் கவலையான விடயம். அதிலும் கல்விப்புலத்தில் உள்ளவர்களுக்கு அது புரியவில்லை என்பது மிக வேதனையானது.

சிறுவர்களுக்கான மகிழ்ச்சி என்பது என்ன என்பதை கல்வி அதிகாரிகளும் நடுவர்களாக பணிபுரிபவர்களும் சிந்தித்தாக வேண்டும். ஆடுதலும் பாடுதலும் மட்டும் மகிழ்ச்சியென்று கொள்ளுதல் தவறான ஒரு எடுகோளாகும்.

அந்த நாடகத்தில் மேடையில் காட்சிப் பொருள்கள் இல்லை என்பது நடுவர்களின் இன்னோரு குற்றச்சாட்டு. ஆனால் அதே நாடகத்தில் சிறுவர்கள், ஏணைகளோடு வந்து பாடிய தாலாட்டும் அதற்கு அவர்கள் உருவாக்கிய காட்சியும் அற்புதமானவை என்றும் குறிப்பிட்டார்கள். அப்படியென்றால் காட்சிப் பொருள்களாக அவர்கள் எவற்றைக் குறிப்பிட்டார்கள் என்பது புரியவில்லை.

மரங்கள் என்றால், மேடையில் மரக்கொப்புகளை வெட்டிக் கொண்டுவந்து வைக்க வேண்டும் அல்லது சிறுவர்களின் கையில் மரக்கிளைகளை கொடுத்து நாடகம் முடியும் வரை மேடையில் நிற்கவிட வேண்டும் என்பது நடுவர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது போலும். பிள்ளைகளின் கற்பனா சக்திக்கு நிகராக பெரியவர்கள் சிந்திக்க முடியாது. ஒரு பொருள் பலவாறான பிரமாண்டமான பொருளாகப் பிள்ளைக்குத் தோன்றும். அப்படியான பிள்ளைக்கு மரக்கிளை ஒன்றை வைத்து இது மரம் என்று சொல்வது மிகவும் அபத்தமானது. பிள்ளைகளில் கற்பனாசக்தியை மழுங்கடிப்பதாக அமைந்துவிடும். வெறும் மேடையில் பிள்ளைகள் தமது கற்பனைக்கு ஏற்ப உருவாக்குகின்ற காட்சிகளே அற்புதமானவை. அதையே நாம் ஊக்கப்படுத்த வேண்டும். ஆகவே இந்த தவறான எண்ணங்களின் அடிப்படையில் சிறுவர் நாடகங்களை மதிப்படுவது தவிர்க்கப்படவேண்டும்.

அந்த நாடகத்தில் மாணவர்கள் முதலில் மேடைக்குள் நுழைந்ததும் அம்மா வணக்கம்!, ஐயா வணக்கம்! சொல்கிறார்கள். அதனை நடுவர் குழாம் நிராகரித்தது. ''ஏன் அவ்வாறு செய்தார்கள்?'' என்பதே அவர்கள் எழுப்பிய கேள்வி. ''சிறுவர் நாடகங்களைப் பார்க்கின்றவர்கள் சிறுவர்கள் அவர்களுக்கு ஏன் ஐயா வணக்கம் அம்மா வணக்கம் சொல்லுவான்'' என்பது அவர்கள் முன்வைத்த நியாயம்.

சிறுவர் நாடகங்களைச் சிறுவர்கள் மட்டுமே பார்ப்பார்கள் என்ற நியாயம் முன்வைக்கப்பட்ட ஒரே இடமாக இதுமட்டுமே இருக்க முடியும். தன் பிள்ளைகள் நடிக்கும் நாடகத்தைப் பார்ப்பதற்கும், அதில் புளகாங்கிதம் அடைவதற்கும் முன்னிற்பதில் பெற்றோரைவிட வேறு யாராவது இந்த உலகில் இருக்க முடியுமா? அந்தப் பெற்றோர் ஐயாக்களாகவும் அம்மாக்களாகவும் இல்லாமலா இருப்பார்கள்?

அதைவிடவும் சிறுவர்கள் தம்மைப் பெரியவர்களாகப் பாவனை செய்ய விரும்புவார்கள், வேறொருவர் தம்மைப் பெரியவராகக் கருதிக் கூப்பிட்டால் அவர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. அதை அவர்கள் அதிகம் விரும்புவார்கள் என்கிறது சிறுவர் உளவியல். மேலும் சிறுவர் நாடகத்தைப் பெரியவர்களுக்கு சிறுவர்கள் செய்து காட்டுவதே அதிகமாக வரவேற்கப்படுகிறது.

இவ்வாறு சிறுவர் நாடகத்துக்கு ஏற்புடையதல்லாத பல எண்ணக்கருக்களை உள்ளடக்கிய நடுவர்களால் தெரிவிக்கப்பட்ட பல கருத்துக்களையும் இங்கு விவாதிக்க முடியாது என்பதால் விவாதிக்கவில்லை. இது அவர்களின் தவறுமல்ல. போட்டிகளுக்காக வருடத்தில் ஒரு தடவை அல்லது எப்போதாவது ஒரு தடவை மட்டுமே அவர்கள் நடுவர்களாக அழைக்கப்படுகிறார்கள். விளையாட்டுப் போன்று நாடகப் போட்டிகளுக்கான நடுவர்கள் என்று பொது நியதிகளைக் கொண்ட யாரும் கிடையாது. பல இடங்களில் நாடகத்துறை சாராத பலரே தான் நடுவர்களாக இருக்கிறார்கள். எனவே இங்கும் நடுவர்களைக் குறைகூற முடியாது.

சிறுவர்களுக்கு நன்மை தரும் விடயங்கள் புரிந்துகொள்ளப்படாமல் வெறும் சுற்றறிக்கைகளுக்காக மட்டும் இயங்குவதால் இந்தப் போட்டிகளால் என்ன பயன் என்பதை அதிகாரிகள் சிந்திக்க வேண்டும். முடிந்தவரையிலாவது இந்தத் துறை சார்ந்த தகுதியானவர்களை நடுவர்களாக நியமிக்க வேண்டும். அத்துடன் நடுவம் செய்வதற்கான விதிமுறைகளையும் சரியாக வரையறுக்க வேண்டும்.

அவை எல்லாவற்றையும்விட மேலான ஒன்றுண்டு. அதுதான் சிறுவர் நாடகப் போட்டிகளை அறவே ஒழித்துவிடுவது. சிறுவர் நாடகங்களை விழாவாக, சிறுவர்களின் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகக் கொண்டு வரவேண்டும். தோற்பவனும் வெல்பவனும் என்ற நிலையை இங்கு தவிர்க்க வேண்டும். சிறுவர்களின் எல்லா ஆக்கப் படைப்புக்களும் ஊக்கப்படுத்தப்படவேண்டும். அதிகாரிகளுக்கு மாலை போடுவதற்கானதாக சிறுவர் நிகழ்வுகளை ஒழுங்கு செய்யாது. சிறுவர்களைப் போற்றுவதற்காகவும். அவர்களின் படைப்பாக்கத்தை ஊக்கப்படுத்துவதற்காகவும், ஆற்றல் வளர்ச்சிக்காகவும் இவற்றைப் பயன்படுத்த வேண்டும். போட்டி வேண்டாம். புத்துயிர் ஊட்டும் புத்துணர்ச்சியே வேண்டும். ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எதற்காக இந்த ஆலவட்டம்?





■ மங்காத்தா

மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்துதல் எனும் விடயம் இந்த நாட்டில் சிறப்பாக முன்னேற்றம் கண்டு வருகிறது. மாவட்ட அதிகாரிகளும் சரி, மாகாண அதிகாரிகளும் சரி, கொழும்பிலுள்ள ஆட்சியாளர்களும் சரி, வடக்கு கிழக்கு உட்பட ஆளுந்தரப்பு அரசியல்வாதிகளும் சரி தமக்கு மேற்பட்ட நிலையிலுள்ளவர்களைத் திருப்திப்படுத்துவதில் நிதானமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

இடம்பெயர்ந்தோர் முகாம்களை வலுக்கட்டாயமாக மூடுதல், இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்துவிட்டதாகக் கூறி நடுக்காட்டில் விடுதல் போன்ற செயற்பாடுகளை உச்சக்கட்ட உதாரணங்களாகக் கூறலாம். சர்வதேசத்தை திருப்திப்படுத்த இலங்கை அரசு இவ்வாறான கடும் பிரயத்தனம் மேற்கொள்கிறது.

ஆட்சிக்காரரைத் திருப்திப்படுத்த வடக்கு நாட்டாமையும் வடக்கு அமைச்சரும் அவருடன் இணைந்த அரசியல்வாதிகளும் கடும் பிரயத்தனங்களை முன்னெடுக்கின்றனர்.

இந்த இரண்டு தரப்பையும் திருப்திப்படுத்த வடக்கு மாகாண அதிகாரிகள், மாவட்ட அதிகாரிகள் பிரயத்தனப்படுகின்றனர். ஒருவரை ஒருவர் திருப்திப்படுத்துவதற்கான நடவடிக்கைதான் இங்கு உள்ளதே தவிர, ஆக வேண்டிய காரியம் பற்றிச் சிந்திப்பார் எவருமில்லை. பாதிக்கப்பட்டவர்கள் எக்கேடு கெட்டாலும் சரி இந்த அதிகாரிகள் அதைப்பற்றிக் கவலை கொள்ளப் போவதில்லை.

மக்களுக்குச் சேவை செய்யும் அரசு பிரதிநிதியாக நியமனம் பெற்று மக்களின் வரிப்பணத்தில்- மக்கள் வழங்கும் சம்பளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த அதிகாரிகள் செய்யும் காரியங்கள் நிலையானவையா என்பதை ஒருகணம் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இவ்வாறான கவலைக்குரிய நிலையிலேயே வடக்கில் கல்விச் செயற்பாடும் கல்வி நிர்வாகமும் தள்ளாடிக் கொண்டிருக்கின்றன. முல்லைத்தீவு வலய பதில் கல்விப் பணிப்பாளர் வரதராஜமூர்த்தி, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் அதிபராக நியமிக்கப்பட்ட வேணுகா கடமைகளைப் பொறுப்பேற்பதில் இருந்த நிலை சகலருக்கும் புரிந்த விடயமே.

ஜனாதிபதி மஹிந்த வன்னி சென்ற போது வடக்கு அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார். ஒவ்வொரு பிரதேசங்கள் ரீதியாகவும் நடைபெறும் பணிகளை மேலதிகாரிகள் புறொஜெக்ரரில் படங்களாகப் போட்டுக்காட்ட ஜனாதிபதியும் பார்த்துக் கொண்டிருந்தார்.

மக்களின் அவலங்களையோ சீர் செய்யப்படாது இருக்கும் அபிவிருத்திக்காக ஏங்கி நிற்கும் பகுதிகள் எவற்றையுமே அதில் காட்டவில்லை. மாறாக அரசாலும் அது தவிர வெளிநாட்டு நிதியில் அபிவிருத்தியான இடங்களுமே மஹிந்தவுக்குக் காட்டப்பட்டன.

அதன் ஒரு கட்டமாக முல்லைத்தீவு வலயத்தில் குமுழமுனையில் 2010 ஆம் ஆண்டு அத்திபாரமிடப்பட்டு கட்டடம் எழுப்பப்படாது இருக்கும் பகுதியின் ஒரு படமும் தவறுதலாகக் காட்டப்பட்டு விட்டது. அதுபற்றி ஜனாதிபதியால் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. உண்மை நிலையைக் கூறி, கட்டடம் எழுப்பப் படுவதற்கான பணிகள் இடம்பெறுவதைச் சுட்டிக் காட்டினார் வரதராஜமூர்த்தி.

ஆனால் மேலும் பிறிதொரு படம் காண்பிக்கப்பட்டது. அது பழைய கட்டடம் ஒன்றின் படம். 2010 இல் இடப்பட்ட அத்திபாரத்தில் எழுந்த புதிய கட்டடமே அது என்று வடக்கு மேலதிகாரிகளால் காட்டப்பட்டது. அதுபற்றி வரதராஜமூர்த்தியிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அவர் நீதியாகச் செயற்படுபவர் என்று பலராலும் பெயரெடுத்திருந்தவர். மோசடிகளைத் தவிர்ப்பவர் என்றெல்லாம் பிற அதிகாரிகளால் கூறப்படுபவர். அன்றைய தினமும் அவர் உண்மை நிலையை விளக்கி அப்படியானதொரு கட்டடம் குமுழமுனையில் இல்லை என்று கூறினார். அவ்வளவுதான். ஏனைய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி முன்னிலையில் என்ன சொல்வது என்று கூடத்தெரிய வில்லை. அவரது பகுதியில் இல்லாத கட்டடம் ஒன்று பற்றி அவரால் எப்படி பதில் கூறமுடியும்.

மறுநாள் அவருக்கு இடமாற்றக் கடிதம் வடமாகாண கல்வி அமைச்சில் இருந்து வழங்கப்பட்டது. அது தீவக வலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டமைக்கான கடிதம். இதன் மூலம் உண்மையைச் சொன்னதன் பரிசா? அல்லது நீதியாகச் செயற்படக் கூடாது என்பதனை மேலதிகாரிகள் வலியுறுத்துகின்றனரா. தாம் சொல்வதற்குத் தலையாட்ட வேண்டும் என்று வலியுறுத்துகின்றனரா? என்பதை வாசகர் புரிந்து கொள்வர்.

முல்லைத்தீவு மாவட்டம் போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இடம். அதனை முன்னேற்ற முன்னிற்க வேண்டிய அதிகாரிகள் அதற்கு எதிரான செயற்பாடுகளில் களமிறங்குகின்றனர். பிரதேசவாதம் பார்க்கிறார்களா? எதற்காக இந்த நிலையை அதிகாரிகள் உருவாக்குகிறார்கள்? தமது தில்லுமுல்லுகளைத் திறம்படச்செய்ய நேர்மையான அதிகாரிகள் இடையூறாகவே இருப்பர் என்று கருதுகின்றனரா? [illegible] செய்ய முற்படுகின்றனரா? பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

மற்றொரு விடயம் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் நியமனத்தின் பின்னரான நிலை. பொதுச்சேவை ஆணைக் குழுவினால் அதிபராக நியமிக்கப்பட்டவர்தான் வேணுகா சண்முகரத்தினம். அந்த ஆணைக்குழுவை அவமதிக்கும் வகையில், கல்லூரியின் பிரதி அதிபராக இருந்த றாஜினி முத்துக்குமாரன் தானே அதிபர் என்று அதிகாரம் நடத்தினார். நியமனம் செய்யப்பட்டு பதவியேற்கச் சென்ற வேணுகாவுக்கு அங்கு இடமில்லாமல் செய் யப்பட்டது.

அதிபர் அலுவலகக் கதவை மூடிவிட்டுத் திறப்பைத் தன் வசம் வைத்துக் கொண்டார். காலையில் அதிபர் அலுவலகத்தைத் திறந்தால் உடனேயே கதவிலிருந்து திறப்பைக் கழற்றி ஓடிச்சென்று அதிபர் கதிரையில் உட்கார்ந்துவிடுவார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிநடத்தலில் றாஜினி இவ்வாறு செயற்பட்டார். யாழ்.மாநகர மேயரும் தான் சளைத்தவரல்லர் என்பதை இந்த இடத்தில் தெளிவாகப் புரிய வைத்தார்.

உரிய அனுமதியின்றி மாநகர சபையின் மண்டபத்தில் றாஜினி பத்திரிகையாளர் சந்திப்பை நடத்த அனுமதித்தார். கல்லூரிக்குச் சென்று டக்ளஸின் பணிப்புக்கமைய றாஜினிதான் அதிபர்; அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன என்று பல தடவைகள் கூறியிருந்தார்.

அந்தப் பாடசாலையிலுள்ள இன்னொரு ஆசிரியை தனது கைத்தொலைபேசியிலிருந்து அமைச்சர் டக்ளஸின் குரலை ஒலிபெருக்கியில் ஒலிக்க வைத்தார். அவரும் றாஜினிதான் கல்லூரி அதிபர் என்று பிரசங்கம் செய்தார்.

''சொல்வதைச் செய்வேன் செய்ததைத்தான் சொல்வேன்'' என்று பலருக்கும் போதனை செய்திருந்தார். இத்தனையும் அநீதியான செயற்பாடுகளே. பொதுச் சேவை ஆணைக்குழு என்பது அரச தலையீடு இன்றி செயற்படும் ஆணையகம். அது உத்தரவிட்டபின்னர், மூன்று மாதமாக அதற்கு விரோதமாகச் செயற்பட்டவர்தான் டக்ளஸ். பாடசாலையைத் தனது சொத்து என்று நினைத்தாரோ தெரியாது. பாதிக்கப்பட்டது பாடசாலை மாணவிகளும் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் தான். நேரடியாகவும் பாடசாலைக்குச் சென்று ஆசிரியர்களுக்கு போதனை செய்திருந்தார். அங்குள்ள சில ஆசிரியைகளும் அநீதியாகச் செயற்பட்டு அமைச்சர் வழி செயற்பட்டனர்.

ஆனால், வேணுகா சட்டரீதியாகச் செயற்பட்டார். அதனால் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. பொதுச்சேவை ஆணைக்குழு மீண்டும் அதிபர் பொறுப்பேற்கும்படி வேணுகாவுக்குக் கடிதம் அனுப்பியது. 27 ஆம் திகதிக்கு முன்னர் பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டும். [illegible] ஒழுக்காற்று நடவடிக்கை என்று றாஜினிக்கும் கடிதம் அனுப்பியது.

நீதித்துறையில் நீதியான செயற்பாடுகளுக்கு தாம் இடையூறு செய்ததில்லை. செய்யப் போவதுமில்லை என்று ஜனாதிபதி மஹிந்த பத்திரிகையாசிரியர்களுடனான சந்திப்பில் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் வேம்படி மகளிர் கல்லூரியில் டக்ளஸின் நீதிக்குப் புறம்பான செயற்பாடுகள் மூன்று மாதங்களாகத் தொடர்ந்துள்ளமை ஜனாதிபதிக்குத் தெரியாமல் போய்விட்டதா? நீதியான செயற்பாடாக இருந்தாலும் நீதித்துறை தலையிட்டால் மட்டும்தான் அதற்கு இடம்கொடுப்பாரா? அப்படியாயின் ஏனைய அதிகாரமுள்ள அமைப்புகள் ஆணைக்குழுக்கள் எல்லாம் வெறும் பெயரளவில்தானா? அப்படியிருக்குமானால் ஒட்டுமொத்தமான அனைத்துப் பிரச்சினைகளும் நீதிமன்றில் குவியவேண்டிய நிலை ஏற்படும். எதற் கெடுத்தாலும் நீதிமன்றை நாட வேண்டிய நிலை உருவாக்கப்படும். டக்ளஸ் அமைச்சராக இருப்பதனாலா இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

சிறிய விடயத்துக்கு எல்லாம் தலையீடு செய்யும் மாகாண ஆளுநர் சந்திரசிறி கூட, மூன்று மாதமாக கண்ணை மூடிக் கொண்டு இருந்துள்ளார். அரசியல்வாதியாக உள்ள இவர்களது போக்கு மாணவ சமுதாயத்தை எந்தளவுக்கு பாதித்தது என்பதை சுயநலவாதிகளான இந்த அரசியல்வாதிகள் உணரப்போவதில்லை. வேம்படி மகளிர் கல்லூரி பிரச்சினை சரி, முல்லைத்தீவு வலயப் பதில் பணிப்பாளர் பிரச்சினை சரி இவர்களின் அநீதியான செயற்பாட்டால் ஏற்பட்டது என்பதனை உணர முடிகிறது. தவிர டக்ளஸுடன் வால் பிடித்துத் திரியும் ஆசிரியர் ஒருவர் வேம்படி மகளிர் கல்லூரியின் பிரதி அதிபராக கொழும்பிலுள்ள ஒரு பிரதி அதிபரை நியமிக்கக்கூடாது என்று எதிர்ப்பில் ஈடுபட்டாராம். தமது அட்டூழியங்களுக்கு அந்த ஆசிரியை இடம்கொடுப்பார் என்று அவர் நினைத்தார் போலும். அதுவும் நிறைவேறாமல் போய்விட்டது.

கிழக்கு அமைச்சர் ஒருவருக்கு நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டில் வழக்கு இடம்பெறுவதுபோன்றே வேணுகா அதிபர் உயர்நீதிமன்றை நாடியவுடன் டக்ளஸ் பயந்துபோனாரோ தெரியவில்லை. தன் வாயை இந்த விடயத்தில் மட்டும் பொத்திக் கொண்டு விட்டார்.

ஆனால் முல்லைத்தீவு வலய பதில் கல்விப் பணிப்பாளர் பிரச்சினை இன்னமும் தொடர்கிறது. இடமாற்றத்துக்கான காரணம் கூட வரதராஜமூர்த்திக்குத் தெரிவிக்கப்படவில்லை. அரைகுறையான இந்த நடவடிக்கையும் அரசியல்வாதிகளதும் இங்குள்ள மேலதிகாரிகளதும் அராஜகம் என்றே கூறலாம். இது நீதியாக நடக்குமா? அநீதியாக நடக்கின்றமை தொடரப் போகிறதா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு.காவின் பேரம்

## மக்களுக்காகவா? பதவிக்காகவா?

சுகந்தன்



இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களில் பெரும்பாலானவர்களின் ஆதரவைத் தன்னகத்தே தக்கவைத்துள்ள (இதர முஸ்லிம் கட்சிகள் இருக்கையில்) முஸ்லிம் மக்களின் ஏகபிரதிநிதிகளாக தங்களை மார்புதட்டுகின்ற கட்சி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். எவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறுபான்மைத் தமிழ் இனமக்களின் விடிவுக்காக, அவர்களின் உரிமைகள் பெருபான்மையினத்தவரால் நசுக்கப்படாமல் வென்றெடுக்கப் பாடுபடுகிறதோ அதே போன்றே தமது கட்சியும் செயற்படுவதாக அடிக்கடி கூறிவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் எடுத்த இறுதி முடிவு இன்று பலரது விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகிறது.

இலங்கையில் முஸ்லிம் இனத்தவர்கள் செறிந்து வாழுகின்ற பகுதிகளாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் விளங்குகின்றன.

இதில் பெரும் செழிப்புடன் கூடியதும் பருவ மழைகளை மட்டுமே நம்பிவாழ வேண்டிய தேவை அல்லாதது பெரும் விளைநிலங்களைத் தன்னகத்தே கொண்டதும் கிழக்கு மாகாணமே. அதிலும் மட்டக்களப்பு மாவட்டமே பெரும் விளைச்சலைத் தரும் பகுதியாக இருந்தது.

ஆரம்ப காலங்களில் கிழக்கில் பெரும் பகுதி தமிழ் மக்களது பூர்வீக நிலங்களாக காணப்பட்டன. ஆனால் இன்று அது திட்டமிடப்பட்டு படிப்படியாக மாற்றப்பட்டு,அங்கு பெரும்பான்மை பலத்தை தமிழர்கள் இழந்துள்ளனர் என்பதனை யாவரும் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.

இந்த நிலையில் மொழியால் பிணைந்துள்ள தமிழ், முஸ்லிம் இனங்கள் ஒன்றுபட்டு ஆட்சியமைக்க வேண்டிய தேவையை இம்முறை கிழக்கு மாகாணத் தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தின. ஆனால் கிழக்கில் சிறுபான்மை இனக்கட்சிகளை எதிர்த்துப் போட்டியிட்ட பெரும்பான்மை இனக்கட்சி ஆட்சி அமைக்கவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உதவியுள்ளது. அது இவ்வாறு உதவியுள்ளது என்பதை விட வரலாற்றுச் சந்தர்ப்பத்தை கோட்டை விட்டுவிட்டது என்பதே பொருத்தமானது.

இதனால் தான் ஏறவேண்டிய அரியணையில் வேறொருவரை இருத்தி அழகு பார்த்த மு.காவின் செயல் முஸ்லிம் சமூகத்தினரிடையே பெரும் ஆச்சரியத்தையும் ஆத்திரத்தையும் உண்டு பண்ணியுள்ளது.

கிழக்குத் தேர்தலை வென்று காட்டுவதன் மூலம் 'சிறுபான்மை இனத்தவருக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. எந்தத் தீர்வையும் அவர்கள் கேட்கவில்லை என்பதை சர்வதேசத்துக்கு எடுத்துக் கூறுவதற்கே அரசு அதை நடத்துகிறது' என சிறுபான்மைக் கட்சிகள் தமது பிரசாரங்களில் கூறிவந்தன.

ஏன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட கொழும்பில் கடந்த மாதம் நடந்த பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் ஆரம்ப உரையிலேயே இக்கருத்தை வெளிப்படுத்தி சிறுபான்மை கட்சிகளின் கூற்றை உறுதிப்படுத்தியிருந்தார்.

சிறுபான்மையினத்தவர்களான தமிழர்கள் கிழக்கில் அரியணை ஏறக்கூடாது என்பதில் அரசு உறுதியாக இருந்தது. இதற்கு என்ன விலையையும் கொடுப்பதற்கும் அது தயார்தான். இந்த நேரத்தில்தான் திடீரென முஸ்லிம் காங்கிரஸ் முதலமைச்சர் பதவிகூட வேண்டாம் என்று பெரும் தன்மையோடு இனவாத அரசுக்கு கிழக்கின் ஆட்சியை அடகு வைத்தது.

இந்த நிலையில் முஸ்லிம் மக்கள் மனதில் எழுகின்ற கேள்விகள் யாதெனில்,

★ நீங்கள் (மு.கா.) அரசிடமிருந்து பெற்றுக்கொண்ட விடயங்களென்ன?

★மு.கா. அரசிடமிருந்து பெற்ற ஒரு சலுகைப் பொதியில் உள்ளடங்குகின்ற விடயங்கள் முஸ்லிம் மக்களுக்கு ஏதாவது விடிவைப் பெற்றுத் தருமா?

★'நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடி புல்லுக்குமாங்கே பொசியும்' என்பதற்கேற்ப அரசியல் தலைவர்களுக்கு கிடைக்கும் சலுகைகள் மற்றும் பதவிகள் மூலம் மக்களுக்கு ஏதாவது நன்மை கிடைக்குமா? என்பனவே அந்தக் கேள்விகளாகும்.

மு.காவின் தலைமைப்பீடம் தலைவர் இல்லாத நிலையில் செய்தியாளர் மாநாட்டை கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலுள்ள தலைமையகத்தில் நடத்தியது. இதில் இக் கேள்விகள் ஏனைய மு.கா. தலைவர்களிடம் ஊடகவியலாளர்களால் தொடுக்கப்பட்டன.

ஆனால் அவர்களுக்கு கிடைத்ததோ பதில்களல்ல. மாறாக குறித்த தலைவர்களின் கண்களிலிருந்து வந்த அனல் கக்கும் பார்வைகளே!

பாகிஸ்தானிடம் கிரிக்கெட்டில் அடி வாங்கி நாடு திரும்பிய இந்திய வீரர்களின் நிலை போல, கொழும்பில் இரகசிய ஒப்பந்தம் செய்து அரசின் ஆட்சியை கிழக்கில் நிலைநாட்டி விட்டு ஊர் திரும்பும் முன் செய்தியாளர்களுக்கு தமது பக்க நியாயங்களை மு.கா. முன்வைத்தது . இதன் மூலம் தமக்கு வாக்களித்த முஸ்லிம் மக்களின் மனநிலையைச் சாந்தப்படுத்த முனைந்ததா மு.கா.?

அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சராக உள்ள ஹக்கீம் மீது முழுப்பழியும் விழுந்துள்ளது. இந்த நிலையில், அவர், மு.காவின் தலைவராக இருந்து முடிவெடுக்காமல், அமைச்சராக இருந்தே முடிவெடுத்துள்ளார் என்ற எண்ணத்தை முஸ்லிம் மக்கள் மத்தியிலிருந்து போக்குவதற்காகவே, ஹக்கீம் இந்தக் கூட்டத்தில் தான் கலந்துகொள்ளாது ஏனைய தலைவர்களை அனுப்பினாரோ என்ற சந்தேகமும் எழத்தான் செய்கிறது.

எது எவ்வாறாயினும் அவர்களின் அந்த முயற்சி வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை. மாறாக அந்த சந்திப்பில் விளக்க வேண்டிய விடயங்களை விடுத்து மேலும் குட்டையைக் குழப்பியதாகவே அந்தச் சந்திப்பு முற்றுப்பெற்றது.

இந்த விட்டுக்கொடுப்புக்காக முஸ்லிம் காங்கிரஸுக்கு என்ன சலுகைப் பொதி அரசிடமிருந்து கிடைத்ததென்பதே முஸ்லிம் மக்களிடத்தேயுள்ள விடை தெரியா வினாவாகும். அந்தக் கேள்வியும் இந்தக் கூட்டத்தில் எழத் தவறவில்லை.

அதற்குப் பதிலளித்த மு.கா. தலைவர்கள் "அது இரகசியமானது அதை வெளியே சொல்லமாட்டோம். அதை வெளியே சொன்னால் இனங்களுக்குடையே விரிசல் நிலையே தோன்றும்" என்றனர்.

"அப்படியானால் சரி" உங்களை நம்பி வாக்களித்த மக்களுக்குமா இதைக் கூறமாட்டீர்களா?" என்றும் பதில் கேள்வி வீசப்பட்டது. அதற்கு " நாம் சிறு குழுக்களாக வந்து மக்களைச் சந்தித்து அதுபற்றி கூறுவோம். உங்களிடம் அதைக் கூறமுடியாது." என்று நழுவல் பதிலே மீண்டும் கிடைத்தது.

"கிழக்கின் முதலமைச்சர் பதவியையாவது நீங்கள் தக்க வைக்காதது ஏன்?குறைந்தது இரண்டரை வருடங்களுக்காவது முதலமைச்சர் பதவியை நீங்கள் பெற்று அதன் மூலம் உங்களது மக்களுக்கு ஏதாவது சேவை செய்திருக்கலாமே?" என்று இன்னொரு கேள்வி அவர்களை நோக்கிப் பறந்தது.

"அரசியலமைப்பில் அதிக ஆசனங்கள் பெற்ற கட்சிக்கே முதல் இரண்டரை வருடங்களுக்கும் அந்தப் பதவியை வழங்க வேண்டும். அதனாலேயே முதலமைச்சர் பதவியை அரசுக்கு வழங்கினோம், இறுதி இரண்டரை வருடங்களும் எமது ஆட்சிக்குரியதே. அரசு எங்களை ஏமாற்றினால் விளைவுகள் விபரீதமாகும்" என்று வீறாப்பாகச் சொன்னார்கள் மு.கா. தலைவர்கள்.

முதலமைச்சர் பதவியை தாரை வார்த்த விவகாரமே இன்று மு.கா.வுக்கு பெரும் தலையிடியாக மாறிவருகிறது. கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி இனி மு.காவுக்கு கிடையாதென ஐ.தே.க அடித்துக் கூறுகிறது.

'ஒப்பந்தம் செய்தோம், ஒப்பந்தம் செய்தோம் என்கிறீர்களே எங்கே அதைக் காட்டுவீர்களா? இன்றுவரை ஜனாதிபதி மஹிந்த எந்தக் கட்சிகளுடனும் ஒப்பந்தம் செய்ததாக நான் அறியவில்லை' என்கிறார் கொழும்பு மாநகர முதல்வர் முஸம்மில்.

எது எவ்வாறிருப்பினும் பேரம் பேசிப் பெற்ற சலுகைகள் மூலம் முஸ்லிம் மக்களுக்கு நன்மைகளே கிடைக்கவுள்ளன என்பதை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் இன்று மு.காவுக்கு. நிரூபிக்குமா?

சிறுபான்மையின தமிழர்கள் கிழக்கில் அரியணை ஏறக்கூடாது என்பதில் அரசு உறுதியாக இருந்தது. இதற்கு என்ன விலை கொடுப்பதற்கும் அது தயார்தான். இந்த நேரத்தில்தான் திடீரென முஸ்லிம் காங்கிரஸ் முதலமைச்சர் பதவிகூட வேண்டாம் என்று பெரும் தன்மையோடு இனவாத அரசுக்கு கிழக்கின் ஆட்சியை அடகு வைத்தது.

## அரசியலும் ஆடும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறங்கியிருக்கும் நிலையில் உயர்தரப் பரீட்சைப்பெறுபேறுகள் வெளிவருவதே சந்தேகம் என்ற நிலை இன்னும் இத்தகைய போராட்டங்களை பரவலாக்கவே செய்யும். ஆயினும் இத்தகைய நிலையை திசை திருப்பவே வழமையை விடவும் குறுகிய காலத்துக்குள் புலமைப்பரிசில் பரீட்சைப்பெறுபேறுகளை கல்வித்திணைக்களம் வெளியிட்டிருக்கலாமோ என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

ஆயினும் கல்வியில் அரசியல் செய்தால் அறம் கூற்றாக மாறும். அதுவே வரலாறுகளின் பக்கங்களில் திரும்பத் திரும்ப கூறப்பட்டிருக்கும் விடயம். ஏகலைவனின் வலக்கைப் பெருவிரலை வாங்கிய சுயநல அரசியலே துரோணருக்கு போர்க்களத்தில் அவரது சீடனாலேயே சாவைப் பரிசளித்தது.

★ ★ ★

யாழ்ப்பாணத்தின் தனிக்காட்டு ராஜா தானே என்று தனக்குத் தானே மகுடம் சூடிக் கொண்ட ஒருவரும் எல்லாவற்றிலும் கை வைத்துவிட்டு கடைசியில் கல்வித்துறையிலும் தன் கைவரிசையைக் காட்ட முனைந்தார்.

தனக்கு வேண்டியவர்களையே உயர்பதவியில் உட்கார வைப்பதன் மூலம் கல்வித் துறையையும், மாணவர்களையும் தன்பக்கம் ஈர்க்க முடியும் என்று தனிக்காட்டு ராஜா நம்பினார். பல்கலைக்கழகத்தில் மூதவை உறுப்பினர்கள் சிலரை நியமிப்பதில் வெற்றி பெற்ற தனிக்காட்டு ராஜா, அதே உசாரோடு, வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் விடயத்திலும் மூக்கை நுழைத்தார். இவரின் ஆதரவு கிடைத்த புளுகத்தில் ஏற்கனவே பிரதி அதிபராக இருந்தவர், அதிபர் கதிரையைப் புதிதாக- சட்டப்படி- நியமனம் பெற்றவருக்கு விட்டுக்கொடுக்க மறுத்தார். மூன்று மாதங்களாக இந்தப் பிரச்சினை இழுபட்டுக் கொண்டே போனது. கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகள் தனிக்காட்டு ராஜாவுக்கு எதிராக எப்படித் தாளம் போடுவது? ஆகவே அவர்களும் அடக்கியே வாசித்தார்கள். கடைசியில் அரசியலை வென்றது அறம்.

"நான் சொன்னதுதான் நடக்கும். நீங்கள் எங்கு சென்றாலும், யாரிடம் முறையிட்டாலும் முடிவை எழுதப்போவது நான்தான். ஆகவே நான் ஆதரவளிப்பவரையே நீங்களும் ஆதரவளித்து அதிபராக்கினால் உங்களுக்கு நல்லது." எக்காளத்தோடு, சொன்ன தனிக்காட்டு ராஜாவின் வார்த்தைகளின் மீது உமிழப்பட்டுக் கிடக்கின்றன எச்சில் துளிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org